முருகன் றுணை.

பார்ஸி இந்துஸ்தான் தமிழ் முதலிய
புதிய வர்ணமெட்டுகளால்
இயற்றிய

# வள்ளியம்மை சுயம்வரம்.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
-JUL 1910
MADRAS

இஃது, சிவசெல்கை.
ம-ள-ள-ஸ்ரீ, வயித்தியம் மலையாண்டியாபிள்ளை
அவர்கள் குமாரர்
பேச்சிமுத்துப் பிள்ளையென்று
பெயர்வழங்கிய
மதுரகவி,

## முருகதாஸ்

50
3-1810

அவர்கள் இயற்றியதை,
மதுரையில் வசிக்கும்,
சிவகெங்கை
எம். முத்திருளாண்டி[illegible] அவர்கள்
முயற்சியால்
மதுரை புதுமண்டபம் புஸ்தக ஷாப்.
P. N. C. ஏஜண்ட்
M. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

பி. நா. சிதம்பரமுதலியா ரவர்களுடைய
வித்தியாரத்னாகர அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1910.

இதன் விலை அ—௩.

Registered Copy Right.

REGISTRAR OF ... REGISTERED 4 JUL 1918 MADRAS.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்:—சிவகெங்கை மலையாண்டியாபிள்ளை குமாரன் பேச்சிமுத்துப் பிள்ளையென்னப் பெயர் வழங்கிய மதுரகவி முருகதாஸ் இயற்றிய வள்ளியம்மை சுயம்வரத்தை பி. நா. சிதம்பர முதலியாரவர்களாகிய என்னால் அச்சிட்டு கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்திருப்பதால் மேற்படி புத்தகத்தை அச்சிட விரும்புவர்களும் அச்சுக்கூடத் தலைவர்களும் 1887௵த்து 25-வது, ஆக்டின் 20-வது, பிரிவில் 6-வது, விதியின்படி மேற்படியாரால் கோரும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவும் பினல் கோர்ட்டாரவர்கள் கேள்விக்கு ஜவாபு தாரிகளாகவு மிருப்பார்களென்று யாவரும் தடையின்றி கவனிப்பீர்களாக.

இப்படிக்கு.

பி. நா. சிதம்பரமுதலியார்.

வித்தியாரத்நாகரம் பிரஸ்.

உ

முருகன் றுணை.

# முகவுரை.

இதனால் சகல கனதனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெ
னில்:—

இறையவனது அருண்மயமாகிய இப்பிரபஞ்சத்தின் கண்ணே
நமக்கு நல்லறிவு புகட்டும் நூல்கள் மிகச்சில அவற்றுள் வள்ளி
யம்மை சுயம்வரம், இச்சரிதமானது வள்ளியம்மையை ஆதியில்
மலர்மகள் பெற்றெடுத்தாள் அம்மாது சாட்சாத் ஆறுமுகக்கடவு
ளைப்பாணிக்கிரகணஞ் செய்யக்கருதி சரவணப்பொய்கையிற் றவம்
புரிந்தாள் குமரன் பிரசன்னமாகி மறுஜெனனத்தி லுன்னை மணம்
புரிவேனென்று வாக்களிக்க, அன்னவள் மான் வயிற்றிலுதித்து
வேடர்மனையில் வளர்ந்து பருவதிசையடைந்து தினையைக் காத்துக்
கொண்டிருக்குந் தருணத்தில் வேலவர் வேடருருவாகவும் வளைய
செட்டியாகவும் பண்டாரக்கிழவனாகவும் மகிழ்ந்து உருவெடுத்து
வந்துவள்ளியம்மையை மணம்புரிந்தவை. உத்தமபுருஷனின் லெக்ஷ
ணங்களைத் தெற்றெனவிளக்கின்றது அவதாரபுருஷனின் அருமை
வாய்ந்த செயல்களை யாவர்க்கு மறிவுறுத்துகின்றது. நமது தேச
த்திலுள்ள நான்கு வருணத்தாரும் அளவிறந்த அன்புடனே போற்
றப்படுகின்றதாகியதும் இந்துஸ்தான் பாரீஸ் கெஜல் டோமரி தி
கடா சிந்து கீர்த்தனை இந்தவர்ணமெட்டுகளாலியற்றி மதுரை தல்
விரித்த சுவாமி தெருவிலிருக்கும் சிவகெங்கை எம்-முத்திருளாண்
டி பிள்ளையவர்களால் இராகம் தாளம் போடப்படும் முக்கியமான
பாகங்களில் நூதன வர்ணமெட்டுகளாலியற்ற வர்ணமெட்டுகள்
கொடுக்கப்பட்டும் அநேக கனவான்களும் டிராமாக் காரர்களும்
இன் நன் முயர்ச்சியின் கண் எம்மைத் தூண்டினர் நூல் இனிது
முடியுமாறு, தோன்றாத் துணையாய் உடனின்றுதவிய எல்லாம்
வல்ல எம்பெருமானாகிய ஆறுமுகக்கடவுளைத் துதிக்கின்றேன்.

இங்ஙனம்:

அடியார்க்கடியன்

பேச்சிமுத்துப்பிள்ளைசன்றுவழங்கிய,

மதுரகவி-முருக்தாஸ்.

முருகன் றுணை.

## திரிச்சி-மனோரஞ்சித நாடகக் கம்பெனி

### ஆக்டர்கள்.

| | |
|---|---|
| இராஜப்பார்ட்டு. | டி-ஏ-கே-முருகானந்தம்பிள்ளை. |
| ஸ்ரீபார்ட்டு. | எம்-மதுரகவிமுருகதாஸ். |
| சக்கின் இராஜபார்ட்டு. | டி-சண்முகம்பிள்ளை. |
| சக்கின் ஸ்ரீபார்ட்டு. | டி-சின்னச்சாமிபிள்ளை. |
| பாலப்பார்ட்டு. | டி-வரதராஜலு. |
| ஷை பார்ட்டு. | சி-ரெத்தினசபாபதி. |
| தில்லைப்பார்ட்டு. | டி-சாமிநாதபிள்ளை. |
| ஷை பார்ட்டு. | டி-அழகிரிசாமி. |
| மந்திரிப்பார்ட்டு. | மாரிமுத்துப்பிள்ளை. |
| ஸ்ரீபலபார்ட்டு. | வீரகுமாருபிள்ளை. |
| விதூஷகப்பார்ட்டு. | டி-எஸ்-சாமிபிள்ளை. |

THE REGISTRAR
REGISTERED
4- JUL 191
MADRAS

### பக்கமேள காரர்கள்.

| | |
|---|---|
| திரிச்சி. | நல்லுச்சாமிபாகவதர். |
| ஷை | பழனியாண்டிபாகவதர். |
| மிருதங்கம். | சிவகெங்கை-இராமலிங்கஞ்சேட்டியார். |
| ஷை | திரிச்சி-சின்னச்சாமிபிள்ளை. |
| ஆர்மோனிம்வாசிக்கும் | மதுரை விகடகவி உமைய வேலாயுதம் பிள்ளை. |

### தனித்தனியே ஆக்ட்டுச்செய்பவர்கள்.

| | |
|---|---|
| இராஜபார்ட்டு. | டி-ஜெகநாதநாயுடு. |
| ஷை | கே-ஏம்-தருமலிங்கம்பிள்ளை. |
| ஷை | கோவிந்தசாமிபிள்ளை. |
| ஷை | கவ்ராய்-நாராயசாமிரூவ். |
| ஷை | சீனிவாசநாயுடு. |
| ஷை | இராமச்சந்திரம்பிள்ளை. |
| ஸ்ரீபார்ட்டு. | திருவையார்-சாமாவையர். |
| ஷை | காரைக்கோத்தான்-வயித்திநாதையர். |
| ஷை | கும்பகோணம் நடேசபபத்தர். |
| ஷை | ஷை குப்புச்சாமிபிள்ளை. |
| தில்லை | தர்மலிங்கம்பிள்ளை. |
| ஷை | ஆத்மலிங்கம்பிள்ளை. |
| ஷை | கோபாலிரூவ். |
| ஷை | இராமசாமிபிள்ளை. |

## இந்நாடகத்தை அச்சிட்டுதரவேணுமென்று கேட்டுக்கொண்ட கனவான்கள்.

| | |
|---|---|
| மதுரைபுதுமண்டபம்புக்ஷாப். | ஸ்ரீ-கிருஷ்ணப்பிள்ளையவர்கள். |
| ஷை | எம்-கருப்பணபிள்ளையவர்கள். |
| ஷை | எஸ்-முத்தயபிள்ளையவர்கள். |
| ஷை | வி-என்-இராகவக்கோனாரவர்கள். |
| ஷை | இ-ரா-ம-குருசாமிகோனாரவர்கள். |
| ஷை | இ-மா-கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கள். |
| சிவகங்கை. | குழந்தைவயித்தியம்-சொக்கலிங்கம்பிள்ளையவர்கள். |
| வடக்குவாடி. | சுந்தரம்பிள்ளையவர்கள். |
| இராமநாதபுரம். | பழனியாண்டிபிள்ளையவர்கள். |
| ஷை | பெருமாள்பிள்ளையவர்கள். |
| ஷை | முத்துச்சாமிபிள்ளையவர்கள். |
| ஸாடனேந்தல். | சம்மந்தசாமிபிள்ளையவர்கள். |
| ஷை | ஆறுமுகஞ்சேர்வையவர்கள். |
| கோனார்வட்டி. | பொன்னயாபிள்ளையவர்கள். |
| ஷை | கா-சுப்பயாபிள்ளையவர்கள். |
| ஷை | சோலைமலையம்பலகாரரவர்கள். |
| ஷை | முத்துக்கருப்பக்கோனாரவர்கள். |
| இலாதரி. | மு-வீரணனம்பலகாரரவர்கள். |
| ஷை | நொருதானம்பலகாரரவர்கள். |
| ஷை | கருப்பணனம்பலகாரரவர்கள். |
| இலுப்பக்குடி. | பெரியகருப்பனம்பலகாரரவர்கள். |
| ஷை | அழகு-அம்பலகாரரவர்கள். |
| ஷை | வெள்ளைச்சாமியம்பலகாரரவர்கள். |
| உசிலம்பட்டி. | வெள்ளையனம்பலகாரரவர்கள். |
| திருவாதவூர். | முன்சீபு-வெள்ளைசாமி பிள்ளையவர்கள். |
| ஷை | பாரியாபிள்ளையவர்கள். |
| ஷை | அப்பிச்சியாபிள்ளையவர்கள். |
| கவரையபட்டி. | நாராயணநாயக்கரவர்கள். |
| திரிச்சிநாப்பள்ளி. | சிந்தாமணி-ரெங்கசாமிபிள்ளையவர்கள். |

| | |
|---|---|
| ஷை | ஆ-அமுர்தலிங்கஉபாத்தியாயர். |
| ஷை | தவமுனிபாலாண்டார். |
| ஷை | சுந்தரம்பிள்ளையவர்கள். |
| ஷை | முத்தானந்தம்பிள்ளையவர்கள். |
| ஷை | காசிநாதத்தம்பிரானவர்கள். |
| ஷை | தாண்டதோணிநாயுடுஅவர்கள். |
| புதுக்குடி. | ஜோவலியம்-பிச்சுவையரவர்கள். |
| ஸ்ரீரெங்கம். | அபிமன்யூ-ரெங்காரவவர்கள். |
| ஷை | பூக்கடை.-பொன்னையாபிள்ளையவர்கள். |
| ஷை | துரைச்சாமிநாயுடுஅவர்கள். |
| அரசனூர். | வெள்ளையனம்பலகாரரவர்கள். |
| ஷை | சின்னச்சாமிவேளாளரவர்கள். |
| ஷை | முன்சீபு கருப்பாத்தானம்பலகாரரவர்கள். |
| ஷை | சுப்பையாபண்டாரம்அவர்கள். |
| திருமான்சோலை. | சங்குசேருவைகாரரவர்கள். |
| ஷை | வீரணன்சேருவைகாரரவர்கள். |
| ஷை | பழனியாண்டி சேருவைகாரரவர்கள். |
| எனதி. | மூர்க்கனம்பலகாரரவர்கள். |
| முதுகன்றிடல். | ஆதிமூலஞ்சேருவைகாரரவர்கள். |

இப்படிக்கு.

வி. நா. சிதம்பரமுதலியார்.

சென்னை.



உ

சிவமயம்.

# வள்ளியம்மை சுயம்வரம்.

REGISTRAR ... REGISTERED JUL 1910 MADRAS

விநாயகர் துதி.

வெண்பா.

மாமேவுதேசுயர்ந்த மாதுவள்ளிகாதைதனைப்
பாமேவுநாடகமாய்ப் பாடவே—பூமேவு
தந்திமுகாவுந்தனர விந்தகமலந்தொழுத
மைந்தனெனை வந்தருளுவாய்.

வாருகநாதாயென்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆகுவாகனனே அம்பிகைசுதனே
அடியேன்றனை யாளுவாய் ஆரணன்மருகனே (ஆகு)

அநுபல்லவி.

பாகுசேர்மொழிவல்லபை மகிழ்மெய்யாரா
பண்ணவராதினம் பணியுங்கெம்பீரா (ஆகு)

சரணங்கள்.

ஆறுமுகன்றுணைவா யானைமாமுகவா
அண்டரைக்காத்தவா அசுரரைமாய்த்தவா
அறுமறைநால்வேத ஆகமப்பொருளே
அன்பினென்முன்புவந்தே யாதரித்தருளே (ஆகு)

தந்தையைச்சுற்றிவந்தே சிந்தைதமிகமகிழ்ந்தே
கந்தன்வருமுன்னேமாங் கனிபெற்றவா புகழ்ந்தே
அந்தமிகுந்தவள்ளி யம்மைசரிதஞ்சொல்ல
ஐங்கரனேவிக்கின மகற்றுவாயெல்லாம்வல்ல (ஆகு)

எங்கும்புகழுஞ்சிவ கெங்கைநன்னகர்வாசன்
இங்கிதமைந்தமிழ்மே யியற்றும்வாணர்க்குநேசன்
துங்கன்பேச்சிமுத்தின் சொற்கவிமாலைசூடுஞ்
சுத்தசைதன்யனே தொல்புவியோர்கொண்டாடும் (ஆகு)

# வள்ளியம்மை சுயம்வரம்.

## சிவ சுப்பிரமணியர் துதி.

### வெண்பா.

சீராரும்வள்ளியம்மை செய்பதிருக்காந்ததனைப்
பாரீதுநாடகமாய்ப் பாடவே—ஏராருஞ்
செச்சைபெர்டுநீபமணித் திண்புயனேதென்பழனிப்
பச்சைமயில்வேலா கண்பார்.

மதகெஜபதானேயென்ற வர்ணமெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

அரிதிருமருமகனே வந்தே
யாண்டிடாய்ததி வேண்டினேன்குகனே (அரி)
திரிபுரபவா திகழொளிபவா
பரிபுரபவா பவமொழிபவா (அரி)
புள்ளிமயில்மீ தேறும்வேலனே
வள்ளிகாதலசொல்லி வரக்கருள்சீலனே (அரி)
தந்தைக்கேப்ரணவ மந்திரந்தன்னையே
சிந்தைமகிழ்ந்துரை செய்தவாயென்னையே (அரி)
பக்தினெனும்பேச்சி முத்தின்கவிமாலை
சித்தமகிழ்ந்தணிந் தித்தமீயிக்காலை (அரி)

## பரமசிவன் றுதி.

### விருத்தம்.

முருகனுமேவள்ளியம்மை தன்னை மணந்ததிருக்காதை
முழுதுமேயீத்
தரணியுளோர்கண்டுகுது கலமடையநாடகமாய்ச்
சாற்றக்கொண்டிறை
அரவொடுமான்மழுமதியுந் திரிபதகைதன்னைமுடிமே
லணிந்தமோன
பரமனிருபதமலரை யென்னுளஞ்சிந்தைதனிற்
பணிதல்செய்வாம்.

## கலைமகள் துதி.

### வெண்பா.

மாதுவள்ளிதன்னையுறு மாமுருகன்மணந்தக்கதை
நீதியுளநாடகமாய்ப் புகழ்ந்தப்—பூதலமேற்
தலைவாணியேயினது கருணைகடாக்ஷம்வைத்தே
நிலையாயென்னுளினிலே நில்.

அன்னையேநானுன்னைநம்பினேனென்ற வர்னமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அன்னையேவந்தென்னையாள்வா
யன்புடன்கலைவாணியே
அம்சவாகனத்திலேறி
யருள்செய்வாய்கல்யாணியே (அன்னை)

நன்னூலிலக்கணமுநிச்சொல்
நாலடியார்கோவையே
நானறிந்திலேனே தாயே
ரட்சிப்பாயேபூவையே (அன்னை)

வெண்டாமரைதன்னில்வீற்
றிருந்திடுஞ்ஜெகஜோதியே
வேண்டினேனேயாண்டருள்வாய்
வேதனிடபாரியே (அன்னை)

மண்டலம்புகழும்வள்ளி
மாகதைதனைப்பூமியில்
வழுத்திடவேநாடகமாய்
மனமகிழ்ந்துமேநாவில் (அன்னை)

---

REGISTRAR OF BOOKS ... JUL 1910 ... MADRAS



## சூஸ்திரதார் பிரவேசம்.

அவையடக்கம்.

கலிவிருத்தம்.

அலகிகற்கலையாய்ந்திலேமே னும்யா
மிலகுமின்றமிழிற்செயுநாடகஞ்
சுலவுபற்பல்தோமுடைத்தாயினு
முலகநீதியுணர்ந்தவர்கொள்பவே.

ஸ்லோகம்.

சபாகல்ப்பதரும்வந்தே
வேதசாகோபஜீவிதம்
சாஸ்திரபுஷ்பசமாயுக்தம்
வித்வப்ரமரசோபிதம்.

வசனம்.

அதாவது வேதமாகிய சாகைகளும் சாஸ்திரமாகிய புஷ்பங்களும் வண்டுகளாகிய பண்டிதர்களும் நிறைந்திருப்பதால் இச்சபை கற்பக தருவுக்குச் சமானமாயிற்று இச்சபையினிடமாக வீற்றிருக்குஞ் செந்தமிழ்ச் செல்வர்களுக்கு அடியேன் வந்தனஞ் செய்கின்றனன்.

இவ்வரங்க சபையினிடமாக யானடாத்த எத்தனித் திரு கின்ற வள்ளியம்மையின் திவ்ய சரித்திரத்தில் சொற்சோர்வு மு

யிடமெவ்வித குற்ற மிருந்தாலும் ப்ரமரமென்னும் வண்டினங்களானவை புட்பத்திலுற்ற மீதுவை எவ்வாறு க்ரகித்துக்கொள்கின்றனவோ அவைபோல் இன்னாடகமானது கற்பக விருக்ஷமாகவும் யானவ்விருக்ஷத்தி லுற்பவித்த புஷ்பமாகவும் எனது வசன தாதுர்யங்க ளாகினவை மதுரமாகவும் பாவித்து அங்கீகரிக்க வேண்டியதாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

பிரமபரத்திற் பரந்தோன்றி பரத்திற் சிவந்தோன்றி சிவத்தில் சத்திதோன்றி சத்தியினிடத்தே நாதந்தோன்றி நாதத்தில் விந்து தோன்றி விந்துவில் சதாசிவந்தோன்றி சதாசிவத்தில் மகேச்சுவரன்தோன்றி மகேச்சுவரனில் ருத்திரன் தோன்றி ருத்திரனில் விஷ்ணுதோன்றி விஷ்ணுவில் பிர்மாதோன்றி பிர்மாவில் ஆகாயந் தோன்றி ஆகாயத்தில் வாயுதோன்றி வாயுவில் தேயுதோன்றி தேயுவில் அப்புத்தோன்றி அப்புவில் பிரிதிவு தோன்றி பிரிதிவில் அன்னந்தோன்றி அன்னத்தில் நரமிருகபட்சி தாவரங்களெல்லா முண்டாயின. இத்யாதி காரணவழிகளால் பிரம சிருஷ்டியில்தோன்றின நரரென்ற மானிடர்களுக்குச் சிவபெருமானால் ஏற்படுத்தின பாஷைகள் பதினெட்டு மற்றும் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்ற மூன்று பிரிவையுடையது இதில் இயற்றமிழென்பது வசனம் இசைத்தமிழென்பது செய்யுள் நாடகத்தமிழென்பது வசனம் செய்யுள் தருக்களடங்கியவைகள் இதில் நாடகத்தமிழுக்கு ஏற்பட்டது ஒன்பது ரசம் அதாவது சிங்காரம் வீரியம் இரௌத்திரம் பெருநகை கருணை குற்சை அற்புதம் சாந்தம் பயம் என்னப்பட்டது இவைகளிற் பெருநகையாகிய ஆசியரசம் குறைவாயிருப்பதால் இவ்வரங்க சபையை ரஞ்சிக்கச்செய்யும் ஆசிய பூமானை இக்ஷணம் பிராப்தமாகுக ஸ்தவுத்தியஞ் செய்கின்றேன்.

வசனம்.

நாம் ஆசிய பூமானை ஸ்தவுத்தியஞ் செய்தவுடனே யாரோ ஒருவன் அவலட்சணத்தோடு பிராப்தமாகினான் அருகிற்சென்று யாரென விசாரிக்கின்றேன்.

ஷை வசனம்.

மித்ரா தாம்யார் இங்கு பிராப்தமாகவேண்டிய காரணம் யாது தெரிவிப்பீர்.

ஷை வசனம்.

நான் வெகுநாழிகைலோடு அருகிற்சென்று யாரென விசாரிக்க ஒன்றும்பேசாது ஊமைபோல நிற்கின்றான் நல்லது இன்னுமொரு முறை யாரென விசாரிக்கின்றேன்.

ஷை வசனம்.

அடா நீ யாவன் நான் கேட்பதற்கு ஒன்றும்பேசாத மௌனி யாயிருக்கின்ற காரணம் தெரிவிப்பாய்.

விதூஷகன் வசனம்.

தாம் யாச் சேவாய் புகல்வீர்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா எனது நாமதேயம் சூஸ்திரதாரென்று தெரிவிப்பார் கள் நின்னுமதேயம் யாது.

விதூஷகன் வசனம்.

ஓய் தாம் கூறியதை யோசிக்கில் வெகுவிநோதமாய் இருக்கின் றது ப்ரதமத்திலேயே சந்தேகத்தைக்கொண்டுவந்து விட்டீரே ஓய்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ர ஒருவித சந்தேகமுங் கொள்ளவேண்டாம் நினது திரு நாமத்தை வெளியிடுவாயாக.

விதூஷகன் வசனம்.

ஓய் எனது திருநாமத்தைத் தெரிவிக்கத் தாங்கள் வேண்டுமோ தெரிவிப்பீர்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா யான் நினது திருநாமத்தைக்கேட்க வெகு ஆவலோடு யிருக்க நீ பலவாறு வார்த்தை யாடுகின்றாயே என்மீது மகிழ்ந்து உனது திருநாமத்தை வெளியிடுவாய்.

விதூஷகன் வசனம்.

ஓய் கேளும் விஞ்மக குருட விநாயக சிரஞ்சீவி இப்பொழு தாவது தெரிந்து கொண்டீரா உன் மனஸ்தாபம் வேண்டாமோய்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா நின் திருநாமத்தைச் செப்புவாயென்ன ஏதோ தாரு மாராக விஞமக குருட விநயக சிரஞ்சிவி என்று தெரிவிக்கின் றாய்.

விதூஷகன் வசனம்.

ஓய் இதுபரியந்தம் வெகு உன்னதமாய்ப் பேசிக்கொண்டிருந் தீரே சகல புராணங்களையும் ஆய்ந்தவர்போலப் புகன்றீர் இதற்கு அர்த்தம் தெரியாது அனர்த்தமாய்ப் பேசுகின்றீரே ஓய்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா தாம் கூறிய நாமம் வெகு விந்தையா யிருக்கின்றன இதன் அர்த்தம் தாமே தெரிவிப்பீர்.

விதூஷகன் வசனம்.

ஓய் தெரிவிக்கின்றேன் சற்று கவனமாய்க் கேளும் விஷ என்பதில் முதல் எழுத்தும், மக என்பதில் இரண்டா மெழுத்தும், குருட வென்பதில் மூன்றாம் எழுத்தும், விநாயக வென்பதில் நான்காமெழுத்தும், சிரஞ்சீவி என்பதில ஐந்தாமெழுத்தும் ஒன்றாய்ச் சேர்த்து வாசிக்கில் அவைதா னென்னது திருநாமம்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா முன்னமே விகடகவி என்று தெரிவிக்காது விரோதி ஒருவன் என்தாய் என்று சொல்வதற்கு என் பெண்சாதிக்கு மாமி யாரென்ற தன்மைபோ லிருக்கின்றன நீர் கூறிய வார்த்தையைப் பார்க்குங்கால் வெகு நேர்த்தியா யிருக்கின்றது பேஷ்!

விதூஷகன் வசனம்.

ஓய் இப்பெயரானது நான் மாதாவயிற்றி லிருந்து ஜெனித்த வுடனே எனது பேரனாற் சூட்டப்பட்டது ஆனதால் வார்த்தை நீளமாகவும் பெயர் சுருக்கமாகவுந் தான் தோற்றும் நீர் தமிழறி தவராகிற் றெரிந்து கொள்வீர்.

சூஸ்திரதார் வசனம்.

வாஸ்தவம் உன்னைப்போல் அவைக்கியாதியைக் கைக்கொண் டிருக்கும் பட்சத்திற் சுருதிகளைப் புரட்டிப்பேசத் தெரிந்திருப் பேன் யான் அவ்வித மல்லேன்.

விதூஷகன் வசனம்.

ஓய் என்ன தெரிவித்தீர் அவைக்கியாதியுள்ளவனென்று தெரிவித்தீரே அதற்குப்பொருள் தெரிந்தமட்டுஞ் சொல்கின்றேன் தெரிந்து கொள்வீர் அவை என்பது வித்வ சிரோன்மணிகள் நிறைந்திருக்கின்ற விடம் சபையாம் அச்சபைக்கிக் கியாதியுள்ளவனென்று தெரிவித்தீரே வெகு ஆனந்தங் கொண்டேன்.

சூஸ்திரதார் வசனம்.

நான் தெரிவித்ததற்கு இச்சபையோர் குதூகலிக்கும்படியான சரியான பொருள் விரித்துரைத்தனையே யான் மெத்த மகிழ்ந்

றேன் யான் கோரிய விடயத்தைத் தம்மாலே சம்பூரணஞ் செய்து கொள்ளலாமென்ற எண்ணத்தைக் கைக் கொண்டேன்.

விதூஷகன் வசனம்.

யான் இவ்விரங்க சபையினிடமாகப் பிராப்தமாகுங் காலத்திலே தமக்குக் க்யாதியைக் கொடுக்க வேணுமென்ற எண்ணத்தோடு பிராப்தமாகினேன் இவ்விடத்தின் கண் என்ன நடக்கப் போகின்றது எதற்காக இச்சபை கூடியிருக்கின்றது தெரிவிப்பீர்.

சூத்திரதார் வசனம்.

நண்பா இச்சபையின் கண் வள்ளியம்மையைச் சிவ சுப்பிரமணியர் திருமணம்புரிந்த திருக்கதையை நாடக பாத்திர ரூபப் பிரவேசமாகவும் அழகிய வர்ணங்களுடனும் நடத்தப் போகின்றபடியால் அதற்காக இச்சபை கூடியிருக்கின்றது மித்ரா.

விதூஷகன் வசனம்.

இதற்காகத்தானோ இச்சபை கூடியிருக்கின்றது நல்லது தெரிந்து கொண்டேன் யான் இங்கு என்ன செய்யவேண்டும் தெரிவிப்பீர் ஐயா.

சூத்திரதார் வசனம்.

மித்ர இந்நாடகத்திற்கு ஆதிமுதல் அந்தம் வரை யாதொரு விக்கினமில்லாது நடக்கும் பொருட்டு கணநாதரை ஸ்தோத்திரஞ் செய்து வேண்டிய வரம் பெற்றுக் கொள்வோம் என்னோடு நீரும் ஸ்தோத்திரஞ் செய்வீர்.

விதூஷகன் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன்.

சூத்திரதார் ஸ்லோகம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயே சர்வ விக்நோப சாந்தயே
அகஜானன பத்மார்க்கம் கஜானன மஹர்நிசம்
அனேக தந்தம் பக்தானாம் ஏகதந்த முபாஸ்மஹே.

வசனம்.

கணநாத ப்ரபோ சூத்திரதார் வந்தனஞ் செய்கின்றேன்.

# கணநாதர்ப்ரவேசம்.





வசனம்.

ஹே பாலகா கைலேயங்கிரியில் மஹா மாட்சிமை தங்கிய முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களும் நந்தி ப்ரிங்கி அமரர் அசுரர் சித்தர் தைத்யர் கருடர் காந்தர்வர் இயக்கர் கிஞ்சையர் பூதர் முதலியவர் புடைசூழ எனது மாதாவாகிய பர்வதராஜ புத்திரியை வாமபாகத்திற் கொண்ட பிதா சௌவியாங்கத்தில் வீற்றிருக்குங்கால் ஏ தனேயா நின் தீனதொனியைக் கேட்டு அகமகிழ்ந்து இவ்வரங்க சபையினிடமாகப் பிராப்தமாகினேன் உனக்குயாது இச்சை

சூஸ்திரதார் வசனம்.

ஹே ப்ரபோ இவ்வரங்க சபையினிடமாக சிவசுப்பிரமணியர் வள்ளியம்மையை மணம்புரிந்த திவ்ய சரித்திரத்தை நாடக பாத்திர ரூபப்பிரவேசமாக நடாத்த எண்ணங்கொண்டேன் இச்சரிதம் ஆதிமுதல் அந்தம்வரை யாதொரு விக்னமில்லாமல் நடக்கும்வண்ணம் வரந் தந்தருளவேண்டும் ப்ரபோ.

கணநாதர் வசனம்.

பாலகா நின் மனம்போல வரந்தந்தேன் யானே ஏகாங்கியாகவும் சுப்ரசன்னனாகவும் இருக்கின்றபடியால் இன்னும் வேண்டிய வரத்தைப் பெற்றுக்கொள்வாய்.

சூஸ்திரதார் வசனம்.

ப்ரபோ கேவலம் நாடக பால்யர்கள் அஞ்ஞானத்தோடு கூடி இருப்பதனால் அவ்வக்கியானம் நீங்கி ஸ்வக்கியானத்தோடு தேவ குருவாகிய விபாழபகவானுக்குச் சமானமாகப் பாஷிக்கும் படிக்கும் வரந் தந்தருளவேண்டும் நாதா.

கணநாதர் வசனம்.

பாலகா இன்றுகூறிய விஷயத்தைப்பற்றி ப்ரமபத்தினியாகிய வாணியை ஸ்மரிப்பாயாகில் அன்னவளுனக்குப் பூரண ஆசீர்வாதந் தந்தருள்வாள் இன்னாடகம் யாராலியற்றப்பெற்றது தனையா.

சூஸ்திரதார் வசனம்.

ப்ரபோ சிவகெங்கை சமஸ்தானத்தி லிருந்து வந்து மருதகோன் நகரென்னுங் கோனார்பட்டியில் வசிக்கும் மதுரகவி முருகதாஸ் என்று பெயர்வழங்கிய ஈ-ம-பேச்சிமுத்துப் பிள்ளை யவர்களா லியற்றப் பெற்றது.

கணநாதர் வசனம்.

அன்னவருக்கும் உனக்கும் பூரண ஆசீர்வாதந் தந்தேன் கைலயங்கிரி செல்கின்றேன்.

சூஸ்திரதார் வசனம்.

ப்ரபோ வந்தனம்.

கணநாதர் வசனம்.

கல்யாண் பாலகா.

விதூஷகன் வசனம்.

ஓய் சூஸ்திரதாரிங்கு பிரசன்னமாகி இருக்கின்றவர் ஆர் காணும் எனக்குத் தோன்றவில்லை தெரிவிப்பீர்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா இவர் கணநாதர்.

விதூஷகன் வசனம்.

ஓய் சூத்திரதார் நீர் சகல கஷ்டங்களையும் வாசித்தும் புத்தியில்லை காணும்,

சூஸ்திரதார் வசனம்.

அடா அப்பா ஏண்டா இவ்விதமாகக் கூறுகின்றனை விஷயத்தைக் கூறுவாய்.

விதூஷகன் வசனம்.

ஓர் வனந்தனிலே மேய்ந்து திரிகின்ற யானை யிவ்விடம் வந்தால் இவர்தான் கணநாதரென்று வணங்கலாமா காணும்.

சூஸ்திரதார் வசனம்.

அடே மூர்க்கா அப்படியல்ல. கணநாதருடைய திருமுகமட்டும் அவ்விதம் மற்ற அவயவங்களெல்லாம் நம்மைப்போலிருக்கும் நன்றாய்க் கூர்ந்துபார்.

விதூஷகன் வசனம்.

நம்மைப்போல அவயவங்களெல்லாஞ் சரியாகத்தான் இருக்கின்றது இவராருகிற்சென்று எனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டாற் கொடுப்பாரோ.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா நீ வந்தனஞ்செய்து வேண்டிய வரத்தைக் கேட்டா லீவார் பெற்றுக்கொள்

விதூஷகன் வசனம்.

ப்ரபோ வந்தனஞ் செய்கின்றேன்.

கணநாதர் வசனம்.

கல்யாண் நீயாவன்.

விதூஷகன் வசனம்.

யானின்றுடகத்தை ப்ரமிக்கச்செய்யும் விகடகவி விதூஷகன்.

கணநாதர் வசனம்.

உனக்கு யாது யிச்சை தெரிவிப்பாய்.

விதூஷகன் வசனம்.

ப்ரபோ யான் வசிப்பது மருதக் கோனகரென்னும் கோனூர் பட்டி எனது தந்தையால் ஒரு சீமான் வீட்டில் விவாகஞ் செய்தது அன்புள்ள வெனது பத்தினி தற்சமயம் கெர்பவதியா யிருக்கின்றபடியால் அன்னவள் நதிக்குச்சென்று ஜலந்திரட்டி மனைவந்துசேர வெகு கஷ்டப்படுகின்றாள் ஆனதால் நதிக்கும் மனைக்கும் பைப்புக் குழாய்வைக்கத் தமது முகத்திற்றொங்குகின்ற துதிக்கையை யீய்ந்தால் என் மனைவி கஷ்டத்தை நிவர்த்திசெய்வேன் ப்ரபோ.

கணநாதர் வசனம்.

அடே துஷ்டா நீ விதூஷகனுகக் கடவது.

விதூஷகன் வசனம்.

அவ்வண்ணமே எனது எண்ணம்.

சூஸ்திரதார் தமது க்ருபையால் யான் கணநாதரை ஸ்தோத்திரஞ்செய்து விதூஷகனென்றபெயரை எக்காலத்தும் நிலைபெறும்படி வரம் பெற்றேன் இனிமேல் நடக்கும் விபரந் தெரிவிப்பீர்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா கணநாதரிடம் வேண்டிய வரங்கள் பெற்றுக் கொண்டோம் இனிமேற் ப்ரம புத்திரியாகிய கலைவாணியை ஸ்மரித்து அன்னவளிடத்தில் வேண்டிய வரத்தைப் பெற்றுக்கொள்வோம்.

விதூஷகன் வசனம்.

அவ்விதமே வேண்டிய வரங்களை நாம் பெற்றுக்கொள்வோம் கலைவாணியை ஸ்தோத்திரஞ் செய்வீர்

சூஸ்திரதார் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன்.

ஸ்லோகம்.

சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபணி
வித்யாரம்பம் கருஷ்யாமி சித்தர் பவதுமேஸதா
பத்மபத்ர விசாலாக்ஷி பத்மகேசர வர்ணினி
நித்யம் பத்மலயாதேவி சாமாம்பாது சரஸ்வதி.

வசனம்.

அம்மணி சூஸ்திரதார் வந்தனஞ் செய்கின்றேன்.

சரஸ்வதிப்ரவேசம்.





சரஸ்வதி வசனம்.

ஹே பாலகா யிரனே, சத்தியலோகத்தில் எனது பர்த்தாவாகிய நான்முகனது வாமபாகத்தில் இருபூத்தொரு நரம்புகளுங் கூடிய பேரிகையாழியைச் சேங்கரத்திற் றரித்து, விணுகானம் செய்துகொண்டிருக்குங்கால் தனியா, பாலகா கண்மணி நின் தீன தொனியைக் கேழ்வியுற்று அகமகிழ்ந்து இங்ஙனம் பிராப்தமானேன் நினக்கு யாது சங்கடம் நேரிட்டது அதனை ஒருவாறு கதனஞ் செய்வாயாகில் அதனின்று உன்னை விமுக்தனுக்குகின்றேன் கண்மணி.

சூஸ்திரதார் வசனம்.

அம்மணி நமது கிருபாகடாக்ஷ விசேஷத்தால் ஒருவித சங்கடமும் ஏற்படவில்லை இவ்வரங்கினிடமாகச் சிவசுப்பிரமணியர் வள்ளியம்மையை மணம்புரிந்த திவ்ய சரித்திரத்தை நாடகரூபமாய் நடத்த எத்தனித்திருக்கின்றேன் அதற்கு யாதொரு விக்கின மில்லாதிருக்கும் பொருட்டும் அன்றியும் நாடகப் பாஷிகர்கள் ஸ்வக்ஞானத்துடன் பக்ஷிக்கவும் வரமருள்வேண்டும்.

சரஸ்வதி வசனம்.

பாலகா தாம் கோறியபடியே வரமளித்தேன் இந்நாடகம் யாரா லியற்றப்பெற்றது.

சூஸ்திரதார் வசனம்.

கமலாசனி சிவகெங்கைச் சமஸ்தானத்திலிருந்து மருதன் மாநகரென்னும் கோனூர்பட்டியில்வந்து, வசிக்கும் மதுரகவி முருகதாஸ் என்று பெயர்வழங்கிய ரா-ம-பேச்சிமுத்துப் பிள்ளையவர்களா லியற்றப்பெற்றது.

சரஸ்வதி வசனம்.

பாலகா நினக்கும் அன்னவருக்கும் பூரண ஆசீர்வாதம் அளித்தேன் சத்தியலோகம் சென்று வருகின்றேன் கண்மணி.

சூஸ்திரதார் வசனம்.

அம்மணி நமஸ்கரிக்கின்றேன்.

சரஸ்வதி வசனம்.

கல்யாண் பாலகா.

விதூஷகன் வசனம்.

ஹே சூஸ்த்திரதார் இப்பொழுது இங்கு பிராப்தமாகி யிருக்கின்ற மாது யார்.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா ப்ரமபத்தினியாகிய நாமகள் வேண்டிய வரத்தைப் பெற்றுக் கொள்வாய்.

விதூஷகன் வசனம்.

சூஸ்திரதார் நீர் கூறும் வார்த்தைகளெல்லாம் விநோதமாகவே யிருக்கின்றது நாமகளென்றால் தாத்பரியம் யாது தெரிவிப்பீர்.

சூஸ்திரதார் வசனம்.

சத்தியலோகவாசியாகிய பிர்மாவினது நாவினிடமாக வீற்றிருப்பதால் நாமகளென்று பெயருண்டானது மித்ரா.

விதூஷகன் வசனம்.

ஓய் சூஸ்திரதார் பிர்மதேவன் நாவினிடமாகச் சதா இம்மாது வீற்றிருந்தால் மலசல மெவ்விதமாகக் கழிப்பது எனக்குத்தோன்றவில்லை விபரமாக வுரைப்பீர்.

சூஸ்திரதார் வசனம்.

அடா துஷ்டா என்னவார்த்தை பாஷித்தனை பிர்மதேவன் நாவினிடமாக அட்சர ரூபமாக வீற்றிருப்பார்கள்.

விதூஷகன் வசனம்.

நல்லது அப்படியா யான்சென்று வணங்கி வேண்டிய வரத்தைக் கேட்டாற் கொடுப்பார்களா தெரிவிப்பாய் நண்பா.

சூஸ்திரதார் வசனம்.

மித்ரா தடையில்லை நீர்சென்று வேண்டியவரத்தைப் பெற்றுக் கொள்வீர்.

விதூஷகன் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன்.

மாதுஸ்திரி வந்தனஞ் செய்கின்றேன்.

சரஸ்வதி வசனம்.

கல்யாண நீயாவன்.

விதூஷகன் வசனம்.

யான் இந்நாடகத்தை ரஞ்சிக்கச்செய்யும் விதூஷகன்.

சரஸ்வதி வசனம்.

உனக்கு யாதுயிச்சை தெரிவிப்பாய்.

விதூஷகன் வசனம்.

அம்மணி எனக்கு ஒரு பத்தினியுண்டு அன்னவள் கெர்ப்பத்தினிடமாக உற்பவித்த குழந்தைகள் ஒன்பது இருக்கின்றது அக்

குழந்தைகளில் நான்கு குழந்தைகள் பால் குடிக்கும் பருவமாயிருக்கின்றபடியால் எனது பாரியாளுக்குப் பால் ஊறவில்லை பிள்ளைகள் பாற் குடியில்லாமல் ஏங்கிப்போய்விட்டது என்மீது தயைசெய்து என் பிள்ளைகளைப் பால்கொடுத்து பாதுகாக்க வேண்டும் அம்மணி.

சரஸ்வதி வசனம்.

ஆடே மூர்க்கா என்னிடத்தில் இவ்வாறு தெரிவித்தபடியால் நீயென்றும் விதூஷகனுக்கடவதி.

விதூஷகன் வசனம்.

அம்மணி இவ்வரமே நீடித்திருக்கப் பிரார்த்திக்கின்றேன் மாதுஸ்திரி.

சூஸ்திரதார் வசனம்.

நண்பா வரணியைத் தெரிசித்து வேண்டிய வரத்தைப் பெற்றுக்கொண்டனையா தெரிவிப்பாய்.

விதூஷகன் வசனம்.

நண்பா நான் என்றும் அழிவில்லாத வரத்தைப் பெற்றுக் கொண்டேன் இனிமேல் நடக்கவேண்டிய விஷயம் யாது தெரிவிப்பீர்.

சூஸ்திரதார் வசனம்.

நண்பா இவ்வரங்கினிடமாக மோகினி பிராப்தமாகப் போகின்றாள் அன்னவளுக்கு வேண்டிய ஏவல் செய்துகொண்டிருப்பாயாக.

விதூஷகன் வசனம்.

தங்கள் மனம்போல் நடக்கத்தயாராயிருக்கின்றேன் தாங்கள் சென்று வருவீர்கள்.

சூஸ்திரதார் வசனம்.

நல்லது மித்ரா சென்று வருகின்றேன்.



# மோகினி சபை.

### விருத்தம்.

அந்தரவாசியான ஆரம்பைமேனகைமின்னார்கள்
சந்ததம்வணங்கலான சற்குணமுடையமாது
அந்தமேயிருந்தாளிந்த அம்புவியோர்மயங்க
விந்தைமோகினியாள்வந்தாள் விளங்கியசபையிற்றானே.

இன்னம் நாதன்வரக்காணேன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-சாப்பு.

### பல்லவி.

மன்னனின்னம்வரக்காணேன் என்னசெய்குவேனோநானே

### அநுபல்லவி.

என்னிடமெய் சோறுதையோ
ஏதுவாது எந்தன்மீது (மன்ன)

### சரணங்கள்.

மாரனம்பு ஞாலேசர
மாரிதேரி வாட்டுராளே (மன்ன)

தென்றற்புலி கோபமொடு
சீறநேரி தியங்குறேனே (மன்ன)

மாங்குயில்கள் கூவிடுதே
மையல்தையல் கொண்டேனின்றே (மன்ன)

பக்தன்பேச்சி முத்தின்பதம்
பாடிதேடி பாவைநானே (மன்ன)

### வசனம்.

ஆசீ யீதென்ன விந்தையாயிருக்கின்றது எனது ஆசைக்கிசைந்த விஸ்வாசமுள்ள பிராணபதி நேற்றிரவு பஞ்சணையின்மீது ரஞ்சிதமாய்க் கொஞ்சிக்குலாவியிருந்து காலையிலெழுந்தி வெளியே சென்றவர் சூரிய அஸ்தமனமாகியும் இன்னும் வாராதகாரணம் என்னமோ தோன்றவில்லையே இன்மதன் கரும்பு வில்லைவளைந்து அரும்பு மலர்தொடுத்து என்மேல் விடுத்தாக்கொண்டிருக்கின்றான் விரகமேத மிகவும் உண்டாகின்றது அதற்கிணங்க அந்தரத்திலுலாவும் கந்தரமிருந்த சந்திரனோ தனது கிரணங்களை விரித்துச் சூரியனைப் போற் காய்ந்துகொண் டிருக்கின்றானே இதற்கென் செய்வேன் எனது பிராணபதி என்னை மறந்து வேறுமாதர்கள் வலையிற்சிக்கி

மீண்டுவர வெட்கிக்கொண்டிருக்கின்றனரோ அல்லது வந்தவழியை மறந்துவிட்டு வேறுவழி சென்றனரோ எனக்கு ஒன்றுந்தோன்ற வில்லை இச்சங்கதிகளைச் சேவகனிடத்திலாவது விசாரிக்கின்றேன்.

அடே சேவகா இங்குவருவாய்.

சேவகன் வசனம்.

அம்மணி வந்தனஞ் செய்கின்றேன் என்னை யழைத்தகாரணம் யாது தெரிவிப்பீர்கள்.





மோகினி வசனம்.

அடா உன்னிடத்தில் சில அந்தரங்கங்கள் விசாரிக்க எண்ணங் கொண்டேன் உன் இச்சை யாது தெரிவிப்பாய்.

சேவகன் வசனம்.

அம்மணி எந்தச் சங்கதிகளைக் கேட்டபோதிலும் பதிலுரைக் கத் தயாராய் இருக்கின்றேன் அம்மணி.

மோகினிசொல் வருவாரோவாராரோ துரைச்சாமி
என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

வருவாரோ வாராரோ எந்தன்சாமி
சொல்லடா இன்று (வரு)

அநுபல்லவி.

அரிவையாள்மனம் நொந்து
ஆவிமிகவே சோருதே(வரு)

சரணங்கள்.

எந்தமாதர் மனையில்
இருக்கின்றனரோ சென்று
இந்தவகை தோணேனே
என்னநான்செய்திடு வேனே(வரு)
எந்தனைமறந் தாரோ
எங்குமே சென்றாரோ
அந்தமிருந்த மன்னன்
ஆசைநாதனைக் காணேன்(வரு)
கைவளைகள் சோருதே
காதல்மிக மீருதே
மெய்சோகவே யனங்கன்
விடுகின்றான் மலர்க்கணை(வரு)

வசனம்.

அடா சேவகா என்னுடைய பிராணபதி என்னை அரை நிமிஷமாவது பிரிந்திருந்தால் ஆவி தரியாதுயென்று தெரிவித்து நேற்று இரவு முழுது மிருந்து காலையிலெழுந்து வெளியேசென்றவர் சூரிய அஸ்தமானமாகி இரண்டரைநாழி யாகின்றதே இன்னும் வரவில்லையே வேறு மாதர்கள் மையல் வலையிற்சிக்கி அன்னவள் மாளிகை சென்று வராமலிருக்கின்றனரோ அல்லது பாந்த தெரியாது வேறு எங்காவது சென்றனரோ ஒன்றுந் தெரியவில்லையே இந்த உண்மை உனக்குத் தெரிந்திருந்தால் உரைப்பாய் சேவகா.

சேவகன் வசனம்.

அம்மணி உண்மையை உங்களிடந் தெரிவிக்கக்கூடாது தெரிந்தால் அரசன்மீது வெகு கோபங்கொள்வீர் தாயே.

மோகினி வசனம்.

அடா சேவகா நான் அன்னவர் மீது கோபங் கொள்ளவில்லை உண்மையை ஒளியாது தெரிவிப்பாய்.

சேவகன் வசனம்.

அம்மணி இன்று காலையில் ஒருமாது என்னை வரும்படியாகத் தெரிவித்துச் சென்றாள் அன்னவள் மாளிகை நான் செல்லுகின்

றேன் என்மனைவி காணேமென்று ஒருசமயந்தேடினுல் அன்னவன் என்மீது கோபங் கொள்ளாதமார்க்கஞ் செய்வாயென்று தெரிவித்துச் சென்ருர் இன்னும் ஒரு நாழிகைக்குள் இங்கு வந்து விடுவார் தாங்கள் கோபங் கொள்ளவேண்டாம் இச்சங்கதிகளை அரசனுக்கு யான் தெரிவித்ததாகப் புகலவேண்டாம் அம்மணி.

மோகினி வசனம்.

அடா சேவகா நீ தெரிவித்ததாக யான் புகலேன் நீ ஒன்றும் யோஜனை செய்யவேண்டாம்.

அடா சேவகா பார்த்தனையா உன்னைப்பிரிந்து அரை நாழிகை யாவது இருந்தால் எனது மனந்தாளாது என்று போய் புகன்று வேறுமாதர் மனைக்குச்சென்றுரே நல்லது யிங்குவரட்டும் பேசிக்கொள்வோம் சேவகா என்னுடைய உத்திரவுயில்லாமல் உள்ளே விடாதே விட்டால் உன்னைத் தெண்டனை செய்வேன் பத்திரமாக வாசலிலிருப்பாய்.

சேவகன் வசனம்.

அம்மணி தங்கள் மனம்போலச் செய்கின்றேன் இந்தச் சங்கதிகளை யான் தெரிவித்ததாகப் புகன்றீராகில் என்னைத் தெண்டனைசெய்து வேலையைவாங்கி விடுவார் எனக்கு இரண்டுபெண்சாதி ஒவ்வொருத்திக்கு ஒன்பது பிள்ளைகளிருக்கின்றது நான் கெட்டுப் போவேன் அம்மணி.

மோகினி வசனம்.

அடா சேவகா நீ தெரிவித்ததாக யான் தெரிவிக்க வில்லை வாசலைக் கபாடபந்தனஞ்செய்து உஜாராய்க் காவல்புரிந்து கொண்டிருப்பாய்.

சேவகன் வசனம்.

அம்மணி அன்னவர் வந்தால் என்ன தெரிவிக்க வேண்டும் என்னை கபாடந்திறவென்று புகன்ருல் என்னசெய்வேன் அம்மணி.

மோகினி வசனம்.

சேவகா நீ ஒன்றுந் தெரிவிக்கவேண்டாம் அம்மணி உள்ளே வர விடாதேயென்று கோபித்துக்கொண்டு வாசலைக் கபாடபந்தனஞ் செய்தார்களென்று தெரிவிப்பாய் வேறு ஒன்றுந்தெரிவிக்க வேண்டாம்.

சேவகன் வசனம்.

அம்மணி தங்கள் மனம்போலச் செய்கின்றேன் தாயே.

---



# மோகனராஜன் சபை.

விருத்தம்.

மங்கையர் தனையே கேரளமுறையாய்
மருவியே சுகித்திடு மகிபன்
அங்கஜனூல்க டன்னை மாசில்லா
தாய்ந்தருள் மன்னுளர் கோமான்
துங்கமோகனமா புரிதனையரசே
சுகம்தாய்ச் செய்திடுந் தோன்றல்
மங்களமாக மோகனராஜன்
மாசபையதனிலே வந்தான்.

நோட்டு.

சரிககக ரிசமமம-கழ
பதபம-பமகரி-சசச
சரிககக ரிகமமம
கமபபப மபததத
நிச-சநிதபமகரிச-சசச.

சந்ததமிந்தச் சபைக்கிமைந்தன்-என்ற-வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அந்தமுள்ள மாசபைக்கி மைந்தன் வந்தனம்
மைந்தன் வந்தனம் மனமகிழ்ந்து தந்தனன்
தந்தை தாய் மலரடிக்கே தனையன் வந்தனம்
தனயன் வந்தனம் இந்த நிவேதந்தனன்
அந்தணர் மலரடிக்கே அடியேன் வந்தனம்
அடியேன் வந்தனம் அன்பாகத் தந்தனன்
பாவலர்க்கு நாவலர்க்கும் பாலன் வந்தனம்
பாலன் வந்தனம் பண்பாகத் தந்தனன்
தாசன் பேச்சிமுத்தின் கற்றமிழ்க்கு வந்தனம்
தமிழ்க்கு வந்தனம் இதோ தமியேன் தந்தனன்

வசனம்.

எழுத்து சொல் பொருள் யாப்பு அணியெனனும் பஞ்சவிலக்கணங்களையு முணர்ந்து ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரம் என்ற

நாற்கவியுஞ்சொல்ல வல்லவரான இவ்வரங்கசபையினிடமாக வீற்றிருக்கும் வித்வான்களுக்கும் மற்று முண்டான சகலகனதனவான்களுக்கும் மற்று முண்டான சகல கனதனவான்களுக்கும் எனது குருவாகிய ரா-ம-பேச்சிமுத்தும் பிள்ளையவர்களுக்கும் அடியேன் வந்தனம் அன்பாகத்தந்தனன்.

யான் வாசஞ்செய்யும் மாநகர் சுந்தரம் வாய்ந்த சந்தன மரங்களும் விந்தையாக விலங்கும் கமுகு மரங்களும் அற்புதமாகிய கற்பக விருக்ஷமும் சுப்பக்கத்திலுஞ் சூழ்ந்திருந்து பிரகாசிக்கும் மாகனந்தங்கும் மோகனபுரி எனதுநாமம் மோகனராஜனென்று தெரிவிப்பார்கள் யான் ஏழுப்பருவத்தில் சகலநூல்களுமுணர்ந்து மாரன் னூலே சிலாக்கியமாக எண்ணிக்கைகொண்டு வாழ்ந்தேன் ஓர் நாள் குடிகள் இட்ட பயிர்களை மிருகங்கள்வந் தழித்ததாக என்னிடம் முறையிட்டார்கள் அன்னவர் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு முப்பத்திரண்டு ஆயுதங்களு மணிந்துகொண்டு காட்டை நாடிச்சென்று வேட்டையாடி விலங்கினங்களைக் கொன்று களைமேலாடித் தாகங்கொண்டு வனமெங்குஞ் ஜலத்தைத்தேடிக் காணாது பூங்காவனமொன்று என் முன்னமேதோன்ற ஆங்குசென்று ஜலமருந்தி அப்பூங்காவனத்தைச் சுற்றிப்பார்க்கையில் ஓர் மாளிகை தோன்றினது அம்மாளிகையுள் பிரவேசித்து பார்க்க நல்ல பருவதிசை யடைந்த மோகினியென்னும் பெண்ணைக் கண்டு அவளை காந்தர்வவிவாகஞ் செய்துகொண்டு அன்னவளோடு இன்ப மனுபவித்து என்றும் பிரியேனென்று வாக்களித்து இருந்தனன் இன்றுகாலை ஓர் பெண்கொடியாள் நதிக்கிவந்து ஜலந்திரட்டிக்கொண்டிருந்தாள் அன்னவளருகிற்சென்று என் எண்ணத்தைக் கூறினேன் அன்னவள் மகிழ்ந்து என்னை க்ரகத்திற்குவரும்படியாக ஆக்ஞாபித்தனள் அவ்வாறு அன்னவள் மாளிகை சென்றிருந்தேன் சூரியன் அஸ்தமானமாகி ஐந்து நாழிகையாகின்றது இனி எனது க்ரகத்தை நாடிச்செல்ல மனந் துணிந்தேன் எனதுபிராணசகி என்ன தெரிவிக்கின்றனளோ அறியேன் நல்லது உள்ளே செல்கின்றேன்.

யாரடா இவ்விடத்திற் சேவகன்.

சேவகன் வசனம்.

மஹாராஜ் சேவகன் வந்தனஞ் செய்கின்றேன்.

மோகனராஜன் வசனம்.

கல்யாண் சேவகா எனது ப்ராணசகி என்ன செய்துகொண்டிருக்கின்றனள்.

சேவகன் வசனம்.

மஹாராஜ் தங்கள் வரவுக்கெதிர்பார்த்து வியாகூலமாய் இருக்கின்றார்கள் யார் வந்தாலும் துவாரத்திலுள்ளே விடவேண்டாமென்று ஆக்ஞாபித்துச் சயனித் திருக்கின்றார்கள்.

மோகனராஜன் வசனம்.

நல்லது யான் வந்திருப்பதாகத்தெரிவிப்பாய்.

சேவகன் வசனம்.

அப்படியே தெரிவிக்கின்றேன்.

ஷை வசனம்.

மாதுஸ்திரி சேவகன் வந்தனஞ் செய்கின்றேன்.

மோகினி வசனம்.

கல்யாண் சேவகா யாது விசேடம் புகல்வாய்.

சேவகன் வசனம்.

மாதுஸ்திரி தங்கள் பிராணபதி அதிக ஆவலாக துவாரத்திலுட் புகுந்தார் எங்கள் மாதுஸ்திரி ஒருவரையும் உள்ளே விடக்கூடாதென்று ஆக்ஞை யிட்டாரென்றேன் தான் வந்திருப்பதாகத் தெரிவிக்கச் சொன்னார்.

மோகினி வசனம்.

அடா சேவகா எனது பிராணபதியா வந்திருக்கின்றனர் வெளியே நிற்கச்செய்வாய் உள்ளே விடாதே என்ன செய்வாரென்று பார்க்கலாம்.

சேவகன் வசனம்.

நல்லது அவ்வண்ணமே செய்கின்றேன்.

ப்ரபோ தாங்கள் வந்ததாகத் தெரிவித்தேன் வெளியே நிற்கச் சொல்லென்று தெரிவித்தார்கள் அரசே.

மோகனராஜன் வசனம்.

அடா சேவகா என்னை வெளியே நிற்கும்படியாகத் தெரிவித்தாளே யாது காரணம் ஒன்றுந்தெரியவில்லையே உண்மையைப் புகல்வாய் சேவகா.

சேவகன் வசனம்.

ப்ரபோ இன்றுகாலை ஓர் பெண் மனைக்கிச்சென்று வருகின்றேனென்று என்னிடத்திற் செப்பிச்சென்றீரே அத்தருணம் மாது

ஸ்திரி கேட்டுக்கொண்டிருந்தார்கள் அதனாலே இவ்விதம் பேசளாந் பட்டது ப்ரபோ.

மோகனராஜன் வசனம்.

அடா சேவகா இதற்கு என்ன யோசனை செய்யலாம்.

சேவகன் வசனம்.

ப்ரபு யான் பிள்ளை குட்டிக்காரனானேன் எனக்குச் சம்பளம் ஜாஸ்தி செய்தால் உங்களிருவர் மனஸ்தாபங்களை நீக்கி விடுகின்றேன் ப்ரபோ.

மோகனராஜன் வசனம்.

அடா சேவகா நின்மனம்போல் இன்னும் பத்துரூபாய் ஜாஸ்தி செய்தேன் எங்களிருவர் மனஸ்தாபத்தை நீக்கி விடுவாய் சேவகா.

சேவகன் வசனம்.

நல்லது தங்கள் மனம்போல் செய்கின்றேன் தாங்களிங்கு தானே நில்லுங்கள் சென்று அதிவேகமாக இவ்விடம் வருகின்றேன்.

மோகனராஜன் வசனம்.

ஜல்தியாகச் சென்று வருவாய் சேவகா.

சேவகன் வசனம்.

அம்மணி தங்கள் பிராணபதியை உள்ளே போகக் கூடாது என்று தெரிவித்தேன் அன்னவர் வெகு மனஸ்தாபத்தோடு மீண்டு சென்றார் அன்னவரைப் போகக்கூடாது என்று தெரிவித்தேன் மறுபடியும் ஒன்றும் பேசாது செல்லுகின்றார் அம்மணி.

மோகினி வசனம்.

அடா சேவகா இதற்கு என்ன யோஜனை செய்யலாம்.

சேவகன் வசனம்.

அம்மணி யானெவ்விதமாவது அன்னவர் கோபத்தை யாற்றி வரும்படியாகச் செய்கின்றேன் தாங்கள் ரெம்பக் கோபஞ்செய்யாது சில வார்த்தைகள் பேசி யினிமேல் வேறு மாதர் மாளிகை செல்லாது ஏற்பாடு செய்வீர்கள்.

மோகினி வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன் எங்கிலுஞ் செல்லு முன் அழைத்து இங்கு வரும்படி செய்வாய் சேவகா.

சேவகன் வசனம்.

அம்மணி இவ்வேளை தங்கள் மனம்போலச் செய்கின்றேன் வேறு யோசனை வேண்டாந்தாயே செல்கின்றேன்.

ஷை வசனம்.

ப்ரபோ தங்களை வரும்படியாக மாதரசி ஆக்ஞை யிட்டார்கள் உள்ளே செல்லுங்கள் ப்ரபோ.

மோகனராஜன் வசனம்.

அடா சேவகா சென்று வருகின்றேன் இங்கு விற்றிருப்பாய்.

சேவகன் வசனம்.

அப்படியே இருக்கின்றேன்.



## மோகினிக்கும் மோகனராஜனுக்கும்

### தர்க்கம்.

ஐஷாகர்ஞ ஒய்ஷாபர்ஞ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வஞ்சியேமையல் மிஞ்சியேவந்தேன்
கெஞ்சமிதங்காயோ மானே.

மோகினி சொல்.

வஞ்சியேயென்று கெஞ்சிநில்லாதே
பஞ்சமாபாதகா அஞ்சாமல்

மோகனராஜன் சொல்.

பாதகனென்று ஓதுவதாலென்
நீதியறியாயோ மாதே

மோகினி சொல்.

பூதலமீதில் மாதர்கடன்னிட
காதலினாலிறந்தார் கோடி

மோகனராஜன் சொல்.

இறந்தாலுமுன்னை மறந்திடுவேனோ
சிறந்தமோகன ரஞ்சிதமே

மோகினி சொல்.

சிறந்தவனென்பதை மறந்திடுகன்னத்தி
லறைந்திடுவேனிங்கு நில்லாதே

மோகனராஜன் சொல்.

நில்லாதேயெனச் சொல்லாதேமனங்
கல்லாமோவடி காதலியே

மோகினி சொல்.

பொல்லாதேவசை கல்லாதமூட
னல்லோயிவ்வழி தேடுவான்

மோகனராஜன் சொல்.

மாரன்வாதையால்நான் சீரழிந்தேனே
நேரமேனடி நீ சேரவேவாடி

மோகினி சொல்.

வாடியென்றுமேபல வாறுபேசாதே
ஓடிவாய்வெளிநீ உண்மைகூறுவாய்

மோகனராஜன் சொல்.

மன்னனென்னிடம் நீதிமயக்கிய
அன்னமேஎன்னை நீயணைந்திடவாராய் வெகுஜோராய். (வ)

மோகினி வசனம்.

மூர்க்கா முன்னமே என்னிடத்தில் உண்மை வான்போல் பல வாறு பேசினீரே இனிமேல் என் முன்னமே நிற்கவேண்டாம் செல்லுவீர் வெளியே.

மோகனராஜன் வசனம்.

அடி கண்மணி என் மீது இவ்வளவு கோபம் வரவேண்டிய காரணம் யாது ஒன்றுந் தெரியவில்லையே கண்மணி மனமகிழ்ந்து உண்மையைத் தெரிவிப்பாய் காதலி.

மோகினி வசனம்.

இனிமேல் என் முன்னமே நின்று வார்த்தையாடினால் என் மனஞ் சகியாது வந்தவழியே அதி வேகமாகச்சென்று வருவீர் வீண்வார்த்தை யாடவேண்டாம்.

மோகனராஜன் வசனம்.

மாதே எனக்குவாய்த்த சாதே தடை சொல்லாதே இப்பொழுதே மன்மதனென மாபாவி கரும்பு வில்லில் அரும்பு மலர் தொடுத்து என்னை அடுத்து என்மேல் விடுத்து வெகு அவஸ்தைகள் படுத்துகின்றானே கண்மணி என் வதனத்தைப்பார் யான் என்ன குற்றஞ் செய்தபோதிலும் மன்னிப்பாய் காதலி.

## வேறு தர்க்கம்.

அன்னநடை மின்னரசே என்ற வர்னமெட்டு.

இராகம்-தேசிகதோடி-ஏகதாளம்.

கண்ணிகள்.

இன்னுமரைநாழி தரியாதென்னாவி-அடி
இந்தவாதுஎந்தன் மீது ஏனோயென்றேனடி.

வசனம்.

கண்மணி இனிமேல் இவ்விதம் பேசிடில் என்னுடைய ஆவியானது தரியாது என் மீதுமகிழ்ந்து கட்டியணைந்து காதலைத்தீராய் பெண்பாவாய்.

மோகினி சொல்.

பாதகனேதேதிதோ பாவைதானேனோ-அடா
பாருலகின் மீதிலுன்போலாருங்காணேனே.

வசனம்.

அடா மூடா உன்னைப்போல் இந்திரஜாலங்கற்றவன் ஒருவனையுங் காண்கிலேன் வீணே வாதாடிக்கொண் டிருப்பதிற் பிரயோஜனம் ஒன்றுமில்லை வெளி செல்வாய்.

மோகனராஜன் சொல்.

வஞ்சிமையல்மிஞ்சிநாமே கெஞ்சுரேனடி-அடி
மாதரசேவந்தணைவாய் வசந்தனேனடி.

வசனம்.

அடி வஞ்சியே உனது நெஞ்சங் கருங்கல்லோ இரும்போ இவ்வளவு சொல்லியும் இரங்கவில்லையே ரஞ்சிதமே பஞ்சணை மீது என்னோடு கொஞ்சிக் குலாவுவாய் குயிலே.

மோகினி சொல்.

பத்தினியைநீயே பலவந்தஞ்செய்யாதே-அடா
பாவியெந்தனைமிகச் சோருதிப்போதே.

வசனம்.

அடிக்கடி என்னோடு வாதம் பேசவேண்டாமென்றுந் தெரிவித்துப் பித்தனைப்போல் பிதற்றுகின்றனையே சிச்சி வெகு வேகமாக வெளியிற் சென்று விடுவாய்.

மோகனராஜன் சொல்.

அஞ்சுகமேரஞ்சிதமே தஞ்சம்நீயடி-அடி
ஆதரவுசெய்திடுவாய் காதல்நீரடி.

வசனம்.

அன்னமே என்னை வெளியிலே சென்று விடுவாயென்று தெரிவித்தனையே உன்னையன்றி எனக்கு வேறுதஞ்சம் இப்பூமியின் மீது ஒருவருமே இல்லையே காதலி.

மோகினி சொல்.

மன்னவனேகன்னிகை நானென்னசொன்னாலும்-அடா
மந்தமதியாலேயிங்கு வந்தாயேமேலும்.

வசனம்.

அடா பாவி யுனக்கு நானெவ்வளவு யெடுத்துச் சொல்லியும் கொஞ்சமாவது சேவிக்கோது தடிப் புத்தியினாலே இன்னேரம் வரையிலும் வாதாடு கின்றனையே சீக்கிரம் வெளியே செல்.

## வேறு தர்க்கம்.

மோகனராஜன்சொல் உரகமேமீமெத்தக்கெருவென்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-அடதாளம்-சாப்பு.

மோகனராஜன் சொல்.

அன்னமேயுன்னாசையாலேகான் தேடினேன்,
அங்கஜனெய்தகணையாலே வாடினேன்
மன்னவன்யான்மதுரப்பதம் பாடுறேன்
மங்கையேகொக்கோகத்தின்படி கூடுறேன். (அன்)

வசனம்.

அடி யன்னமே எனக்குவாய்த்த சொர்ணமே யானுன்னைத் தேடினேன் மன்மதன் மலர்க்கணையால் வாடினேன் என்வாதை யைத் தீர்ப்பாய் என்முகம் பார்ப்பாய் காதலி.

மோகினி சொல்.

கூடுறேனென்றுநீர் கூசாமற்பேசிடக்
கூத்தியாளென்றெண்ணிக் கொண்மடிரோஎசிட
வாடுறேன்தேடுறேனென்றுபொய்வீசிட
வந்தீரேமங்கை மனமதுகூசிடக். (கூடு)

வசனம்.

அடா மன்னவா உன்னைக் கூடுகிறேனென்றும் மன்மதனெய்த மலர்க்கணையால் வாடுகிறேனென்றும் மையலினாலுன்னைத்தேடி வந்தேனென்றும் புலம்புகின்றாய் இனி என் முன்னில்லாதே தெண் டனை செய்வேன்.

மோகனராஜன் சொல்.

கூசுகிறதென்றதோர் கோமளமேவாடி
கொஞ்சியிருபேரும் பஞ்சணையிற்கூடி
நேசமாய்மாரன் கணையைவிலக்கடி
நேரிழையேயிந்த்ர ஜாலமுயேதேடி. (அன்)

வசனம்.

மையற் சரசி தையற் கரசி என்நேசி உல்லாசி மந்தஹாசி விசு வாசி என்மீது இத்தனை கோபஞ்செய்வது என்னாற் பொருக்கமுடி யாது பஞ்சணை மீது சஞ்சலத்தை விடுத்து நாமிருவருங் கொஞ் சிக் குலாவுவோங் கோதையே.

மோகினி சொல்.

ஜாலஞ்செய்யாதேயென் றோதியவேந்தனே
சமர்த்துகள்செய்யவேண் டாங்குணசாந்தனே

சிலருடன்கேலி செய்யாதேனந்தனை
சிட்சைசெய்வேனிங்கு நிற்காதேயுந்தனை. (கூடு)

வசனம்.

ஆடவர்கள் உன்போலப் பூவின்மீது கிடையாது என்றேறி வாது செய்வதேற்காது நீர் செய்கின்றீர் சூது இங்கு நடவாது இனியொருமுறை இவ்வாறு பகர்ந்தாலுன்னைச் சிட்சைசெய்வேன்.

மோகனராஜன் சொல்.

நிற்காதேயென்றதோர் நேரிழையேவாடி
நீயிந்தவிதஞ்செப்பி லுயிர் தரியாதடி
தற்காலந்தன்னிற் றழுவிமுத்தந்தாடி
தையலேயுமையலால் நைகுறேனடி. (அவ்)

வசனம்.

அடி மாது சிரோன்மணி கோபமா அல்லது என்மேல் மனஸ்தாபமா நீ இவ்வண்ணங் கூறுவது ஞாயமா அல்லது என்னை விரும்பாதிருக்கும்படிசெய்யு முபாயமா மாதின்கண்ணையால் வாடின என்னை ஆதரிப்பாய் அன்னமே.

மோகினி சொல்.

நைகின் றீரெந்தனை யின்னாரென்றறியாதே
ராஜனேயென்னிட சேதிகடெரியாதே
வைதுவேனென்முன்னே கடைந்தனை கிரியாதே
வந்தவழிசெல்லா யிவிடத்திற்றரியாதே. (கூடு)

வசனம்.

அடா துஷ்டா உனக்கு எவ்விதமாகப் புத்தி போதித்தபோதிலும் ஒன்றுங்கேளாது ஏன்னென்னமோ பலவாறு வார்த்தையாடுகின்றாய் நீர் அரசனாயிருந்தாற் றெரியும் உன்னுடைய வார்த்தைகளெல்லாம் என்முன் இங்கு செல்லாது வந்தவழி தீவிரமாக வோடுவாய் சைதுஷ்டா.

## வேறு தர்க்கம்.

பாரீஸ் வர்ணமெட்டு.

இராகம்-அபூருவம்-ஏகதாளம்.

மோகனராஜன் சொல்.

ஆகாகாவாராய் களிகூராய்

மோகினி சொல்.

அதை அறைவனேமன்னுஜேசராய்

மோகனராஜன் சொல்.

ஓமோகோ வந்தெனைசேராய்

மோகினி சொல்.

உமக்கழகோ வுன்மனைசேர்சீராய்

மோகனராஜன் சொல்.

வாதேனே செய்தாய்தேனே

மோகினி சொல்.

மல்லேன் நானே

மோகனராஜன் சொல்.

சொல்லேன் வீணே

மோகினி சொல்.

நில்லா யென்முன்னே
உமக்கழகோ வுன்மனைசேர்சீராய்

மோகனராஜன் சொல்.

மாதே யுன்மனங்கல்லோ

மோகினி சொல்.

வழுத்தாய் வீண்.

மோகனராஜன் சொல்.

மையல் கொண்டேன்

மோகினி சொல்.

தையல் தானேனே
உமக்கழகோ உன்மனைசேர்சீராய்

மோகனராஜன் சொல்

வசனம்.

காதலி நானென்னகுற்றஞ் செய்தபோதிலும் அவைகளை மன்னித்து கருணைசெய்து கட்டி யணைத்தொரு முத்தமிட்டுக் காமன் கணையை விலக்குவாய் கண்ணுட்டி.

மோகனராஜன் வசனம்.

அடா துஷ்டா என்று என்னைப்பேசலாகுமா கண்மணியே.

மோகினி வசனம்.

மன்னவா நேற்றிரவு உன்னை அரைநாழிகையாவது பிரிந்தால் என்னுவி நில்லாது என்று தெரிவித்துக் காலையிலெழுந்து ஜல்தி

யாக வருகின்றேனென்று சென்றீர் சூரியன் அஸ்தமானமாகி ஐந்துநாழிகை பரியந்தம் வராததகாரணம் யாது தெரிவிப்பீர்.

மோகனராஜன் வசனம்.

காதலி யாவின்றி எனது இஷ்டர்கள் மாளிகைசென்றி வந்துசேர இவ்வளவு நாழிகையானது வேறு சந்தேகம் நீமனதில் நினைந்துகொண்டு என்னை பலவாறு பேசலானாய் அந்தச் சந்தேகங்களை மனதில் வைக்கவேண்டாம் பட்டமயிலே.

மோகினி வசனம்.

வேந்தனே என்னிடத்தி லின்னும் உண்மை தெரிவிக்காது ஒளித்துப் பேசுகின்றீர் இவை ஞாயமல்ல உண்மையைத்தான் றெரிவிக்கவேண்டும் இல்லாவிடின் வெளியே செல்லுவீர்கள்.

மோகனராஜன்சொல் வசனம்.

அடி யன்னமே மறுபடியும் என்னிடத்தி லிவ்வாறு பேசலானாய் என்னுடைய மனதைக் கிரிகிக்கின்றனையோ யான் யேதாகிலுஞ் செய்திருந்தால் மட்டும் மனதைச் சோதிக்கவேண்டும் சும்மா வுரைப்பது தகுதியன்று பெண்பாவாய்.

மோகினி வசனம்.

நாதா இன்று காலையில் வெளியே செல்லும் பொழுது சேவகனிடத்திற் றெரிவித்ததை யான் கேட்டுக்கொண்டிருந்தேன் என்னிடத்திற்றானே ஒளித்துவைத் திருக்கின்றீரே இவை தமக்குத் தகாது.

மோகனராஜன் வசனம்.

கண்மணி உண்மைதனைத்தெரிவிக்கின்றேன் என்மீது கோபங்கொள்ள வேண்டாம் இன்றுகாலை நதிக்குச் சென்றிருந்தேன் ஓர் மாது என்னைத் தன் க்ரகத்திற்கு வரும்படியாகத் தெரிவித்தாள் அன்னவள் மாளிகை சென்றிருந்தேன் இவ்வளவு நாழிகையானது கண்மணி என் மீது கோபங்கொள்ள வேண்டாம்.

மோகினி வசனம்.

நாதா இன்[illegible]மல் வேறு மாதர்களைக் கனவிலும் நினைக்கிலேனென்று என்னிடம் உண்மை தெரிவித்தாலும் மனம்போல நடக்கின்றேன் இல்லாவிடில் இப்பொழுதே வெளியே சென்று விடுவீர்கள் என்மீது கோபங் கொள்ளவேண்டாம் ப்ரபோ.

மோகனராஜன் வசனம்.

எனது அன்புநிறைந்த ஆசைக்கண்ணாட்டி இனிமேலுன்னை யல்லால் வேறுமாதர்களைக் கனவிலும் நினைக்கிலேன் இவையுண்மை இதற்காக யிந்தனை வாது செய்யலாகுமோ கண்ணாட்டி.

மோகினி வசனம்.

அடா சேவகா இங்கு வருவாய்.

சேவகன் வசனம்.

அம்மணி யென்னை யழைத்த காரணம் யாது புகல்வீர்கள்.

மோகினி வசனம்.

அடா இவர் காலையிலெழுந்து வெளியே செல்லும் பொழுது உன்னிடத்தி லென்ன தெரிவித்துச் சென்றார் உண்மையை என் முன் னோதுவாய் சேவகா.

சேவகன்வசனம்.

அம்மணி யானென்ன தெரிவிக்கப்போகின்றேன்.

மோகினி வசனம்.

அடா சேவகா சும்மா உண்மையைத் தெரிவிப்பாய்.

சேவகன் வசனம்.

அம்மணி ஒருமாது வரும்படியாகத் தெரிவித்தாளாம் அன்னவள் மாளிகை சென்று வருகின்றேனென்று தெரிவித்துச் சென்றார் உண்மை யிவைதான் அம்மணி.

மோகினி வசனம்.

அடா வெளியே சென்று வாசலைக் காத்துக்கொண்டிருப்பாய் சேவகா.

சேவகன் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன் அம்மணி.

மோகினி வசனம்.

நாதா தாங்கள் என்னிடமிருந்து இனிமேலாவது உண்மை தானு தெரிவிப்பாய்.

மோகனராஜன் வசனம்.

இனிமேல் ஒரு ஸ்திரியின்முகம் பார்க்கின்ற தில்லை இது உண்மை.

மோகனராஜன் சொல்

மாரன்வாளிதயால் என்ற வர்னமெட்டு.

இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

செய்குவேன் மயிலே-உந்தன்
சித்தம்போலவே குயிலே (செய்)

அநுபல்லவி.

தையலேமதனெய்யும்வாளியால்
நையுறேன்டி (செய்)

சரணம்.

மந்தஹாசியே
வாக்கினிமேற்றவரேனே
சந்த்ரவதனி
உந்தன்

எந்தின்நேசியே
விலாசியே
சிந்தைமகிழ்வாய்
மனம்போற் (செய்)

வசனம்.

கண்மணி இனிமேல் உன் மொழிதனை மீறேன் சந்ததம் உனக்கே சிந்தைமகிழ்ந்து தொண்டு புரிவேன் இனி யுன்மனதிற் சந்தேகங்கள் எண்ணவேண்டாம் பாவி மன்மதன் பகழியினாலே வாட்டுறானடி பாவையே உன் சித்தமிரங்கி எனக்கொரு முத்தங்கொடுத்து பஞ்சணை மீது என்னையிருத்திக் காமலீலைசெய்வாய் காதலி.

மோகினி வசனம்.

நாதநின்மனம்போலக் காமலீலைசெய்வோம் காதலா.

மோகனராஜன் சொல்

நகிலகிலே துரசேப்ரி என்ற வர்னமெட்டு.

இராகம்-அபூருவம்-ஆதிதாளம்.

ஜாவளி.

ஓடிவாடிநீ கூடநாம்விளையாட
மோடி செய்வதேன்

மோகினி சொல்.

வா-உத்தமா-என்னைச்சேராய்

மோகனராஜன் சொல்.

உன்சித்தமகிழ்ந்துமே கூறாய்

மோகினி சொல்.

ஓர்-முத்தமுகந்துமேதாராய்

மோகனராஜன் சொல்.

நான்-மெத்தநொந்தேனே கண்பாராய் (ஓடி)

மோகினி சொல்.

வாராய்வாராய் நீமாராதீராவொய்யாரா
சேராய் சிங்காரா (வாராய்)

மோகனராஜன் சொல்.

அடி-வஞ்சியே தாமதமா

மோகினி சொல்.

மலர்-மிஞ்சியே தாவுறுமோமா

மோகனராஜன் சொல்.

அடி-அஞ்சுகமே சேரலாமாமா

மோகினி சொல்.

வெகு-சஞ்சலமேனோகாண் வாமா (வாராய்)

மோகனராஜன் வசனம்.

ஆ எந்தன் பெண்ணரசி சித்தஜபாணத்தால் சித்தங் கலங்கி உந்தனை நத்திவந்த என்னை முந்தக்கொடுத்துப் பேச்சிமுத்தின் சிங்காரப் பதங்களைப்பாடிச் சேர்ந்தணைவாய் சேயிழையே.

மோகினி வசனம்.

அடா என்சாமி மையல் கொண்டேன் காமிதாமதங்கள்செய் யாதே சித்தஞ் சகிக்கேன் சித்தஜன்செய்யுஞ் சண்டையை நிர்வகிக் கேன் இப்பொழுது பஞ்சணைக்கிச் செல்வோம் வருவாய்.

மோகனராஜன் சொல்.

வாராய் மனமோகனமாமயிலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ரூபகம்.

ஜாவளி.

மோகனராஜன் சொல்.

வாடிமடமாதரசே மோடிஏனடிமஞ்ச
மதற்கேகுவோம்வாடி சீராகக்
காமனைக்கொண்டாடி கொக்கோகக்
கருத்தை முடிப்போமடி (வாடி)

மோகினி சொல்.

செல்வோம்நாதா செல்வோம்நாதா
செல்வோம்நாதா
வல்லவனேயிருபேரு மனைசேர

மாகவிளையாட இன்றுஅன்
பாகப்பதம்பாடச் (செல்)

மோகினி வசனம்.

கண்ணாளா பிருபேரும் மஞ்சஞ் செல்வோம் வருவீர்கள் துரையே.

மோகனராஜன் வசனம்.

கண்மணி எப்பொழுது இவ்வார்த்தை வருமென்றல்லவோ காத்துக்கொண்டிருந்தேன் இதோ சீக்கிரஞ்செல்வோம் வருவாய்.

வாழ்கவாழ்க என்ற வர்னமெட்டு.


இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வாழ்கவாழ்க ஈசன்பொன்னடி
மலர்கள்வாழ்கவே மலர்கள்வாழ்கவே-அடி
மலர்கள் வாழ்கவே
மாதவம்புரி வேதஅந்தணர்
நீதியாய்வாழ்க வாழ்கவாழ்கவாழ்கவாழ்க
வாழ்கவாழ்கவே. (வாழ்க)

மோகினி மோகனராஜன் தீர்க்கம்

முற்றிற்று.



## நம்பிராஜன் சபை.

### ஆசிரிய விருத்தம்.

சீர்மேவுசிற்றூரை யரசுபுரிமன்னவன்
  திருமாதிலங்கு மார்பன்
தீரன்ரணசூரனதி வீரனெய்பாரனுஞ்
  ஜெகம்புகழு கின்றநேர்பன்
தார்மேவுதிண்புயன் கலைகடனையாய்ந்தவன்
  றருவைநிகர் செங்கரத்தான்
சர்ச்சனசிநேக கெம்பீரபரிபாலனற்
  சந்தானமே பெற்றவன்
ஏர்மேவுதிரிபதகை திங்களணிசென்னிபுனை
  ஈசன்மகன் வடிவேலவன்
எக்காலமுஞ்சிந்தை தன்னில்மறவாதவன்
  ஈகைமிக வுடையநேமன்
பார்மேவுமெழிலுடைய மைந்தர்கள்மகிழ்ந்திரு
  பக்கமுஞ் சூழ்ந்திருக்க
பாவையர்கள்சதிராட நம்பியரசன்கொலுவில்
  பண்புட னிருந்தனனரோ.

அதரஅதர மதுரமதுர மூரலீ பஜாயுரே யென்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-ஏகதாளம்.

### கண்ணிகள்.

சூரவீரதீரனான தங்கள்நம்பிராஜன்
  எங்கும்புகழ் நேசன்
  நங்கைமேல் விஸ்வாசன்

ஜோதிம்மாமகுட முடியான்
கோதிலாமனதை யுடையான்

  நீதிசேரரசை யுடையான்
  குமரகுரு
  பரனைமற வாதவன் (சூரவீர)

அம்புகத்திகேடயம் வில்லாயுதமணிந்துமே
  அகமிகமகிழ்ந்துமே
  குகனையேபுகழ்ந்துமே

அந்தமேமிகுந்த கோமான்
மைந்தர்கள் சூழப் பூமான்
வித்தையாய்க்கொலுவிற் சிமான்
  ஆறுமுகன்
  திருநாமத்தைப்பாடியே (சூரவீர)
மார்பிலேமணிபதித்தவா குமாலை துலங்கவே
  வாழ்கரமிலங்கவே
  மாற்றலர்கலங்கவே
வஞ்சியர்சாமரம் போடவே
அஞ்சுகமொழிமாத ராடவே
செஞ்சொலின்பீதங்கள் பாடவே
  வாருடனே
  சேவகர்கள் சூழவே
(சூரவீரதீரனை)

விருத்தம்.

செந்தமிழின்கடலதனை யள்ளியுண்டு
  திவ்யகவிசர்மாரி யதனுக்கொப்பாய்
அந்தமொடுபொருளிசைத்துப் பாடுகின்ற
  ஆசுகவிப்புலவோரே சிறுவன்யானுஞ்
சுந்தரஞ்சேர்வள்ளியம்மை சரிதந்தன்னைச்
  சுதிலயமோடுகற்றப் பதர்க்குத் துணிந்தேனையா
எந்தனுரை தனிற்பொருட் குற்றங்களே து
  மிருந்தாலும துரமென்றுட் கொள்ளுவீரே.
  இனிவேணும்வேணுமேகிர்பை என்றவர்ணமெட்டு.

இராகம்-பியாக்-அடதாளம்.

கண்ணிகள்.

சீருலவுமிச்சபைவாழ்
  செல்வர்களே வந்தனம்
  கெல்வர்களே வந்தனம்-கவி
  வல்லவரே வந்தனம் (சீரு)
  தண்டமிழாராய்ந்தருண
  சாதுக்களே வந்தனம்
  மண்டலத்திற்கீர்த்திபெற்ற
  மன்னவரே வந்தனம் (சீரு)

REGISTERED
4- JUL 1910
MADRAS.

மாசிலா தமாமறையோர்
மலரடிக்கே வந்தனம்
நேசமாகப்பாரிலனும்விஸ்
வாசமாகத் தந்தனன். (௬௫)

வசனம்.

நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் பதினெட்டு புராணம் இருபத்தெட்டு ஆகமம் முப்பத்திரண்டு தர்மம் அறுபத்து நான்கு கலைக்யானம் தொண்ணூற்றாறு தத்துவம் மறவிக்யான பூர்வக்யான முதலியவைகள் கற்று இவ்வரங்கசபையினிடமாக வீற்றிருக்கும் அறிவு ஒழுக்கம் தவம் வாய்மை பொறை முதலிய வைகளிற் சிறந்த பெரியோர் கட்கும் மற்றவர் கட்கும் மைந்தன் வந்தனம் மகிழ்ந்து தந்தனன்.

இப்பூமியின் கண் இயலிசை நாடகமென்னும் முத்தமிழில் சிவ சுப்பிரமணியர் வள்ளிநாயகியைத் திருமணம் புரிந்த திருக்கதையை (மகா சிறப்புற்றோங்கிய மிருதக்கோன் நகரென்னுங் கோனார் பட்டியின் கண் வசிக்கும் பேச்சிமுத்துப் பிள்ளையென்று பெயர் வழங்கிய மதுரகவி முருகதாஸ் அவர்கள்) நாடகத்தமிழாக வியற்றினதை இவ்வரங்க சபையினிடமாக நடாத்த வெண்ணங் கொண்டு யான் நிம்பிராஜனென்னும் வேடம்புனைந்து இங்கு வந்தனன் யான் பாடும் பாடல்களினும் வார்த்தைகளினும் சொற்குற்றம் பொருட் குற்ற முதலியவை நேரினும் அவைகளை அங்கீகரிக்கக் கேட்டுக் கொள்கின்றனன்.

கவி.

நல்லார்களென்பிழையை நாடுவரோநானிலத்திற்
கல்லாதாரென்பிழையைக் காணுவரோ—அல்லாமல்
என்போல்வாரென்னை யிகழ்வாரோர்கேளீரே
பின்பாரோசொல்வார் பிழை.

அதாவது,

தமிழிற் றேர்ச்சியுற்ற வித்வான்களாய் இருக்கப்பட்டவர்கள் எனது குற்றத்தைக் கருதப்போகின்றார்களா கருதார்கள் தமிழினருமை தெரியாத பாமரராகி யுள்ளவர்கள் யான் பாடுங் கவிகளினுற்ற குற்றத்தை யறிந்துகொள்ளப் போகின்றார்களா அறிய மாட்டார்கள் அல்லது என்னைப்போலுள்ள பாலியர்கள் என்னுடைய தமிழை யிகழ்ந்து சொல்லப்போகின்றார்களா இகழமாட்டார்கள்

ஆகச்சே வேறுரும் குற்றம் பாவிக்க மாட்டார்களென்ற எண்ணத்தோடு வள்ளியம்மையின் திவ்ய சரித்திரத்தை நடாத்த எண்ணங்கொண்டோம் ஆகையால் நாங்கள் நடாத்தங் கூடிய சரித்திரத்தை நன்கு மதித்துக் கனங் கொடுக்க வேண்டியதாய்ப் பிரார்த்தித்து வந்தனஞ் செய்தேன்.

நம்பிராஜன்சொல் விருத்தம்.

ஐயனேபோற்றிபோற்றி அருந்தவப்பொருளேபோற்றி
மெய்யனேபோற்றிபோற்றி வித்தகாநின்றாள்போற்றி
தூய்யனேபோற்றிபோற்றி சூரசம்மாராபோற்றி
வையமீதெனதுசெங்கோல் வளர்ந்திடச்செய்வாய்போற்றி.

வசனம்.

கோகனகப் புட்பத்திலுரையும் பிர்மாவும் சிந்துவிற்றுயிலும் விஷ்ணுவும் அத்திரி முதலிய சப்தரிஷிகள் வணங்கும் ருத்திரனும் இம்மூன் றுருவங்களும் ஓருருவமான சாக்ஷாத் சிவபெருமானுக்குப் பிர்ணவமந்திரம் போதித்த சிவ சுப்பிரமணியக் கடவுளே எனது செங்கோல் வளர்ந்திடச் செய்வாய் எங்கள் குறக்குலத்திலுற்றவர்களும் மற்றவர்களும் வாழ்ந்திடச் செய்வாய் ப்ரணவ சொரூபா.

மைந்தர்கள் வசனம்.

ப்ரபோ வந்தனஞ் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் பாலர்காள்.

நமது சேவகன் இதுவரை தர்பாரினிடமாக வராத காரணம் யாது தெரிவிப்பீர்கள் புதல்வர்காள்.

மைந்தர்கள் வசனம்.

பிதா நேற்று குந்தமூலவர்க்கங்கள் கொண்டுவரச் சென்றனன் இன்னும் வரவில்லை தந்தையே.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் வீற்றிருப்பீர்கள்.

மைந்தர்கள் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றோம்.

சேவகன் வசனம்.

ப்ரபோசேவகன் வந்தனஞ்செய்கின்றேன்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் சேவகா.

நேற்று மலைக்கிச் சென் றிருந்தனையே கந்த மூல வர்க்கம் கொண்டு வந்தனையா கூறுவாய்.

சேவகன் வசனம்.

சிற்றரசை யர்சு புரியுந் திரனே வேண்டிய கந்த மூலவர்க்கம் கொண்டு வந்து அந்தப்புறத்திற் கொடுத்து வந்தேன் ப்ரபோ.

நம்பிராஜன் வசனம்.

சந்தோஷங் கொண்டேன் சேவகா.

புத்திர சிகாமணிகள் நங்குல தெய்வமாகிய சிவசுப்பிர மணியரை சந்ததமுஞ் சிந்தையில் நினைந்து வருகின்றீர்களா.

மைந்தர்கள் சொல்.

புள்ளிமான்களை வேட்டை என்ற வர்னமெட்டு.

இராகம்-நேசிகதோடி-ஏகதாளம்.

கண்ணிகள்.

வெள்ளிமலைவேட்டையாடுவோம்-எங்கள்
வேலவனைத்தினங் கொண்டாடுவோம்

உள்ளமிகக்களித்துப்பாடுவோம்-நாங்கள்
உம்பர்சிறைமீட்டோனைக் கொண்டாடுவோம்

நாகமலைமீதுவேட்டையாடுவோம்-கந்த
நாதன்மாமலரடி கொண்டாடுவோம்

சேகரமாம்நாங்களொன்றுகூடுவோந்-திருச்
செந்திநகர்வேலனைக் கொண்டாடுவோம்

சோலைமாமலைவேட்டையாடுவோம்-தினஞ்
சுப்ரமண்யநாதனைக் கொண்டாடுவோம்

காலைமாலைநாங்களொன்றுகூடுவோம்-முக்
கண்ணன்மகன்றன்னையே கொண்டாடுவோம்.

வசனம்.

பிதா நாங்கள் ஒன்று கூடிக் காலையிலும் மாலையிலும் நங்குல தெய்வமாகிய அறுமுகக்கடவுளை ஸ்தோத்திரஞ்செய்து நாகமலை தோகைமலை வெள்ளிமலை யிவைகளில் வேட்டையாடித் தினந்தினம் வருகுவோந் தந்தையே,

நம்பிராஜன் வசனம்.

புதல்வர்காள் மிகுந்த குதூகல மடைந்தேன் சில சங்கதியை யுங்களிடத்தில் விசாரிக்க எண்ணங்கொண்டேன் உங்கள் சித்தம் யாது தெரிவிப்பாய்.

மைந்தர்கள் வசனம்.

தந்தையே எச்சங்கதிகளைக் குறித்துக் கேட்கின்றீர்களோ அதற்குப் பதிலுரைக்கச் சித்தமாய்க் காத்துக்கொண் டிருக்கின்ரோம் பிரபோ.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்காள் சில வார்த்தைகள் கூறுகின்றேன் அதற்குப் பதில் அன்போடு கூறுவீர்கள்.

மைந்தர்கள் வசனம்

தந்தையே அவ்வண்ணமே செப்புகின்ரோம்.

நம்பிராஜன் குல விசாரணை செய்தல்.

அகிலப்ரபஞ்சம் உம்மாலேயான் என்ற வர்னமெட்டு.

இராகம்-பியாக்-தாளம் ஆதி

கண்ணிகள்.

அந்தமிகுந்தயெந்தன் மைந்தர்களேமகிழ்ந்து
அரைந்திடுவேன் நேராய்
கந்தவேளைத்தினம் பணிகின்றுராசொல்வீர்
கவனித்தென்முன் சீராய்.

வசனம்.

பாலர்காள் நங்குலத்தி லுற்றவர்கள் காலை மாலை யிருவேளை களிலும் வரைமகளை வாம பாகத்தில் வைத்த சிவபெருமான் சேய ரான திருக் கழுகா சலத்தில் வசிக்குஞ் சிவ சுப்பிரமணியக் கடவுளை ஸ்தோத்திரஞ்செய்து வருகின்ருர்களா அல்லது வீண்காலங் கழித்து வருகின்ருர்களா விபரமாகத் தெரிவிப்பீர்.

மைந்தர் வசனம்.

தந்தையே நங்குலத்தி லுற்றவர்கள் காலையிலெழுந்து கந்தனை நினைந்து அவாளவாள் கால க்ஷேபஞ்செய்து வருகின்ருர்கள் வீண் காலங் கழிக்கவில்லை தங்களுடைய ஆக்ஞை மீருது நடந்து வருகின்ருர்கள்.

நம்பிராஜன் சொல்.

திங்கள்மும்மாரிபெய்து எங்குமேசெந்நெல்கன்னல்
செழிப்புற்று யிருக்கின்றதா
மங்களமாகவே நங்குலவேடுவர்
வாழ்ந்து வருகின்றாரா.

வசனம்.

புத்திர சிகாமணிகாள் மாதம் மூன்று மழை வருஷித்து அம் மழையினால் கற்கரடு புற் பூண்டுகள் பொருந்தி செந்நெல் பயிர் நெருங்கிச் ஜெகந் தழைத்தோங்குமென்றும் பெரியோர்கள் புகன்றிருக்கின்றார்கள் ஆனதால் மாதமும்மாரி வருஷித்து வருகின்றதா நங்குல வேடுவர்கள் சுகமாய் ஜீவித்து வருகின்றார்களா விளம்புவீர்.

மைந்தர்கள் வசனம்.

தந்தையே கேண்மின் மாதமூன்று மழை வருஷித்துச் செந்நெல் கன்னல் வெகு செழிப்போடு வளர்ந்து வருகின்றது நங்குலத்திலுற்ற வேடுவர்கள் இந்நாட்டில் வெகு குதூகலத்தோடு வாழ்ந்து வருகின்றார்கள் இது விஷயத்திற் கவலை கொள்ளவேண்டாம் களிப்பீர் பிதா.

நம்பிராஜன் சொல்.

தாஷ்டிகமாகவே நங்குலவேடுவர்
சந்ததமுஞ் ஜோராய்
காட்டிலேசென்று மிகவேட்டையாடுகின்றாரா
கழறுவீரதைச் சீராய்.

வசனம்.

மைந்தர்காள் நங்குலத்திலுற்ற வேடுவர்கள் சதாகாலமுந் தாஷ்டிக மாகச்சேர்ந்து காட்டிற்குச் சென்று வேட்டையாடி வருகின்றார்களா அல்லது நம்முடைய ஆக்கினையை மீறி யிருக்கின்றார்களா புகல்வீர்கள் சேயர்காள்.

மைந்தர்கள் வசனம்.

தந்தையே நம் குலத்திலுற்ற வேடுவர்கள் காலையிலெழுந்து எல்லோரும் ஒன்றுசேர்ந்து குல தெய்வமாகிய ஆறுமுகக் கடவுளை ஸ்தோத்திரஞ் செய்து காட்டினிடமாகச் சென்று விலங்கினங்களை மாய்த்து வருகின்றார்கள் தங்களுடைய ஆக்கினை மீறாது

நடந்து வருகின்றார்கள். இது விஷயத்திற் கவலை கொள்ள வேண்டாந் தந்தையே.

நம்பிராஜன் சொல்.

ஆண்டவன்கிருபையால் வேண்டும்பயிர்தள்செய்து
அன்புடன் வாரார்
தாண்டவமாடிய ஈசனருளாற்கும்
தழைத்து இருக்கின்றார்.

வசனம்.

புதல்வர்காள் நம் குலத்தி லுற்றவர்கள் மலையடி வாரங்களில் வேண்டும் பயிர்கள் செய்து வருகின்றார் சிதம்பரத்தின் கண் நடனமிாடிய சிவபெருமானருளால் அவாளவாள் குடி தழைத்து வருகின்றதா என்முன் அன்போடு அகமகிழ்ந்து புகல்வீர்கள் மைந்தர்காள்.

மைந்தர்கள் வசனம்.

பிதா நங்குலத்தி லுற்றவர்கள் நாகமலை தோகைமலை வெள்ளிமலை கிராலிமலை சோலைமலை அடிவாரங்களிற் றங்களுக்கு வேண்டுமான புஞ்சைகளில் மன மகிழ்ந்து தினை விளைந்து இருக்கின்றார்கள் நித்தியமாய் நிர்மலமாய் நிஷ்களமாய் நிராமயமாய் விளங்குகின்ற கடவுள் எவனோ அன்னவனது கிருபா கடாக்ஷ வீக்ஷண்யத்தினல் அவர்வர்கள் குடி தழைத்திருக்கின்றது ப்ரபோ.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்காள் மிகுந்த குதூகலமடைந்தேன் சேவகனை யழைப்பீர் புதல்வர்காள்.

மைந்தர்கள் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றோம்.

அடா சேவகா எனது தந்தை யழைத்தனர் அதிவேகமாக வருவாய்.

சேவகன் வசனம்.

இதோ வருகின்றேன்.

ஷை வசனம்.

ப்ரபோ சேவகன் வந்தனஞ் செய்கின்றேன் என்னை யழைத்த காரணம் யாது.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண சேவகா.

நீ அதிவேகமாகச் சென்று எனது பத்தினியை இங்கு வரும்படியாகச் சேடியர் மூலந் தெரிவித்து வருவாய்.

சேவகன் வசனம்.

பிரபோ அப்படியே செல்கின்றேன்.

நம்பிராஜன் வசனம்.

ஜல்தி சென்று வருவாய்.

சேவகன் வசனம்.

ஆர் அந்தப்புரத்தி லிருக்கின்ற தம்மா.

சேடி வசனம்.

அடா சேவகா எதற்காகக் கேட்கின்றாய்.

சேவகன் வசனம்.

எங்கள் மஹாராஜா அன்னை நங்கை மோகினியைத் தர்ப்பாருக்கு வரும்படியாகத் தெரிவித்து வரச்சொன்னார் இச்சங்கதிகளை உங்கள் அரசிக்குத் தெரிவித்து வரும்படியாகச் செய்வீர்கள்.

சேடி வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன்.

சேவகன் வசனம்.

யான் சென்று வருகின்றேன்.

சேடி வசனம்.

சென்று வருவாய்.

அம்மணி தங்களை மஹாராஜா அழைத்து வரும்படியாகத் தெரிவித்தனராம் சேவகன் என்னிடந் தெரிவித்தான் அன்னமே.

நங்கைமோகினி வசனம்.

சகி அப்படியா உடனே தர்ப்பாருக்குச் சென்று வருவோம் வருவாய்.

சேடி வசனம்.

அம்மணி வருகின்றேன் சென்று வருவோம்.

## நங்கைமோகினி நம்பிராஜனைப் பணிதல்.

இராமமகித பிரணதபாலா என்றவர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நாதனேமலர்ப்பாதந்தனக்கு
நங்கைமோகினி சரணஞ்சரணம் (நாத)

அநுபல்லவி.

நீதனேமஹா ராஜராஜனே
நேசனேஎனையாள் விஸ்வாசனே (நாத)

சரணம்.

சிந்தைமகிழ்ந்தே யெந்தனைமாரா
இந்தவேளையழைத்த தேன்கெம்பீரா
அந்தமோடு அழைத்திடுஞ்சிங்காரா
ஆசைநாயகனே ஒய்யாரா (நாத)

வசனம்.

பிராணபதி எந்தனை யிங்கு வரும்படியாகத் தெரிவித்த காரணம் இன்னதென்று யானறிகிலேன் என்மீது கிருபை செய்து தெரிவிக்கவேண்டும் ப்ரபோ.

நம்பிராஜன் சொல்

மானேயுன்னை நானேசொல்வேனே என்றவர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அன்னநடைமின்னரசேவா
அடிமயிலே (அன்)

அநுபல்லவி.

மின்னனிடையாளே பெண்ணே
விளம்பிடுவேனே கண்ணே
நன்னயமாயிங்கு வருவாய்
நலம் பெருவாய் (அன்)

சரணம்.

வன்னவுடையாளே மாதே
வடிவுள்ளபெந்தன் கோதே
கன்னல்மொழியாளே யிப்போதே
காதலி நிற்காதே (அன்)

வசனம்.

கண்மணி உன் முகார விந்தத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு அழைத்தேனே தவிர வேறொன்றுமில்லை ஏன் நிற்கின்றாய் என்னருகில் வந்திருப்பாய் காதலி.

நங்கை மோகினிசொல் விருத்தம்.

மன்னவனேயென்னுசை மகிபனேபுகலக்கேளீர்
என்னபாவஞ்செய்தோமோ இப்பிறப்பினிலேஐயோ
நன்னயமாகவோர்பெண் நமக்கில்லாதிருப்பதேனோ
இன்னிலமீதில்வாழ்வ தென்பயனறைகுவீரே.

மைந்தனில்லாதபாக்யம் சிவனே என்ற வர்னமெட்டு.

இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

என்னசெய்குவோம்நாமே ஓர்பெண்பிள்ளை
இல்லாது மெலிந்தோமே (என்ன)

அநுபல்லவி.

அன்னமீதேறும்வேதன் அமைத்தானோநந்தனுநீ
என்னருளிதுதானோ தரணிமேல்வாழ்வேனோ (என்)

சரணங்கள்.

பாரினையாண்டு மென்ன
பவிசுகளிருந் தென்ன
தாரணிந்த நாதனே
தாமரைப் பாதனே (என்)
பெண்மகவில்லாப் பாக்யம்
பெற்றிருந்தென்ன சிலாக்யம்
கண்ணுளனே யிப்போது
கலங்குதே மனமது (என்)
என்னபாவஞ் செய்தோமோ
எவர்களை வைதோமோ
பன்னகமணி ஈசா
பரம்பொருளே சர் வேசா (என்)

வசனம்.

பிராணபதி நாம் முந்தின பிறப்பில் அன்னியர் சொத்தை யபகரித்தோமோ அந்தணரை நிந்தனை செய்தோமே இப்பிறப்பில் நாம் சிற்றூரை யரசு செய்தும் வெகு ஆடையாபரண அலங்கிருதங்கள்

செய்தும் ஏழு மைந்தர்களைப் பெற்றோம் ஒரு பெண் குழந்தை யில்லாது போனதே நங்குல தெய்வமாகிய சிவ சுப்பிரமணியர் திரு பா கடாக்ஷமும் இவ்வாறுனதோ என் செய்வோம் பிராணநாதா.

நம்பிராஜன் சொல் விருத்தம்.

அன்னமேதேனேமானே அழகியகுயிலேகேளாய்
என்னநாம்செய்வோம்வேத னெறிதிப்படிபோலாகும்
பன்னகமணிந்தீசன் பாலனுகியசெவ்வேளின்
நன்னருளிந்தவாறு ணதயலேயறிகிலோமே

நடக்கக்கால் நோகுதையோ என்ற வர்னமெட்டு.

இராகம்-நர்தநாமக்கிரிகை-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்வோம் ஏதுசெய்வோம்
ஏந்திழையெவ் வண்ணமுய்வோம் (என்)

அநுபல்லவி.

முன்னஞ்செய்த பாவந்தானே
மூண்டதிவ்விதஞ் செந்தேனே (என்)

சரணங்கள்.

சிந்தைமிகக் கலங்காதே
செப்புமொழிகே ளாய்மாதே
கந்தனடியார்க டன்னை
நிந்தனைசெய்தோமோ முன்னை (என்)

ஆங்காலமெய் வருந்த
லாமோக்கு மிருந்த
மாங்குயிலே யிப்போது
மயங்கிட லாகாது (என்)

வசனம்.

கண்மணி முற்பிறப்பிற் செய்த பாவம் மூண்டது கந்தனுடைய அடியார்தன்னை நாம் நிந்தனை செய்தோமோ இப்பிறப்பில் நமக்கு ஒரு பெண் குழந்தையில்லாது மெலிந்தோம் காதலே நாம் விசனிப் பதில் யாது பிரயோசனம் ஆகுங்காலம் வரின் எல்லாங் கைகூடும் போங்காலம் வரின் எப்பொருள்களும் போய்விடு நீ இதைப்பற்றி விசனிக்க வேண்டாம் பெண்பாவாய்

நங்கைமோகினி வசனம்.

என் பிராணநாதா நம் குலதெய்வமாகிய சிவ சுப்பிரமணியக் கடவுளின் கிருபை கூட யில்லாதுபோனதே நாம் என்ன செய்வோம் பிராணபதி.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி சிவ சுப்பிரமணியக் கடவுள் கிருபைசெய்வார் நீ விசனப்பட வேண்டாம் பெண்பாவாய்.

மைந்தர்கள் வசனம்.

அன்னையே கவலைகொள்ள வேண்டாம் நாம் முற் பிறப்பிற் செய்த பலன்றானே இப்பிறப்பில் நமக்குக்கிடைக்கும் முன் என்ன பாவத்தைச் செய்தோமோ எங்களுக்குத் துணையாக ஒரு பெண் பிள்ளை யில்லாது போயிற்று நம் குல தெய்வமாகிய சிவ சுப்பிரமணியக்கடவுள் கிருபையு மிவ்வாறாயிற்று வருந்துவதில் என்ன பலன் தாயே.

நங்கைமோகினி வசனம்.

பாலர்காள் நான் என்ன செய்வேன் ஈசன்செயல் எவ்விதமாக இருக்கின்றதோ தெரிகிலேன்.

மைந்தர்கள் வசனம்.

தாயே மனது மயங்கவேண்டாம் விதியின்படி முடியும் அல்லாது வெகு ஆசைகொண்டிருப்பது தகுமேயன்று அம்மணி.

நம்பிராஜன் வசனம்.

காதலி மனம் நோவதிற் பிரயோஜனமில்லை அந்தப்புரம் செல்வோம் வருவாய் மாதரசி.

நங்கைமோகினி வசனம்.

பிராணபதி அந்தப்புரஞ் செல்வோம் வருவீர்கள்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் வாருங்கள் எல்லோரும் அந்தப்புரஞ் செல்வோம் வாருங்கள் பாலர்காள்.

மைந்தர்கள் வசனம்.


தந்தையே வாருங்கள் செல்வோம்.

நம்பிராஜன் வசனம்.

அடா சேவகா அந்தப்புரஞ்சென்று வருகின்றேன் நீ உஜாராகத் தர்பாரி லிருப்பாயடா.

சேவகன் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன்.



## சப்தகன்னியர் ப்ரவேசம்.

விருத்தம்.

சித்தமிகவேமகிழ்ந்தே யாடைபூண்டு
சேல்போன்றவிழிகளுக்கு மைகளிட்டி
நெற்றிதனிற்செந்தூரப் பொட்டுமிட்டு
நேசமொடுபலபணிக டனையணிந்தே
புத்தியுளமுனிவர்களும் மயங்கவன்னம்
போலநடந்தேயதிக வேகமாகச்
சத்தகன்னிநங்கை மோகினிமுன்னோடிச்
சாற்றுவாரவள்மனதைத் தேற்றுவாரே.

கண்டுவந்தேனொருபெண்கொடி ஐய என்றவர்ணமெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

சத்தகன்னிமார்வந்தாரே சல்லாபமாகச்
சத்தகன்னிமார்வந்தாரே

அநுபல்லவி.

எத்திசையுள்ளவரும்
சித்தர்கள்முனிவோரும்
மெத்தவேமையற்பிடிக்கச்
சித்தமேமிகத்துடிக்கச் (சத்த)

சரணம்.

மல்லிகைமுல்லைபிச்சி
மலர்களைச்சூடி
மங்கையரொன்றுகூடி
கல்லிழைத்தபணிதி
கனைமிகப்பூட்டி
காமராஜனுந்தினங்
கண்டிடப்பேட்டி (சத்த)
புள்ளிமாமயிலேறும்
புனிதனைக்கொண்டாடி
பூவையர்பதம்பாடி
வெள்ளியங்கிரிதனை
விட்டெழுந்தேயோடி
வேகமாகவேநங்கை
மோகினிமுன்னோடிச் (சத்த)

வசனம்.

அடி தங்கைகளே சிற்றரசை பிரசாக்ஷிசெய்யும் நம்பிராஜனும் அன்னவன் பத்தினி நங்கை மோகினியும் புத்திரிசோகத்தால் மெத்தவே நொந்து வாடி மாளிகை சென்றார்கள் அன்னவர்கள் மனதைத் திருப்திசெய்து வருவோம் வாருங்கள்.

சப்தகன்னி இளையவள் வசனம்.

அம்மணி நங்கை மோகினிக்குப் பெண்பிள்ளை யுண்டாகுமா இல்லையா எங்களுக்கு விபரமாகத் தெரிவிப்பாய்.

சப்தகன்னி மூத்தவள் வசனம்.

அடி தங்கையர்களே நங்கை மோகினிக்கு ஏழு புத்திரர்கள் இருக்கின்றார்கள் அன்னவள் கெர்ப்பத்தில் பெண் கரு வில்லை புத்திரி கிடைக்க வில்லையேயென்று அக்கம் கிலேசித்து போகுறார்கள்.

சப்தகன்னி இளையவள் வசனம்.

அம்மணி நாமெல்லோருஞ் சென்று எவ்விதமாக நங்கை மோகினி மனதை யெவ்வாறு தேற்றப்போகின்றோம்.

சப்தகன்னி மூத்தவள் வசனம்.

அடி தங்கைமார்களே முற்காரணத்தாற் கலைக்கோட்டுமாமுனிவர் இந்தவனத்திற் றவஞ்செய்ய வருவார் அன்னவர் மையல் கொண்டு மானோடுசேர்ந்து ஒரு பெண்பிள்ளை பிறக்கும் அப்பிள்ளையை யிவர்கள் எடுத்து வளர்க்கப் போகின்றார் அப்பெண் பருவதிசையடைந்தவுடனே வேலர் மணஞ்செய்து கொள்வீர். ஆதலால் நாமெல்லோருஞ் சென்று அன்னவர் மனதைத் திருப்திசெய்து வருவோம் வாருங்கள்.

சப்தகன்னி இளையவள் வசனம்.

அம்மணி ஜல்தியாக யெல்லோருஞ் சென்று அன்னவர்கள் மனதைத் திருப்திசெய்து வருவோம் வாருங்கள்.

சப்தகன்னி மூத்தவள் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம்.

அடி தங்கையர்களே இதோ நிற்கின்றவள் தான் நங்கை மோகினி பாருங்கள்.

நங்கைமோகினி சப்தகன்னியரைப் பணிந்துசொல்

விருத்தம்.

அந்தமேமிகுந்திலங்கு மன்னை யீர்புகலக்கேளீர்
எந்தனுக்கொருபெண்பிள்ளை யில்லாததேதேனையா னும்
முந்தினபிறப்பிலம்மா முருகனை யிகழ்ந்திட்டேனோ
சிந்தையேமகிழ்ந்தெனக்குச் செப்புவீர்போற்றிபோற்றி.

வசனம்.

அன்னையே போற்றி இப்பிரபஞ்சத்தின் கண் முந்தின பிறப்பில் முருகனடியார்களை யிகழ்ந்தேனோ அன்னியர்கள் தனத்தை யபகரித்தேனோ அந்தணர்களை நிந்தனை செய்தேனோ ஏழைகளை யடித்தேனோ இப்பிறப்பில் குறவர் குலத்திற் ஜெனித்து சிற்றாரைப் பரிபாலனஞ்செய்யும் மன்னவனை மணந்து புத்திரர் எழுவரைப் பெற்றேன் மனக்குறை தீரும் பொருட்டு ஒரு புதல்வி யெனக்குக் கிடைக்கவில்லையே என் செய்வேன் அன்னைமார்களே நீங்களாவது வரங்கொடுக்கக் கூடாதா.

சப்தகன்னிமார் சொல்

விருத்தம்.

நங்கைமோகினிமனது தளரவேண்டாம்
  நவிலுமொழிதனைக்கவனித் திடுவாயம்மா
சிங்காரியுனக்கினிப்பெண் கருவேயில்லை
  தேசுயர்ந்தபுள்ளிமான் ஈனையீனுங்
கொங்குபுன்னை சூழ்ந்தவனந் தன்னிலேபெண்
  குழந்தைதனையெடுத்துவளர்த் திடுவாயுண்மை
எங்களிடபதிசேர விடையீவாயே
  ஏந்திழையேசுகமாக யிருந்திடாயே.

வசனம்.

மாதரசி நீ கவலை யடையவேண்டாம் உன் வயிற்றினிடம் பெண் பிறக்கமாட்டாது பெண் கருவில்லை இந்நகர்க் கடுத்த வனத்தில் ஓர் புள்ளிமானென்று பெண்மகவை யீனும் அப்பெண் புதல்வியைத் தன் புதல்வியாக மனமகிழ்ந்து எடுத்து வளர்ப்பாய் நாங்கள் கூறியது பொய்யென நினைக்கவேண்டாம் உன்மனதின் கவலையை நீக்கும் பொருட்டாக இங்ஙனம் பிராப்தமாகினேம் சித்தந் தளரவேண்டாஞ் சந்தோஷமாகவிற்றிருப்பாய் எங்களில்லஞ்சேர விடையீவாய் பாலகி.

நங்கைமோகினி வசனம்.

அம்மணி என்மனதிலுற்ற வருத்தத்தை நீக்கும் பொருட்டாக என்மனை நீங்கள் வந்து என் துக்கத்தை நிவர்த்திசெய்தீர் எங்கள் மீது கருணை யெப்பொழுதும் வைத்திருக்க வேண்டியதாய்க் கேட்டுக் கொள்கின்றேன் அன்னையே.

சப்தகன்னிமார் வசனம்.

கண்மணி இன்று நீயும் உன்பதி நம்பிராஜனும் ஓர் புதல்வி நமக்குக் கிடைக்கவில்லையே என்று தர்ப்பாரினிடமாகப் புலம்பிக் கொண்டிருந்தீர்கள் அச்சத்தத்தை நாங்கள் கேள்வியுற்று யுங்கள் மனக்குறையை நீக்கும் பொருட்டு இங்கு பிராப்தமாகி நினக்கு பெண்மகவு கிடைக்கும் மார்க்கந் தெரிவித்தோம் சந்ததமும் உங்களைக் காப்பாற்றும் எங்கள் பதிசேர விடை யீவாய்.

நங்கைமோகினி வசனம்.

அம்மணி என்மீது கிருபைசெய்து யான் ஒரு பொருட்டாக வெண்ணி இங்ஙனம் பிராப்தமாகிப் பெண்மகவு கிடைக்கும் மார்க்கந் தெரிவித்தீரே அப்புதல்வி எக்காலத்தில் எனக்குக்கிடைக்கும் அகமகிழ்ந்து அடியாளுக்கு அன்பாக உரைப்பீர்க ளம்மணிமார்களே.

சப்தகன்னிமார் வசனம்.

பாலகி நீ மயங்கவேண்டாம் இன்னுங் கொஞ்சநாளில் உனக்கு மானின்ற புதல்வி கிடைக்கும் ஒன்றும் யோசிக்கவேண்டாம், எங்களுக்கு விடை ஈவாய்.

நங்கைமோகினி வசனம்.

அம்மணி சென்றுவாருங்கள் வந்தனஞ் செய்கின்றேன்.

சப்தகன்னிமார் வசனம்.

கல்யாண் பாலகி.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி புதல்வி நமக்குக் கிடைக்கவில்லையே என்று வெகு கவலையோடு இங்கு வீற்றிருந்தாயே இத்தகி யுன்னுடைய திருமுகமானது செந்தாமரைப் புட்பம்போற் பிரகாசிக்கின்றது வெகு குதூகலமாக யிருக்கின்றாயே காரணம் யாது.

நங்கைமோகினி வசனம்.

மன்னவா நமக்கு ஒரு புதல்வி யில்லையே என்று தர்ப்பாரினிடமாக நாம் சிந்தை கலங்கிக்கொண்டிருந்து பின் அந்தப்புரம்

வந்தோம் தாங்கள் ஸ்நானஞ்செய்யச் சென்றிருந்நீர்க ளந்தநி யிலே இங்ஙனம் பிராப்தமாகிப் புதல்வி கிடைக்கும் மார்க்கந் தெரி வித்துச் சென்றனர் ஆதலால் என்மனதின் கிலேசம் நீங்கிச் சந் தோஷமாக வீற்றிருக்கின்றேன் ப்ரபோ.

நம்பிராஜன் வசனம்.

காதலி நாம் ஒருபொருட்டாக எண்ணி யிங்ஙனம் பிராப்த மாகி யோர்புதல்வி கிடைக்கும் மார்க்கந் தெரிவித்தார் புதல்வி நம க்கு கிடைக்கும் மார்க்கம் கண்மணி நீ மகிழ்ந்துஎனக்கு ஒருமுறை யோதுவாய் கண்மணி.

நங்கைமோகினி வசனம்.

பிராணபதி இந்நகரத்திற் கடுத்த வனந்தனில் ஓர் புள்ளிமா னனது ஓர் புதல்வியை யீன்று போட்டுச் செல்லும் அப்புதல்வி யுனக்குக் கிடைக்கும் அப்புதல்வியை வளர்த்துச் சுகமாக வாழ்ந் திருப்பாயென்று என் றுக்கத்தை நீக்கி விடைபெற்றுச் சென்றார் கள் ப்ரபோ.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி முற் சென்மத்திலும் இச்சென்மத்திலும் என்ன புண்ணியஞ் செய்தோமோ நம்முடைய துக்கத்தை நீக்கும்பொருட் டுச் சப்தகன்னிமார் இங்ஙனம் பிராப்த மாகி புதல்வி கிடைக்கும் மார்க்கந் தெரிவித்துச் சென்றால் நங்குல தெய்வமாகிய எல்லாம் வல்ல எம்பெருமானாகிய அறுமுகவருடைய அருண்மயமே யல் லாது வேறல்ல கண்மணி.

நங்கைமோகினி வசனம்.

காதலா நமது மனக்குறையை நீக்கும்பொருட்டு புள்ளிமான் ஓர் பெண் மகவீன்று நமக்குக் கிடைக்கும்படி நம் குலதெய்வ மாகிய சுப்பிரமணியக்கடவுள்கிருபையல்லாது வேறல்ல மன்னவா.

நம்பிராஜன் வசனம்.

பாலர்காள் மெத்த மகிழ்வுகொண்டேன் வாருங்கள் எல்லோ ரும் அமுதருந்தி வருவோம் புதல்வர்காள்.

மைந்தர்கள் வசனம்.

தந்தையே அவ்வண்ணமே செய்வோம்.

நங்கைமோகினி வசனம்.

பிராணபதி மைந்தர்காள் வாருங்கள் அமுது படைக்கின்றேன்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி இதோ வருகின்றோம்.

# கலைக்கோட்டுமுனிவர் ப்ரவேசம்.

விருத்தம்.

மெய்யினிலேதவளவெண்ணீ றணிந்துகாவி
வேஷ்டிதனையிடைதரித்து விளங்கவேதன்
கையினிலேகமண்டலம் மாத்திரைக்கோல்கொண்டு
கற்பமுறையுண்டுமறை நான்குணர்ந்து
பையரவுநதிமதியை முடிமேல்வைத்த
பரம்பொருளைமனந்தனிலே யெண்ணிக்காவில்
மையலினாலேமனது உருகிவாடி
மாதபசிகலைக்கோட்டு முனிவந்தாரே.

முத்திநெறியறியாத மூர்க்கரொடு என்ற வர்ணமெட்டு.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பல்லவி.

சங்கரனே சங்கரனே
சம்போசெங் காதரனே
திங்களைத் தரித்தவனே
திரிபுரத்தை எரித்தவனே
பொங்கரவு கொன்றையொடு
புலித்தோலைப் புனைந்தவனே
மங்கையுமா தேவிமகிழ்
வல்லவனே நல்லவனே (சங்)

காலனையே மடித்தவனே
கரிதனையே யுரித்தவனே
வேலனையே ஈன்றவனே
வேடனெச்சி லுண்டவனே
ஆலமமு தாகவுமே
அருந்தினதோர் பரம்பொருளே
நீலகண்டன் மனதிரங்க
நிர்மலனே நிஷ்களனே (சங்)

வசனம்.

கயிலாசவாசா கங்காதரனே திங்களைத்தரித்தவா பொங்கரவு புனைந்தவா காலனை யுதைத்தவா பாலனைக்காத்தவா கரிதனை யுரித்தவா திரிபுர மெரித்தவா அடியேனுக் குனது திருவடிகளே துணை.

### விருத்தம்.

நன்னயமாகத்தானே நான்யாகஞ்செய்தேன்
உன்னிதமலைகள்தோறும் புள்ளவைதனிலிக்காவு
தன்னிலேயிருந்துவேண தவஞ்செய்யநினைந்தேனுகா
கன்னியராசாபாசங் கருத்தினையுருக்குகின்றே.

### வசனம்.

ஆகா நாமோ அநேக மலைகளிலும் பற்பல தேசங்களிலும் அநேக வேள்விகள் செய்தோம் கொடிய வனங்களில் நெடுநாளாக நிஷ்டையிலிருந்தோம் இப்பொழுது வெள்ளிமலைச்சாரலில் வேண தவ மிளைக்கவேண்டுமென்று வெகு ஆவலோடு யிப்பூங்காவனத்தில் வந்தவுடனே மாதர்கள் ஆசாபாசம் என்னுடைய மனதை மயக்கு கின்றது மன்மதனே கரும்பு வில்லில் அரும்பு மலர்தொடுத்து விட் டான் இதற்கென்ன யோசனை செய்வோம்.

நம்முடைய தபோபலத்தா லோர்பெண்ணைச் சிருஷ்டிசெய்து அப்பெண்ணோடு சேர்ந்து காமப்பிணியை யகற்றுவோமே.

சிருஷ்டிசெய்த பெண்ணோடு சேர்ந்தாற் பருவம்வந்து சேருமே இவை தகுதியானு யோசனையன்று வேறு யோசனை யென்செய் வோம்.

### விருந்தம்.

அந்தமாய்ப்புள்ளிமானு மகமிகமகிழ்ந்தேதானே
இந்தமாவனத்தைநாடி யென்னிடமுன்னேயோடி
வந்தமானோடுகூடி மருவியேகாமனெய்த
கந்தமாமலரின்வாளி களையின்றுவிலக்குவேனே.

### வசனம்.

ஆகா நம்மிட முன்னமே ஓர் புள்ளிமானோடி வருகின்றது அம்மானோடு கூடி மன்மதன் எய்த மலர்வாளியைப் போக்குகின் றேன் நாம் முன் நினைந்தது தகுதியன்று இதுவே தக்கயோசனை இம்மானோடு எவ்விதமாவது சேர்ந்து காமப்பிணியைப் போக்கு கின்றேன் இதோ செல்கின்றேன்.



### பொது வசனம்.

கலைக்கோட்டு மகா முனிவரானவர் கன்னியருடைய ஆசாபாசத்தை நினைந்து மனது உருகிவாடுங்கால் ஓர் புள்ளிமான் இரை தேடும்பொருட்டு அவ்வனத்தை நாடிவந்ததைக்கண்டு இம்மானோடு சேருவதே தக்க யோசனையென்று மனதில் நினைந்து அம்மானோடு கூடிச் சுகித்தனர் (ரிஷிபிண்டம் ராத்தங்காது என்ற பழமொழிப்படி.) உடனே யோர் பெண் மகவுதனை யீன்று வள்ளிக்கிழங்கு வெட்டியெடுத்த பள்ளத்திற் போட்டுப் புள்ளிமான் சென்றது கலைக்கோட்டு மகாமுனிவர் தவஞ்செய்யச் சென்றனர் சிற்றூரில் வாழும் குறவர்கள் வனத்திற்குக் கிழங்கு வெட்ட வருகின்ற விதங் காண்குக.

### குறவர்கள் சொல் விருத்தம்.

மெத்தவே திரண்டு கையில் விளங்கவே கம்புகொண்டு
சத்திவேலவன் றன்பாதந் தன்னையே போற்றித் தங்கள்
பத்தினிமார்களோடு பண்புடன் குறவர்தானே
சித்தமே மகிழ்ந்து கூடிச் சிறப்பொடு வருகின்றாரே.

உள்ளம்மகிழ்ந்தே பறையடிக்கும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

அந்தமோடு குறவர்கூடி
வந்தாரேயோடி
கந்தமூலந் தன்னை வெட்டக்
கானகந்தேடி (அந்த)

செந்திநகர்வேலரின்னா
மந்தணைப்பேசி
சந்தோஷமிகுந்தே நடனந்
தாமேசைவீசி (அந்த)

தம்பிமாரே அண்ணமாரே
சாற்றுவேன் நேரே
கம்பினாலே வள்ளிக்கிழங்
கதனைக்கெல்லீரே (அந்த)

பிடிகிழங்குசிறுகிழங்கு
பேர்த்தேயெடுங்கள்
சடுதியிலே சொந்தநகர்
தனக்குவாருங்கள் (அந்த)

வசனம்.

அடா அண்ணமாரே தம்பிமாரே நாம் வள்ளிக்கிழங்கு சிறு கிழங்கு பிடி கிழங்கு வெட்ட வனத்திற்கு வந்தோம் வெகுநேர மாகின்றது சீக்கிரமாகக் கிழங்குகளை அதிசீக்கிரம் வெட்டுங்க.

பொம்மக்கா வசனம்.

டே சாமி எனக்கு கொஞ்சம் வள்ளிக்கிழங்கு வெட்டித் தருவாய் அப்பத்தான் உன்னோடு பேசுவேன்.

குறவன் வசனம்.

அடியே இப்பமாத்திரம் வள்ளிக்கிழங்கு வெட்டித்தாச்சொல் லுறாய் நேற்று உன்குடிசுக்கு வந்தேன் என்னோடு பேசாமலிருந் தாயே.

பொம்மக்கா வசனம்.

நான் தலைவலியோடு இருந்தேன் அப்போது என்னைக் கூப்புட் டிங்கே நான் பேசாமலிருந்தேன்.

குறவன் வசனம்.

நல்லது நான் வெட்டித் தருகின்றே னென் கூட வருவாய்.

பொம்மக்கா வசனம்.

அப்படியே வருகிறேன் சாமி.

சிங்கன் வசனம்.

அடி பெண்ணே உனக்கு வேண்டிய கிழங்கு கொடுத்தேன் தின்று பசியாறி நம் குடிசுக்குச் செல்லவா.

சிங்கி வசனம்.

எஞ்சாமி சிங்கா இப்பப் பசியாறினாற் போதுமா நாளைக்குத் தின்னக் கொஞ்சம் வள்ளிக்கிழங்கு வெட்டிக்கிட்டுவா போவோம்.

சிங்கன் வசனம்.

அடி இங்கு நீறு எங்கூட வரவேண்டாம் அரை நொடிக்குள் ளே வேண்டுமான வள்ளிக்கிழங்கு சிறுகிழங்கு ஆ வள்ளிக்கிழங்கு பிடிகிழங்கு இதுகளை வெட்டி எடுத்துக்கொண்டு சீக்கிறம் வரு கிறேன்.

சிங்கி வசனம்.

ஏ சாமி சீக்கிறஞ் சென்று வருவாய்.

குறவன் வசனம்.

டே அண்ணமாரே நீங்கள் என்னென்ன கிழங்குகள் வெட்டி வைத்திருக்கின்றீர்கள் எனக்கு ஒளியாமல் சொல்லுங்க எனக்குக் கொஞ்சம் கிழங்கு தாரீளா.

மற்றகுறவன் வசனம்.

ஏ அண்ணு எங்களுக்கே கிழங்கு பத்தாதே நீயாவது வகைக்கிக் கொஞ்சம் கொஞ்சம் கிழங்கு வைத்திருக்கின்றாய் எனக்குப் பிடிகிழங்கு வள்ளிக்கிழங்கு கிடைக்கவில்லை நீகொஞ்சம் எனக்குத் தாரியா.

மூத்தகுறவன் வசனம்.

அடா தம்பு எனக்கு வகைக்கிக் கொஞ்சம் கொஞ்சம் அம்பிட்டது பத்தாது வாங்க டாப்பா அந்தப் பக்கத்திலே போயி வேண்டிய கிழங்கு வெட்டி வருவோம்.

மற்ற குறவன்கள் வசனம்.

அப்படியே செல்வோம் வருவாய்.

மூத்த குறவன்சொல் விருத்தம்.

என்னமோபுதுமையாக இருக்கின்றதடடாதம்பி
மின்னலைப்போலேயிங்கு விளங்குவதென்னவிந்தை
உன்னிதமாகநாமே ஓடியேபார்த்துமீண்டு
நன்னயமாகச்சொந்த நகர்க்குமேசெல்லுவோமே.

வசனம்.

தம்பிமாரே அண்ணமாரே நம் முன்னமே தோன்றும் பள்ளத்தில் மின்னலைப்போலே தோன்றுகின்றது இன்னதென்று தெரியவில்லை அருகிற்சென்று அறிந்து நமது நகருக்குச் செல்லுவோம் வாருங்கள்.

மற்றகுறவர்கள் வசனம்.


ஆமடாப்பா என்ன வெளிச்சமாகத் தோணுரது அதிக வேகமாக நாமெல்லோருஞ் சேர்ந்துபோய்ப் பார்த்து வருவோம் வாருங்கள்.

மூத்தகுறவன் வசனம்.

வாங்கடா வேகமாகப் போவோம்.

மற்றகுறவர்கள் வசனம்.

நீ முன்னடிப்போ நாங்க பின்னடி வருகிறோம்.



மூத்தகுறவன் வசனம்.

வாங்கடா பயந்தபயகளா நான் முன்னடிப் போரேன்.

ரிஷி வசனம்.

அடா தம்பி பார்த்தீர்களா வள்ளிக்கிழங்குவெட்டின பள்ளத்திலே ஜோதி சூரியப்பிரகாசம்போல் ஒரு பெண்குழந்தை கிடக்கின்றது எவ்வளவு அழகாய் இருக்கின்றது இந்தக் குழந்தையின் காந்திதாண்டா இவ்வளவு பிரகாசம் கொடுக்கின்றது.

மற்றகுறவர்கள் வசனம்.

அடா அண்ணே பிள்ளையைப்பெற்று ஆராவது கொண்டுவந்துபோட்டு இருப்பாங்களே சொல்லுவாய்.

மூத்தகுறவன் வசனம்.

அடா தம்பியாராவது தான் கொண்டுவந்து போட்டிருக்கவேணும் இல்லாதபோனால் காட்டிலே பிள்ளை யிருக்குமா.

மற்றகுறவர்கள் வசனம்.

அடா அண்ணே நமது ராஜாவான நம்பிராஜன் முன்னமே அதிக வேகமாகவோடி இந்தச்சங்கதியைத் தெரிவிப்போம் வாருங்கள்.

மூத்தகுறவன் வசனம்.

ஆமடா இதுதாண்டா நல்ல யோசனை வாருங்கள்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி எனக்கு வலது தோள் வலது கண் அடிக்கடி துடிக்கின்றதே என்ன சம்பவிக்குமோ தோன்றவில்லையே காதலி புகல்வாய்.

நங்கைபோகினி வசனம்.

பிராணபதி வேறு பலவிதமாக யோசிக்கவேண்டாம் இதனால் நன்மை யுண்டாகும் ப்ரபோ.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி யிச்சகுனத்திற்கு நன்மை ஏற்படும் நல்லது இதனைச் சோதிப்போம்.

ரிஷி வசனம்.

புதல்வர்காள் நாம் தர்ப்பாரிலிருந்து இங்குவந்து வெகு நாழிகை யாகின்றது சீக்கிறஞ் செல்வோம் வாருங்கள் கண்மணிகாள்.

மைந்தர்கள் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வாருங்கள்.



# நம்பிராஜன் இரண்டாவது சபை.

இராஜாதி இராஜர்பணி என்ற வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மாசில்லாமைந்தரொடுமகிழ்
வாகயெழிலுடையான்
காசினியோர்புகழ்நம்பி
ராஜன்கொலுவிருந்தான்

இற்றார்தனையர்சுதினஞ்
செய்திடுமொய்யாரன்
நற்றவமிருந்தநம்பி
ராஜன்கொலுவிருந்தான்

மல்லிகைமாலையுமேதிரு
மார்பினிலேயிலங்க
வல்லமையிருந்தநம்பி
மன்னன்கொலுவிருந்தான்

சந்ததங்கந்தனையேசிந்தை
தன்னில்மறவாதான்
விந்தையாக வேதான்நம்பி
வேந்தன்கொலுவிருந்தான்

உன்னிதமாகவுமேயங்
குயர்ந்தசிம்மாதனமேல்
நன்னயமுடனேநம்பி
ராஜன்கொலுவிருந்தான்

வசனம்.

மைந்தர்காள் யான் சிம்மாதனமீது அமர்ந்தவுடனே எனது வலத்தோள் வலக்கண் துடிக்கின்றது நாம் அந்தப்புரத்திலிருக்கும் போதுந் துடித்தது இதனால் என்னபலன் கிடைக்குமோ தெரிகிலேன் பாலர்களே.

மைந்தர்கள் வசனம்.

தந்தையே வலக்கண் வலத்தோள் துடிப்பது பெரியோர்கள் நன்மை யுண்டாகுமென்று தெரிவிப்பார்கள் இன்று ஏதாவது ஒரு நன்மை யுண்டாகும் இதை அறிகுவோந் தந்தையே.

நம்பிராஜன் வசனம்.

பாலர்காள் அவ்வண்ணமே சோதிப்போம்.

அப்ப சேவகா இங்குவருவாய் ஜல்தியாக.

சேவகன் வசனம்.

ப்ரபோ என்னை அழைத்தகாரணம் யாது தெரிவிப்பீர்கள்.

நம்பிராஜன் வசனம்.

அடா சேவகா யாராவது இங்குவந்தால் நீயோடிவந்து எனக்குத் தெரிவிப்பாய் வாசலில் உஜாராய் வீற்றிருப்பாய்.

சேவகன் வசனம்.

ப்ரபோ அவ்வண்ணமே செய்கின்றேன்.

குறவர்கள் வசனம்.

அடா நாம் அதிவேகமாக ஓடி இங்கு வந்தோம் அரசனைக் கண்டு நாம் கண்டுவந்த பெண் சங்கதியைக் கூறுவோம் அரசன் தர்ப்பாரிலிருக்கின்றாரோ அல்லது அந்தப்புரத்தில் வீற்றிருக்கின்றாரோ தெரியவில்லை ஆகையால் தர்ப்பாரிடமாகச் சென்று விசாரித்துக் கொள்ளுவோம் வேகமாக வாங்கடா.

மூத்தகுறவன் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வாருங்கள்.

குறவர்கள் வசனம்.

அடா அண்ணே இங்கு வீற்றிருக்கின்ற சேவகனிடத்தில் அரசன் எங்கு யிருக்கின்றாரென்று விஜாரிக்கலாமா.

மூத்தகுறவன் வசனம்

விஜாரிப்போம் வாங்கடா தம்பி.

அப்பா சேவகரே நம்பிமகாராஜன் இங்கு வீற்றிருக்கின்றார்களா அந்தப்புரத்திலிடமாக இருக்கின்றாரா தெரிவிப்பாய்.

சேவகன் வசனம்.

அடா மஹாராஜா இங்கு அமர்ந்திருக்கின்றனர்.

குறவர்கள் வசனம்.

அப்பா சேவகா நாங்கள் வந்திருப்பதாகத் தெரிவித்து வருவாய்.

சேவகன் வசனம்.

இங்குதானே யிருங்கள் தெரிவித்து வருகின்றேன்.

ப்ரபோ எது விஷயமோ தம் குலவர்கள் வந்திருக்கின்றார்கள்.

நம்பிராஜன் வசனம்.

சேவகா இங்கு வரும்படியாகத் தெரிவிப்பாய்.

சேவகன் வசனம்.

ப்ரபோ அவ்வண்ணமே செய்கின்றேன்.

அப்பா உங்களை அங்குவரும்படியாக அரசன் றெரிவித்தனர் செல்லுவீர்கள்.

குறவர்கள் வசனம்.

அவ்வண்ணமே செல்கின்றோம்.

ஷை வசனம்.

மகாராஜா வந்தனஞ் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் நீங்கள் என்னைத்தேடி இவ்கு அவசரமாகவந்த காரணம் யாது தெரிவிப்பீர்கள்.

குறவர்கள்சொல் விருத்தம்.

மன்னனேகிழங்குவெட்ட வனஞ்சென்றோம்மகிழ்வதாக
நன்னயமாபோர்சத்தம் நாங்கள்கேட்டெழுந்தேயோடி
என்னடாவென்றுபார்க்கு மிடந்தினிலொருபெண்பிள்ளை
மின்னல்போலிருக்கக்கண்டே விளம்பிடவந்தோம்போற்றி.

ப்ரபோ நாங்கள் வனத்திற்கு வள்ளிக்கிழங்கு வெட்டச்சென்றிருந்தோம் அத்தலைத்திற் சிறு பிள்ளை சத்தங் கேட்டது என்னடா இங்கு சத்தமென்று தேடிப்பார்க்கையில் வள்ளிக்கிழங்கு வெட்டின பள்ளத்தில் ஒரு பெண்பிள்ளை கோடி சூரியம்போற் கிடக்கின்றது இந்தச் சங்கதிகளைத் தெரிவிக்க ஓடி வந்தோம்.

நம்பிராஜன் வசனம்.

சந்தோஷங் கொண்டேன் இவ்விடத்தி லமருங்கள் எல்லோருமாகச்சென்று அக்குழந்தையை எடுத்து வருவோம்.

குறவர்கள் வசனம்.

அவ்வண்ணமே யிங்கு யிருக்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்களே அதிசீக்கிறமாகச்சென்று உனது தாயை இங்கு அழைத்து வருவீர்கள்.

மைந்தர்கள் வசனம்.

அவ்வண்ணமே அழைத்து வருகின்றேன்.

சேடி வசனம்.

அம்மணி தங்களை அழைத்துவரும்படியாகத் தெரிவித்தார் சேடியோடு தர்ப்பாருக்குவந்துசேரும் அன்னையே யான்முன்னடிச் செல் கின்றேன்.

நங்கைமோகினி வசனம்.

பாலகா வருகின்றேன் முன்னே செல்வாய்.

மைந்தன் வசனம்.

அவ்வண்ணமே செல்கின்றேன்.

தங்கள் ஆக்ஞையின்படி சென்று தெரிவித்தேன் சேடியோடு இங்கு வருகின்றாள் பிரபோ.

நம்பிராஜன் வசனம்.

பாலகா வீற்றிருப்பாய்.

நங்கைமோகினி வசனம்.

சகி தர்ப்பாருக்குச்சென்று வருவோம் வாராய்.

சேடி வசனம்.

அவ்வண்ணமே செல்லுவோம்.

நங்கைமோகினி செல்

மங்கையேவாராய் சிங்கையேன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்

பல்லவி.

அடிக்கிவந்தனம்-மல
ரடிக்கிவந்தனம்

அநுபல்லவி.

அடியாள்மகிழ்ந்தே
தந்தேனே (அடி)

சரணம்.

அந்தமேமிகுந்தமாரா
அம்புவியோர்க்குபகாரா
எந்தனை நீரேமன்னா
இந்கழைத்ததேன்சொல்வீரே (அடி)

வசனம்.

பிராணபதி என்னை யழைத்தகாரணம் யாதுதெரிவிப்பீர் யாதுவிஷயம் நாதா.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி என் வலத்தோள் வலக்கண் துடித்ததற்கு நன்மை யுண்டானதடி காதலி.

நங்கைமோகினி வசனம்.

நாதரே என்ன நன்மை யேர்ப்பட்டது மனமகிழ்ந்து அன் போடு உரைப்பீர் பிராணபதி.

நம்பிராஜன் சொல் விருத்தம்.

துங்கமேமிகுந்தயெந்தன் றேகையேசொல்லைக்கேளாய்
செங்கதிர்வேலவன்றன் றிருவருளாலேயின்று
கொங்குசூழ்வனத்திலோர்பெண் குழந்தைதானிருப்பதாக
இங்கெனக்கெடுத்துரைத்தா ரேகுவோம்வருவாய்பெண்ணே.

கூறுகின்றேன் விபரங்கள்யாவும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்கையேநாம்செல்லுவோம்வாராய்
மகிழ்ந்துஜோராய் (மங்கை)

அநுபல்லவி.

திங்கள்போல்வதனத்தாளே
சித்திரத்தைநிகர்த்தாளே
தேன்மொழியேமாக்குயிலே
செப்புவேன்நன்மனத்தாளே (மங்கை)

சரணங்கள்.

மெல்லியேயென்னைத்தொடர்ந்து
வேகமுடனேநடந்து
ஜல்தியாய்மாளிகைகடந்து
தையலேமனமுகந்து (மங்கை)
அன்னநடைமின்னரசே
அந்தமுள்ளபெண்ணரசே
நன்னயமுடன்வருவாய்
நாயகிநலம்பெருவாய் (மங்கை)
கண்ணேசற்குணவதியே
கற்பினிலருந்ததியே
பெண்ணேதடைசொல்லாதே
பேடைமயிலேவில்லாதே. (மங்கை)

வசனம்.

கண்மணி யிவர்கள் வள்ளிக்கிழங்கு வெட்டிவரக் காட்டிற்குச் சென்றனராம் வள்ளிக்கிழங்கு வெட்டின பள்ளத்திற் கோடி சூரியப் பிரகாசம்போன்ற ஒரு பெண்குழந்தை கிடக்கின்றனவாம் அக்குழந்தையை எடுத்துவரும்பொருட்டு யானுன்னை யழைத்தேன் நாமெல்லோருங் காட்டிற்குச்சென்று அக்குழந்தையை எடுத்து வருவோம் வாராய் கண்மணி ஜல்தியாகச் செல்லுவோம்.

நங்கைமோகினி சொல்

தப்பிளப்படிப்பிழைப்போம் விஸ்வாமித்ரனு என்ற வர்ணமெட்டு.

இராகம்-சாவேரி-அடதாளம்.

பல்லவி.

எந்தன்ப்ராண சுந்தரனே-வேகமதாக
ஏகுவோங்கனவானே (எந்)

அநுபல்லவி.

சிந்தைமிகமகிழ்ந்தே யந்தமொடுநடந்தே
இந்தவேளைசிங்காரா எல்லோர்க்குமுபகாரா (எந்)

சரணம்.

கந்தனருளினாலே கண்ணாளனேவொய்யாரா
காவனந்தனிலேயிக் கணந்தனிலேசெம்பிரா
விந்தையைப்பார்த்தேயிங்கு மீண்டுவருவோமிந்திரா
மேதினியோர்புகழும் வேந்தனேயெழில்மாரா (எந்)

வசனம்.

மன்னவா நாம் முன்செய்த நற்றவத்தாலும் நங்குல தெய்வமாகிய சிவ சுப்பிரமணியக்கடவுள் கிருபையாலும் சத்த கன்னிமார்களருளாலும் நமக்குப் பெண்குழந்தை கிடைத்தது எல்லோருமாக வனந்தனிற்சென்று அக்குழந்தையை மனமகிழ்ந் தெடுத்து வந்து சேர்வோம் வருவீர்கள் நாதா.

நம்பிராஜன் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வருவாய் காதலி.

ஷை வசனம்.

மைந்தர்காள் நீங்களுங்கூட வந்திடுவீர்கள் செல்வோம்.

மைந்தர்கள் வசனம்.

பிதா செல்லுவோம் வாருங்கள்.

நம்பிராஜன் வசனம்.

அடே நீங்கள் குழந்தையைக்கண்டு வந்தவிடம் கூட்டிச்செல்வீர்கள்.

குறவர்கள் வசனம்.

அவ்வண்ணமே செல்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

அடா கானகம்வந்துவிட்டோம் எவ்விடத்திலக்குழந்தை கிடக்கின்றது காட்டுவீர்கள்.

குறவர்கள் வசனம்.

வேந்தனே இதோ பொன்மயமாக மின்னுகின்றது பார்த்தீர்களா அவைதான்குழந்தை.

நம்பிராஜன் வசனம்.

அடா மெத்தச்சந்தோஷங்கொண்டேன் இக்குழந்தையை என்கரத்தா லெடுக்கின்றேன்.

மைந்தர்கள் வசனம்.

தந்தையே தங்கையின் திரேகத்திற் சூரியன் கிரணம் படுகின்றது வேகமாகயெடுங்கள்.

நம்பிராஜன்சொல்

விருத்தம்.

கந்தமாமலர்ணிந்த கன்னியையெடுத்தேயெந்தன்
சிந்தையேமகிழ்ந்தேயுன் றன் திருக்கரந்தனிலளித்தேன்
கந்தவேளருளினாலே கானகந்தனிற்கிடைத்த
சுந்தரக்குழந்தைதன்னைச் சுகமுடன்வளர்த்திடாயே.


வசனம்.

காதலி நங்குல தெய்வமாகிய சிவசுப்பிரமணியக்கடவுள் கிருபையாற் கிடைத்த குழந்தையை எடுத்து மனமகிழ்ந்து உனதுகரக்கொடுத்தேன் இனிப்புத்திரி கவலையைவிடுத்துப் பூவையே இப்புதல்வியைச்சுகமாக வளர்த்துவருவாய் கண்மணி.

நற்குணமோகினிசொல்

விருத்தம்.

நானவரே என்ன தவ முன்செய்தோமோ
மானீன்றும்பிந்தவனந் தனில்வளர்த்தி
உன்னிதமாய்ச்சென்றதுவோ யிவருறைக்க
ஓடிவந்தேவேகமதாய்க் சிறுகுழந்தை



தன்னையெடுத்தெனதுகரந் தனிலளித்தீர்
தாமதிக்கலாகாது யினிமேல்நீதா
னன்னகரஞ்சேர்ந்திடவே வாருமெந்தன்
நாதனேமனமகிழ்ந்து யின்றுநாமே.

வசனம்.

“பிராணபதி நாம் முற்பிறப்பிற் செய்த தவத்தால் இப்புதல்வி கிடைத்தது இனிமேல் நாமிங்கு தாமதிக்லாகாது வேகமாகச் சிற்றூருக்குச் செல்வோம் வாரும் பரபோ.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி செல்லுவோம் வருவாய்.

குறவர்கள் வசனம்.

வேந்தனே எங்கள் குடிசைக்குச்செல்ல விடை தாருங்கள்.

நம்பிராஜன் வசனம்.

பாலர்காள் இவர்களுக்கு வேண பரிசளித்து அனுப்பிவிடுவாய் அடா என்னது குமாரனோடு செல்லுங்கள்.

குறவர்கள் வசனம்.

மன்னவா வாங்கிக்கொண்டு செல்கிறோம் வந்தனஞ் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் சென்று வாருங்கள்.

நங்கைமோகினி வசனம்.

கண்ணாளா நமது அருமைப் புதல்விக்கு எவ்விதமாகத் திருநாமமிடலாந் தெரிவிப்பீர்கள்.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

உள்ளமேமிகமகிழ்ந்தே யோதுவேன்மயிலேகேளாய்
வள்ளியின்கிழங்குதன்னை வனந்தனிற்பேர்த்தெடுத்த
பள்ளத்திலிருந்தேயிந்தப் பாவையையெடுத்ததாலே
வள்ளிநாயகியென்றேபேர் வருத்தினனின்றுதானே.

வசனம்.

கண்மணி வள்ளிக்கிழங்கு வெட்டின பள்ளத்திலிருந்து எடுத்ததால் வள்ளிநாயகி என்று திருநாமம் புனைந்தேன் இவ்விதமே யழைப்பீர்கள்.

நங்கைமோகினி வசனம்.

ப்ரபோ இவ்விதமேயழைக்கின்றேன் இக்குழந்தைக்குப் பசும்பொன்னு லொரு தொட்டிலமைத்துக் கொடுப்பீர்கள்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி இந்த நவரத்தின தொட்டிலி லிட்டாட்டுவாய்.

நங்கைமோகினி வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன் ப்ரபோ.

## வள்ளியம்மைக்கித் தாலாட்டல்.

இராகம்-நீலாம்பரி.

கண்ணிகள்.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ

மானே மரகதமே
மானீன்ற கண்மணியே
தேனே திரவியமே
தெள்ளமுதே நித்திரைசெய்

வள்ளிக்கொடி நடுவே
வந்துதித்த ரத்தினமே
உள்ளமிக மகிழ்ந்து
உத்தமியே கண்வளராய்


எந்தன் பெயர்விளங்க
வந்துதித்த பெண்கொடியே
சுந்தர மிகுந்தவெந்தன்
சுரோகையே நித்திரைசெய்

வேழ்விழமிலத் கரசே
மின்னரசே பெண்ணரசே
தாழ்வில்லாப் பாக்கியமே
தையலே|நித்திரைசெய்

கந்தவே ளின்னருளாற்
கன்னிமார் தன்செயலால்
வந்தருளு முக்கனியே
மங்கையே கண்வளராய்

நம்பிராஜன் வசனம்.

கண்மணி யிங்கு வீற்றிருப்பாய்மைந்தரோடு தர்ப்பார் சென்று வருகின்றேன்.



நங்கைமோகினி வசனம்.

மன்னவா சென்று வாருங்கள்.

நம்பிராஜன் வசனம்.

பாலர்காள் நாம் தர்ப்பாரினிடமாகச் சென்று வருவோம் என்னோடு வருவீர்கள்.

மைந்தர்கள் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வாருங்கள்.

## நம்பிராஜன் மூன்றாவது சபை.



நம்பிராஜன் சொல்

விருத்தம்.

மைந்தரேகேளீரின்று மழைவருஷித்கதாலே
சிந்தையேமகிழ்ந்துமெத்தச் சிறப்பொடுநீங்கள் கூடி
இந்தவேளையிலேசென்று எழுபதிற்குறுக்கப்புஞ்சை
செந்தினைவிதைத்தேவாருஞ் சீக்கிறமாகத்தானே.

வசனம்.

மைந்தர்காள் இன்று மழை வருஷித்தபடியால் நீங்களெல்லோரும் மனமகிழ்ந்து காட்டிற்குச்சென்று எழுபது குருக்கப் புஞ்சையிற் செந்தினை விரைத்து அதி சீக்கிறமாக வாருங்கள் மைந்தர்காள்.

மைந்தர்கள் சொல்

விருத்தம்.

தந்தையேபோற்றிபோற்றி சற்குணாபோற்றிபோற்றி
சுந்தராபோற்றிபோற்றி தொல்புவிவேந்தேபோற்றி
சிந்தையேமகிழ்ந்துதாங்கள் செப்பியபடியேயின்று
செந்தினைவிளைத்தேமீண்டு சீக்கிறம்வருகுவோமே.

உத்திரவுதாருங்கோயா இத்தரு எந்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

தந்தையேவிடை கொடுப்பீர்
சிந்தையின் றுயர் விடுப்பீர் (தந்தை)

அநுபல்லவி.

அந்தமாகத்தானே
அண்ணரோடு நானே
இந்தவேளை நாதா
எகிடுவேனெநன்நோ (தந்தை)

சரணங்கள்.

செந்தினை மிகவிளைத்தே
சித்தமிகவே களித்தே
உந்தனுரைபோலே
ஓடியே முன்னாலே
வந்திடுவோந் தீரா
மதிவிதன்ச்சிங்காரா (தந்தை)
மன்னனேவெகு வுல்லாசா
மைந்தர்கள்மேல் விசுவாசா
நன்னயமாயின்று
நாங்கள்வனஞ் சென்று
உன்னிதமதாக
ஓர்நொடியில்வாரோமே (தந்தை)

வசனம்.

பிதா யின்று மழை வருஷித்ததால் தங்கள் மனம்போல அண்ணரோடு சென்று மனமகிழ்ந்து குலதெய்வமாகிய சிவ சுப்பிரமணி

யக்கடவுளை நினைந்து நமது எழுபது குருக்கப்புஞ்சை முழுவதுஞ் செந்தினை விரைத்து அதி சீக்கிரமாக எல்லோரு மிங்கு வருகின்றோஞ் சிந்தைமகிழ்ந்து தந்தையே விடை கொடுத்தனுப்புவீர்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் நீங்களெல்லோருஞ் சுகமாகச்சென்று தினை விரைத்து மீண்டு வருவீர்கள்.

மைந்தர்கள் வசனம்.

பிதா நாங்கள் வந்தனஞ் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண பாலர்காள்.

மூத்தவன்சொல் வசனம்.

அடா தம்பிமாரே மனைக்குச்சென்று வேண்டிய ஆயுதம் எடுத்து வருவீர்கள்.

இளையவர்கள் வசனம்.

அண்ணா வெடுத்து வருகின்றோம்.

## வேடுவர் தினைவிரைக்கும் பாகம்.



மூத்தவேடுவன் சொல்

விருத்தம்.

சித்தமேமிகமகிழ்ந்தே சிறப்பொடோமுங்கூடி
இத்தனிவனத்திலேயி எழுபதுகுருக்கப்புஞ்சை
உத்தமன் றினைவிரைக்க வோதினானதாலே
சித்தஜன்றனைநிகர்த்த தீரரேசெல்லுவோமே.

அண்ணமாரே என்னசெய்வோம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

அண்ணமாரே தந்தைவிடை
யளித்தாரொன்று சேருங்கள்
திண்ணமாகத் தினை விரைக்கச்
சீக்கிரமாய் வாருங்கள்
சுந்தரரூளாலேகாமே
கானகமே சென்றுமே
செந்தினை விரைத்தேப்யிர்
செய்திடுவோ மின்றுமே
வல்லபமிகுந்த தம்பி
மாரேவெகு தீரரே
எல்லோரும் மனமகிழ்ந்து
இன்றுசெல்வோம் வீரரே

வசனம்.

தம்பிமார்களே எழுபதுகுருக்கட்பூஞ்சையிற் செந்தினை விரைத்து வரும்படி தந்தை விடைகொடுத்தார் சென்று தினை விரைத்து வருவோம் வாருங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அவ்விதமே செல்வோம் வாருங்கள்.

மூத்தவேடுவன் வசனம்.

அடா தம்பி ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கத்தில் நின்று மண் வெட்டியால் வெட்டிப் புழுதிசெய்வோம் வாருங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணு தங்கள் மனப்படி செய்கின்றோம் வேறு யோசிக்க வேண்டாம்.

மூத்தவேடுவன் வசனம்.

ஜல்தியாக வெட்டுவோம் வாருங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கத்தில் வெட்டிப் புழுதிசெய்து விட்டோம் நங்குல தெய்வமாகிய சிவ சுப்பிரமணி

யக்கடவுளை நினைந்து செந்தினையை விரைப்பீர்கள் வெகுநாழிகை யாகின்றது சல்தியாகத் தந்தைமுன்னே செல்வோம்.

மூத்தவேடுவன் சொல்

விருத்தம்.

கரிதனையுரித்தோன்பாலா கழுகுமாமலையில்வாசா
அரிதிருமருகாதெய்வ யானையைமணந்தநேதா
திரிபுரபவனேமெய்யா தினைவிளைந்திடவேயுன்ற
னருள்புரிவாயேஎங்க ளாண்டவாபோற்றிபோற்றி.

வசனம்.

திருமாலின் மருகா யானையையுரித்தோன் பாலகா தெய்வானை யைத் திருமணஞ்செய்த நாதா எங்கள் குல தெய்வமாகிய, சிவசுப் பிரமணியக்கடவுளே யாங்கள் விரைக்குந்தினையானது விளைந்திடக் கிருபைசெய்வாய் பிரணவ சொரூபா.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா பூராவும்விரைத்துவிட்டோம் சூரியனோ அஸ்தமிக் கும் வேளையானது வெகுசல்தியாகத் தந்தையின் முன்னேசென்று வணங்கிச் செந்தினை விரைத்ததாகச் செப்புவோம் வாருங்கள்.

மூத்தவேடுவன் வசனம்.

தம்பிமார்களே வேகமாகச் செல்வோம் வருவீர்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா அப்படியே வருகின்றோம்.

மூத்தவேடுவன் சொல்

விருத்தம்.

தந்தையேயின்னடிக்கித் தனையர்கள்போற்றிபோற்றி
சிந்தையேமகிழ்ந்துதாங்கள் செப்பியவாறுபோல
இந்தவேளையிலேமெய்யா எழுபதுகுருக்கப்புஞ்சை
செந்தினைவிரைத்தேவந்தோஞ் சிறுவர்களிங்குதானே.

வசனம்.

தந்தையே போற்றிபோற்றி தங்களுடைய ஆக்ஞையின்படி வனத்திற் சென்று எழுபது குருக்கப்புஞ்சையில் நங்குல தெய்வ மாகிய சிவசுப்பிரமணியக் கடவுளை நினைந்து செந்தினை விரைத்து வந்தோம் ப்ரபோ மனமகிழ்வீர்.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்காள் மகிழ்ந்தேன் மாளிகைக்கி வாருங்கள் செல்வோம்.

மைந்தர்கள் வசனம்.

அவ்வண்ணமே செல்வோந் தந்தையே.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்காள் நாம் தர்ப்பாருக்குச்சென்று சுமார் இரண்டு மாதமாகின்றது வள்ளி நாயகியோடு விளையாடிக்கொண்டிருந்து விட்டோம் தர்ப்பார் செல்வோம் வாருங்கள்.

மைந்தர்கள் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் பிதா.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

வேலவனருளினாலே விளைந்திடத்தினை விரைத்தீர்
பாலனேயின்னாள்மட்டும் பார்த்திடவில்லைநீபோய்ச்
சீலனேதெரிந்தெனக்கே செப்புவீருண்மையேவீண்
காலமேகளிக்கவேண்டாங் களிப்பொடுசெல்லுவீரே.

வசனம்.

புத்திர சிகாமணிகாள் எழுபது குருக்கப்புஞ்சை தினைவிரைத்துச் சுமார் இரண்டுமாதமாகின்றது நீங்கள்போய்ப்பார்த்து வரவேயில்லை யானதால் எல்லோருஞ்சென்று பயிர் எவ்விதமாக யிருக்கின்றது பார்த்து எனக்குத் தெரிவிப்பீர்கள் மைந்தர்காள்.

மைந்தர்கள் சொல்

விருத்தம்.

தந்தையேமயங்கவேண்டாந் தம்பிமாரோடுகூடிச்
செந்தினையதனைப்பார்த்தே சீக்கிரமாகவிங்கு
வந்துநின்சமுகந்தன்னில் வழுத்துவோமுண்மைதன்னைச்
சிந்தையேமகிழ்ந்துமெய்யா செல்லுவோமின்றுதானே.

வசனம்.

தங்கள் ஆக்கினையின்படி யாங்களெல்லோருஞ்சென்று தினைப்பயிர் எவ்விதமாக யிருக்குதென்று பார்த்து அதிசீக்கிரம் நாங்கள் வருகின்றோம் மனமகிழ்ந்து விடைகொடுத் தனுப்புவீர் தந்தையே.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் சென்று வருவீர்கள்.

மைந்தர்கள் வசனம்.

ப்ரபோ வந்தனஞ் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் பாலர்காள்.

மூத்தவேடுவன் வசனம்.

தம்பிமாரே தந்தை தினைப்பயிர்தனை பார்த்து வரும்படியாக நமக்கு ஆக்ஞை யிட்டனுப்பினர் ஜல்தியாக வாருங்கள் பார்த்து வருவோம்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா செல்வோம் வாருங்கள்.

மூத்தவேடுவன் வசனம்.

அடா தம்பிமார்களே தினைப்பயிரைப் பார்த்தீர்களா விலங்கினங்கள்வந்து பயிர்களை அழித்து யிருக்கின்றது வாருங்கள் தந்தையின் முன்னேசென்று யிச்சங்கதிகளைத்தெரிவிப்போம் நம்மீது கோபஞ் செய்வாரோ தெரியோம்.

இளையவேடுவர் வசனம்.

அதிக வேகமாகச் செல்வோம் அண்ணா.

மூத்தவேடுவன் வசனம்.

தந்தையே வந்தனஞ் செய்கின்றேன்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் பாலகா தினைப்பயிர் எவ்விதமாக இருக்கின்றது மனது மகிழ்ந்து புகல்வீர்.

வேடுவர்சொல் விருத்தம்.

காட்டில்வாழ்மிருகங்கூடிக் கனத்தசெந்தினை கடன்னை
வாட்டமேபடுத்தியய்யோ வைத்திருப்பதினாலின்றே
கோட்டிசெய்விலங்கினத்தைக் கொன்றுமேவேகமாக
நாட்டுக்குவருகின்றோமே நலமொடுவிடையீவீரே.

வசனம்.

தந்தையே நாமிட்ட இணைப்பயிர்கடன்னைக் காட்டில் வாழ்ந்திருக்கும் விலங்கினங்கள் வந்து அதாகுதஞ்செய்தது நாங்களுக்கு இன்று வேட்டையாடி வரும்படி விடைகொடுப்பீர் பல வாயுதங்களு மணிந்துகொண்டுக் காட்டிற்சென்றி விலங்கினங்களைக் கொன்று அதிவேகமாக வருகின்றோம் ப்ரபோ.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

கூட்டமாயொன்றுநீங்கள் கூடியேவேகமாக
காட்டிலேசென்றுயானை கரடிகள்வேங்கைதன்னை
வேட்டைகளாடியின்று மீண்டுமேவிரைவதாக
நாட்டுக்குவருகுவீரே நலமொடுமகிழ்ந்துதானே.

வசனம்.

மைந்தர்காள் எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து ஆயுதங்களெடுத்துக்கொண்டு காட்டிற்குச்சென்று விலங்கினங்களை வதைத்து அதிவேகமாக என்முன் வருவீர்கள்.

வேடுவர்கள் வசனம்.

தந்தையே தங்கள் மனம்போலச்சென்று வேட்டையாடி வருகின்றோம் ப்ரபு வந்தனஞ் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் சென்று வருவீர்கள்.

# வேடுவர் வேட்டையாடும் பாகம்.

விருத்தம்.


கத்திகேடயந்துப்பாக்கி கனத்தபிரங்கிகுண்டு
சத்திவேலறிவாழ்குந்தஞ் சக்கரமழுமுசண்டி
குத்துவாளுடைவாள்கொண்டு கும்பதாய்வேடர்கூடிச்
சித்தமேமகிழ்ந்துவேட்டை செய்திடப்புறப்பட்டனரே.

காவல்தின்னைநாடி மேவலாமோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேகமாக வாராய்
வேட்டமாடச் ஜோராய்(வேக)



அநுபல்லவி.

ஏகமாகக் கூடி
இன்னுசெல்வோ மோடி (வேக).

சரணங்கள்.

குண்டுவெடியாலே அண்டபகிரதிக்காலே
கண்டதுண்டமாகக் க்ஷத்ரியானே சாக (வேக)

வலைதன்னையேகட்டி வரிப்புலியைவெட்டி
சிலைதன்னைவளைத்தே செட்டிகளைக்கலைத்தே (வேக)

சங்கையில்லாவேங்கை சிங்கம்யாழிசெங்கை
தங்கும்வாழினுலே பங்கமாமண்மேலே (வேக)

வசனம்.

தம்பிமார்களே வேகமாக வாருங்கள் கரடி புலி பன்றி மான் யானை யிவைகளை வதைப்போம் வனங்களைக் கலைப்போம் நான்கு திக்கிலும் வலையைக்கட்டுவோம் விலங்கினங்கள் சென்னி வெட்டுவோம்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணு அவ்விதமாகவே செய்வோம்:

மூத்தவேடுவன் சொல்

வேட்டையாடுவோம் நாமிப்போதே என்ற வர்னமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

நாட்டமாய்வேட்டமே நாமாடுவோம்-அண்ட
ரண்டங்கள்கிடுகிடெனப் பிண்டங்கள்கலங்கிடவே (நாட்)

அநுபல்லவி.

சேட்டைகள் செய்யுமிருகக்
கூட்டங்கள் மனங்கருகச்
செய்குவேன் கணைவிடுத்து
னையமே காட்டையடுத்து (நாட்)

சரணங்கள்.

கொஞ்சமேனும் தம்பிமாரே
அஞ்சிடாமலே வருவீர்
பஞ்சரகப்புலி பரியைத்
துஞ்சிடச் செய்வேன்

நஞ்சைபுஞ்சையை யழித்துச்
சஞ்சலமதைக் கொடுத்த
நரிகரி பன்றியாழித்
திறனொரு க்ஷணத்தில்(நாட்)

உக்ரமித்தடவி கேன்விட்
டக்ரமித்தாற் பரித்துமே
ஒருமித்தே வந்துதினைப்
புயி ரழித்த
தக்கபலமான மிர்க
வர்க்கமுளமே கருக
இக்கணந் தனிலேயொரு
மிக்கவதை செய்திடுவேன்(நாட்)

வசனம்.

தம்பிமார்களே நீங்கள் நான்கு திசையிலுஞ்சென்று வலையைக் கட்டிக் காட்டைக்கலைத்து விடுவீர்கள் யானிப்பக்கத்தி லிருந்து வரக்கூடிய விலங்கினங்களைக் கொல்லுகின்றேன் அதி சீக்கிரமாகச் செல்லுங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா தங்கள் ஆக்ஞையின்படி நான்கு பக்கத்திலும் வலையைக்கட்டிக் காட்டைக் கலைத்துவிட்டோம் ஒரு புதரிலிருந்து ஒரு சிங்கமானது நம்மைக்கோரி வருகின்றதைப் பார்த்தீர்களா.

மூத்தவேடுவன் வசனம்.

தம்பி யிதனைக் கொல்லுகின்றேன் வேடிக்கை பாருங்கள்.

## சிம்ம வேட்டை.

விருத்தம்.

ஓடியேபுதரிவீழ்ந்து ஓடிந்திடவலைக்குட்சிக்கி
வரீடியென்முன்பதாக வந்திடுஞ்சிம்மந்தன்னை
நாடிவில்நாணியேற்றி நமன்பதிக்கேகவின்று
கோடியஸ்த்திரம்விடுத்துக் கொல்லுவேன்வெல்லுவேனே.

4 JUL 1910 MADRAS

தில்பிரணகி பியாரிரேமேரி என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சிங்கமேயுனைப் பங்கஞ்செய்வேனென்
செய்திதெரியாதோ வெகு
திடத்தொடுமன அட்டத்தொடுவந்தாய்
விட்டப்படுவேனோ மடத்தனமுள்ள (சிங்க)

தங்கியேவன மெங்குஞ்சஞ்சரித்
தாயிருவரையே அரை
க்ஷணத்திலேவெகு சினத்தொடுவந்தாய்
நிணக்குடல்தன்னைக் கணக்கிலாயாகச் (சிங்க)

சங்கையில்லாது இங்கிலுமேகொர்ச்
சனைபுரி பயமா
தக்கபயிரை விக்கினஞ்செய்த
தக்கிரமமே சக்கவேகறை (சிங்க)

ஹே தம்பிமார்களே இங்கு சிரிக்கோபமீறிக் காலைவாரி நமது நேரில் வருகின்ற இந்தத்துஷ்ட சிம்மத்தை என் கையிலிருக்கும் அம்பினாலே வீதை செய்கின்றேன் வேடிக்கை பாருங்கள் வேறு எப் பக்கத்திலாவது ஓட்டமற் செய்குவீர்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா அவ்வண்ணமே செய்கின்றோம்.

மூத்தவேடுவன் வசனம்.

அடா திம்பிமார்களே நமது நேரில்வந்த துஷ்டச் சிம்மமான தை எனது கரத்திலுற்ற அம்பினாலே கொன்றேன் பார்த்தீர்களா.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா இந்தச்சிம்மமானது அதிகவேகமாக வந்தது நமது அம்பினாலே வதைத்தோம் இதனுடைய ஸ்தூல மெவ்வளவு பெரிதாயிருக்கின்றது பார்த்தீர்களா.

மூத்தவேடுவன் வசனம்.

அடா தம்பி யிதனுடைய நகங்கள் எவ்வளவு கூர்மையாயிருக்கின்றது பாருங்கள்.

### இளையவேடுவர் வசனம்.

ஆம் அண்ணா.

### மூத்தவேடுவன் வசனம்.

அடா தம்பிமார்களே இன்னும் நீங்கள் காட்டைக் கலையுங்கள் மிருகங்களை நான் வதைக்கின்றேன்.

### இளையவேடுவர் வசனம்.

அண்ணா தங்களுடைய ஆக்ஞையின்படி காட்டைக் கலைத்தோம் ஒரு புதரிலிருந்து வெகு பராக்கிரமத்தோடு ஓர் புலியானது ஓடும் உன்னிதத்தைப் பாருங்கள்.

### மூத்தவேடுவன் வசனம்.

ஹே தம்பிமார்களே அதிக ஜாக்கிரதையாக நான்கு பக்கத்திலும் நில்லுங்கள் இந்தப்புலியை ஒரே பாணத்தினாலே வதைக்கின்றேன்.

## புலி வேட்டை.

ஓடிவந்தேனே யுந்தனைத்தேடி என்ற வர்னமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

### பல்லவி.

ஓடியேபுதரிலொளிந்தாய்புலியே-உன்னை
உக்ரமித்தரைக்கணங்களைக்கிரைகொடுக்குமுன்னே (ஓடி)

### அநுபல்லவி.

வர்டிடநாங்களிட்ட பயிரழித்ததுமன்று
மாட்டையாட்டையேகொன்று மனங்களித்திரோதின்று
தேடிவந்தோமேயுன்றன் சென்னிதனையேயின்று
சின்னபின்னங்களாகச் செய்வேன்திடமேகொண்டு(ஓடி)

### சரணம்.

சித்ரவதையுனையே செய்யாதுபுவிமீது
செடிக்குட்பதுங்கினும் விடுவேனோயானிப்போது
மெத்தக்கெருவமென்ன வீரர்களைவிடாது
விரட்டிவலைக்குட்சிக்கி விடவேமீறியோடாது

வேகமாகவுமே விலங்கினம்.
னேகமாழவுமே விரைவினிலே
வீரியமோடு ஆர்பாரமாய்
நேரிலேவாருந் தீரசூரரே
விடப்படுமோவுன்று சடத்தைநசித்திடாது
வெற்றிதனையித்தி கொற்றவனுங்கொள்ளாது (ஓடி)

வசனம்.

அடா தம்பிமார்களே நம்மோடு எதிர்த்துப்போராடின புலி
யை இதோ கொன்றுவிட்டேன் பார்த்தீர்களா.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா தங்களுடைய வல்லபம் என்ன தெரிவிப்போம்.

மூத்தவேடுவன் வசனம்.

தம்பிமார்களே இன்னுங் காட்டை கலையுங்கள் மிருகத்தை
வாட்டி விடுகின்றேன்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா ஓர் பன்றியானது பருவதத்திற்குச் சமானமாய் வரு
கின்றது பாருங்கள்.

மூத்தவேடுவன் வசனம்.

தம்பிமார்களே இதனையுங் கொல்லுகின்றேன்.

## பன்றி வேட்டை.

சிங்கமே நானுன்னைப்பங்கம் என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பன்றியுன்னையின்றுநானே பங்கஞ்செய்வேனே
பருவரைபொடிபடவருகிறதறிகிலே னெனதொருகணையினாற் (பன்)
நன்றியுள்ள தினைப்பயிரை நாசஞ்செய்தாயே
நாட்டிலேசென்றுமாட்டையேகொன்ற தாஷ்டிகமிர்கூட்டமாகிய (பன்)
காடுமூர்ந்தவிலங்கினங்களைக் கலைக்கச்செய்கிறேன்
காசினிபுகழ்மரிசிலாதநேரர் தேசுறுமகாராஜனென்றறி (பன்)
வேகமொடுனான் குதிசையு மோடிவருவீரே
வீரரேவெகுதீரமாகவே நேரிலேவாருஞ்சூரரேவர்த (பன்)

வசனம்.

ஆகா தம்பிமார்களே நமது தினைப்பயிரை யழித்த இந்தப் பன்றியைத் துப்பாக்கியாலே சுட்டுவிட்டேன் பன்றி யிரந்து விட்டதா பார்த்து வாருங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா நாங்கள் சென்றுபார்த்தோம் பன்றியானது இறந்து போய் விட்டது.

மூத்தவேடுவன் வசனம்.

அடா தம்பிமார்களே நீங்களெல்லோருமாகச் சென்று தெற்குக்காட்டைக் கலைத்து விடுவீர்கள்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா அப்படியே செய்கின்றோம்.

காட்டைக் கலைத்துவிட்டதில் விலங்கினங்கள் வேறு ஒன்றுங் காண்கிலோம் ஒருபுள்ளிமான் நம்முன்னமே துள்ளி வேகமாக வருகின்றது என்ன உன்னிதமா யிருக்கின்றது.

மூத்தவேடுவன் வசனம்.

அடா தம்பிமார்களே நல்லது இந்த மானைக் கொல்லுகின்றேன் சுற்றி வளையுங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அப்படியே செய்கின்றோம்.

## மான் வேட்டை.

வாதுசெய்யத்தருணமல்லடி என்ற வர்ணமெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மானேயுனை நானேகொல்வேனே
வனத்தில்வாழும் (மானே)

அநுபல்லவி.

மானேவெகு கெர்வங்கொண்டு
தானேநிற்கின் றுயேயின்று
கோனென்றறி யாமல்நாடிய
குதித் தோடிய (மானே)

சரணம்.

செந்தினைப்பயி ரழித்தாய்
செடிக்குள்ளோடி யொளித்தாய்

O-9MM9V
N10
117253

உந்தனை வனத்திலே வேனே
உண்மையாய்த் தானே(மானே)
சிலமுள்ள நம்பிராஜன்
பாலனானே விசு[illegible]
ஞாலமதிற்கீர்த்தி [illegible]றவன்
நல மேற்றவன்(மானே)

வசனம்.

அடா தம்பிமார்களே இந்தமானைக் கொன்றுவிட்டேன் வேறு மிருகங்கள் ஏதாவது வருகின்றதா கவனித்துப் பார்த்துக் கூறுங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா இந்தக்காட்டில் நான்குபக்கமும் [illegible]விட்டோம் ஒரு மிருகங்களாவது வரக் காண்கிலோம்.

மூத்தவேடுவன் வசனம்.

தம்பிமார்களே நன்றாய்ப் பார்த்தீர்களா.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா ஒரு மிருகத்தையாவது காண்கிலோம்.

மூத்தவேடுவன் வசனம்.

அடா தம்பிமார்களே யான் வெகு சந்தோஷமடைகின்றேன்.

## வேடுவர் சிற்றூருக்குச்செல்லுதல்.

மூத்தவேடுவன் சொல்

விருத்தம்.

காட்டிலேமகிழ்ச்சியோடு கடியதோர்விலங்கையெல்லாம்
வேட்டம்நாமாடி மாய்த்தோம் மேன்மையாகியசிற்றூரின்
பாட்டையின்வழியேநாமே பண்புடனொன்றுசேர்ந்து
தாவ்டீகமாகவேநம் தந்தைமுன்செல்லுவோமே.

வசனம்.

அடா தம்பிமார்களே நாமெல்லோரும் காட்டை நாடிவந்து கொடிய விலங்கினங்களைக் கொன்றோம் சூரியன் அஸ்தமாகுந் தருணமாயிருக்கின்றது சிற்றூருக்குச்செல்லும் பாதையைத்தேடி ஒன்று சேர்ந்து நடந்து தந்தையின் முன்னமே செல்லுவோம் வாருங்கள்.

இளையவேலவன் வசனம்.

அண்ணா வாஸ்தவந்தான் எல்லோருமொன்றுசேர்ந்து தந்தையின் முன்னே செல்வோம்.

மூத்தவேலவன் வசனம்.

தம்பிமார்களே என்னோடு தொடர்ந்து வாருங்கள்.

இளையவேலவர் வசனம்.

அவ்வண்ணமே வருகின்றோம்.

## நம்பிராஜனை மைந்தர்கள் காணுதல்.

மைந்தர் சொல்

விருத்தம்.

நாட்டிலுள்ளோர்தல்போற்றும் நம்பிராஜேந்த்ராகேளீர்
காட்டிலேசென்றுநாங்கள் கைக்கணையாலேமெய்யா
கோட்டிசெய்விலங்கினத்தைக் கொன்றுமேதம்பியோடு
தாட்டிகமாயிங்குற்றோம் தந்தையேபோற்றிபோற்றி.

வசனம்.

பிதா வந்தனஞ்செய்கின்றேன் தங்கள் ஆக்ஞையின்படி தாஷ்டிகமாக நாங்கள் காட்டிற்குச்சென்று தினை பயிர்களை யழித்த கொடிய விலங்கின் கும்புகளைப் பாணத்தாலே வதைசெய்து வந்தோம் இச்சங்கதியைத் தங்களுக்கு உரைத்திடவந்தோம் ப்ரபோ.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் பாலர்காள் அமருங்கள்.

மைந்தர்கள் வசனம்.

தந்தையே அவ்வண்ணமே செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் நாம் விரைத்துவந்த எழுபது குருக்கப்புஞ்சை விளைவாக இன்னும் எவ்வளவு நாளாகும் புகல்வீர்கள்.

மைந்தர்கள் வசனம்.

பிதாவே இப்பொழுது தினைப்பயிர் செழித்திருக்கின்றது இன்னுங் கதிருண்டாகி விளைவாகச் சுமார் இரண்டுமாதங்கள் செல்லும் ப்ரபோ.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் மகிழ்வுற்றேன்.

மைந்தர்கள் வசனம்.

தந்தையே சூரியன் அஸ்தமான மாகினன் நாமெல்லோரும் அந்தப்புரஞ்சென்று நாளைக் காலையிவிங்கு வருகுவோம் வாருந் தந்தையே.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்கள் அவ்வண்ணமே செல்வோம்.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக மைந்தர்களோடு நம்பிராஜன் தர்ப்பாருக்கு வருவதும் தம்குல விசாரணை புரிவதும் சந்தோஷமாக அந்தப்புரஞ் சென்று சுகமாக வாழ்ந்திருக்கும் நாளில் வள்ளி நாயகி தக்க பருவ திசையையடைந்து கன்னிகா மாடத்திலிருக்குங்கால் அன்னவளை பாதுகாத்து வந்தார்கள் ஓர்நாள் மைந்தர்களோடு நம்பிராஜன் தர்ப் பாருக்கு வருகின்றவிதங் காண்குக.

நம்பிராஜன்சொல் வசனம்.

அடா புத்திர சிகாமணிகாள் நாமெல்லோருந் தர்ப்பாருக்குச் செல்லுவோம் வாருங்கள்.

மைந்தர்கள் வசனம்.

அவ்வண்ணமே வருகின்றோம்.

சேவகன் வசனம்.

ப்ரபோ வந்தனஞ் செய்கின்றேன்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண சேவகா.

பாலகர்காள் வீற்றிருப்பீர்கள்.

மைந்தர்கள் வசனம்.

வீற்றிருக்கின்றோந் தந்தையே.

## நம்பிராஜன் சபை.

விருத்தம்.

அந்தமேமிருந்தவெந்த னருமைப்புத்திரரேகேளீர்
இந்தவேளையிலேசெல்வீ ரெழுபதுகுருக்கப்புஞ்சை
செந்திினையதனைப்பார்த்துச் சீக்கிறமாகமீண்டு
வந்திடுவீரேயுங்கள் மனமகிழ்ந்தின்றுதானே.



வசனம்.

புத்திர சிகாமணிகாள் நீங்கள் எழுபதுகுருக்கப்புஞ்சை செந்தினை விரைத்தீர்கள் பயிரானவுடன் மிருகங்கள் வந்து பயிரை யழித்தது நீங்கள் சென்று பயிரைப்பார்த்து வனத்தில் வாழுங் கொடிய விலங்கினங்களைக்கொன்று இங்கு வந்தீர்கள் இன்னாள் வரையிலும் தினைப்பயிர் எவ்விதமாக விருக்கின்றதோ வரிகிலோம் நீங்கள் இந்தவேளை சென்று பார்த்து வந்து எனக்குத் தெரிவிப்பீர்கள்.

மைந்தர்கள் சொல்

விருத்தம்.

திக்குள்ளோர்போற்றுகின்ற செம்மலேசெப்பக்கேளீர்
இக்கணந்தனிலேசென்று எழுபதுகுருக்கப்புஞ்சை
பக்குவமாகச்செய்த பயிர்தனைப்பார்த்துவாரோம்
முக்கணன்சேயனான முருகவேளருளினாலே.

வசனம்.

இப் பிரபஞ்சத்தி லுள்ள வர்கள் போற்றி செய்திடுந் தந்தையே தங்களுடைய ஆக்ஞையின்படி நாங்க ளெல்லோருஞ் சென்று எழுபது குருக்கப் புஞ்சையிலிட்ட பயிர்கள் எவ்விதமா யிருக்குமென்று பார்த்து வந்து தங்களுக்குத் தெரிவிக்கின்றோந் தந்தையே.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் அதிகவேகமாகச் சென்று வருவீர்.

மைந்தர்கள் வசனம்.

ப்ரபோ சென்று வருகின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

புதல்வர்காள் முருகனுடைய கிருபையாற் சென்று வருவீர்.

மைந்தர்கள் வசனம்.

வந்தனஞ் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண பாலர்காள்.

மூத்தவேடுவன் வசனம்.

அடா, தம்பிமாரே தந்தை விடை ஈய்ந்தனர் இனிக் காலதாமதம் செய்யக்கூடாது வேகமாகச் செல்லுவோம் வாருங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணலே அவ்வண்ணமே செல்வோம்.

மூத்தவேடுவன் வசனம்.

அடா தம்பிமார்களே பார்த்தீர்களா பயிர்கள் நன்றாக வளர்ந்து சில பக்கங்களிற் கதிர் பரிந்தும் சில பக்கங்களில் மணி பிடித்தும் சில பக்கங்களிற் கதிர்பரியாமலு மிருக்கின்றது இக்கதிர்களைக் கொய்து கொண்டு செல்ல அன்னங்கள் கிள்ளைகள் கோகிலங்கள் மாடப்புருக்கள் காடைகள் முதலிய பக்ஷி ஜாதிகள் படைபடையாக வருகின்றது பாருங்கள் யாராவது ஒருவர் இங்கிருந்து கொண்டு விரட்டினால் நன்மை இல்லாவிடிற் கதிர்கள் சேதமாகும் இச்சங்கதிகளைத் தந்தைக்கித் தெரிவிப்போம் வாருங்கள்.

இளையவேடுவர் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வாருங்கள்.

மூத்தவேடுவன் வசனம்.

தம்பிமாரே இதற்கு யாரைக்காவல் நேமிக்கலாந் தெரிவிப்பீர்கள்.

இளையவேடுவர் வசனம்.

அண்ணா கவலை படைய வேண்டாம் வேகமாகத் தந்தை முன் சென்று யோசித்துக் கொள்வோம்.

மூத்தவேடுவன் வசனம்.

அப்படியே செல்வோம் வாருங்கள்.

வேடுவர்கள் வசனம்.

தந்தையே மைந்தர்கள் வந்தனம் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண பாலர்காள் அமருங்கள்.

வேடுவர்கள் வசனம்.

தந்தையே வீற்றிருக்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் சென்று வந்தீர்களே யாது விசேஷம்.

வேடுவர்கள் வசனம்.

தந்தையே புகலுகின்றோங் கவனிப்பீர்கள்.

# வள்ளியம்மையைத் தினைப்புனத்திற் கனுப்பும் பாகம்.

வேடுவர்கள் சொல்

விருத்தம்.

மன்னனே புகலுவோமே
மணிப்புறு காடைகாக்கை
அன்னங்கள் குயில்கள்கிள்ளை
அழகிய மயிலினண்டில்
நன்னயமாய் விளைந்த
நற்றினைக் கதிர்கடன்னை
உன்னிதமாகக் கொய்தே
உத்தமா செல்லுகின்றே.

வசனம்.

தந்தையே எழுபது குருக்கப் புஞ்சையில் விரைத்த தினை நங்குல தெய்வமாகிய திருக்கழுகு மலைச்சிவ சுப்பிரமணியக் கடவுள் திருவருளாலே விளைவானது ஒருபக்கமும் மணிபிடியாமலொருபுறமும் கதிர் பரியாமலொருபக்கமு மிருக்கின்றது விளைவான பக்கத்தில் அன்னங்கள் கிள்ளைகள் மாடப்புறாக்கள் மணிப்புறு கோகிலம் மயில் காடைகள் பந்தி பந்தியாக வந்துவந்து கதிர்களைக் கொய்து செல்லுகின்றது தந்தையே இதற்கென்ன யோசனை செய்கின்றது.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

என்னிட்புதல்வாகேளி ரெழுபது குருக்கப்புஞ்சை
தன்னிலேகதிரைப்பக்ஷி ஜாதிகள்கொய்திடாது
நன்னயமாகக்காவல் நாடியேசெய்வதற்கார்
தன்னைநானேகச்சொல்வ தறிகிலேனின்று தானே.

வசனம்.

புத்திர சிகாமணிகாள் தினைக்கதிர்களைப் பக்ஷிகள் கொய்து செல்லாது காவல் செய்ய நானுரைச்சென்று வரும்படி தெரிவிப்பேன் ஒன்றுந் தோன்றவில்லையே யாரைப்போய்க் காத்திருக்கும் படி செய்யலாந் தெரிவிப்பீர்கள் எனதருமைப் புத்திரர்காள்.

வேடுவர்கள் சொல்

விருத்தம்.

தெள்ளுநீயேகலைகளாய்ந்த செம்மலேசெப்பக்கேளீர்
கள்ளமில்லாதுயரங்கள் கழறிடும்வார்த்தைதானே
புள்ளிமானீன்றபெண்ணுள் பூவையர்க்கரசியான
வள்ளியைத்தினையைக்காக்க மனமகிழ்ந்தனுப்புவீரே.

வசனம்.

கேளீர் தந்தையே எங்களுடையமனதிற் கபடமில்லாது செப்புகின்றோம் கவனித்துக்கேட்பீர் பக்ஷிஜாதிகள்பக்ஷியாகவந்து தினைக்கதிரைக்கொய்யாது காக்கும்படிக்கு எங்கள் தங்கையாகிய வள்ளிநாயகியைச் சேடிகளோடு அனுப்புவீர்கள் ப்ரபோ.

நம்பிராஜனுக்கும் வேடுவர்களுக்கும்

தர்க்கம்.

எந்தன்றந்தையே மனதேங்குதையய்யோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்தன்பாலரே சிந்தை
யேங்குதென்செய்வேன் சீலரே. (எந்)

அநுபல்லவி.

அந்தமுள்ளவள்ளியம்மை தனைச்சென்று
செந்தினைகாத்திடச் செப்புமென்றீரின்று (எந்)

வேடுவர்கள் சொல்

பல்லவி.

வருத்தமேனையா வள்ளி
மாதையனுப்புமென்றால் மெய்யா (வரு)

அநுபல்லவி.

விருத்தமாய்ப்போகும் விளைந்திட்டசெந்தினை
மெல்லியைக்காவென்று சொல்வதிலேத்தனை (வரு)

நம்பிராஜன் சொல்

சரணம்.

புனத்தைக்காத்திட அம்மாடீ
போய்வாவென்றுமே யுரைத்திட
வனத்திலொண்டியாக மாதயிருப்பாளோ
மைந்தரேவெய்யிலின் வாதைசகிப்பாளோ (வரு)

எங்களுக்கையா — பய
னில்லையிதனாலே — துய்யா
தங்கைதினைக்கதிர் — தன்னைப்பாராவிட்டால்
சற்குணனேபக்ஷி — ஜாதிகொய்துகெட்டால் (வரு)

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்காள் எனது அருமைப்புதல்வியைத் தினைக்கதிரைக் காத்து இருக்கும்படி யனுப்பிவைத்தால் இந்தப்பூமியி லுள்ளவர்கள் நம்மைத் தூஷிசெய்ய நேரிடும் தவிரவும் வனத்திலே ஒண்டியாக எவ்விதமிருப்பாள் இதுபரியந்தம் வெளியிலே சென்றிருக்க மாட்டாளே எவ்விதமாக அனுப்புவேன் மைந்தர்களே உரைப்பீர்கள்.

வேடுவர்கள் வசனம்.

தந்தையே இத்தனைநாள் வரைக்கும் நாங்கள் வருத்தப்பட்டது வீணாகப் போய்விடுமே புஞ்சையிலுள்ள கதிர்களைப் பக்ஷிஜாதிகள் கொய்துகொண்டு போய்விடுமே இனிவேறு யாரைக்காவல் செய்திருக்கச் செப்புகின்றது வள்ளியம்மை காவல்செய்தாலென்ன நம்குலத்திற்கு யிழிவாகுமோ தாங்க ளனுப்பாத விஷயத்தி லெங்களுக்குத்தானென்ன சித்தம்போலச் செய்வீர்கள் ப்ரபோ.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்காள் உங்கள் மனம்போல வள்ளியம்மையை யனுப்புகின்றேன் அடிக்கடி நீங்கள் வனத்திற்குச்சென்று தங்கையைப் பார்க்க வேண்டும்.

வேடுவர்கள் வசனம்.

பிதா வள்ளியம்மையோடு சேடிகளை யனுப்பிக் காவல்செய்யும்படியாகத் தெரிவிப்பீர் அடிக்கடி நாங்களுஞ் சென்று பார்த்து வருகின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்காள் அவ்வண்ணமே செய்கின்றேன் உங்கள் மாதாவை யழைத்து வருவீர்கள்.

வேடுவர்கள் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றோம்.

ஷை வசனம்.

அம்மணி வந்தனஞ் செய்கின்றோம் தந்தை அழைத்து வரும்படி தெரிவித்தார்.

நங்கைமோகினி வசனம்.

மைந்தரே வாருங்கள் செல்வோம்.

வேடுவர்கள் வசனம்.

அப்படியே வருகின்றோந் தாயே.

நங்கைமோகினி வசனம்.

பிராணபதி யென்னை யழைத்தகாரணம் யாது புகல்வீர்.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

செந்திருபோன் றம்மானே செப்புவேன்குயிலேகேளாய்
மைந்தர்கள்வனத்திற்றனே வள்ளிநாயகியாடன்னைச்
செந்தினைகதிரையேகாத் திருந்திடப்புகன்றாரின்றே
எந்தன்முன்னேயன்பாயுன் னெண்ணத்தையோதுவாயே.

வசனம்.

என தாசைக்கிசைந்த கண்மணி மைந்தர்கள் வள்ளிநாயகியை வனத்திற்கனுப்பிச் செந்தினைக்கதிரைப் பக்ஷிகள் பந்தி பந்தியாக வந்து கொய்துகொண்டு செல்லாது காவல் செய்யும்படி என்னிடந் தெரிவித்தார்கள் யானனுப்புகிறேனென்று புகன்றேன் உன்னுடைய எண்ணத்தைத் தெரிவிப்பாய் காதலி.

நங்கைமோகினி சொல்

விருத்தம்.

இத்தலந்தனிலேகீர்த்தி எய்திடும்வேந்தேகேளீர்
புத்திரருரைபோல்நாமே புள்ளிமானீன்றெடுத்த
உத்தமிவள்ளிமாதை யொண்டியாய்த்தினையைக்காக்க
வைத்திடஞாயமாமோ மன்னனேவழுத்துவீரே.

வசனம்.

பிராணபதி மைந்தர்கள் வார்த்தையின்படி புள்ளிமானீன்றெடுத்த நமது அருமைக் கண்மணியாகிய வள்ளிநாயகியை செந்தினைக்கதிரைக்காக்க ஒண்டியாக அனுப்புதல் ஞாயமாகுமா அவளுக்குச் சூரியன் இன்னவிதமாயிருப்பானென்று தெரியவாதே ப்ரபோ.

## வேடுவர்கள் சொல்

### விருத்தம்.

அன்னையேபாங்கிமாரே டருமைக்கண்மணியாளர்கே
கன்னிகைவள்ளிமாதைக் களிப்பொடிவணுப்பினுலே
சின்னமோபெருமைபோமோ தினைக்கதிர்காத்திட்டாலே
என்னமோவெண்ணுகின்றீ ரினியொன்றும்புகன்றிடேமே.

### வசனம்.

அன்னையே பாங்கிமார்களோடு எங்கள் தங்கையாகிய வள்ளி நாயகியை நீங்கள் சிந்தை மகிழ்ந்து விடைகொடுத்து அனுப்பினு லுங்களுக்குச் சின்னமோ அல்லது பெருமைபோகுமோ எங்களாற் காவல்செய்ய முடியாது அனுப்பினுலென்ன அனுப்பாவிடிலென்ன இனிமேல் நாங்களொன்றும் பேசவில்லை தங்களுடைய மனம்போலச் செய்வீர்கள்.

## நங்கைமோகினி சொல்

### விருத்தம்.

மன்னிடபுதல்வரகேளீ ரிவ்விதமியம்பலாமோ
நன்னயமாகவள்ளி நாயகியாளும்பாங்கி
தன்னொடுகூடிக்கானிற் றனித்திருப்பாளோகூறுஞ்
சின்னமுமிலையாயுங்கள் சித்தம்போலனுப்புவோமே.

### வசனம்.

கண்மணிகளே என்மீது கோபஞ்செய்ய வேண்டாம் வள்ளி நாயகி பாங்கிமாரோடு ஒண்டியாக விருப்பாளோவென்று கூறினேனேயல்லாது வேறல்ல அனுப்பினாற் சின்னமாகாது பெருமையும்போகாது உங்கள் மனதின்படி பெண்ணரசியை யனுப்புகின்றோம் புதல்வர்காள்.

## வேடுவர்கள் சொல்

### விருத்தம்.

தங்கையைவனத்திலம்மா தனிமையாய்விடுத்தேகூடி
இங்குமேநாங்கள்சும்மா இருந்திடுவோமோதேசார்
மங்கையாள்வள்ளிதன்னை மனமகிழ்ந்தனுப்புவீரே
சங்கையில்லாதபக்ஷி தான்கதிர்கொய்யுதின்றே.

### வசனம்.

அன்னையே எங்கள் அருமைத் தங்கையாகிய வள்ளி நாயகியைப் பாங்கிமாரோடு தினைக்கதிர் காத்திருக்கும்படி வனத்திற்கு அனுப்பி நாங்கள் இங்கு வீற்றிருப்போமா அடிக்கடிசென்று பார்த்துவருகின்றோம் பக்ஷிகள்பந்திபந்தியாகவந்து கதிர்களைக்கொய்து கொண்டு போகின்றபடியால் இன்று மனமகிழ்ந்து அனுப்புவீர்கள்.

### நங்கைமோகினிசொல் வசனம்.

மைந்தர்களே தங்கள் மனம்போல அனுப்புகின்றேன் வேறு யோசிக்கவேண்டாம் புதல்வர்காள்.

### நங்கைமோகினி சொல்

### விருத்தம்.

திக்கிலுள்ளோர்கள்போற்றுஞ் செம்மலேபுகலக்கேளீர்
அக்கரையுடனேமைந்த ரனைந்திட்டபடியேநாதா
தக்கதோர்பயிரைப்பக்ஷி ஜாதிகொய்திடுவதாலே
இக்கணந்தனில்வள்ளி யேகவேவிடையீவீரே.

### வசனம்.

அஷ்ட திக்கிலுள்ளவர்கள் போற்றுகின்ற வேந்தனே மைந்தர்கள் மனதின்படி பக்ஷிகள்வந்து தினைக்கதிரைக் கொய்துகொண்டு போகின்றபடியால் நமது அருமைப் புதல்வியாகிய வள்ளி நாயகியைப் பாங்கியரோடு வனத்திற்கு அனுப்பிவைப்பீர்கள் நாதா.

### நம்பிராஜன் சொல்

### விருத்தம்.

மின்னிடையுடையபெண்ணே மேதையார்க்கிலங்குகின்ற
அன்னமேயெனக்குவாய்த்த ஆசைநாயகியேகேளாய்
கன்னிகைவள்ளிமாதைக் கானகந்தனிலேபாங்கி
தன்னொடுமகிழ்ந்துமேவித் தருணமேயனுப்புவேனே.

### வசனம்.

எனதாசைக்கிசைந்த கண்மணி உன்னுடைய மனம்போலும் புத்திரர்களுடைய கருத்தின்படி நமது அருமைக் கண்மணியாகிய வள்ளிநாயகியைச் சேடியரோடு தினைக்கதிரைக் காத்திருக்கும்படி விடையளித்து அனுப்புகின்றேன் சிந்தை மகிழ்வீர்கள்.

கங்கைமோகினி வசனம்.

நாதா அவ்வண்ணமே செய்வீர்கள்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணிகாள் வள்ளிநாயகியை யழைத்து வருவீர்கள்.

வேடுவர்கள் வசனம்.

தந்தையே வேகமாக அழைத்து வருகின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

செல்லுவீர்கள் பாலர்காள்.

வேடுவர்கள் வசனம்.

ஓஹோ பாங்கிமார்களே இத்தருணம் நீங்கள்சென்று தங்கையை யிங்கு அழைத்து வருவாய்.

பாங்கிமார் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன்.

## வள்ளியம்மை சபை.

ஒருநாள் மருவிய சரசவிலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

முருகா குகா சண்முகா கருணை செய்மான்மருகா
முத்திகொடுக்கும் முதலே (முரு)

அநுபல்லவி.

ஸ்ரீமுகவன் சோதரா கார்த்திகேயா குமரா
கந்தா மயூரமேறி எந்தன்றனையே கோரி (முரு)

சரணங்கள்.

திங்கடனை முடித்து தில்லைதனில்நடித்து
கங்கைதனைத்தரித்து கரிதனையேயுரித்து
பொங்கர வணிந்த
துங்கமே மிகுந்த
சங்கரன் பாலனே
செங்கதிர் வேலனே



சத்திவேல்கரமே வைத்தேமாவசுர
பத்மனுயிரை வதைத்ததேசிகனே

சந்தத முந்தனை
வந்தனை செய்திடு
மெந்தன்முன் வந்துநி
னைந்தவரந் தரும் (முரு)

அண்டர்துயர்களைந்தாய் அருணகிரிமுன்வந்தாய்
தொண்டர்கமுரைந்தாய் சுருதிதனில்நிறைந்தாய்

அண்டம் நிறைந்தனை
யனுவி லிருந்தனை
எண்டிசை யோர்புகழ்
கின்றவொய் யாரனே

எத்தனைதாமு னைத்தொழுதபேச்சி
முத்தின்மீதுதவை வைத்திடாமலுமே

ஏது பராமுகம்
வாதுகள் செய்வது
நீதிக ளாகுமோ
ஜோதனையோ யிது (முரு)

வசனம்.

மூன்றும்பிறைச் சந்திரனையும் திங்களையுங் கொன்றையுந் தரித்த ஜெகதீசனாகிய சிவபெருமான் திருமகனான சிவசுப்பிரமணியக் கடவுளே அடியாளை இரட்சிப்பாய்.

பாங்கி வசனம்.

அம்மணி வந்தனஞ் செய்கின்றேன்.

வள்ளியம்மை வசனம்.

கல்யாண் யாதுகாரணம் புகல்வீர்.

பாங்கி வசனம்.

அம்மணி தங்க ளண்ணன்மார்கள் ஏழு பெயர்களு மிங்கு வந்து தங்களை யழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார்கள்.

வள்ளியம்மை வசனம்.

செல்லுவோம் என்னோடு வருவாய்.

பாங்கி வசனம்.

அம்மணி ஏகுவோம் வாரும்.

வள்ளியம்மை வசனம்.

அண்ணமாரே வந்தனஞ் செய்கின்றேன்.

வேடுவர்கள் வசனம்.

கல்யாண் தங்கையே.

வள்ளியம்மை வசனம்.

அண்ணா என்னை யழைத்தகாரணம் யாது தெரிவிப்பீர்.

வேடுவர்கள் சொல்

விருத்தம்.

சுந்தரம்வாய்ந்தமானே தோகையேகுயிலேயேனாய்
சிந்தையேமகிழ்ந்தேயுண்மை தெரிவிப்போமின்றுதானே
தந்தைதாயானோரிந்தத் தருணமேவிரைவதாக
உந்தனையழைத்துவாவென் றோதினாரிங்குற்றோமே.

வசனம்.

எங்க ளருமைத் தங்கையாகிய வள்ளிநாயகியே தந்தையுந் தாயும் அதிவேகமாக அழைத்து வரும்படி எங்களிடக் தெரிவித்தார்கள் நாங்க ளிங்குவந்து உனக்குத் தெரிவித்தோம் செல்லுவோம் வாராய்.

வள்ளியம்மை வசனம்.

அண்ணா செல்லுவோம் வாருங்கள்.

வேடுவர்கள் வசனம்.

வாராய் தங்கையே.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

தந்தையேபோற்றிபோற்றி சற்குணமிகுந்தாய்போற்றி
சிந்தையேமகிழ்ந்துதானே தெரிவிக்கும்வார்த்தைகேளீர்
இந்தவேளையிலேநாதா யிங்குமேவிரைவதாக
என்னையழைத்தசெய்தி இன்னதென் றுரைசெய்வீரே.

வசனம்.

தந்தையே வந்தனஞ் செய்கின்றேன் யான் அந்தப்புரத்திற் பாங்கிமாரோடு விளையாடிக்கொண்டிருக்குங்கால் தாங்க ளதிசீக்கிர

மாக அழைத்ததாக அன்னர்கள் வந்து தெரிவித்தார்கள் அதி வேகமாக யிங்குவந்தேன் அழைத்தகாரணம் இன்னதென்று புகல் விர்கள் தந்தையே.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

அன்னங்கள்கிளிகள்காக்கை அழகியகுயில்கள்காடை
நன்னயமாகமானே நாடிச்செந்தினைக்கதிர்க
டன்னையேகொய்வதாலித் தருணமேபாங்கியோடு
கன்னியேசென்றுகாவல் களிப்பொடுசெய்குவாயே.

வசனம்.

கண்மணி அன்னங்கள் குயில்கள் மயில்கள் காடைகள் புடப் புராக்கள் மணிப்புறாக்கள் பந்தி பந்தியாகவந்து நாமிட்ட தினைக் கதிர்களைக் கொய்துகொண்டு செல்லுகின்றது அப்பக்ஷிகளை கதி ரைக் கொய்யாது பாங்கிமாரோடு சென்று காவல்புரிவாய் கண் மணி.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

ஐயனே புகலக்கேளீ ராக்ஞையின் படியேதானே
மெய்யனே பாங்கியோடிவ் வேளையிலேகிறானே
துய்யனேகதிரையேவஞ் சுகங்கள்கொய்யாதுகாப்பேன்
வையகம்புகழுகின்ற மன்னனேவிடையீவீரே.

வசனம்.

இப்பிரபஞ்சத்தின் மீதுள்ளவர்கள் போற்றிசெய்யுந் தந்தை யே தங்க ளாக்ஞையின்படி சேடிகளோடு தினைப்புனஞ்சென்று கதிரைப் பக்ஷிஜாதிகள் பந்திபந்தியாக வந்து கொய்யாதிருக்கும்படி யான் காவல் செய்கின்றேன் மனதுமகிழ்ந்து அடியாள் சென்று வருகின்றேன் விடைகொடுத் தனுப்புவீர்கள் ப்ரபோ.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

இத்ததிபுதல்வாகேளீ ரேகுவீரொன்றுகூடிப்
பத்தினிவள்ளியாட்குப் பரண்கட்டிக்கொடுத்தேவேண
புத்திகள்புகன்றுநீங்கள் புனத்தனிற்சேடியோடு
வைத்துவேகமதாயோடி வந்திடுமிங்குதானே.

வசனம்.

கண்மணிகாள் நீங்களெல்லோருஞ் சென்று தங்கையாகிய வள்ளி நாயகியும் பாங்கிமார்களும் இருக்கும்படிக்காக ஒரு பரண் கட்டிக்கொடுத்து விலங்கினங்களுள்ள காட்டிற் பயமில்லா திருக்கும்பொருட்டு வேண்டிய புத்திமதிகள் கூறி அதிகவேகமாக இங்கு வந்து சேர்வீர்கள் பாலர்காள்.

வேடுவர்கள் சொல்

விருத்தம்.

தொல்லுலகோர்கொண்டாடுஞ் சமுகனேகூறக்கேண்மின்
வல்லவாயாங்கள்சென்றே வள்ளியாள்புனத்தைக்காக்க
நல்லதோர்பரணமைத்தே நன்மனமகிழவிய்ந்தே
மெல்லியாடனக்கேபுத்தி விளம்பியேவருகின்றேமே.

வசனம்.

பிதா தங்களுடைய ஆக்ஞைபின்படி வள்ளி நாயகியோடு நாங்கள் சென்று தங்கையும் பாங்கிமாரும் இருக்கும்படியாக ஓர் பரணமைத்துக் கொடுத்து வேண்டிய புத்திமதிகள் புகன்று தங்கள் சமுகம் வருகின்றோந் தந்தையே.

நம்பிராஜன் வசனம்.

அவ்வண்ணமே செல்வீர்கள் பாலர்காள்.

வேடுவர்கள் வசனம்.

தந்தையே வந்தனஞ் செய்கின்றோம்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் புதல்வர்காள்.

வள்ளியம்மை வசனம்.

பிதா சென்று வருகின்றோம் வந்தனஞ் செய்கின்றேன்.

நம்பிராஜன் வசனம்.

கல்யாண் பாலகி வேலவர்கிருபையாற்சுகமாகச்சென்றுவருவாய்.

வள்ளியம்மை வசனம்.

அன்னையே வந்தனஞ் செய்கின்றேன்.

நங்கைமோகினி வசனம்.

கண்மணி சுகமாய் சென்று வருவாய்.

வள்ளியம்மை வசனம்.

அண்ணமார்களே செல்வோம் வாருங்கள்.

வேடுவர்கள் வசனம்.

தங்கையே செல்வோம் வருவாய்.

## வள்ளியம்மை தினைப்புனங்காக்கும் பாகம்.

வேடுவர்கள் சொல்

விருத்தம்.

தங்கையேசேடியோடு தனிமையாய்வீற்றிருக்கச்
செங்கதிர்கிரணமேயுன் றேகமீதுறையாதம்மா
இங்குமோர்பரணியற்றி ஈய்ந்தனமனமகிழ்ந்தே
எங்களுக்கன்பதாக வுத்திரவிடையீவாயே.

வசனம்.

அம்மணி வள்ளி நாயகியே நீ சேடிமாரோடு வீற்றிருக்கவும் சூரியன் கிரண வெய்யிலுன் றிரேகமீது படாமலிருக்கும் படியாக ஒருபரண் அதிக உன்னதமாக அமைத்துக்கொடுத்தேன் இப்பரண் மீதிருந்து பக்ஷிஜாதிகள் தினைக்கதிரைக் கொய்யாதபடி காவல் செய்திருப்பாய் எங்களுக்கு விடையீய்ந்திடுவாய் சென்று வருகின்றோந் தாயே.

வள்ளியம்மை வசனம்.

அண்ணா பாங்கிமாரோடு நான் றனிமையாயிருக்கின்றபடியால் தாங்க ளடிக்கடி யிங்குவந்து செல்லும்படியாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வேடுவர் வசனம்.

தங்கையே அடிக்கடி யிங்குவந்து உன்னைப்பார்த்துச் செல்கின்றோம் விடைகொடுப்பாய்.

வள்ளியம்மை வசனம்.

அண்ணமார்களே சென்று வாருங்கள் வீர்தனம்.

வேடுவர்கள் வசனம்.

கல்யாண் வள்ளியம்மா சென்று வருகின்றோம்.

வள்ளியம்மை வசனம்.

பாங்கிமாரே வாருங்கள் பரண்மீது நாம் வீற்றிருந்து பக்ஷி ஜாதிகள் பந்தி பந்தியாகவந்து கதிர்களைக் கொய்துகொண்டு செல்லாது காவல் புரிகுவோம்.

பாங்கிமார் வசனம்.

அம்மணி அவ்வண்ணமே செய்வோம்.

# வள்ளியம்மைபக்ஷிகளை விரட்டும்பாகம்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

அன்னநடை மின்னலெட்டப் பாங்கிமாரே
அழகுடைய தூக்கணத்தான் கிள்ளைகாடை
உன்னதமாய்க்கூவுகின்ற குயில்பூஞ்சிட்டு
உயர்த்தவிண்ணிலேயுலவு மணிப்புறாக்கள்
நன்னயமாய்த்திணைக்கதிரைக் கொய்யவென்றே
நாடிவருகின்றதடி கும்புகும்பாய்க்
கன்னியரேயுங்கடிரு விழியாற்பாரீர்
கையிலுற்றகவணிலே விரட்டுவேனே.

ஆலோலம் ஆலோல மென்ற டிசாமபெட்டு.

இராகம்-பிலகிரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.


ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் ஆலோலம்.

அன்னங்களே மயிலினங்காள்
அழகுடைய குயிலினங்காள்
கன்னங்கருங் காகங்களே
காடைகவு தாரிகளே (சோ) (ஆலோ)

கானகச்செம் போத்தினங்காள்
கருக்குருவி வாத்தினங்காள்
மானினமே மரையினமே
மாடப்புறாச் சிட்டினமே (சோ) (ஆலோ)

பஞ்சவர்ணக் கிளியினங்காள்
பலவர்ணப் புள்ளினங்காள்
அஞ்சியோடும் அண்டில்களா
அழகுடைய பக்ஷிகளா (சோ) (ஆலோ)

சொர்ணநிறத் தூக்கணமே
தங்கமுள்ள கொக்கினமே
வர்ணநிறப் பூவைகளா
மணிப்புறா நாரைகளா (சோ) (ஆலோ)



வசனம்.

அடி பாங்கிமார்களே பந்தி பந்தியாகத் தினைக்கதிர் கொய்ய வந்த பக்ஷிஜாதிகளை என்கையிலுற்ற கவணால் வீசிட கவணிருந்து கல் வெளியேறி பக்ஷிகள் மீது பட்டவுடனே எப்பக்கம் போனதென்று தெரியவில்லை சகி பார்த்தீர்களா.

பாங்கிமார் வசனம்.

அம்மணி தங்களுடைய வல்லபத்தை என்ன தெரிவிக்கப் போகின்றோம் மாது ஸ்திரி.

வள்ளியம்மை வசனம்.

பாங்கிமாரே இதோ புள்ளிமான் மரைகள் வேங்கைகள் புலிகள் தினைக்கதிரை மேய்ந்துகொண்டிருக்கின்ற உன்னிதத்தைப் பார்த்தினையா யிதற்கென் செய்வோம்.

பாங்கிமார் வசனம்.

அம்மணி இம்மிருகங்களை கவணிற்கல் வைத்துச் சுழட்டி எறிகுவீர் விலங்குகளோடிவிடும்.

வள்ளியம்மை வசனம்.

சகி அவ்வண்ணமே செய்கின்றேன்.

ஷ்டி வசனம்.

அடி பாங்கிமார்களே நீங்கள் தெரிவித்தபடி கவணிற்கல் வைத்துச் சுழட்டி மிருகங்களின்மீது எறிந்தவுடனே ஓடுகின்ற விந்தையைப் பார்த்தனையா சகி

பாங்கிமார் வசனம்.

அம்மணி தங்களுடைய கரவேகத்தை என் சொல்வோம்.

வள்ளியம்மை வசனம்.

அடி பாங்கிமார்களே யான் பரண்மீது வீற்றிருக்கின்றேன் நீங்கள் தினைப்புனத்தைச் சுற்றி வருவீர்கள்.

பாங்கிமார் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றோம்.

# நாரதமுனிவர் ப்ரவேசம்.

சுத்தப்ரம்ம என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

திங்களணிந்திடு சங்கரனே
பொங்கரவணி கெங்காதரனே
திரிபுரதகனனே மாதீதா
அரியயனும்பணியும் பாதா
மன்றினிலேநட மாடியவா
கொன்றையதனைமுடி சூடியவா
வரைமகடனை மருவிய துய்யா
நரியைப்பரியாக்கிய மெய்யா
மான்மழுதன்னை யணிந்தவனே
தேன்மொழியுமையை மணந்தவனே

வசனம்.

நானே காலையிலெழுந்து திரிகால ஸ்நானங்களோடு சந்தியா வந்தன சட்கருமங்களை முடித்துச் செங்கரத்தில் உக-நரம்புகளுங் கூடிய பேரிகை யாழியைத்தரித்துச் சிவபிரானது சகஸ்திர நாமங்களையும் பஜித்துக்கொண்டு கயிலையங்கிரியேகி ஆங்கு பகர வொண்ணுத பர்வதராஜபுத்திரியை வாமபாகத்தில்வைத்த பரமசிவனு லாசி கூறப்பெற்றுப் பின்னர் வைகுண்டஞ்சென்று ஸ்ரீமந் நாராயணரா லாசி கூறப்பெற்றுப் பின்பு சத்தியலோகஞ்சென்று யெனது பிதாவாகிய நான்முகனை க்கண்டு தெரிசித்து இன்று யேதாவதொரு கலகஞ் செய்யவேண்டுமென வெண்ணி அதல விதல சுதலவென்று சொல்லக்கூடிய பாதாள லோகங்களும் மகா லோகமுதலிய மேலுலகங்களுஞ் சென்றேன் இன்று ஒருவித கலகமும் ஏற்படவில்லையே இனியென் செய்வோம் எவ்வுலகத்திற் சென்று கலகம் விளைப்போம் ஒன்றுந் தோன்றவில்லை நாம் செல்லாத வுலகம் வேறு இருக்கின்றதா வெனக் கவனிக்கின்றேன்:—ஆகா மண்ணுலகந் தான் நாம் செல்லவில்லை ஆங்கு சென்று எவ்விதமாவது ஒரு கலகஞ் செய்கின்றேன் இங்கிருப்பதிற் பிரயோசன மொன்று மில்லை மண்ணுலகத்தை நாடிச் செல்கின்றேன்.



வசனம்.

ஆகா யீதென்ன ஆச்சர்யம் நாமிங்கு வந்தவுடன் கோடி சூரியப் பிரகாசம்போல வொளி தோன்றுகின்றதே அருகிற்சென்று பார்க்கின்றேன்.

வசனம்.

ஆகா ஓர் மாதானவள் பரண்மீதிருந்து பக்ஷிகளை விரட்டிக்கொண்டிருக்கின்றனள் இவளுடைய யெழிலை யெடுத்துரைக்கச் சேடனாலு முடியாது என்ன சிங்காரம் என்ன ஒய்யாரம் என்ன கெம்பீரம் இன்னு மருகிற்சென்று பார்க்கின்றேன்.

வாடிகிற்பது யேதுகாரணமோ என்ற வர்னமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்கையிவளின் னங்கமோ தங்கநிறம்-என்முன்
மடமயில்போலிலங்கும் (மங்)

அநுபல்லவி.

துங்கமேமிகுந்திடு மங்கஜனுங்கண்டாலே
தொண்டுபுரிந்திடுவான் றேகையிடந்தனிலே
கொங்கைசக்ரவாகமோ குவிந்திருப்பதினாலே
கொற்றவர்மயல்கொள்வார் குவலயந்தனிலே (மங்)

சரணங்கள்.

மாதுலெட்சுமியென்றே யோதிட —வரை
மகளுக்கிணை யிடலாம்
பூதலந்திலேயிப் பூவையைப்போலே
புரந்தரன்றேவி சரியாமோயிக்காலே
ஆதவனிடசுடர் படிவதினாலே
யமர்ந்தாள்சேடிகளோடு மகிழ்ந்துமேபரண்மேலே (மங்)

மின்னலிடையுள்ள அன்னநடைக்காரி-இங்கு
வீற்றிருக்குஞ் சிங்காரி
கன்னல்முக்கனிக்கிணை கழருமொழியுடையாள்
கயலைப்பழிக்குமிரு விழிதனையுடையாள்
உன்னதமாகியநற் பின்னற்சடையுடையாள்
உத்தமியாளிவளே பெருமைமிகவுடையாள் (மங்)

கந்தனுக்குகந்த சுந்தரமாது-இ
கன்னியைப்போற் கிடையாது
இந்தப்புவிமேலிவட்கிணை சொல்லமுடியாது
எழிலியடுத்துரைப்போ மென்றால்நாவுபோராது
மந்தஹாசமுடைய வனிதையிடமிப்போது
மகிழ்ந்துசென்றுவேலனை மணஞ்செய்வேன்றப்பாது(மூக்)

வசனம்.

ஆஹா யீதென்ன ஆச்சர்யம் மின்னலைப்பழித்த வொளியும் சூரியனை கெர்த்த ப்ரபையும் பார்க்க மன்மதனால் வரையப்பட்ட சித்திரமோ பொன் மயம்போன்ற தேகத்தை அமிர்தத்தினால் நான்முகன் வகுத்தனனோ இவ்வுலகின்கண் செனித்த மாதர்களின் அழகைவைத்துப் பூட்டிய பொக்கிஷமோ நீர்வளம் பொருந்திய சோலையிடத்தே வாசஞ்செய்யு மிளமைப்பருவம்போன்ற குயிலோ மோகத்தைக்கண்டு நடிக்கின்ற மயிலோ தாமரைப் புட்பத்திலுற்ற அன்னப்பேடையோ எழில்வாய்ந்த பஞ்சவர்ணக்கிளியோ வெண்டாமரை மலரிலுற்ற லெட்சுமியோ ப்ரமனுடனில்வசிக்குஞ் சரஸ்வதியோ அனங்கனுக்கு வாய்த்த ரதியோ அல்லது பூலோகத்திலுற்ற மடமங்கையோ அல்லதுமேலோகத்திலிருக்கு மிந்திராணியோ அல்லது கெந்தர்வஸ்திரீயோ சந்தோஷமாகப்பரண்மீதிருந்து ஆலோலமிட்டுப் பக்ஷிகளை விரட்டும்மாது இன்னாரெனத் தெரிந்திலேனே அருகிற்சென்று பாரென விசாரிக்கின்றேன்.

அதிபதிஜெகபதி நிதிபதியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-ஏகதாளம்.

கண்ணிகள்.

மதிமுகவதிகுண முடையாளே
வடிவுறுவனமினே நடையாளே
மாதரசேவர லாநினையேயினி
யோதிடுவாய்ததி காதலியே வெண்(மதி)

என்னகர்மன்னவ னுன்னெனந்தை
யேந்திழையேமகிழ்ந் தேசிந்தை
என்னிடமேவெகு நன்னயமாகவே
மின்னிடையாகிய கன்னிகையே சொல்(மதி)

தாய்தன்திரு நாமம்யாது
தார்குழலுன்பெயர் தனையோது
தாரணிமீதினி லேயெவரும்புகழ்
காரிகையுன்னிட நாவினுமெலென்னிடம்(மதி)

வசனம்.

அம்மா தாங்களார் உன்னுடைய தாய்தந்தையர் திருநாமம் யாது வசிக்கும் நகரின்பெயர் யாது மனமகிழ்ந்து வழுத்திடவா யம்மா.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

குடியிருக்கும்நகரஞ் சிற்றூராகும்
 குறவர்குலம்நாங்கள்நம்பி ராஜனெந்தை
வடிவுடையநங்கை மோகினியாளென்றாய்
 வள்ளியென்றேயுலகிலென்னை வழுத்துவார்கள்
கொடிசெடிகளடர்ந்தவனந் தனிலேமெய்யா
 குறுக்குவழியூடாகவந்த முனியேசன்
அடியவரேயுமதுதிரு நகரும்பேரு
 மகமகிழ்ந்தேயெனதுமுன்னே பகருவீரே.

வசனம்.

மாதவமுனிவரே நான் வசித்திருப்பது சிற்றூர் குறவர் குலம் தாயார் பெயர் நங்கைமோகினி தகப்பன் திருநாமம் நம்பிராஜன் என்னை வள்ளியம்மையென் றழைப்பார்கள் தெரிந்து கொள்வீர் தாங்களிந்த வனத்தில் ஒண்டியாகப் பாதையைத் தப்பவிட்டு வந்திரே தாங்களார் வசிப்பது யெவ்வுலகம் நாமதேயம் யாது தெரிவிப்பீர்.

நாரதர்சொல் விருத்தம்.

செம்பொன்னே மணியேவள்ளித் தேவியேசெப்பக்கேளாய்
நம்புவீர் யுண்மையுண்மை நாரதனென்றேயென்னை
அம்புவிமீதிலுள்ளோ ரழைத்திடுவாரேகண்டாய்
கும்பமாமுனியைப்பார்த்துக் கோதையேவருகின்றேனே.

வசனம்.

அம்மா வள்ளியம்மையே நான் வசிப்பது விண்ணுலகம் என் திருநாமம் நாரதரென்று தெரிவிப்பார்கள் அகஸ்திய மகாமுனிவரைப்பார்த்து இவ்வனத்தின் வழியாகவந் துன்னைக் கண்டேன் பெண் பாவாய்.

## வள்ளியம்மை நாரதரைப் பணிதல்.

கனகசபாபதி தெரிசன மென்ற வர்ணமெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதவமோருருவாகி யிலங்கிய
மாமுனிவே சரணம் (மாத)

அநுபல்லவி.

ஆதவனிடசுடர் படவெருண்டோடிய
அல்லெனவென்பவ வினையகன்றோட (மாத)

சரணங்கள்.

அரிவையான்செய்தகுற்ற மதனையேபொருப்பீ
ரகமகிழ்ந்தருள் கொடுப்பீர்
திரிலோகவாசியே தேவர்கள்நேசியே
தேஜோன்மயமாகிய சிவன்மேல்விஸ்வாசியே (மாத)

வசனம்.

ஐயா நாரதமகாமுனிவரே யான் செய்த குற்றத்தைப் பொருத்துக்கொள்வீர் நமஸ்கரிக்கின்றேன்.

நாரதர்சொல் வசனம்.

கல்யாண்.

ஷை விருத்தம்.

செந்திருபோலந்தழுள்ள மடமாதேயான்
செப்புகின்றவார்த்தையைநின் செவியாற்கேண்மின்
இந்தவனத்தனிற்பாங்கி மார்களோடு
இருப்பதென்ன மடமயிலே குயிலேயெந்தன்
சிந்தைமகிழ்ந்திடும்படியாய்ச் செவியாற்கேட்டுச்
சென்றிடுவேன்கழுகுமலை நாடித்தேனே
இந்திரகோபந்தனையே பழித்திலங்கு
மிதழுடையபெண்ணரசே யியம்புவாயே.

வசனம்.

அம்மா வள்ளிநாயகியே நீ சேடிமாரோடு இந்த வனத்தில் பரண் மீதிருக்கவேண்டிய காரணம் யாது தெரிவிப்பாய் யான்கேட்டுக்கொண்டு கழுகுமலைதனை நாடிச்செல்கின்றேன் பெண்பாவாய்.

வள்ளியம்மை சொல்

வசனம்.

எத்திசையும்புகழ்படைத்த முனியேகேளீ
ரெடுத்துரைப்பேனகமகிழ்ந்தே யின்றுநானே
சித்தஜனைநிகர்த்தபெக்கை நம்பிராஜன்
தீரணசூரரெந்த வண்ணமாரோ
உத்திரவுகொடுத்தனர்காண் சேடிமாரே
டும்பர்சிறைமீட்டகுக நாமம்பாடி
இத்தினையின்கதிர்கடனைக் கிளிகொய்யாம
லிந்தவனந்தனிநிபார்த்து யிருக்கின்றேனே.

வசனம்.

கேளீர் நாரதமகாமுனிவரே எனது பிதாமுதலியோர் தித்தினைக் கதிரைக் காத்திருக்கும்படியாகச் சேடிமாரோடு என்னை யனுப்பி வித்தனர் ஆனதா லிங்கிருக்கின்றேன் ப்ரபோ.

நாரதர்சொல் விருத்தம்.

அன்னம்வெட்கியிரண்டோடும் நடையினாளே
அரைந்திடுமென்வார்த்தைதனைக் கவனிப்பாயே
கன்னிகையேகவண்டூமட்டி யெறிந்தாயுன்றன்
கரம்நோகுமேசிவந்து குறவனான
சின்னமதியுடையநம்பி வேந்தனுன்னைத்
தினைக்கதிரைக்காத்திருக்கத் தெரிவித்தானோ
மின்னலிடைமாதரசே பயமில்லாது
விலங்குலவுவனந்தனிலே யிருக்கின்றாயே.

வசனம்.

அம்ம வள்ளிநாயகியே கொஞ்சமாவது யோசனை செய்யாது இந்த வனத்திலிருக்கும்படியாக ஆக்ஞாபித்தானே அந்த நம்பிராஜனுக்கும் மற்றவர்களுக்கும் புத்தியில்லை நீயாவது யானிந்தவேலை செய்ய மாட்டேனென்று தெரிவிக்கக் கூடாதா.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

மாதவமுனிவரேசே மனமிகமகிழ்ந்துகேளீ
ரோதுவேன்விலங்கினங்க ளொன்றுக்குமஞ்சிடேனுன்
ஜாதியோகுறவரென்றே சாற்றிடவேண்டாமையா
பூதலத்தோர்கள்போற்றும் பொய்சொலாப்புண்ணவானே.

வசியஜாலமெங்கட்கு ளகப்பட்டு என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-ஏகதாளம்.

பல்லவி.

மாதவமாமுனிவே ஓதிடுவேனே
மனமகிழுடன்றானே வல்லமைத்தானே (மாத)

அநுபல்லவி.

ஆதவனைப்பிடித்தே யம்புலிபோற்காட்டுவோம்,
அப்புவைவார்த்தேவேவை அக்கினியைமூட்டுவோம் (மாத)

சரணங்கள்.

புலியும்பசுவுமொரு துறைதனில்நீருருந்த
பூவையர்கள்செய்தே பார்த்திருப்போம்.
எலியைப்பூனைகளோடு சண்டைகள்செய்திட
ஏவிவிட்டேவேடிக்கை தன்னையேசெய்திருப்போம் (மாத)

உள்ளங்கைதனிலே வைகுந்தங்காட்டுவோம்
ஊமையன்வாய்திறந்து பேசமைதிட்டுவோம்
கள்ளமில்லாமலெங்குஞ் ஜெயக்கொடிநாட்டுவோம்
காலனையுஞ்சொந்த நகரைவிட்டோட்டுவோம் (மாத)

குமரிகடன்னையே குவலயமேலே
கூனக்கிளவிபோலச் செய்வோமையாலே
உமையவடனக்குமே குறிபுகல்வோம்காவாலே
யோதியபடிமுடிப் போமேயிக்காலே (மாத)

வசனம்.

ஐயா நாரதமகாமுனிவரே பசுவும் புலியும் ஒரு துறையில் நீருருந்தவும் வைகுந்தத்தை யுள்ளங்கையிலே காட்டவும் ஊமையன் வாய்திறந்துபேசவுஞ் செய்வோம் இந்தவிதமான தொழில்கள் கற்றவர்களென் யிந்தவனத்தி லிருக்கக்கூடாது தவிரவும் எங்கள் குலத்திற்குள்ள வழக்கந்தானே இனிமே லெந்தனிட தந்தையை யிகழ்ந்து பேசுவது சரியல்ல தாங்கள் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு செல்வீர்.

நாரதர்சொல் வசனம்.

ஆகா பெண்கொடியே யென்ன தெரிவித்தா யவ்விதம் நினைக்க வேண்டாம் யான் வந்த காரியந் தெரிவிக்கின்றேன் கவனமாய்க் கேட்க வேண்டும்.

நாரதர் சொல்

பட்டுவாருந்தன மென்ற வர்னமெட்டு.

இராகம்-தேசிகதோடி-ஏகதாளம்.

கண்ணிகள்.

அன்னமேதேனே யுன்னதமானே
அஞ்சுகமே நானே
மின்னிடையாளே நின்னயமாக
விளம்புவேன் மகிழ்வாக

கன்னியிக்காலே என்மனம்போலே
களிப்பொடு நடந்தாலே
இன்னிலமீதே சுகமடைவாயே
ஏந்திழையே நீயே

அந்தமுங்குணமும் பொருந்தியமாதே
அடியேன்சொல் மறுக்காதே
சந்த்ரவதன மந்தஹாசியே
சாற்றுவேன் மகராசியே

சூரபத்மாவைத் துணித்தசிங்காரன்
சூரனைமாமயில் வீரன்
தாரணிவேல்வன் சம்புவின்பாலன்
தாரணிபுகழ் சீலன்

கார்த்திகையைந்த ஞ்முருகேசனை
கழுகுமாமலை வேலனை
மார்க்கமாய்நீயே மணஞ்செய்துதாயே
மருவியே சுகிப்பாயே

வசனம்.

ஹே வள்ளிநாயகியே வழுத்துவதைக்கேள் யாதெனின் ஆயிரத்தெட்டு அண்டத்தையாண்ட சூரபத்மாவை மடித்தவன் தேவர்கட் கபயாஸ்தம் கொடுத்தவன், சிவபெருமானுக்குப் பிரணவ மந்திரத்தைப் போதித்தவன் அடியார்களுளத்தி லமர்ந்தவன் சர்வஜீவதயாபரன் திருக்கழுகாசலத்தில் வாழ்வோனான ஸ்ரீ சிவசுப்பிரமணியரைப் பாணிக்கிரகணஞ்செய்து சுகமாயிருப்பாய் என்ன தெரிவிக்கின்றாய்.

### வள்ளிசொல்

இஸ்கைபாரே ஜாகரப்பலுக்கர வென்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

### கண்ணிகள்.

வீண்வார்த்தைகள்நீர் கூறிடவேண்டாம் நாரதமுனியே இங்கு
வேகமாகவேயோடி வந்தாயிவ்வேட மேனேயினியே

போம்போம்முன்புமே நின்றுமேயிவ்வார் புகலுவதுஞ்சரியோ-எப்
போதுமென்னிடம் வாதுகள்நடவாது சதுநெறியோ

சீச்சீயுன்னிட பெருமைகளுமிவை செப்பிடவீணாச்சே-நல்ல
சேதியென்றுமே வேதவேமனத் திரமுமுண்டாச்சே

ஆச்சரியமான பேச்சுகள்பேசியகந்தைசெயவோவந்தாய்-நீதி
யாகுமோசொல்ல லாகுமோநீயே அஞ்சிடாதுமொழிந்தாய்

மார்க்கமாயுன்பதிநோக்கியேசெல்லுவீர்மாதவமாமுனியே-இன்று
மாதுமுன்புமேயோதினை லவமானம்வருமேயினியே

### வசனம்.

முனியே முன்சொன்னதற்கு மனஞ்சகித்துப் போய்வாருங்க ளென்று விடைகொடுத்தேன் பின்பு யெவனேயோ மணம்புரிந்து கொள்வாயென்றுதெரிவித்தீர் தங்களைப்போலொத்தவர்கள் இவ்வார்த்தைகூற ஞாயமா வந்தவழியேசென்றுவிடுவீர்.

### நாரதர்சொல்

### விருத்தம்.

வள்ளிமாதரசேகேளாய் மனந்தனிற்கோபம்வேண்டாம்
புள்ளிமாமயிலிலேறும் புனிதனைமணஞ்செய்வாயே
துள்ளிவந்தெனைத்துவேஷந் தோகையேபுகல்வதேனோ
வள்ளலின்பெருமைதன்னை வழுத்துவேனறிவாயம்மா.

முருகன் திருமால்மருகன்பெருமை என்றவர்ணமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ரூபகம்.

### பல்லவி.

முருகன்குமரன்குகன்றன்பெருமை சொல்வேன்
முத்திக்கேவித்தாய்முனைத்தோனறுமுக (முருகன்)

அநுபல்லவி.

மருகன் திருமாலோன் றனக்குமே
வையகம்புகழ்மெய்யன் வெகுதுய்யன் பன்னிருகையன் (முரு)

சரணங்கள்.

சூரபத்மாவைத் துணித்தசிங்காரன்நற்
றோகைமயில்வீரன் எழில்
வாரணமாமுகன் சோதரனுகுந்தெய்
வானைமகிழ் தீரன்
தாருகாசூரன்றனை வதைத்தவேலன்
சங்கரன்காம தகனனிடபாலன்
காருலவுங்கழு காசலம்வாழ்சீலன்
கர்த்தன்பரிசுத்தன்பல சித்தன்முனிநித்தம்பணி(முரு)

வேதன்றனைப்பிடித்தே சிறையிட்டவி
வேகன்பவநாசன் முடி
பாதிப்பிறைகெங்கை கொன்றையணிபசு
பதிக்குப தேசன்
பூதலத்தோர்களும் போற்றிசெயுமநதன்
பொன்னுலகோர்கட்கே சேனைபதிநாதன்
ஜோதிப்ரகாசனுங் கோகனகப்பாதன்
நாயன்கனிவாயன் வெகுநேயன்றெரிவாயன்புல(முரு)

கும்பமுனிவருக் கேகுருவாகிய
கோழிக்கொடியுடையான் சதா
நம்புமடியா ருளத்தில்வாழும்பல
நாமமேதுய முடையான்
சம்ரமமாய்ப்படை வீரைகெம்பீரன்
சல்லாபலீலாவினோதனை மெய்யாரன்
கொம்பனையேகுற மானேமகாசூரன்
கோதேம்படமாதேபுகலாதே தடைவாதேனினி(முரு)

வசனம்.

பெண்பாவாய் கேள் பிரமதேவனைப் பிடித்துச் சிறையிலிட்டவன் அகஸ்திய முனிவருக்குக் குருவானவன் கோழிக்கொடியையுடையவன் ஆறுமுகமும் பனிரெண்டு கையையுடையவன் மயில்மீ

திலேருவோன் பலஃகாமதேயத்தையுடையவன் தெய்வயானைகொழு ணன் மகாகீர்த்தியுடையவனான சிவசுப்பிரமணியரை மணம்புரிந்து கொள்வாய் வேறுதடைசொல்லாதேயம்மா.

வள்ளியம்மைசொல்

போம்போமிதுவுங்கனமாயெனக்குப்புத்தி என்றவர்னமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

போம்போம்காரதமுனியே குகன்றனையே
புகழ்ந்துசொல்லாதேயினியே. (போம்)

அநுபல்லவி.

வீம்புசெய்யவேயதி வேகமாய்வந்தாய்கெட்டி
மிரட்டிக்கண்ணையுருட்டி விழித்துப்பார்ப்பதேன்மட்டி (போம்)

சரணங்கள்.

நக்கன்சுதனைப்பெரிதா யிக்கணந்தனிலுரைத்தாய்
முக்கியமவனேயுனக்கு நலமுடைய
பக்குவப்பெண்ணேகுமரன் நக்கவன்மணாளனெனப்
பகரவந்தாயேயெனக்கு ஒருவேடுவன்
கக்கிக்கொடுத்தயெச்சிக் கரியையுண்டானே
கபாலவோட்டிலேபிச்சை வாங்கித்தின்றானே
வெட்கமில்லாதுவெளி யேறிச்சென்றானே
விடத்தையனமில்லாது குடித்தவன்மகன்றானே (போ)

பித்துமேபிடித்துமே ஈமத்தினிலேயொண்டியாகப்
பேயோடாடியேதிரிந்தான் பிட்டுக்காமண்ணை
வைத்தேசிரத்தேந்தி யுடைத்தபக்கங்கொட்டாதடி
வாங்கிப்புலம்பிமரைந்தான் வாலிபன்மூத்த
புத்திரனுக்கேதிரு மணம்புரியாது
பொருள்களுக்தேடிட வகைதெரியாது
சித்தமெலிந்தான்வேறு திரவியமேது
சின்னமடைந்தோன்மகனை யென்னிடந்தனிலேப்போது (போ)

கட்டவேகந்தையுமொன்று கிட்டாமலேபுலித்தோலைச்
சட்டமுடனேதரித்தான் கல்லாலெரியும்
பட்டுச்செறுப்பானதையும் பட்டுத்தினந்தினம்மானம்
கெட்டுப்போயிருந்தரித்தான் பக்மாசூரனால்த்

தட்டுக்கெட்டுத்தடு   மாறிப்போயொழிந்தானே
தங்கப்பணியில்லாது   தாம்பணிந்தானே
கட்டுவிரகைவிற்க   வேசுமந்தானே
கடையன்விடையன்சேயன்   இடையன்மருகன்றானே (போ)

வசனம்.

கேளும் முனியே வேலவனை வெகு மேன்மையாகத் தெரிவித்திர் யானுரைக்கும் வார்த்தையைக் கேளீர் யாதெனின் வேடுவனுடைய பெச்சிலையுண்டும் கல்லாலெறியுஞ் செருப்பினு லுதைவாங்கியும் உண்ணுகின்றதற் கன்னமங் கிடையாது விடத்தை யுண்டும் கபாலவோட்டிலே பிச்சைவாங்கித் தின்றும் இடையிற் கட்டுகிறதற் கோர் வஸ்திரமில்லாது புலியாடை பூண்டும் பிட்டுக்காசைப்பட்டு பிரம்பாலடிபெற்றும் சுமத்திற் பேயோடாடித்திரிந்தும் நற்பணிகளில்லாது நாகத்தை யணிந்தும் சாண்வயற்றிற் கிரைதேடும் பொருட்டு விறகு விற்றும் காலக்ஷேபஞ் செய்த சிவனுடைய மகன்றானே அல்லது வேறே தெரியவில்லை யுன்னுடைய புத்தியைப் பார்க்கில் மட்டியாய்த் தோன்று கின்றது என் முன்னில்லா துன்னிருப் பிடத்தைத் தேடிச் செல்வாய்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

சடைதனையோர்பாகம்வரைவளர்த்துமேமா
   தவமுனியென்றேபெயரைத்தரித்துவினே
மடையனே நீயஞ்சாதிவ்வனத்தில்வந்தே
   வாதுபுரிந்தாயுனக்குமார்க்கந்தானு
விடையவன்றனிடமகனைக்குகனைத்தானே
   மெல்லிகையேமனதுகந்துமணராயென்றே
இடையனிடமருகனையேபுகழ்ந்துமேயென்
   னிடமுரைத்தாயினிச்சகியேனேகுவாயே.

வசனம்.

ஓய் முனியே சடைதனை யொரு பாகம் வரை வளர்த்து மகா தவமுனி நாரத ரென்று பெயர் தரித்து கொஞ்சமாவது நெஞ்சஞ் சாம லுரைத்தீரே யினிமேற்றாளேன் சென்று விடுவாய்.

### நாரதர் சொல்

### விருத்தம்.

பின்வருங்காரியந்தன்னையேமுன்னேநின்றே
பேசினதினாலேபலவாறும்த்தானே
என்னைவசைகூறினதினாலேதோஷ
மில்லையரன்மகன்றன்னையேயிகழ்ந்தாய்வள்ளி
நின்னுடையகுலகலைமையறிந்திலேனு
னைத்தபடிமுடிப்பேனென்றறிந்திலாயோ
கன்னிகையேகாடிகஞ்சிகூழுக்கேதான்
கைபார்த்துக்குறிபுகலுவைகுறத்திதானே.

தேனம்பிகாதேவியென்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-ஏகதாளம்.

### கண்ணிகள்.

வீணேயிகழ்ந்தாயே வடி வேலன்றன்னையேநீயே
காணுவாய்பின்வருகும்விதி கன்னிகையாளேயித்ததி (வீணே)

உன்னைப்பெரிதாக வெண்ணி யோதினேனுயன்பாக
என்னைப்பலவாறுபேசி இழுக்குரைத்தாயேசிசி (வீணே)

கஞ்சிபழங்காடி தெருக் களிலேயலைந்தேயோடி
கெஞ்சிக்கெஞ்சிவாங்குவது கேவலமாகாதோயிது (வீணே)

உங்கள்குலந்தானே வெகு உயர்வாகுமோதோணேனே
மங்கையரையொத்திவைத்து வாங்குவார்பொன்னிதைவிடுத்து (வீ)

சித்தமகிழ்வாயே வள்ளித் தேவியென்றாயாவாயே
அத்தனுடையமகனை யணைந்திடுவாய்குகனை (வீணே)

### வசனம்.

ஆகாவெகுநிந்தையாயுரைத்தனை உங்கள்குலத்தில் பசியினாற் றெருவெல்லாமலைந்து கைக்குறிபார்த்து அன்னவர் வார்த்த கூழை யுண்டும் கையிற் பொருளில்லாவிட்டால் தங்களிடமாமிகை ஒத்தி வைத்துப் பொன்னைவாங்கியும் நாயருந்தாத விலங்கினங்களைக்கொன்று தின்னுஞ் ஜாதியல்லவா யெனக்குத் தெரியாதென்றுரைத்தனையோ செங்கை வடிவேலவனை யிகழ்ந்துரைத்தனையே உன்னுடைய பெருமைக்கன்னவர் பெருமைகுன்றிப் போனதா யானுன்னைக்குக

னுக்கு விவாகஞ்செய்து வைப்பேனென்று தெரியவில்லையா என்னுடைய திறத்தைக் கொஞ்சநாளிற்காட்டுகின்றேன்.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஓய்முனியே வுனக்கவமானமில்லையா. புத்தியில்லையா நினைத்தபடியே பேசுகின்றாயே தகுதிதானு இனிமேல் வாதாட வேண்டாம் வந்தவழியே ஓடிவிடுவாய்.

நாரதர்சொல் வசனம்.

என்னுடைய வார்த்தைதனைக் கேட்கும்பட்சத்தில் வெகுபெருமைகிடைக்கும் வேலனை மணஞ்செய்து கொள்வாய்.

## வள்ளியம்மைக்கும் நாரதருக்கும் தர்க்கம்.

எங்கள் குறக்குலந் தனக்கு யென்ற வர்ணமெட்டு.

இராகம்-பிலஹரி-அடதாளம்.

கண்ணிகள்.

வள்ளியம்மை சொல்.

இக்கணமெங்கள்குலத்தை தக்கதில்லையென்றுரைத்தாயே-அந்த
முக்கண்ணன்சேயைமண முடித்திடுவாயென்றாயேநீயே

நாரதர் சொல்.

மணமுடிப்பாயென்றே குணமாகச்சொல்லவந்தேனே-செத்த
பிணஞ்சுடுமீமத்தாடி பேயன்மகனென்றாய் நொந்தேனே

வள்ளியம்மை சொல்.

நொந்தேனென்றிங்கோடி வந்துபுலம்பாதேபேயே-இவன்
மைந்தன்கந்தனும்வெகு வல்லவனேசிச்சிநாயே

நாரதர் சொல்.

நாயென்றும்பேயென்றும் வாய்மதம்பேசாதேநீயே-எந்தன்
ருயென்றுவந்துரைத்தநாலே வெகுகெர்வமுற்றாயே

வள்ளியம்மை சொல்.

தாய்க்குப்பிள்ளைபுருஷன் சம்பாதித்தேவைத்தாய்மூடா-கேளாய்
எய்த்திடலாமென்றுமே ...ண்ணத்தைக்கைக்கொண்டாயோடா

நாரதர் சொல்.

வாடாபோடாவென்றே வார்த்தைவீணுகவேவள்ளி-பேசக்
கூடாதவார்த்தைதன்னைக் கூறிவந்தாய்முன்னே துள்ளி

வள்ளியம்மை சொல்.

துள்ளிவந்தாயென்றே சொல்லவந்தாய்விட்டேன்மாப்பு-ஆடா
கள்ளமுனிவனேவீண் காரியங்கூறுதேபொல்லாப்பு

நாரதர் சொல்.

பொல்லாதவிஷயத்தைச் சொல்லவில்லையுன்முன்னே தானே-நீயே
எல்லாந்தெரிந்துமென்னை யேசலாகுமோசகியேனே

வள்ளியம்மை சொல்.

மட்டியேயிதுநல்ல மார்க்கமாயினிமுன்னில்லாதே-படு
சுட்டியேயுன்னுடைய துர்ரெண்ணங்களையேசொல்லாதே

நாரதர் சொல்.

கஞ்சிக்குங்காடிக்குங் கைப்பார்த்துக்குறிசொல்லுங்குறத்தி-மித
மிஞ்சிமானமில்லாது விளம்புகின்றுயெனைநிருத்தி

வள்ளியம்மை சொல்.

சீச்சியிவ்வார்த்தையைச் செப்பிடவேயாகுமோடா-வெகு
கூச்சவிட்டுரைத்தாலே கோதையானஞ்சுவேனேடா

நாரதர் சொல்.

துள்ளியமாடுமேவள்ளியே சுமைசுமந்திடுமே-கேளாய்
உள்ளதுபின்னலே உந்தனுக்கேதெரிந்திடுமே

வள்ளியம்மைசொல் வசனம்.

அடாமுனிவனே கொஞ்சமாவது நெஞ்சு அஞ்சாமல் இவ்வனத்தில்வந்து என்முன்னேநின்று ஈசன்மகனை விவாகஞ்செய்துகொள்வாயென்றும் எங்கள்குலம் இழுக்குடையதென்றும் கஞ்சிக்குங்காடிக்குங் கைபார்த்துக் குறிசொல்லுவோமென்றும் இகழ்ந்துசொல்லவந்தாயடா நீர்முனிவனுயிருந்தால் இவ்விதம் புகலமாட்டாய்நாயே சீச்சியென்முன் னில்லாதே செல்லடா.

நாரதர்சொல் வசனம்.

கேளாய்வள்ளியே உன்னுடைய குலயிழுக்குடையதுதான் யாவர்க்குந் தெரிந்த விஷயமே அந்த யிழுக்கை மாற்றும் படியாகச்

சிவ சுப்பிரமணியரை மணம்புரியப் புகன்றேன் அதற்காகவென்னை நாயென்றும் பேயென்றும் வாடாபோடா வென்றும் பேசத்துணிந் தாயே உனக்கு ஞாயந்தானு சொல்வாய்.

வள்ளியம்மை சொல்.

வசனம்.

அடா முனிவனே இனி என்முன்னின்று பேசினல் அவமா னங்கிடைக்கும் வந்தவழியே செல்வாய்.

நாரதர்சொல் விருத்தம்.

புள்ளிமயில்வேலவனை மணம்புரிந்தே
பூவையேசுகித்திருப்பா யென்றன்பாக
உள்ளசெய்தியதனையெடுத் துரைக்கவேகேட்
டொண்டொடிநீ பலவாறயிகழ்ந் துரைத்தாய்
துள்ளுகின்றமாடுபொதி சுமந்ததிருந்
தோணவில்லையோகுறவர் குலத்திலுற்ற
வள்ளியென்றன்மனப்படியே முடிக்காவிட்டால்
மாதவசிநாரதமா முனியாவேனே.

வசனம்.

வள்ளியே நீ யிவ்விதமாகப் பேசினற் சும்மா போவேனென்று நினைந்தனை துள்ளுகின்றமாடு பொதியைச் சுமக்கும் வேலவனுக் குன்னை மணம்புரியாவிட்டால் நாரதனல்ல இதுவே சத்தியம்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

இன்னுமுனக்கவமான மில்லையோநீதி
எடுத்துரைத்தேன் வீண்சபதமிட்டுமேயென்
முன்னமேநிற்பதென்ன நாயேபேயே
முனிவனென்றபெயர்தரித்திங் கேவந்தாயே
உன்னுடையதிறமையறிந் திடுவேன்பித்தா
ஓடிவிடுவாய் துரிதமாகவேநீ
கன்னியிடஞ்செல்லாதுன் வித்தையெல்லாங்
காட்டாதேநாரதனே சகித்திடேனே.

வசனம்.

அடா பித்துப்பிடித்த முனிவனே இன்னுமுனக் கவமானமில் லையா நான் எவ்வளவுநீதி யெடுத்துரைத்தும் அதனைக் கேட்காது

புலம்புகின்றாயே நீ ஜெனித்தகாலந்திருந்து இதுவரை கற்றவித்தைகளை காட்டாதே என்னிடஞ் செல்லாது நீ மாசத்திய வந்தன்றான் செல்லடா திருட்டுமுனியே.

நாரதர் சொல்

விருத்தம்.

சித்தர்களுமுனிவர்களுந் தேவர்கோனுஞ்
சேடனரன்மால்பிரமன் றிகைத்துநிர்க்க,
இத்தலத்தில்வசித்திருக்கு மரசர்கண்டே
ஏங்கிமதன்வாதையுறும் படியாய்ச்சிந்தை
வைத்துமேபொற்பலகை தனில்வயவங்கள்
வள்ளிதனைப்போல்வடிவேல் மயங்கநானே
சித்திரத்தையெழுதிமகிழ் வுடனேஞான
தேசிகன்றனிடசமுகஞ் செல்லுவோமே.

வசனம்.

நாமிச்சபையத்தில் பதினெட்டு சித்தர்களும் இந்திரனும் ஆதிசேடனும் பரமசிவன், திருமால், பிரமதேவன், இவர்கள் கண்டு திகைக்கவும் இப்பூலோகத்திலுள்ள அரசர் கண்டு மதவாதை கொண்டு வாடவும் ஒரு பொற்பலகையில் வள்ளியம்மையைப்போலொரு சித்திரமெழுதி சிவ சுப்பிரமணியரிடஞ் சென்று காண்பித்து மணம்புரியவேண்டிய ஏற்பாடுசெய்வோம் கழுகுமலை நாடிச் செல்கின்றேன்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

ஒடியின்குற்றேன்றன்னை யுபசரித்திட்டதாலே
வேடிக்கையாகவார்த்தை விளம்பியேமுனிவன்சென்றான்,
சேடிகாள்கிளிகள்காக்கை திரண்டுமேகதிர்கொய்யாது
நாடிச்செந்தினையைசுற்றி நாயகிவருகுவீரே.

வசனம்.

அடி பாங்கிமார்களே நீர் முனிவந்து நம்முன் வேடிக்கையாக வார்த்தையாடிச் சபதமிட்டுச் சென்றான் நீங்கள் சென்று தென் பக்கத்திலிருந்து பக்ஷிகள் கதிரைக்கொய்யாது பாதுகாத்திருப்பீர் சகிமார்களே.

பாங்கிமார் வசனம்.

அம்மா வள்ளிநாயகியே அவ்வண்ணமே செல்கின்றோம்.

# சிவசுப்பிரமணியர் சபை.

## ஆசிரிய விருத்தம்.

சீர்மேவுவோராறு-சென்னிமிசைநவமணித்
திருமுடி புனைந்தவீரன்
திருமாலினிடமருக னடியாருளத்திருந்
திண்புயன் றேசுயர்ந்தோன்
பார்மேவுகின்றவறு படைவீடையுடையவன்
பச்சைமயி லேறுநாதன்
பன்னிருகையுடையவன் வேலன் குகன் சூர
பத்மனை வதைத்ததீரன்
ஏர்மேவுகின்றதெய் வானையைமணந்தவன்
னிருடிகள் வணங்குநேமன்
இந்திரவதனங்களி லிலங்கவெண்ணீரணிந்
திட்டநற் புகழுடையவன்
கார்மேவுகின்றகழு காசலந்தன்னிலுறை
கர்த்தன் கடம்பணிந்தோன்
கரிமுகன்சோதரன் பழனிதனையகந்திடுங்
கந்தனுங் கொலுவிருந்தான்.

இராஜாதிராஜர் பணியென்ற வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

செந்திருமால் மருகன்-தேவர்
சேனாபதி முருகன்
வித்தையாய்த்தோகை மயில்மேல்
வேலன்கொலு விருந்தான்

அந்திமதி தரித்தோன்-பண்டு
அங்கஜனை யெரித்தோன்
மைந்தனென கந்தன்மகிழ்
வாகக்கொலு விருந்தான்

தந்தைக்குப தேசன்-மலர்த்
தாளன்விசு வாசன்
அந்தமாய்ச்சண்முக நாதன்
அன்பாய்க்கொலு விருந்தான்

மாசில்லாதன் — மனத்தான்-கவி
வாணர்க்கருள் — கொடுத்தான்
காசினிபுகழ் — வடிவேல்க்
கையன்கொலு — விருந்தான்

தும்பிமுகர்க் — கிளையோன்-உமா
தோகைக்கேகான் — முளையான்
நம்பினோரைக்காக்கும் — கந்த
நாதன்கொலு — விருந்தான்

நாரதர் சொல்

ஸ்ரீராமச் சந்திரனே தெசரத என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-ஏகதாளம்.

கண்ணிகள்.

சூரனைச்சம்மாரஞ்செய்த — சுப்பிரமணியப்பொருளே
தங்கமுள்ளசெங்கைவடி — வேல் வேல் வேல்
மகா சூரனே — மயில் வீரனே (சூ

வானவர்சேனை பதியே — யானைமுகன்சோதராதெய்
வானையைமணந்தவடி — வேல் வேல் வேல்
வெகு வல்லவா — யார்க்கும் நல்லவா (சூ

தந்தைதனக்கேபிரணவந்தனை — மொழிந்தவனே
அந்தமுடையோனேவடி — வேல் வேல் வேல்
உரை சாற்றினேன் — பதம் போற்றினேன் (சூ

செந்திருமாலின்மருகா — வெற்றியாரும் முருகா
சித்தமகிழ்சத்திவடி — வேல் வேல் வேல்
மா தீரனே — அதி காரனே (சூ

கும்பமுனிவன் குருவே — அம்புவிமீதே தருவே
நம்பினோரைக்காக்கும்வடி — வேல் வேல் வேல்
அநு கூலனே — உமை பாலனே (சூ

வசனம்.

சூரபத்மனை வதைத்தவனே தேவர் சேனாபதியே தெய்வானை யை மணந்த தேசிகனே சிவபெருமானுக்குப் பிரணவமந்திர போதித்த குகனே செந்திருமாலின் மருகனே ப்ரபோ நாரதன் நமஸ்கரிக்கின்றேன்.



# வள்ளியம்மை சுயம்வரம்.

சிவசுப்பிரமணியர் சொல்

வசனம்.

கல்யாண் நாரதமுனிவரே.

விருத்தம்.

விண்ணுலகுபுகுந்துபின்பு திரிலோகத்தின்
மேவியரன்மால் பிரமனுசிபெற்றே
மண்ணுலகிலனுதினமும் நடக்குஞ்செய்தி
வழுத்திடவேசென்றிடு மாமுனிவேயின்று
எண்ணிவந்தகாரியந்தா னென்னமோவேறு
ஏதுமொருபுதுமைகண்டு வரலானீரோ
புண்ணியனேநாரதரே விரித்தன்பாகப்
புகலுவீரகமகிழ்ந் தென்முன்புதானே.

வசனம்.

கேளீர் நாரத மகாமுனிவரே வைகுந்தம் கயிலாசம் பிரமலோகங்களிற் சென்று அரி, அரன், அயன், இவர்களைத் தினந்தினங் கண்டு வணங்கி ஆசிகூறப்பெற்று வருவீரே தவிரவும் விண்ணுலகு மண்ணுலகில் நடக்குஞ் சங்கதிகள் தங்களுக்குத் தெரியவருமே யின்றி யேதாவது விசேஷமுண்டா அல்லது எக்காரியத்தை யுத்தேசித்துவரலானீர் புகல்வீர்.

நாரதர் சொல்

வெண்பா.

அண்டர்களுந் தொண்டுபுரி ஆறுமுக வேலோனே
கண்டுவந்தே னோர்கனியிக் காலையிலே—சென்றிடுவீ
ரையா முருகையா அஞ்சாமலக்கனியைக்
கொய்யாமற் கொய்தெடுத்துக் கொள்.

வசனம்.

திருக்கழுகாசலத்தில் வாழ்ந்திருக்கும் தேவர்சேனாபதியாகிய செங்கை வடிவேலர் யான்வருமார்க்கத்தில் ஒருகனியைக் கண்டுவந்தேன் மனமகிழ்ந்து இத்தருணந் தாங்கள்சென்று அக்கனியைக் கொய்யாமற் கொய்தெடுத்துக் கொள்வீர் பரபோ.

## நாரதருக்குஞ் சிவசுப்பிரமணியருக்குந் தர்க்கம்.

மார்க்கத்திர்கண்ட கனிதனக்குள்ள வென்ற வர்ணமெட்டு.

இராகம்-மத்தியமாவதி-தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

சிவசுப்பிரமணியர் சொல்.

கண்டகனியின் மருத்துவத்தை
யிக்கணமுரைப்பீர் முனியே-இந்த
எண்டிசை மீதினி லுண்டனதாவேறு
எக்குமுண்டோ யினியே.

வசனம்.

மாதவ சிரேஷ்டரே அக்கனியானது இப்பூலோகத்திலுண்டா னதா அல்லது எவ்வுலகத்திலுள்ளது நகலுவீர்.

நாரதர் சொல்.

அண்டர்கள்மூவர்க்கு முண்டாகப்பாதா
அகப்படா திக்கனியே-இன்று
கண்டால்மயங்கிடுவா ருஞ்வையாருக்
களிப்படைவீ ரினியே

வசனம்.

வடிவேலா வழுத்துவேன் கேளீ ரக்கனியானது இப்பூலோகத் திலுண்டானதுதான் தேவர்கள் மூவர்கள் மற்றயாவர்க்குங் கிடைப் பதரிதாகும் ப்ரபோ.

சிவசுப்பிரமணியர் சொல்.

பக்ஷிகள்கண்டா லின்னேரம்புசித்துப்
பரந்தெக்கும்போய் விடுமோ-நாமே
இக்ஷணந்தன்னிலே சென்றாலே
யக்கனியில்லா திருந்திடுமோ

வசனம்.

மகா முனிவரே தாங்களக்கனியைக் கண்டுவா[illegible] வெகுநேரமா குமே பக்ஷிகள் கண்டிருந்தா லக்கனியைப் புசித்திருக்குமே நாமிரு பேருமாகச் சென்றாலக்கனி யிருக்குமா நாரதரே புகல்வீர்.

நாரதர் சொல்.

பச்சைமயில்வாகனு குமாரகுகா
பன்னிரு கைவேலனே-வினே
இச்சைவைத்தேதேவர் கொய்யவேசென்றுது
மெட்டாக் கனிதானே

வசனம்.

ப்ரபோ அக்கனியைப் பக்ஷிகள் கொய்யாது தேவர் மூவர்கள் ஆசைப்பட்டுக் கொய்யச்சென்று லவர்களுக்குமெட்டாது வேலவா.

சிவசுப்பிரமணியர் சொல்.

எட்டாதகொம்பி லிருப்பதாலக்கனி
யெப்படியான் பரிப்பேன்-சென்று
கொட்டாவியிட்டுமே நிற்பேனேயின்றுமே
கூரம்பினுற் றெரிப்பேன்

வசனம்.

முனிசிரேஷ்டரே தேவர்கள் மூவர்களுக்கு மெட்டாம லிருந்தாலக்கனியை யெவ்விதமாக யான்பரிப்பேன் அங்குசென்றுகொட்டாவியிட்டா நிற்கின்றது நல்லது கனியைக் கூர்மைபொருந்திய அம்பினுற் றெரித்துக்கொய்வேன் நாரதரே.

நாரதர் சொல்.

கட்டழகோனே கடம்பணிந்தோய்
கழுகாசலம் வாழ்வோனே-கனி
கட்டும்படிக்கிரு கொம்புண்டதைப்
பற்றியேரும் முருகோனே

வசனம்.

திருக்கழுகாசலத்தில் வாழுங் கந்தனே அக்கனிக்கிரண்டுகொம்புண்டதைப்பற்றி யேரிப்பரிக்கலாம் ப்ரபோ.

சிவசுப்பிரமணியர் சொல்.

கொம்புண்டுயென்றுமே கூறினமாதவா
கூறுவே ளிப்போது-யாரும்
கம்புமொழியிலேயே முகமுண்டோ
கவிஞனீர் தப்பாது

வசனம்.

தவத்திற் நேர்ச்சியடைந்த முனிவரே அக்கனிக்கிரண்டுகொம்புண்டு மென்றுரைத்தீரே இவ்வார்த்தையை யாராவது நம்புவார்களா அக்கனிக்கி முகமுண்டோ சொல்வீர் நாரதரே.

நாரதர் சொல்.

கும்பமுனிவன் குருவேமுகமுண்டு
கோதில்லாக் கொங்கையுண்டு-கேளுங்
செம்பவளவிதழ்வாயுண்டு கையுண்டு
சேல்போல கண்களுண்டு

வசனம்.

வடிவேலவா அக்கனிக்கு முகமுண்டு கொங்கையுண்டு வாயுண்டு கையுண்டு சேல்போன்ற கண்களிருக்கின்றது ப்ரபோ.

சிவசுப்பிரமணியர் சொல்.

மங்கையர்க்குள்ள குறிகளிருப்பதால்
மாதவமா முனியே-ஐயா
சங்கையில்லாமலே பேசிடும்மோகனி
சாத்திடுவீ ரினியே

வசனம்.

ஐயா நாரதமகா முனிவரே அக்கனிக்கு ஸ்திரீகளுக்குள்ள லெட்சணங்க ளிருப்பதால் வாய்திறந்து பேசுமோ மனமகிழ்ந்து ஓதுவீர் முனிவரே.

நாரதர் சொல்.

பைங்கிளிகண்டு தேன்பாகுகரும்பைப்
பழித்திடவே பேசும்-கேளும்
செங்கதிர்வேலனே கிட்டசென்றேகேலி
செய்திட்டாலே பேசும்

வசனம்.

உமையாள் மைந்தனே கிளி தேன் கரும்புகண்டு இவைகளைப் பழித்திடவே பேசும் அக்கனியை கேலிசெய்திடில்.

சிவசுப்பிரமணியர் சொல்.

இப்புவிமீதாரு மொப்பிடாரேகனி
யிப்படியு மேது-என்முன்
செப்புவீர்நாரத மாமுனியேயுள்ள
செய்தியை யிப்போது

வசனம்.

நாரதரே இந்தப் பூமியிலுள்ளவர்களிடத்திற் புகன்றுலொப்புவார்களா ஒப்பிடார்கள் கனி இப்படியு மிருக்குமா உள்ளசெய்தியையுரைப்பீர்.

நாரதர் சொல்.

அப்பணிநாதன் புதல்வாகெம்பீரா
ஆறுமுக வேலோனே இன்று
ஒப்புவீரேகனி கன்னியென்றாலு
மொருபொருளாந் தானே

வசனம்.

ப்ரபோ கவனமாய்க் கேட்கவேண்டும் கனியென்றாலும் கன்னியென்றாலும் பதம் ஒன்றுதானே குமரா.

சிவசுப்பிரமணியர் சொல்

வசனம்.

நாரத மகாமுனிவரே கன்னிகையை கனியெனவுரைத் திந்தனேரம் வாதாடலானீர் உம்முடபுத்தி நீட்சண்யத்திற் கென்னசொல்வேன்.

நாரதர் சொல்

கனகசபாபதி தெரிசன மொருநாளென்ற வர்ணமெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்டுவந்தேனொரு கன்னிகையைநானே
களிப்பொடு கனவானே (கண்டு)

அநுபல்லவி.

தண்டாமரையில்வாழுந் தையலைப்போலே
தாரணிந்தமார்பனே சண்முகனே யிக்காலே (கண்டு)

சரணங்கள்.

சுந்தரனே நமக்குத் தருந்ததோர்பாரி
தங்கமுள்ள சிங்காரி
இந்தவுலகமதிலே யவட்கீடில்லை
இன்றுமகிழ்ந்துமெத்தம்பிரிவி சொன்னதுசொல்லே (கண்டு)

தெண்டுகமண்டலங்கைக் கொண்டமுனிவரே
கண்டாலத்தவங் குலைவரே
பண்டியேயான்செய்த பாக்கியமோமெய்யா
பாவலர்துதியரன்பாலா பன்னிருகையா(கண்டு)
பின்னலிடையுடையபின்னாற் சடையொய்யாரி
அன்னநடைச் சிங்காரி
கன்னல்கண்டுக்குவமைகழறும் மொழியுடையாள்
கயல்கடல்விடமினைகாட்டும் விழியுடையாள்(கண்டு)

வசனம்.

ப்ரபோ யான்வரும் மார்க்கத்தில் ஒரு பெண்கொடியைக் கண்டுவந்தேன் அம்மாதுக்கிணை பூலோகத்திலுங் கிடையாது தேவருலகத்திலுங் கிடையாது அன்னவருக்கேற்றவர் தாங்களே ஆனதாலிங்குவந்தேன் வேலவா?

சிவசுப்பிரமணியர் சொல்

விருத்தம்.

கன்னிகையைக் கனியெனவிங் குரைத்தீரேயக்
காதலியின் பெயரும்வளர் நகரும்யாது
அன்னவளை யீன்றெடுத்தோன் பெயருமேதா
யாண்வளின் திருநாமந் தோணவேயெனீ
முன்னமெடுத் துரைத்திடுவீர் மகிழ்ந்துமேமா
முனிவரே யெவ்விடத்திற் காணலானீர்
என்ன குலந்தனிலே யவதரித்தாள்மிக்க
எழிலுடைய பெண்கொடியா யிருக்கின்றளா.

வசனம்.

ஹே தவசிரேஷ்டரே அப்பெண்கொடியின் பெயர்யாது அன்னை தந்தையர்பெயரும் வசித்திருக்கும் நகரும்யாது எக்குலத்தில்வதரித்தவள் அழகுடையவள்தானா புகல்வீர் நாரதமாமுனிவரே.

நாரதர் சொல்

விருத்தம்.

ஊரதுவே சிற்றூராந் தந்தைநம்பி
போதிடுவேன் குறவர்குலந் தாயார்நங்கை
பேரதுவே வள்ளியம்மை யெனவேபூவிற்
பேசிடுவார் கழுகுமலை தனையேநாடி

வீரவழி தனிற்பார்த்து வந்தேனந்த
மங்கையைப்போல் படமெழுதி வடிவேலசபார்
காரியங்க ளினிமுடிக்கும் வகையன்பாகக்
களிப்போடு மெனதுமுன்னே கழறுவீரே.

வசனம்.

ப்ரபோ அன்னவள் வசிக்கும் நகர் சிற்றூர் அவள் பெயர் வள்ளியம்மை தாயார்பெயர் நங்கைமோகினி தகப்பன்பெயர் நம்பிராஜன் குறவர்குலத்திலுதித்தவள் அன்னவளைப்போல் ஒருசித்திரம் வரைந்து வந்திருக்கின்றேன் அவ்வள்ளியின் திருவழகைப் பாருங்கள் நடக்கும் வகையுங் கூறுங்கள்.

சிவசுப்பிரமணியர் சொல்

பார்க்கபார்க்க மயல்மீறுதே யென்ற வர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

பல்லவி.

சித்திரத்திலுள்ளமட மயிலே-என்னைச்
சேர்ந்தணைந்தே மருவுவாய் குயிலே (சித்தி)

அநுபல்லவி.

மெத்தவேள்கணையேவி விட்டான்சகியேன்பாவி
இத்தருணத்திலேயோர் முத்தங்கொடாயென்றேவி (சித்)

சரணங்கள்.

பத்தரைமாற்றுள்ள மீசெம்பொன்னே-மினிப்
பசும்பைத்தாதரிப்பாய் கண்ணே
உத்தமியேநானே உன்மேலாசைகொண்டேனே
ஒருவர்முகம்பாரேனே ஒண்டொடியேசெந்தேனே (சித்)

சுந்தரபிம்பவதன முடையாளே-மின்னல்
தன்னைநிகர்த்திடுஞ் சிற்றிடையாளே
சுந்தரியேயிப்போது சோர்ந்தேன் மனந்தாளாது
தொண்டுசெய்வேனைப்போதுந் தோகையேவிதாகாது (சித்)

கெண்டைதன்னைநிகர்த்த விழியாளே-தேன்கற்
கண்டைப்பழித்திடும் நன்மொழியாளே
கண்டாலல்லாதுமனங் களிப்படையாதித்தினம்
காதலியேல்லாது காசினிமீதார்சதம் (சித்)

வசனம்.

சித்திரத்திலுற்ற பெண்கொடியே உன்மீது ஆசைகொண்டேன் என்னை மருவுவாய் மோடிசெய்யாதே உனக்கே தினந்தினந் தொண்டுசெய்குவேன் உன்வார்த்தையை மீறேன் வேறும்டவார்கள் முகத்தைப் பாரேன் பெண்ணே யேன்பேசாமலிருக்கின்றாய் பேசினால் வாய்முத்தாச்சிந்துமோ சிந்தினால் வாரியெடுக்கின்றேன் பெண் பாவாய்.

## தெய்வானையம்மன் சபை.



ஈசனே நடராஜனே யென்ற வர்ணமெட்டு.

இராகம் - நாட்டைக்குறிஞ்சி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

வேலனேக்ருபை செய்திடவாராய்உனை
வேண்டினேனென்னை யாண்டிடாய்வடி(வே)

அநுபல்லவி.

ஆலமுண்டகண்டன் பாலனே
அரியவரிடர்பொடிபடவெகு திடமொடுநடமிடுமயில்மிசை(வே)

சரணங்கள்.

சூரனேமயில் வீரனேசிங்
காரனேஒய் யாரனேகெம்
பீரனேமலர்த் தாரனேவெகு
பிரபலமுளமுருகனேதிரு மருகனேத்திருத்தணிகேயபுரி(வே)

நாதனே மலர்ப் பாதனே மானீ
ஞானதனே வெகு நீதனே யிந்தச்
சோதனே செய்வ தேனுசசனே
சுடர்நவமணிமுடி தரிணி பணி கடவுளே தினமடியவர்பணி (வே)

கந்தனே உமை மைந்தனே முன்னோ..
இந்தவேளை மகிழ்ந்தே யெந்தனை
வந்துமே வரந் தந்திடாய்கௌனி
வரநதிமதியரவொடுபொழி ஞரவனிசிவபரனருளிய (வே)

வசனம்.

ஹே ப்ரபோ அடியாளை ரெட்சிப்பீர் பரமசிவனீன்ற சண்முகக்கடவுளே.

வசனம்.

எப்பொழுதும் நமது அந்தப்புரத்திற்கு வருபவர் இன்று இன்னேரவரை வராதகாரணமென்ன ஒன்றுந் தோன்றவில்லை அல்லது யாராவது எனது பிராணேசன் திருச்சபையில் வந்திருக்கின்றனரோ அதினால் வரவில்லையோ நல்லது அன்னவர் சபையிற் சென்றுபார்க்கின்றேன்.

## சிவசுப்பிரமணியரைத் தேய்வானை பணிதல்.

திண்புயாசலா யென்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அடிக்கிவந்தனம் மலரடிக்கிவந்தனம்

அநுபல்லவி.

வடிவுடைப கோகனக (அடி)

சரணம்.

எந்தன்பிராணசுந்தரனே எங்குமேநிரந்தரனே
சந்தோஷமாக இன்று சந்தோஷமாக
தந்தேன்வெகு அந்தமாக (அடி)

வசனம்.

ப்ரபோ தெய்வானை வந்தனஞ்செய்கின்றேன்.

விருத்தம்.

இந்தருணங் கழல்பணிந்தே னடியாட்காசி
　எடுத்துரைக்கா திருப்பதென்ன ப்ராணநாதா
சித்திரத்தைக் கரந்தனிலே வைத்துமேயென்
　சேயிழையே மடமானே மயிலேயென்றே
முத்தமிட்டு முகம்வாடி யிருப்பதேனோ
　முனிவனாலேர்ப்பட்ட கலகந்தானோ
அத்தனருளிய குமரா முருகாதேவா
　ஆறுமுக வேலோனே யுரைகுவீரே.

வசனம்.

ப்ரபோ அடியாளின்னேரவரை பணிந்துநிற்கின்றேன் என்னைப் பாராமலும் ஒருசித்திரத்தைச் செங்கரத்தில்வைத்து மயிலே குயிலே மடமானே செந்தேனேயென்று புகன்றிருக்கின்றீரே யல்லாது எனக்காசி கூறவில்லையே இந்தத்திருட்டு முனிவன்செய்த சூதோ புகல்வீர் நாதா.

தெய்வானை சொல்

விருத்தம்.

திருட்டுமுனியே குமர ரிடமேயென்ன
　தெரிவித்தி ரதனையெடுத் தெனதுமுன்னே
யிரட்டியே பேசாது நேரேநின்றே
　விளம்பிவிடு முண்மைதனை விபரமாக
உருட்டிவிழி தனைவிழித்தே யேசன்றுநீபேசா
　தூணையன்போ லிருப்பதனைக் கடுக்குமோசொல்
விரட்டிவிடு வேனேயிங்கு நில்லாதுன்னை
　வீண்கலகஞ் செய்திடவென்றே வந்தாயோ.

வசனம்.

ஹே திருட்டுத்தன்முள்ள நாரதமுனிவனே என்பிராணபதியிடத்திலென்னதெரிவித்திருமதுகொள்கையை இன்னும் விடவில்லையா இந்தச்சித்திரமேது ஒன்றும் பேசாத் ஊமையன்போலே நிற்கின்றீரே உண்மைதனை என்னிடஞ்சொல்லுவீ ரில்லாவிடில் நான் லேசாய்விடேன்.

நாரதர் சொல்

### விருத்தம்.

நாயேநா னுண்மைதனைச் சாற்றக்கேளாய்
தலங்களெலாஞ் சுற்றியொரு வனத்தில்வந்தேன்
சேயாகுங் குறவர்வீட்டிலே யொருமாதங்கே
தினைக்கதிரைக் காத்திருந்தா ளழகுதன்னை
வாயாலே யெடுத்துரைக்க முடியாதென்றே
படமெழுதி வேலரிடங் கொடுத்தேனம்மா
நீயேனோ கொஞ்சமும்மே மதித்திடாது
நிந்தனைக ளெந்தனையே யோதிநின்றிட்டாயே.

### வசனம்.

அம்மணி உண்மையைச் சொல்லுகின்றேன் யான்வருமார்க்கத்தில் குறவர்குலத்திலுதித்த வோர்பெண் தினைக்கதிரைக் காத்துக்கொண்டிருந்தா ளவளழகுதன்னைச் சித்திரத்திலவரைந்து வேலவரிடங் கொடுத்தேனல்லால் வேறுசந்தேகங் கொள்ளவேண்டாந் தாயே.

## தெய்வானைக்கும் நாரதருக்கும் தர்க்கம்.



உற்றதென்ன சொல்லுவீரென்ற வர்ணமெட்டு.

தெய்வானை சொல்

இராகம்-அமுர்தகல்யாணி-தாளம்-ஆதி.

### பல்லவி.

நடந்ததென்ன சொல்லுவீர்-முன்னே
நாரதரே இனிமேல் (நடந்த)

அநுபல்லவி.

மடந்தைமடல்தனையே கொண்டுயிப்போது
வந்தேகரங்கொடுத்த வகைதனையேமாது
இடந்தனிலேயெடுத் துரையுந்தப்பாது
இங்கேன்வுந்தாய்பாவி ஈதார்க்குமேர்க்காது (நட)

நாரதர் சொல்

பல்லவி.

அன்னையேபுகல் வேனே-இந்த
ஆச்சரியத்தைத் தானே (அன்)

அநுபல்லவி.

அன்னநடையுடைய அம்மணிநானே
அரியயனிடஞ்சென்றோர் வனத்தில்வந்தேனே
மின்னலிடையுளதோர் கன்னியுந்தானே
விளைந்தசெந்தினைகாத்தே யிருந்தாள்செந்தேனே (அன்)

தெய்வானை சொல்

சரணம்.

உலகிலுள்ளோர்களுமே உன்னைவைவாரே
உத்தமனென்றுமே யெவ்வாறழைப்பாரே
கலகப்பிரியனென்றே கழறிடுவாரே
கந்தர்பேசாதிருக்கும் அந்தரங்கத்தைநேரே (நட)

நாரதர் சொல்

சரணம்.

கண்டவுடனேப்ரமை கொண்டுகின்றேனே
கன்னிகையைப்போலவோர் படம்வரைந்தேனே
அண்டர்கள்வணங்கும் வேலோனிடந்தானே
அகமகிழ்ந்தேகொடுத்தேன் மடமானே (அன்)

தெய்வானை சொல்.

குற்றமித்தைதனையே யின்றுகாட்டாதே
கபடியேயெனக்குமே கோபமூட்டாதே
உற்றதைச்சொல்லிடுவாய் முறைபாராட்டாதே
ஓகோயின்றுமுழுப்பொய் தன்னைக்கூட்டாதே (நட)

நாரதர் சொல்

அம்மணியேவுந்த ஞத்தைகேட்டேனே
அறுமுகரையேமணம் புரியவொட்டேனே
சும்மாநானுள்ளதைச் சொல்லிவிட்டேனே
தோகையுன்னிடம்வெகு வசையும்பட்டேனே (அன்)

தெய்வானைசொல் வசனம்.

ஹே நாரதனே உலகத்திலுள்ளவர்க ளுன்னைக் கலகப்பிரிய னென்றே சொல்லுவார்கள் இதுவரையுன்னை உத்தமனென்று யாருஞ் சொல்லியிருக்கின்றார்களா இல்லையே என்னிடத்திலுங் கலகஞ்செய்யவாவந்தாய் வேண்டாமுண்மையைச் சொல்வாய்.

நாரதர்சொல் வசனம்.

அம்மணி உண்மையைச் சொல்லுவேன் யான் பரமசிவன் பிரமன் நாராயண ரிவர்களைக்கண்டு தரிசித்து வரும்மார்க்கத்தில் ஓர் பெண் விளைந்த செந்தினையை காத்திருந்தா ளவளின் றிருவழகை யொரு பொற்புலகையிலெழுதி இங்குவந்து வேலவரிடங் கொடுத்தேனல்லால் வேறொன் றுஞ் சொல்லவில்லை அவ்வவளை விவாகஞ் செய்வேனென் றிவர் தெரிவித்தபோதிலும் யான்மணம்புரிய வொட்டேனம்மா.

தெய்வானை சொல்

விருத்தம்.

வடிவுடையவடிவேலா வழுத்தக்கேளாய்
வாய்திறந்துபேசாம லிருப்பதேனோ
துடியிடைப்பெண்ணேமயிலே குயிலேயென்றே
சொல்லியேமயங்குவதி லென்னசாரம்
முடிகவிழ்ந்ததேனோவென் மணவாளாமா
முனிவனொடுமனதுமிக மகிழ்ந்துசென்றே
அடவியிலேகுறமாதைக் கண்டுமோயிங்
கடைகுவீர்யானுமொரு தடைசெய்யேனே.

வசனம்.

ஹே ப்ராணபதி மயிலே மானே குயிலே தேனேயென்று படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர் என்னைக்கண்டு முடிகவிழ்ந்து இருப்பானேன் இம்முனிவனொடு சென்று அம்மானைக்கண்டு வருவீர் யான்றடைசெய்யேன் சென்றுவாருங்கள்.

சிவசுப்பிரமணியர்சொல்

விருத்தம்.

மங்கையேமடமானேதெய் வானையேவழுத்தக்கேளாய்
அங்கஜன்வாதைதயென்னு லடைந்திடமுடியாதின்றே
துங்கமார்தில்குமந்தத் தோகையைப்பார்க்கவேண்டும்
இங்குவீற்றிருப்பாய்பெண்ணே யேகியேவருகுவேனே.

வசனம்.

கண்மணி தெய்வானையே யான்புகல்வதைக்கேள் யான் நாரத ரொடு அடவிசென்று அம்மாதைக்கண்டு வருகின்றேன் நீ அந்தப் புரத்திற்சென்று சேடிமாரோடு விளையாடிக் கொண்டிருப்பாய் அதி சீக்கிரமாக வருகின்றேன் விடைகொடுத்தனுப்புவாய் காதலி.

தெய்வானைசொல்

வசனம்.

பிராணபதே தாங்கள் நாரதமுனிவரொடு சென்று அதிவேக மாகவந்துசேருவீர் சென்றுவாருங்கள்.

சிவசுப்பிரமணியர்சொல்

விருத்தம்.

அந்தமுள்ளமடமயிலைக் கண்டுமேயிங்
கடைந்திடவேநாரதமா முனியேகேளீர்
இந்தவுருவோடுசெல்ல லாகுமோவே
றெவ்வுருவையெடுப்பதொன் றுந் தோன்றிலேனே
தந்திரங்களதனையெடுத் தகமகிழ்ந்தே
சாற்றிடுவீரித்தருணந் தனிலேமெய்யா
எந்தனுக்கேவள்ளியிருப்பிடத்தைநாடி
ஏகிடுவோமிருபேரு மின்றுதானே.

வசனம்.

மாதவசிரேஷ்டரே அம்மாதைக்காண விந்தவுருவோடுசெல் வோமா அல்லது வேறுருவையெடுத்துச்செல்வோமா ஒன்றும் என க்குத் தோன்றவில்லை மனமகிழ்ந்து சொல்வீ ரெவ்வுரு வெடுத்துச் செல்வோம்.

நாரதர் சொல்

விருத்தம்.

பச்சைமயிலேறும்வடி வேலனேயான்
பகருமொழிதனைக்கவனித் திடுவீர்நீரே
உச்சிதமாய்வேடர்குலந் தன்னிலேவந்
துற்றவொருவேடனைப்போல் ரூபமாகி

பச்சணிந்தபூண்முலையாள் வள்ளிதன்னைக்
கண்டுகலந்துறவாடிக் களித்துநாதா
இச்சையெல்லாம்நீங்கியபின் னமரர்கோவே
ஏகிடுவீர்கழுகுமலை நாடித்தானே.

கேளீர் திருக்கழுகாசலவாசனே இவ்வுருவோடு செல்லக்கூடாது வேடுவர்குலத்திலுதித்த ஒரு வேடுவனைப்போ லுருவெடுத்துக் கொண்டு என்னுடனேவருகுவீர் அம்மாது இருக்குமிடத்தைக் காண்பிக்கின்றேன் ப்ரபோ.

சிவசுப்பிரமணியர்சொல் வசனம்.

மாதவமுனியே தாங்கள் கூறியபடியே வேடனைப்போ லுருவெடுத்துவருகின்றேன் சற்றிங்கமர்ந்திருப்பீர்.

நாரதர்சொல் வசனம்.

ப்ரபோ இங்குவீற்றிருக்கின்றேன் சென்றுவாருங்கள்.

சிவசுப்பிரமணியர்சொல் வசனம்.

நாரதமகாமுனிவரே இந்தவுருவைப்பார்த்திரா யெவ்விதமாயிருக்கின்றது சொல்வீர் தவசிரேஷ்டரே.

நாரதர்சொல் வசனம்.

ப்ரபோ இந்தவுருவை வள்ளியம்மை காணுவாளாகில் உடனே தங்களை மணம்புரிந்துகொள்வாள் தடையில்லை.

சிவசுப்பிரமணியர்சொல் வசனம்.

நாரதரே ஏன் தாமதஞ்செய்கின்றீர் அந்தவள்ளிமாது யிருக்குமிடத்தினை நாடிச்செல்வோம் வருகுவீர்முனியே.

நாரதர்சொல் வசனம்.

நாதா வாருங்கள் சிற்றூரைநோக்கி வேகமாக அம்மாது செந்தினைக் காத்திருக்குமிடத்தை நாடிச்செல்வோம்.

சிவசுப்பிரமணியர்சொல் வசனம்.

முனிவரே வெகுதூரம்வந்தோமே இன்னுந்தூரமோ சொல்வீர்.

நாரதர்சொல் வசனம்.

ப்ரபோ இன்னுங்கொஞ்சந் தூரந்தா னிருக்கின்றது வருகுவீர்.

சிவசுப்பிரமணியர்

# வள்ளியம்மையைக் காணும்பாகம்.

சிவசுப்பிரமணியர்சொல்

விருத்தம்.

பூதலத்தோர்புகழ்ந்தேற்றிப் போற்றிசெய்யும்
புண்ணியனே கெண்ணியனே மண்ணின்மீது
மாதவத்தைச்செய்துவெகு கீர்த்திபெற்ற
மாமுனியேயானுரைக்கும் வார்த்தைகேளீர்
ஜோதிமதிவதனியெனப் புகன்றீரேயத்
தோகைதினைக்கதிர்காக்கு மிடமுமெங்கே
ஓதிடுவீரெனதுமுன்னே விரித்துமெய்யா
உத்தமனேசித்தும்வைத்தித் தருணந்தானே.

வசனம்.

இப்பூலோகத்திலுள்ளவர்கள் போற்றி செய்யும் புண்ணியவானே இன்னுங் கொஞ்சந்தூரந்தானென்று அழைத்துவந்தீரே இன்னும் அம்மாதிருப்பிடத்தைக் காண்கிலேனே உண்மையை யோதுவீர்முனிவரேரே.

நாரதர் சொல்

விருத்தம்.

புள்ளிமாமயிலிலேரும் புனிதனேசெங்கைவேலா
தெள்ளறவினைந்திருக்குஞ் செந்தினையதனைக்காத்தே
வள்ளியாள்பரணின்மீது மகிழ்ந்துமேயிருக்கும்விந்த
வள்ளிலேதிருக்கண்ணால்மால் மருகனேபார்த்திடவே.

வசனம்.

விண்ணோர் புகழும்வேலவா இதோபாருங்கள் பரண்மீது வள்ளியம்மை அமர்ந்திருந்து பட்சிகளை விரட்டுகின்றாள் ப்ரபோ.

சிவசுப்பிரமணியர்சொல்வசனம்.

மாதவமுனிவரே பிர்மதேவன் எவ்விதமாகச் சிருஷ்டிசெய்தானோ தெரிகிலேன் இனிமேல்யான்பார்த்துக் கொள்கின்றேன்.

நாரதர்சொல் வசனம்.

ப்ரபோ யானிங்கிருக்கக்கூடாது சென்றுவருகிறேன் நாதா.

சிவசுப்பிரமணியர்சொல் வசனம்.

நாரதரே இனிமேற்றான் வேடுவனெனப் பெயர்தூலங்குஞ் சென்றுவருவீர்.

## சுப்பிரமணியவேடன் வள்ளியம்மையை வர்ணித்தல்.

### விருத்தம்.

மின்னலைக்கைவசமாக்கிப் பிரமதேவன்
  மேதினியின் மீதிவளைப் படைத்திட்டானோ
கன்னல்வில்லியானமத னாசைகொண்டே
  கண்டுதினத்தொண்டுசெய்ய வகுத்திட்டானோ
இன்னிலத்தி லுள்ளவரு மோகங்கொண்டே
  இருக்கவென்றேயிவ்வுருவை யியற்றினானோ
என்னிடகண்ணீராரி னாலுமேபார்த்
  தெழிலையெடுத் துரைத்திடவே யிசைந்திடாதே.

உத்தமஜாதிப்பெண் குவளைக்கிணையென்ற வர்னமெட்டு.

இராகம்-கேதாரகவளம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பத்மினிஜாதிப்பெண் பவளக்கொடியதரமின்னிடையாள்
அன்னநடையாள்பின்னற்சடையாள் வர்னவுடையாள்-வெகு
உன்னதகதலித்தண்டுத் துடையாள்-இவள்
நன்னயமானகெண்டை விழியாள்-நல்ல
சின்னஞ்சிறுவயதுடையாள் கன்னற்கிணைமொழியுடையாள்
சிந்தைமகிழ்ந்திடுஞ்சரசி அந்தஇந்த்ரலோகத்துக்கேஅரசி
எண்டிசையோர்கள்மையல் கொண்டுமேவாடச்செய்யும்மாது
இந்தமாநுபுவிமீது கிடைக்காது-நல்ல
கந்தங்களுடங்கள் சவ்வாதுபுனை
தந்தரம்வாழ்பெண்பேர விப்போதுஜோடி
எந்தன்முன்னேவருவாள் சொந்தங்கொண்டேயணைவாள்
இந்துவதனச்சிங்காரி வெகுஅந்தமுடையவொய்யாரி
சித்தமும்வைத்தேவேதன் பத்தரைமாற்றுத்தங்கத்தாலே
இப்பூமேலேசிலைபோலே தன்கையாலேசெய்தான்
செப்பிடலாமோநாவினாலே இணை
இப்படியாமேயிருந் தாலேபாவி
சித்தஜனம்பினாலே மெத்தவுமேயிக்காலே
சேர்ந்திடச்செய்வானே நானேகாரிகைமுன்புசெல்வேனே



வசனம்.

ஆகா என்ன அலங்காரம் என்னசிங்காரம் என்ன ஒய்யாரம் என்ன கெம்பீரம் என்னவிச்சித்ரம் என்ன ரூபலாவண்யம் இம்மா தரசியைப் பிரமதேவன் மின்னலைப்பிடித்து வகுத்திட்டானே அல் லது மன்மதன் கொர்வத்தையொடுக்கப் படைத்திட்டானே அல்ல து பூலோகத்திலுள்ளவர்கள்கண்டு மன்மதவாதைகொண்டு இப்பெ ண்ணருகிலிருக்கப் படைத்திட்டானோ யாதென்று மறிந்திலேனே நாரதமகாமுனிவரை யின்றுதான் மெச்சினேன் நாமிங்கிருந்து வர் ணிப்பதிற் பிரயோஜனமில்லை அருகிற்சென்று பார்க்கின்றேன்.

## வள்ளியம்மை பட்சிகளை விரட்டுதல்.

அன்னங்களா தாராக்களா வென்றவர்னமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்.

அன்னங்களே மயிலினங்காள்
அழகுடைய குயிலினங்காள்
கன்னங்கருங் காகங்களே
காடைகவுதாரிகளே-சோ-சோ-சோ. (ஆலோ)

மாடப் புறாவினங்காள்
மணிப்புறா கூக்கணங்காள்
ஜோடுபிரியா திருக்குந்
தூங்கமுள்ள அண்டில்களா-சோ-சோ-சோ. (ஆலோ)

கூட்டமொடு கதிரீனக்கொய்
குருவிகளா நாரைகளா
வாட்டமில்லா வானம்பாடி
மரங்கொத்துங்குருவிகளா-சோ-சோ-சோ. (ஆலோ)

மாலினங்காள் மரையினங்காள்
வானுலவுங் குருகினங்காள்
கானகம்வாழ் புள்ளினங்காள்
கருக்குருவிகொக்கினங்காள்-சோ-சோ-சோ. (ஆலோ)

## சுப்பிரமணியவேடன் வள்ளியைவர்ணித்தல்.

சாரங்கந்தன்னிலோர் சற்பக்கணைதனை யென்றவர்ணமெட்டு.

இராகம்-அடாணா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அதிரூபலாவண்ய மதிவதனமுள்ளபெண்டுஇன்று
அண்டருடன்மையல் கொண்டுஅலைவாரேகண்டு
பதிமேலிவள்போலப் பாலையராருண்டு
பங்கயமின்-சங்கைகொள-இங்குலவு-மங்கையுமே (அதி)

தூங்குமுகங்கள்துலங்குவது சந்த்ரபிம்பம்இவள்
துடையோமதன்கொலுத் தோரணத்தினிடகம்பம்
கொங்கையிரண்டுங் குவிந்தசொர்ணக்கும்பம்
கோதை-வெகு-மேதை-மத-வாதை-செய்ம்பேதையிவள் (அதி)

சித்தஜன்கண்டாற்றினஞ் செய்திடுவானென்தொண்டெந்தன்
சித்தமயங்கிடச்செய் தனளேமாதுயின்று
பத்தரைமாற்றுப்பசும் பொன்னின்மேனியாள்
பக்குவவா-லைக்குமரி-கொக்கோக-லீலைக்குறியாள் (அதி)

வேலொடுமோவடுசேலைப் பழித்திடும்விழியாள்-மின்னின்
மின்னலைவென்றிடையுடையா ளன்னநடையாள்
பாலொடுகண்டைப் பழிக்குநன்மொழியாள்
பச்சத்தொடு-மெச்சிப்புவி-இச்சைப்படு-கச்சுப்புனை (அதி)

கையிற்பிடித்தகவணிற்கல் வைத்துமேமாதுவருங்
காடைபுறாக்கள்கிளி கொய்யாமலேயிப்போது
மெய்மிகநோகுயில் வேளையெறிகின்றாள்
வீசி-மக-ராசி-விசு-வாசி-வெகு-நேசியான (அதி)

வேறு வர்ணிப்பு.

ஆரடியுன்பேரூர் கூறடியென்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசொல்லுவேனிம்மாது இங்கு
இருக்கும்விந்தையையெடுத்துரைக்கவேமுடியாது (என்ன)

அநுபல்லவி.

கன்னலொடுசெந்தேன்பாகு கண்டைப்பழிக்குமொழியாள்
கயல்கடல்விட மதை நிகர்த்ததிருவிழியாள் (என்ன)

சரணங்கள்.

உத்தமியிவளுக்கிணை யித்தரணிமீதிலேயெ
டுத்துமேமகிழ்ந்து மேயுரைத்திடவென்றால்
சித்தமேமெத்தவுமேயிர் யித்திடுதேசேடனும்
மித்தருணமுடியாது சித்தினிபெருமைசெப்பவே(என்ன)
மஞ்சைநிகர்த்தகுழலாள் கஞ்சமலரின்கழலாள்;
மதிவதனமுடைய பதிவிரதையாள்
அஞ்சுகம்போலவேவெகு ரஞ்சிதமாகவேயின்று
ஆலோலமிட்டுமேமயில் போலொருபரணின்மீதிலே(என்)
தெண்டுகமண்டலங்கரங் கொண்டமுனிவோர்களுமே
கண்டாலேதினந்தினமே தொண்டுபுரிவார்
மண்டலமீதிலேயாளுங் கண்டதில்லையிவள்போல
மந்தஹாசமுடையவிஸ்வாசி வெகுகட்டழகியே(என்)

வசனம்.

ஆகா! இம்மாதரசியி னழகை யென்சொல்லுவேன் மேகம், கருமணல், சைவலம், கொன்றைக்காய், அகிற்புகை, மயிர்சாந்தம் இவைகளைப்பழித்த கூந்தலும், மூன்றாம்பிறைச் சந்திரனுக்குச் சமானமாக இவள்நெற்றியைச் சொல்லலாம். அப்பிறைக்கும் ஓர் விதமான களங்கம் யேற்பட்டிருக்கின்றதே இம்மாது நெற்றியிற் களங்கமேற்படவில்லையே, மன்மதன் கன்னல்வில்லுக்குச் சமானமாக இம்மங்கை புருவத்தைப்புகலலாம். அன்னவனுக்கு ஒருவிற்றேயுண்டு, இம்மாதிடத்தி லிரண்டுவில்லிருக்கின்றதே கருங்குவளையையும், நீலோற்பலத்தையும், யமனையும், வேலையும், மாவடுவையும், சாகரத்தையும், விஷத்தையும்வென்ற திருவிழிகளும், செந்தாமரைமலரைநிகர்த்த திருவதனமும், ஊஞ்சலையும், வள்ளைக்கொடியையும், கத்திரிக்கோலையும் பழித்த செவிகளும், கண்ணாடியை வென்ற கன்னமும், குமிழமலரும், எட்பூவையும் நிகர்த்த நாசியும், இந்திரகோபத்தையும் பவளத்தையும் முருக்க மலரையும் பழித்த இதழும் குமுத மலர்போன்றவாயும் முல்லை யரும்பையும் நாளத்தையும் நிகர்த்த தந்தங்களும், அமிர்தத்தையும், மா, பலா, கதலி யென்ற முக்கனியையும், கரும்பின் ரசத்தையும், குயிலையும், கிளியையும், கற்கண்டையும், சீனியையும், சற்கரையையும், தேன்குழம்பையும், புல்லாங்குழலையும் வென்ற வசனமும், கமுகைப்போன்ற கழுத்தும், மூங்கிலைப்பழித்த தோள்களும், மகரமீனைப் போன்ற முன்கைகளும், செங்காந்தட் புட்பத்தைப்போன்ற உள்ளங்கைகளும், கெளிற்று மீனைவென்ற விரல்களும், கிளியின் நாசி

யைவென்ற நகங்களும், தென்னங் குரும்பையுந், சொக்கட்டான் காயும், கிண்ணத்தையும், கோங்கின்குரும்பையும், கைத்தாளத்தையும், நீர்க்குமிழியையும், சிமிழையும், பம்பரத்தையும், வெற்பையும், பந்தையும், சக்ரவாகத்தலையும், கலசத்தினையும், யானைமருப்பையும், குடத்தையும்பழித்த ஸ்தனங்களும், ஆலிலைபோன்ற வயிறும், பவிழ்மலரைநிகர்த்த உந்தியும், அலையையும் படிக்கட்டையும்போன்ற வயிற்றின்மடிப்புகளும், எறும்பின்னொழுங்கையும், வண்டினொழுங்கையும், திருடர்காற் சங்கிலியையும், சலாகையையும், தாமரைத் தண்டையும் நிகர்த்த உரோமக் கொடிகளும் பைங்கொடியையும், மின்னலையும், உடுக்கையையும்வென்ற இடையும், யானைத்துதிக்கையும், கதலித்தண்டையும், வென்ற துடைகளும், தெண்டைப்போன்றமுழந்தாளும், எக்காளத்தையும், வரால்மீனையும்பழித்த கணைக்காலும், கைத்தாளசையொத்த பரடுகளும், பீர்க்கைப்பழித்த குதிக்காலும், ஆமையோட்டைவென்ற புறவடியும், பவளத்தைப்போன்ற விரல்களும், சந்திரனைப்போன்ற நகங்களும், அன்னத்தைப்பழித்த நடையும், மயில்போன்ற சாயலும், இவ்வித உன்னதமான அழகு வாய்த்த இம்மாது சிரோமணியானவள் பரண்மீதிருந்து கையிற்பிடித்திருக்கின்ற கவணிற்கல்லைவைத்துச் சுழ்ட்டிப் பக்ஷிகள்மீது யெறிந்து ஆலோலமிட்டுச் செந்தினைக் கதிரைக்காக்கும்விசித்திரத்தை யென்னசொல்வேன் அடிக்கடி பக்ஷிகளைக் கவணைல் விரட்டுவதாற் கரம்நோகாதோ? அடிக்கடி ஆலோல மிட்டுக்கொண் டிருக்கின்றனளே நாவுவலியாதோ சூரியனுடைய வெப்பம் தேகமீது படுகின்றதே தேகத்தினிறங் குன்றிப்போகாதோ இந்தவனத்தில் கொஞ்சமாவது நெஞ்சஞ்சாம லிருக்கின்றனளே இம்மாதரசியைத் தினைக்கதிரைக்காத்திருக்கும்படி அந்த நம்பிராஜன்றனே யனுப்பிவைத்திருக்கவேண்டும். அன்னவனுக்கு அறிவில்லாமற் போய்விட்டதே கல்லது அவனை ஒருகைபார்க்கின்றேன்.

சுப்பிரமணியவேடன்

## வள்ளியம்மை முன்னேசென்று

தர்க்கமாடும் பாகம்.

விருத்தம்.

கன்னிகையாள் வள்ளிமுன்னே சென்றுமேயென்
கருத்தைமகிழ்ந் தின்னதென் றவிபரமாக
என்னவித மாகவெடுத் துரைப்பேனோ
இருதயமேமிகப்பதறு கின்றதையோ

கன்னல்வில்லி மன்மதனுங் கோபத்தோடு
கணைகள்விடுத் தேவதைக்கின்றானேபாவி
அன்னநடை யாளருகே செல்லவென்றோ
ரடிவைத்தால்முன்றடிபின்னிழுக்குதின்றே.

வசனம்.

இம்மாதரசியின்முன்னே நாம்செல்லுவோமென்று ஐம்புலன்களும் ஒருமைப்பட்டு ஓர் அடிமுன்னே எடுத்துவைத்தவுடனே பின்னே என்சொல்லுவாளோ என்றபயமானது பின்னே என்னை மூன்றடி தள்ளிவிடுகின்றதே இதற்கென் செய்வேன் எம்முகாந்திரத்தைக்கொண்டு செல்லுவோம் ஒன்றுந் தோன்றவில்லை நாரதரிங்கிருந்தால் யுக்திகேட்டுக்கொள்வோமே அன்னவரையு மனுப்பிவிட்டோமே நல்லது யோசனை செய்கின்றேன்.

ஷை வசனம்.

நாம் இவ்வனத்தில் வேட்டையாடினதுபோலவும் ஓர்மானனது வாளிபட்டோடிவந்ததுபோலவும் அம்மானைக்கண்டாயோவென்று புகலுவோம். இதுவே நல்லயோஜனை இம்மாதரசியின் முன்னே செல்கின்றேன்.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஆகா என்ன ஆச்சரியம் இந்தக் கானகத்தி லொரு வேடுவன் வில்லைத் தோளில்மாட்டி அம்பைக் கையிற்பிடித்து அதிகவேகமாக ஓடிவருகின்றானே இவன்யார் நமது அண்ணனோ இல்லையே அருகில்வந்தாற்றெரியும்.

சுப்பிரமணியவேடன்சொல்

விருத்தம்.

சிரிட்டவதனமுள்ள பெண்ணேகண்ணே
செப்புமொழிதனைக்கவனித் தின்றுதானே
ஏரிட்டேபார்த்துரைசெய் வாய்மின்னாளே
இப்புவியோர்க்கண்டுமித் வார்த்தைகொள்ள
வாரிட்டதனமுடைய மயிலேஓர்மான்
வாளிபட்டேபதிவேக மாகவோடி
வீரிட்டேவந்ததண்டிப் புனத்தைநாடி
மெல்லிகையேகண்டதுண்டோ விளம்புவாயே.

கள்ளிபோடி யென்றேபேசுராய் என்றவர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி-அடதாளம்-சிப்பு.

கண்ணிகள்.

அன்னமேயிப்புனம் காடியே-யிந்த
அம்புபட்டே கதியோடியே
கன்னிமேவந்ததே வேகமொடுமானைக்
கண்டதுண்டோ வந்தேன்தேடியே (அன்ன)

உந்தனுக்கிந்தர்ம மாகுமே-இந்த
உண்மைசொன்னால் மதிப்பாகுமே
சந்த்ரவதனமுடை யவளேயொன்றுந்
சாற்றவிடிலோடிப் போகுமே (அன்ன)

பட்டபாடுக்கேலி யாச்சுதே-பின்னே
பற்றியுங்காணாது போச்சுதே
கட்டழகுள்ள மடமயிலேயெந்தன்
காலும்வலித்திட லாச்சுதே (அன்ன)

உத்தமியேவேண்டாம் வாதமே-சும்மா
ஓதிடுவாய்நீயிப் போதமே
பத்தரைமாற்றுப் பசும்பொன்னேயின்றமே
பக்ஷம்வைப்பாயெந்தன் மீதமே (அன்ன)

ஒன்றுங்கூறுகது ஞாயமா-அல்ல
ஊமையாநின்சம்ர தாயமா
நின்றேனின்னெரமுன் னெஞ்சிறங்காததேன்
நேரிழைச துணியாயமா (அன்ன)

வசனம்.

பெண்பாவாய் யானிந்தவனத்தில் மான் வேட்டை யாடினேன் ஓர்மானுன்று என்கணைபட்டு வீரிட்டு இப்பக்கமோடிவந்ததே அந்தமானைக்கண்டதுண்டோ பெண்ணே யான்கேட்டதற்கு ஒன்றும் பேசா தூமைபோலிருக்கின்றாயே ஜல்தியாகச் சொல்வாய் சுப்பக் கஞ்சென்றது மாதரசியே.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

கானகம்வாழ்வேடுவனே கழாக்கேளீர்
கன்னிகையின்முன்விரைவா யோடிவந்தே
மானையெய்தேன்வாளிபட்டிப் புனத்தைநாடி
வந்ததுண்டுகண்டாயோ வென்றேயன்று

ஞானமில்லா துரைத்தனேயிவ் வனத்திலேதான்
நல்லபுள்ளிமானில்லையோ வொருமான்றானே
ஏனினிவாதாடுகின்று யடையாளந்தா
னிருந்தாலேயென்னிடமே யியம்புவாயே.

சொல்லாமொழிசொன்னாடாயென்றவர்னமெட்டு—

இராகம்-தேசிககமாஸ்-ஏகதாளம்.

கண்ணிகள்.

என்னவார்த்தை சொன்னீரிது
ஏர்க்குவேரோ புவியோர்க்கது
பின்னமாகவே என்னிடந்தானே
பித்தன்போலித்ததி கத்துகின்றாய்வீணே(என்ன)

வேடரேபின்று லோடியே
வேகமாய் மானைத்தேடியே
வாடியேநீ தள்ளாடியே
வந்தாயேநொந்தாயே இந்தவேளைநீயே(என்ன)

புள்ளிமானே விக்கில்லையே
புனத்திலே வரவில்லையே
வள்ளிமான்முன்னே துள்ளியேநின்று
வஞ்சகநெஞ்சிலே கொஞ்சமுமஞ்சாது(என்ன)

அம்புபட்டதோ முன்னுக்கே
அடையாளமுண்டோ மானுக்கே
வம்புசெய்கின்றாய் நம்பிடுவேனோ
வல்லவாநல்லவா வில்லாதேசெல்லுவாய்(என்ன)

தந்திரமிலே செல்லுமோ
ஜாலமொந்தனே வெல்லுமோ
விந்தைமொழி பறைந்திடாமலே
வேடரேஓடுவீர் காடுதனைவிட்டுமே(என்ன)

வசனம்.

கானகத்தில் வசிக்கும் வேடுவரே இந்தவனத்தில் மான் வேட்டையாடினேனென்றும் ஓர் மானானது எனது கணைபட்டே விரட்டு இவ்வழியாகவே வந்ததே அம்மானைக்கண்டதுண்டோ என்று அதி வேகமாகவே ஓடிவந்தே என்னிடக்கேட்ட வேடரே உமக்கு அறிவில்லையா இவ்வனத்திலொருமான்றானுண்டுவேறில்லையா தாம் ஏய்

தமானுக் கடையாளமிருக்கின்றதா தமக்குப் பித்துப்பிடித்திவந்து புலம்புகின்றீர் போம்போம் வேடிவரே.

சுப்ரமண்யவேடன் சொல்

விருத்தம்.

காயாதகர்ணகத்தி லுலவிவாழும்
கன்னிகையேயா னுரைக்குங் கருத்தைக்கேளாய்
மேயாதமான்விழிமான் சவுரிமான்றான்
மெய்யீதுபுள்ளிகள்மே வாதமான்றான்
சாயாதகொம்பிரண்டு வுடையமான்றான்
றங்கநிறம்போலிலங்குந் தலைநிமிர்ந்தே
பாயாதமான்றனையே யெய்தேனுந்தன்
பார்வைவரக்கண்டதுண்டோ வள்ளிமானே.

அன்ன நடைபோல ஓர்மாது வென்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மானினடையாளஞ்சொல்லுவேன்
மடமயிலே (மானி)

அநுபல்லவி.

தேனின்மொழியாரணங்கே தேசுயர்ந்தியணங்கே
சித்தமெத்தவலைத்தேதானே இத்தருணந்தனில்நானே (மா)

சரணங்கள்.

அன்னநடையம்மானே அந்நமுடைய
மின்னிபினையம்மானே விளம்பிடலாகு
சொர்ணநிறமேதானே துலங்குமது
சுகமான் நயமா னிழுமா னெழில்மான்
விழிமான் புகழ்மான் குணமான் வள்ளிமானே (மா)

மேயாதமான்சிறுமான் மிருதுவான
சாயாதகொம்புளமான் நிலிமிர்ந்தே
பாயாதமான்குலமான் பகர்வேனையே
பதிமான் நலமான் ஒளிமான் பலமான்
நகைமான் வெகுஅன் புளமான் குறமானே (மா)

மீசிலாமெய்யுளமான் வாயாலினையே
பேசிடமுடியாமான் பெண்ணேகேள்விசு
வாசமுடையதம்மான் வனப்புடைய

வனமான் புனமான் வெகுஉன் விதமான்
திடமான் அதுவென் னுயிர்மான் மடமானே (மா)

வசனம்.

கண்மணி யான் எய்தமானுக்கு அடையாளமுண்டு யாதெனின் அம்மானைத்து புல்லைமேயாது சாயாமலிரண்டுகொம்பு மல்லிகைப் புஷ்பத்திற்குச் சமானமிருக்கும் அக்கொம்பினு லொருவரையும் பாயாது இப்பதியில் வாசஞ்செய்யும் பலபொருந்தியமான் நடக்குஞ்சமயம்பார்க்கில் அன்னநடைக்குச் சமானமாயிருக்கும் திருவிழியால் கண்ருய்ப்பார்க்கில் மின்னலுக்கிணையாயிருக்கும் தங்கத்திற்குஞ் சமானஞ்சொல்லலாம் வாலைப் பருவமுடையமான் அழகு பொருந்தியமான் குணம் பொருந்தியமான் வள்ளிமானே; உண்மை தனைப்புகன்றேன் பெண்ணே இனிமேலாவது புகல்வாய் மாதரசே கண்டதுண்டோ.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

அந்தமான் மலைவனத்தில் வாழுமொழி
தாகுமநம்பி ராஜனிடவரத்தினாலே
வந்தமான் சவுரியமான் குலமான்நன்மான்
வடிவுடையமான்வலைக்கி யகப்படாமான்
இந்தமான் முன்புவந்தே கபடமாக
என்னளவுமஞ்சாது பேசவெண்ணிச்
சொந்தம்மான் மகன்போல வந்தாய்சிச்சி
தோழியைவிட்டினியடித்துத் துரத்துவேனே.

சம்சம்சம்போரிநசி யென்றவர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சீச்சிச்சீயுந்தன் செய்தியறிந்தேனேவேடா
தினைப்புனங்களில் நிற்காதேபோடா
ஆச்சரியமான பேச்சுகள்பேசி
அகந்தைகள்செய்யவேண்டாமடாதோஷி
அஞ்சிடேன்-கொஞ்சமும்
நெஞ்சிலே-வஞ்சகனே (சீச்சீ)

போப்போபோசமூட புத்தியுள்ளகுடிகேடா
பூவைமுன்னிந்த்ரஜாலஞ் செய்யாதேடா
மாப்புவிட்டேனுனையேநானிப்போது
மன்னித்தேனினிக்கூறில்மனமுந்தாளாது
மட்டியே-சட்டியே
கெட்டவா-எட்டியேரியே (போய்)

மான்மான்மானென்ன வள்ளிமானிடத்தில்வந்தே
வாதுபுரிந்தாயடா மனதுகந்தே
தேன்மொழியாளிட முன்னேநில்லாதே
சிட்சைசெய்வேனிந்த வார்த்தைசொல்லாதே
நீதடா-பாதகா
நீதியோ-தகாதுனக்கு (மான்)

வசனம்.

அடா வேடனே நீ கூறியமானனது வனங்கள் மலைகளிலுண்டொகிடையாது என்னைசுட்டிக்கூறினையல்லவா இந்தமானனது நம் பிராஜுனுடைய தபோபலத்தாற் கிடைத்தமான் உன்னுடைய வலைக்கி அகப்படாதமான் சக்ஷரியமான் ஜாதிமான் அழகுடையமான் ஏமாற்றுதற் கப்படாதமான் வீரியமான் வள்ளிமானல்லவா மரியாதையாக வந்தவழிதிரும்பிவிடுவாய் இல்லாவிடிலெனது அண்ணமார்கள் உன்னை வதைசெய்குவார் ஒருபெண்ணினா லிறந்தானென்றுபெயர்பெறவேண்டாம் என்னிடநின்றில்லாமலும் பதிற்பேசாமலுஞ்செல்லடா முழுமூடனே.

சுப்ரமண்யவேடன் சொல்

விருத்தம்.

அந்தமுள்ள பெண்கொடியே வழுத்தக்கேளாய்
அடவிதனிலெய்தவொரு மானுமிங்கே
வந்ததுண்டு கண்டதுண்டோ வென்றேனென்னை
வார்த்தைகளுதாசீனமதாகக்கூறி
நிந்தனைசெய் தாய்செவியுற் கேட்கக்கேட்க
நேரிழையேமனதுமிக மகிழ்ந்தேனின்றே
உந்தனிட பேருருந் தந்தைபேரும்
உத்தமியேசித்தம்வைத்து வுரைத்திடாயே.

என்னவேறுஞ் சொல்லடி யென்றவர்னயெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-அடதாளம்.

### பல்லவி.

அன்னமேரீ சுறுவாய்
அஞ்சுகமே தேருவாய் (அன்)

### அநுபல்லவி.

கன்னிகையே நன்னயமாய்
என்னிடமுன் மின்னலிடை (அன்)

### சரணங்கள்.

உன்னிட நகரேது
ஒளியமே வாழ்வது
வன்னவுடை பின்னற்சடை
கண்மணியே கன்னல்மொழி (அன்)

தந்தையின் நாமந்தனை
தையல்வாதே னித்தனை
சந்திரமுக மந்தஹாசி
இந்தவேளை யந்தமதாய் (அன்)

அன்னையினிட பெயர்
ஆரணங்கே மாற்றுயர்
பொன்னேமகிழ் கன்னிகமாய்
மின்னரசே பெண்ணரசே (அன்)

### வசனம்.

கண்மணி கணைபட்டு வந்தமானைக் கண்டதுண்டோ வென்றே னதற் கடையாளமுண்டோவென்றாய் அம்மானின் அடையாளத் தைத் தெரிவித்தேன் பெண்ணே அதற்காகவென்னைப் பலவாறு தூஷித்தாய் நீ தூஷிப்பதெல்லா மென்னுடைய செவிக்கின்பமாயி ருக்கின்றது நீவாழும் நகரும் உன்னுடையபெயரும் தந்தை தாய் திருநாமத்தையும் புகலுவா யில்லாவிடில்யானேகமாட்டேன் பெண் பாவாய்.

வள்ளியம்மைசொல்

### விருத்தம்.

வனத்தினில்வாழ் மானையெய்தேன் வாளிபட்டே
வந்ததுண்டு கண்டாயோ மானேயென்று
புனத்தினிலே பரணருகே நின்றமேதான்
புலம்பினவா புத்தியில்லா வேடாகேளாய்

எனத்தையெடுத் துரைத்திடுவே னுனதுமுன்னுத்
தியம்பாத விடினுமேநீ யேகமாட்டாய்
சினத்தைமன தடக்கியேநான் விரிவதாகச்
செப்புவே னிப்பொழுதே செல்லுவாயே.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சொன்னேனென்வெகு கன்னயமாய்
அண்ணாவேடனே நான் (சொன்)

அநுபல்லவி.

இன்னிலத்தின் மீது இணை-கூறிவொண்ணாது-கேளு
மெத்த-னக-ரந்தான் சிற்றா ரென்பார் மகிழ்ந்தே நான் (சொ)

சரணங்கள்.

அன்னைபோராகும் நங்கை
அழகில்மிகுந்த மங்கை
கன்னிகையானேநானே களிப்பாகவேதானே
அதி-நார-மாகெம்-பீரா-வெகு-சூரா-ஒய்யாரா நான் (சொன்)

எந்தைநாமமே நம்பி
எழுண்ணருண்டு தம்பி
தந்திரிலேசசன் தாம்பணிந்தோன்பவநாசன்
இன்று-தானே-கன்-வானே-குண-வானே-முன்னனே நான் (சொ)

வள்ளலேமிக ளிப்போது
வழுத்திடுவே னேமாது
வள்ளியென்பார்களென்னை வந்தேயெந்தனின்முன்னே
இனி-வாதே-வெகு-சூதே-நீயிப்-போதே-செப்பாதே நான் (சொ)

வசனம்.

இந்தவனத்தில் வாழ்ந்திருக்கும் வேடவனே என்னுடைய வரலாறை எடுத்துரைக்காவிட்டாலு மேகமாட்டாய்போலிருக்கின்றது யானுரைக்கும் வார்த்தையைக் கவனித்துக் கொள்வாய் என்பெயர் வள்ளியம்மையெனவே சொல்லுவார்கள் எனது பிதா நம்பிராஜன் எனது அன்னை நங்கைமோகினி எனக்கு ஏழுபெய ரண்ணமாருண்டு எனக்கிளையதம்பிமார்கள் தங்கைமார்களில்லை யாங்கள் வசித்திருக்கும்நகர் சிற்றாராகும் எங்கள்குலம் குறவர்குலம் இச்செந்தினைக் காவல் செய்திருக்கவந்தேன் இனி யிங்குநில்லாதே சென்றுவிடுவாய்.

சுப்ரமண்யவேடன்சொல்

விருத்தம்.

அனந்தைதகிக ருடையகடைப் பெண்ணேகண்ணே
யரைந்திடுமென் வார்த்தைதனை யின்றுகேளாய்
இனத்துடனே யென்வசையே பேசவேண்டாஞ்
செங்கரத்திற் கவண்பிடித்துச் சுழட்டிவீசிப்
புனத்தினிலே பக்ஷிகளை விரட்டிநிற்கும்
பொற்கொடியே யுன்வலத்தோள் வலித்திடாதோ
வனத்தினிலே யுனைவிடுத்தே யேகவென்றால்
வாடுதையோ வென்றன்மனம் வள்ளிமானே.

சந்தவரை வந்தருக காதா வென்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

செந்திருபோலந்தழுள்ள          மாதே-அடி.
சந்த்ரவதனியேகேளிப்போதே          நானே
உந்தனைவிட்டேகிடவேகோதே          கேளாய்சாதே
சகிக்காதே          மனம்கொந்திடுதேமோடிகள்செய்யாதே

உத்தமியேயித்தியே          நீயே-கவண்
வைத்துமேபக்ஷிமீதெறிந்தாயே          கரம்
மெத்தவேநோகாதோபுகல்வாயே          வருவாயே
தருவாயேமுத்த          மித்ததிபரண்மேல்நிற்கின்றாயே

வெய்யவன்றனிடசுடர்          தானே-பட
மெய்யினிலேகிறங்குன்றாந்தேனே          அடி
தையலேயுன்மைதனைச்சொன்னேனே          இன்றாவனே
சகியேனே          அடிவையமீதன்றுலேமெலிந்தேனே

அன்னமேயுன்வேலைதனை          நானே-வெகு
சின்னயமுடனேபுரிவேனே          தினந்
கன்னிகையேதொண்டுசெய்வேனே          உரைத்தேனே
த்திதானே          அடிமின்னாளேசொந்தமுள்ளமானே

வசனம்.

மடமயிலே யானுரைக்கும் வார்த்தைக்கேளாய் செங்கரத்
கவணைப்பிடித்தே கல்வைத்துப் பக்ஷிகள்மீது எறிகின்றாயே உ
லத்தோள் வலித்திடாதோ சூரியனுடைய வெப்பந் தேகமீது ப

ன்றதே உன் தமிறன் குன்றிப்போகுமே அடிக்கடி பக்ஷிகளுக்கோலோலமிட்டிருக்கின்ற உனது நாவு வலியெடுக்காதோ நீ இப்பொழுது செய்கின்றவேலையை யாராவதுகண்டால் மனமிளகிவிடுமே எனக்கு வெகுபாவமாய்த்தோனுகின்றது ஆகையினால் மனமகிழ்ந்து இந்தப்பரண் மீது அமர்ந்திருப்பாய் நீசெய்கின்றவேலையை நான் செய்கின்றேன் உன்னை விட்டுப்பிரிந்து போவோமென்றாலும் என்னுடைய மனதுநோகின்றதே எனக்கு வெகுசொந்தமான பெண் நீயல்லவோ என்செய்வேனடி கண்மணி.

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

இந்தவனந் தனில்மானை யெய்தேனேடி
    இங்குவந்த துண்டோகண் டாயோவென்றே
எந்தனிடங் கேட்டுறவு வேடர்செய்ய
    எண்ணியருகே நெருங்கி நயந்துவென்னைச்
சொந்தமென்று பூகின்றதுனக் கடுக்குமோசொல்
    துடுக்குமெத்தக் கொண்டவனே கேளாயுந்தன்
றந்தையுமென் றாயுமுடன் பிறந்தாரோமரி
    சல்லியிங்கு நில்லாதே செல்லுவாயே.

அண்டப் பிரட்டனே போடா வென்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

புத்தியில்லாவன — வேடா-இன்று
போதனை செய்யாதே — போடா
அத்தை தமகளோ — நானேடா-சொந்த
மாகுமென்றாய் — குடிகேடா

உன்றந்தையோடெந்தன் — றாயே-கேளாய்
ஒன்றாய்ப்பிறந்தாரோ — நீயே
இன்றஞ்சாதேயரைக் — தாயே-இது
எற்குமேரிசென்றிடு — வாயே

மானைத்தேடிவந்தே — னென்றாய்-பின்பு
வாழும்நகரைச்சொல் — லென்றாய்
ஈனயெனைச்சொந்த — மென்றாய்-லேசாய்
எண்ணியேமுன்னே — நவின்றாய்

அன்னாருன்னையே கண்டாலே-வெரு
ஆக்கினைசெய்வா ரிக்காலே
மன்மீதிலே யெந்தனுமே-அவ
மானம்வரும் பேசினாலே
மண்டலத்தின்மீது யேது-உன்போல்
மட்டியுமே கிடையாது
சண்டித்தனமா யிப்போது-இங்கு
தங்கினுமேல்வருந் தீது

வசனம்.

அடா வேடுவனே மானைத்தேடி வந்தென்னைச் சிநேகஞ்செய்யவா நினைத்தனை உன்னுடைய எண்ணம் நடவாது இப்பூலோகத்தினிடமாக வுமக்குச் சமானமில்லை என்றுன்னே நின்று சொந்தமென்று தெரிவித்தாய் உனக்குமெனக்குமென்ன சொந்தமிருக்கின்றது நீயோ மிக்கானகத்தில்வாழும் வேடன் யானோ சிற்றூரில்வசிக்குங்குறத்தி அல்லது எனக்கு நீமாமன்மகனோ அத்தைமகனோ கொஞ்சமாவது புத்தியில்லாது பகன்றாயே நீவரும்பொழுதே மானைத்தேடிவந்தேனென்றாய் அதன்பின் நீவசிக்கும் நகரைச் சொல்லென்றாய் பின்பு என்னைச் சொந்தமென்றாய் நானினிமேற் சகிக்கேன் வந்தவழி செல்லடாமூடா.

சுப்ரமண்யவேடன்சொல்

விருத்தம்.

கன்னிகையே தினைப்புனத்தி லுனையேநான்
  கண்டவுடனே மகிழ்வு கொண்டேதானே
என்னுடைய கருத்தினிலே சொந்தமேயா
  மென்றுதினைந் தேயுரைத்தேன் மடமானேகேள்
அன்னநடை மின்னரசே சொந்தமோநா
  ன்றுமென்றே நினைந்தனையா யல்லவென்று
உன்னுடைய கருத்தைவெடுத் தெனதுமுன்னே
  ஓதிடுவா யகமகிழ்ந்தே யின்றுதானே.

காட்டுக்குச் சென்று மிர்கவேட்டையென்றவர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சுந்தரமிகுந்திலங்கு மந்தஹாசியுந்தனுக்குச்
சொந்தமாயில்லையா கூறுவாய்
சந்தேகம்வேண்டாந் ததியே
திண்ணமதாயில் ரூபவதியே (சுந்தர)

கண்டவுடனே மகிழ்வு கொண்டுவேகமாகவேயுன்
னண்டைவந்துரைத்தேன் சொந்தமென்றுமே
தொண்டுபுரிவேனே நானே
சொன்னசொல்லதை மீறேனே (சுந்தர)

கன்னிநீசெய்யும்வேலைக ளன்னையென்மனமகிழ்ந்தே
முன்னமுடனேசெய்வேன் நானுமே
உன்னைவிட்டுமே பிரியேன்
ஒடென்றுமுயிர் தரியேன் (சுந்தர)

கொஞ்சமேனுமுந்தனிட நெஞ்சமிளகாதோகல்லோ
அஞ்சுகமேகேளாய் படியேனுக்கே
தஞ்சமில்லை புவிமீது
வஞ்சியேமகிழ்ந் திப்போது (சுந்தர)

பத்தினிமாரெந்தனுக்கு எத்தனைபேரிருந்தாலும்
பட்சமுந்தன் மீதிருக்கும் மங்கையே
உத்தமிசலம் பெருவாய்
இத்தருணமே தெரிவாய் (சுந்தர)

வசனம்.

கண்மணி நீ செய்கின்ற வேலையை யான்செய்வேன் அனுதினமுந் தொண்டுபுரிகுவேன் உன்னுடைய சொல்லை மீறேன் பத்தினிமார்களெந்தனுக்கு யெத்தனைபேர்க ளிருந்தாலும் உன்மீது பக்ஷமிருக்கும் மடமானே உன்னை யிவ்வனத்திற் கண்டவுடனே எனக்குச் சொந்தமென்றுநினைக் துன்னிடத்திற் புகன்றேன் பெண்ணரசி யுன்னுடைய மனதிற் சொந்தமென்று நினைத்தனையா இல்லையென்று மாதரசி மனமகிழ்ந்தோதுவாய்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

சொந்தமென்றே வந்துரைத்த வேடாகேளாய்
தோகையெடுத் துரைத்திடுவே னுந்தனுக்கே
பந்துஜனமாமாமன் மகனோ நீதான்
பயமன்டயா திப்புனத்தி லிருக்கலாமோ
உந்தனுக்கே யினிக்கெடுதி நேருமோயா
னுண்மைசொன்னே னிவிடம்விட்டே விலகுவாயுன்
றந்திரங்கள் மந்திரங்க ளொடுயெந்த
ஜாலமுமே செல்லாது சாற்றினேனே.

இன்னமுங்காணேனேயென்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

பஞ்சமாபாதகனே பழிகுலைக்
கஞ்சாநசாதகனே சொந்தமோநான்(பஞ்)

அநுபல்லவி.

கொஞ்சமும்நெஞ்சிலே அஞ்சாதவஞ்சிமூன்
கூறும்வனவேடா கூறும்வனவேடா
தரும்மோட்டா-குடிகேடா அடாபோடா(பஞ்)

சரணங்கள்.

பித்தமேமெத்தப் பிடித்தவனேயெந்தன்
அத்தைமகனோடா அத்தைமகனோடா
முறையோடா-முழுமூடா செல்லடா(பஞ்)

எந்தனிடவேலை சந்ததமுஞ்செய்வே
னென்றேயடாதோசி என்றேயடாதோசி
முன்னேபேசி-கையைவீசி வந்தாய்சீசீ(பஞ்)

எத்தனைவித்தைகள் கற்றிருந்தாலும்நீ
என்னிடஞ்செல்லாது என்னிடஞ்செல்லாது
வேண்டாம்வாது-வருந்தாது இப்போது(பஞ்)

வசனம்.

அடா வேடுவனே என்னதெரிவித்தாய் நானுனக்கு அம்மான் மகளா அல்லது அத்தைமகளா அல்லதுனக்கு நான் பந்துஜனமா பித்தப்பிடித்தவனே யிங்குகத்திவிற்பதினா லென்னபலன் வீண் வார்த்தைபாடுகின்றாயே உனக்குத் தருமா நீயாகுமா நீ கற்றவித்தையிங்குச்செல்லாது இனியென்முன்னின்று வாதுகூறினா லுனக்கவமானம்வந்துசேரும் வந்தவழியே என்னைத்திருப்பிப்பாராது மரியாதையோடு சென்றுவிடுவாய் துஷ்டா.

சுப்ரமண்யவேடன் சொல்

கந்தார்த்த விருத்தம்.

தங்கமிருக் கிலங்குமட மானேதேனே
சொக்கமிலை யென்றுசிரித் துரைத்ததாலே
சங்கைகொண்டே மதிமருண்டே நின்றேனோகா
சமர்த்தியும்போ லவனியிலை கண்டிலேனே

தங்கமேயென் வார்த்தைதனைத் தடுத்திடாதே
தக்கவன்றா னுனக்குச் சரசிமேயேகேள்
அங்கஜனை கணைவிலக்கச் சொந்தமாக.
தங்கமே வாவென்றுசொல்லடி யென்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

அன்னமேநீஎன்னை மணராய் எழிலிருக்க
சொர்ணமேமயென் சொல்லையுணராய் (அன்)

அநுபல்லவி.

கன்னல்வில்லிமலர்வாளி தன்னைவிடுத்தேயின்னுளி
என்னைவதைக்கின்றனடி கன்னிகையேவாதேனடி (அன்)

சரணங்கள்.

சொந்தமில்லைபந்தமில்லை என்றுரைத்தசுந்தரியே
தோகைமயிலேகுயிலே மடமானே
எந்தனுக்குமுந்தனுக்கு மிந்தவேளைசொந்தமாக
எடுத்துரைப்பேனேயது என்னவென்றாலேசெந்தேனே(அன்)
உன்னையன்றியேநான்வேறு கன்னிகைவதனம்பாரேன்
ஓவியமேயென்னோடு வாடியேபாராய்
மின்னலிடையாளேநானே நன்னயமுடன்சொன்னேனே
மெல்லிகையேநீயுந்தானும் நல்லபருவமிசையிதே(அன்)

வசனம்.

கண்மணி என்னைச் சொந்தமில்லையென்று புகன்றாயே வேண்டுமென்றாற் சொந்தமாவதற்குக் கேளாய் மாதுசிரோன்மணி வெகுநாட்செல்லுமோ என்னைத் திருமணம்புரிந்துவிட்டாயானாற் சொந்தமாகு'மா ஆகாதா மனமகிழ்ந்து சொந்தமாகுமென்று எந்தனிடந் தெரிவித்தாயானால் வந்தவழியே செல்கின்றேன் வேறுநிந்தனைசொல்லவேண்டாம் மாதரசியே என்வதனத்தைப் பார்ப்பாய்.

வள்ளியம்மை சொல்

கந்தார்த்த விருத்தம்.

இல்லையான் சொந்தமென்றே யின்றுதானே
இயம்பினதைக் கேட்டகமு மிகவேவாடி
வல்லவனே பரணருகே நெருங்கிவந்தே
வம்புபுரிந் தடிக்கடிநீ மாழ்கமாதே

மெல்லிகையே யெனைமணராய் மணராயென்றே
விளம்பினவா யானுரைக்கும் வார்த்தைதன்னைத்
தொல்லுலகோர் புகழ்ந்தேற்றும் வேடாகேளாய்
வந்தனங்கள் தந்தேனிதோ வென்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சொந்தமாகு
சுந்தராநீயே
மெந்தனுக்கே
வெகு(சொந்)

அநுபல்லவி.

அந்தமாகவே
உந்தனைகத
இந்தவேளையே
மடைந்திடுவாயே(சொந்)

சரணம்.

வாதுமேததி
நீதியோ
வஞ்சி[illegible]ர்வந்தே
யஞ்சி[illegible]
யோதுராயிது
தகாதுவீணிலே
கெஞ்சுராயினி
துஞ்சுவாய்செல்(சொந்)

வசனம்.

வேடனே யுமக்குநான் சொந்தந்தான் இனிமேலாவது வாது செய்யாது சிந்தைப[illegible]ந்து வந்தவழியே சென்றுவிடுவாய் என்முன் னின்று புலம்பாதே யான் ஒண்டியா யிருக்கின்றேனென்று நினைக் கவேண்டாஞ் சேடிமார்கள் தென்பக்கத்தி லிருக்கின்றார்கள் தவிர வும், அண்ணமார்களே யென்றொரு சப்தமிடுவேனாகில் அதிகவேகமா கவந்துவிடுவார் நினைத்துக்கொள்வாய்.

சுப்ரமண்யவேடன் சொல்

கந்தார்த்த விருத்தம்.

வனவேடனென்றே யனமேநீயென்னை
மதியாதுபோ வென்னவே
இனிமேவுகின்ற புனமீதிருந்து
தெளிவாகவே யறைந்தாய்
கனியேயுன்னாசை யதனால்நொந்தேனே
கழாராயுனக்கு யின்றே
கணமாகுமோயீ தனியாயமாமே.

செப்புவதென்னடி மட்டிகாளென்றசை மெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டழகியுந்தனைநானே அடிசெந்தேனோ
விட்டுமேபிரிவேனோ மானே (கட்)

அநுபல்லவி.

கட்டழகியுன்னையின்று விட்டுநான்பிரிவேனென்று
கருத்திலிந்நினைந்திடாதே வெருத்தேயரைந்திடாதே (கட்)

சரணங்கள்.

அந்தமேமிகமிகுந்த சுந்தரிகேளாயிப்போது
சொந்தநீயாவாயெனவே யெந்தனிடமேயுரைத்தாய்
சோறுதேஆவி மீருதேமயல்
காரிகையேமனக் தேரியெவ்விதங் (கட்)

உத்தமியேசித்தஜனும் மெத்தவேகணை விடுத்தே
இத்தருணந்தன்னிலேயென் சித்தம்நோகச்செ னே
ஏதடி யிந்த வாதடியுத
யாதடி யிது நீதடி அடி (கட்)

வசனம்.

கண்மணி யுன்னுடைய திருவாக்கினாலே நான் சொந்தமென்று எப்பொழுது தெரிவித்தனையோ அப்பொழுதே யான் சொந்தமாகி விட்டேனே பெண்ணரசே, சொந்தக்காரனைப் போவென்றுசொன்னாற் போவேனோ, நீபோகச்சொல்ல நீதியாகுமா, மனந்துணிந்ததா, உந்தனைவிட்டுப் பிரிந்துபோவோமென்று நினைக்கப்போதிலும், என்னுடையமனம் வாடுகின்றது, யானுன்னிட சமுகத்திலிருந்து, இட்டவேலைகளைச் செய்து, இதழமிர்தத்தை யுண்டு, என்பசிதீர்வேனடி.

வள்ளியம்மை சொல்

கந்நார்த்த விருத்தம்.

இதுஞாயமாமோ குடிகேடனேயென்
வீட்டுமுன் னுரைத்தவேடா
தமையண்ணமார்கள் வருவார்களான
தால்நீ வசித்திருக்கும்.

பதியேகுவாயே கெதியில்லையென்று
பகராதே முழுமூடனே
அதிபாவிதோஷி கெடுவாய்நீயிரென்.

இந்தக்கிழவனுன்னை யென்னசெய்தானென்ற வர்ணமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அண்ணமார்வருகின்றார் மண்ணின்மேலுன்னையடா
ஆக்கினைகள்செய்குவாரடா போடாமூடா
கற்றவித்தைதனையே இத்தகிகாட்டாதேடா
காசினிமீதிலுன்போல் கண்டதில்லைநான்வேடா
ளர்தனுடனேவாது இடுகின்றாய்நீயாகாது
இந்தவிதங்கூறிலோ இப்புவியோர்க்கேற்காது
பித்துமெத்தப்பிடித்தே கத்துகின்றாய்நீவேடா
இத்தருணமுன்பதி ஏகுவாய்குடிகேடா
போம்போம்வந்தவழியே புனத்தினிலேநின்றே
புலம்பிடே [illegible] மடா பூவைமுன்னேயின்றே

வசனம்.

அடா வேடுவனே நீகற்றவித்தைதனைக் காட்டவேண்டாம் என் முன்னின்று வீண்வார்த்தை யாடிக்கொண்டிருக்கின்றாய் உனக்கு வெகுதயிரியம் ஏற்பட்டிருக்கின்றது அத்தயிரியத்தை யின்னுமரை நாழிகையிற் பார்க்கின்றேன் எனது சகோதரர்களான வேடுவர்கள் காட்டில் வேட்டையாடி என்னிடமுன்னமேவருகின்ற வேகத்தைப்பார்த்தனையா நீ யுன்பதியேகவேண்டா மிங்குநில்லடா வேடா.

சுப்ரமண்யவேடன் சொல்

வசனம்.

எனது ப்ராணசகி உன்னுடையமனது மென்னுடையமனது மோர்மனதாகின லிவர்கள்வந்து நம்மை யென்னசெய்வார்கள் ஒன்றுஞ் செய்யமாட்டார்கள் கண்மணி என்னையன்பா யருகணைத்தி ஒருமுத்தமிடுவாயாகில் இப்பொழுதே யான்பிராயணப்பட் டெனது சொந்தநகர்க் கேகுவேன் சுந்தரியே கல்லோ, இரும்போ, பெரும் பாரையோ, இவைகளாவ தோர்காலத்தி லிளகினுமே உன்னுடைய மனது இன்னேரவரை இளகாமலிருப்பதேதேனோ பெண்பாவாய் எனக்காதரவு கூறுவாய்.

## சுப்பிரமணியவேடன்

# வேங்கைமரமாகும் பாகம்.

சுப்ரமண்யவேடன் சொல்

விருத்தம்.

இத்ததியில் வனத்தினிலே நம்பிராஜ
 னீன்றெடுத்த வதிசூர வீரரான
புத்திரர்களனைவரதி வேகமாகப்
 பூவைவள்ளி முன்னாக வருகின்றாரே
உத்தமனு மென்னசெய்வே னென்றுமேழியன்
 னுளந்தனிலே தோணவிலை யப்போவிங்கே
மெத்தவே விண்ணுலவி வளர்ந்திருக்கும்
 வேங்கைமர மாகவுரு வெடுத்திட்டேனே.

வசனம்.

ஆகா! ஈதென்ன ஆச்சரியம் இந்தவேளையிற்றானே இவர்கள் வரவேண்டும், இன்னுங் கொஞ்சம் நாழிகை சென்று வரக்கூடாதா நாமிந்தவேளையி லென்செய்வோம், அதிவேகமாக வருகின்றாரே நல்லதோர்யோசனை செய்கின்றேன் நெடுநாளாக யிந்தவனத்திலிருந்த வேங்கைமரம்போல் அநேக கிளைகளோடு விண்ணுலவி யிருக்கும் படியாக வுருவெடுக்கின்றேன்.

போது வசனம்.

சுப்ரமண்யக் கடவுளானவர் வேடுவனைப்போ லுருவெடுத்து வள்ளியம்மையின்முன்னே வாதாடிக்கொண்டிருக்குந் தருணத்தில் அண்ணமார்களான வேடுவர்கள் காட்டில் வேட்டையாடி மனமகிழ்ந்து தங்கையாகிய வள்ளிநாயகியைப் பார்த்து அதிவேகமாகச் சிற்றூர்சென்று தந்தையாகிய நம்பிராஜனைக் காணுவோமென்று எல்லோரும் பேசிக்கொண்டு வருகின்ற விதங்காண்குக.


வேடுவர்கள் சொல்

கனகசபாபதி தெரிசனமொருநாளென்ற வர்ணமெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேடுவர் வந்தாரே-அதிபல
வேடுவர் வந்தாரே (வேடு)



அநுபல்லவி.

வேடுவர்வந்தாரே ஓடியேவேகமாய்த்
தேடியேதங்கையை நாடியுல்லாசமாய் (வேடு)

சரணங்கள்.

அம்புவில்லுமே யெடுத்து-பல
ஆயுதங்கரம் பிடித்து
கும்பாகவேதானே கூச்சலிட்டுமேயோடி
கோதைவள்ளியம்மைமுன் பாதைவழியேகூடி (வேடு)

கண்டவர் பயந்தோட-எழு
கருப்புநாய் முன்னோட
அண்டர்கள்போற்றிசெய்யும் அறுமுகனை நினைந்து
அனைவருங்கூடியே யொன்றாகமனமகிழ்ந்து (வேடு)

வசனம்.

தம்பிமார்களே என்னுடையவார்த்தையைக்கேளுங்கள் யாதெனில் நாமினி யிங்கிருக்கக்கூடாது செல்வோம்.

இளையவேடுவன் சொல்

வசனம்.

அண்ணா தாங்கள் கூறியபடியே நடக்கச் சித்தமாய்க் காத்துக் கொண்டிருக்கின்றோம் நாமெல்லோரு மெங்குசெல்வது மனமகிழ்ந்து கூறுவீர்.

மூத்தவேடுவன் சொல்

விருத்தம்.

சுந்தரஞ்சேர்தம்பியரே சொல்லைக்கேளீர்
துங்கமதவாரணங்கள் புலிகடன்னை
இந்தவனந்தனில்வேட்டை யாடினோமே
இனியிருக்கலாகாது இந்தவேளை
அந்தமிகுவள்ளியம்மை முன்னேசென்று
ஆதரவுகூறியனை வோருமாகச்
சிந்தைமகிழ்ந்ததிவேக மாய்ச்சிற்றூரே
செல்லுவோம்வருவீரே யின்றுதானே.

வசனம்.

அடா! தம்பிமார்களே யானுரைக்கும் வார்த்தையைக் கேளீர் நாமிந்தவனந்தனில் வேட்டையாடி அநேக விலங்கினங்களை வதை

செய்தோம், வெகுநாழிகையானது இனிமேல் வேட்டையாடவேண்டாம், அதிவேகமாக எல்லோரும் தங்கையாகிய வள்ளிநாயகிமுன்னேசென்று அன்னவள் மனமகிழ்ந்து தினைக்கதிரைக் காத்திருக்கும்படி ஆதரவுபுகன்று சிற்றூருக்குத் தந்தைமுன்னேசெல்வோம் வருவீர்கள்.

இளையவேடுவன் சொல்

விருத்தம்.

செந்தினையதனைப்பார்த்தே தீவிரமாகத்தானே
சுந்தரம்வாய்ந்தவள்ளித் தோகையாள்முன்னேசென்று
சிந்தையேமகிழ்ந்திருக்கத் தேறுதல்புகன்றுநாமே
அந்தமாய்ச்சிற்றூர்நோக்கி அனைவருஞ்செல்லுவோமே.

வசனம்.

அண்ணா தங்களுடைய ஆக்ஞைபின்படியே செந்தினைக்கதிரைப்பார்த்துத் தங்கையாகிய வள்ளிநாயகிக்கு வேண்டிய புத்திமதிகள் புகன்று அனைவோருமாகச் சிந்தைமகிழ்ந்து சிற்றூர் நோக்கிச்சென்று தந்தையைக்காணுவோம் தங்கைமுன்னே செல்வோம் வருவீர்கள்.

மூத்தவேடுவன் சொல்.

வசனம்.

தம்பி இதோ வருகின்றோம்.

இளையவேடுவன் சொல்

வசனம்.

அண்ணா! நமது தங்கையானவள் பக்ஷிகளை விரட்டும் விசித்திரத்தைப் பார்த்தீர்களா.

மூத்தவேடுவன் சொல்

வசனம்.

ஆம்! வெகுவிசித்திரமா யிருக்கின்றது சகோதரா.

வள்ளியம்மை சொல்

வசனம்.

அண்ணமார்களே வந்தனஞ்செய்கின்றேன்.

வேடுவர்கள் சொல்

வசனம்.

கல்யாண்! வள்ளிநாயகி அமர்ந்திருப்பாய்.

வள்ளியம்மை சொல்

வசனம்.

அவ்வண்ணமே வீற்றிருக்கின்றேனண்ணா.

மூத்தவேடுவன் சொல்

விருத்தம்.

மங்கைவள்ளி நாயகியே யானுரைக்கும்
வார்த்தைதனைக் கேட்டருகு வாயேதாயே
இங்கிதுமே வேங்கைமர மொன்றுண்டாகி
இருப்பதென்ன விந்தையொன்று மறிகிலோமே
சங்கையில்லா வுபசம்வளர்ந் தளாவிநிற்ப
தாச்சரியம் நேற்றிலையே யின்றைக்கேது
எங்களுக்கு மனமகிழ்ச்சி யோடுநீயே
எடுத்துரைசெய் திடுவாயே யின்றுதாயே.

வசனம்.

அம்மா வள்ளிநாயகியே சந்ததகாலமும் நாங்களிந்தவனத்தில் வேட்டையாடிக் கொண்டிருக்கின்றோம் தவிரவும் அடிக்கடி உன்னை வந்துபார்த்துச் செல்கின்றோம் இத்தனைநாளு மிந்த வேங்கைமரத் தைப் பார்க்கிலையே இன்றைக்கேதுவிந்தையாகயிருக்கின்றது எங்க ளுக்கொன்றுந் தோன்றவில்லையே உண்மையைச் சொல்லுவாய்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

உத்தமியா னுரைத்திடுவே னின்றுகேளீர்
ரோங்கிவளர்ந் திருக்குமிந்த மரமுந்தானே
எத்தனையோ நாட்குமுன் னுண்டானதைப்போ
லிருக்கிறதே யல்லாது மின்றைக்கேது
இத்தனைநா ளிங்கிருந்து மறிந்திடேனே
எந்தனிடங் கேட்பதென்ன வண்ணமாரே
சித்தமதி லுகந்தபடி யேசெய்வீரே
தீரரண சூரர்களே செப்பினேனே.

### வசனம்.

அண்ணமார்களே இந்த வேங்கைமரத்தைப் பார்க்கில் எத்தனையோநாளைக்கி முன்னுண்டானதைப்போ லிருக்கின்றதே இன்றைக்கி யெவ்விதமாய் வந்துவிடும் இத்தனைநாள் யாணிங்கிருந்தும் உண்டு இல்லை யென்று தெரியவாராது தங்கள் மனப்படி செய்து கொள்ளுங்கள்.

### மூத்தவேடுவன் சொல்

### விருத்தம்.

அந்தமிகுந்திலங்குகின்ற தம்பிமாரே
அரைந்திடுமென் வார்த்தைதனையேகேட்பீரே
இத்தவனந்தனிலே யனுதினமுந்தானே
எல்லோருமாகவரு வோங்கண்டோமா
எந்தனுக்குச்சந்தேக மாகவேதா
னிருப்பதிலையிவேக மாகவின்றே
விந்தையதாய்வந்துதினைப் புனத்திருக்கும்
வேங்கைமரந்தன்னையுமே வெட்டுவீரே.

### வசனம்.

அடா! தம்பிமார்களே எல்லோருமர்க யிந்தவனத்திற் றினந் தினம் வருவோமே இவ்வேங்கைமரத்தைப் பார்த்தோமா பார்க்கிலையே இன்றைக்கென்ன விந்தையாயிருக்கின்றது இம்மரத்தை யதி வேகமாக ஆயுதங்களினால் வெட்டிவிடுவீர்கள்.

### இளையவேடுவன் சொல்.

### விருத்தம்.

சொல்லியதோர் படிமுடிப்போம் நொடிக்குள்ளேதான்
சுந்தரனே யெந்தனண்ணை புகலக்கேளீர்
பல்லிவட கிளையிலிருந் தடிக்கும்விக்தை
பார்த்தீரா பார்க்கிலையா பதரவேண்டாம்
வல்லவரே நமதுகுல தெய்வமான
மால்மருக னுண்டுபயமொன் றுமில்லை
நல்லகிழ லனைத்தக்கொடுக்கும் மரத்தைவெட்ட
ஞாயமில்லை யென்னிடசொல் நம்புவீரே.

### வசனம்.

அண்ணை தாங்க ளாக்ஞையிட்டபிரகார மிந்தமரத்தை வெட்டதுணிந்தேன உடனே யிந்தமரத்தின் வடகிளையிலிருந்து பல்லி

சொன்னதைப் பார்த்திரா பார்க்கலையா இன்னிமித்தத்தை யோசிக்கில் நமது குலதெய்வமான சிவசுப்பிரமணியக்கடவுள் நிலைபோலத் தோன்றுகின்றது நல்லவிழலை வள்ளிநாயகிக்குக் கொடுத்துக்கொண்டிருக்கின்றதேயல்லாது வேறு அபஸ்வதை செய்யவில்லையே வெட்ட வேண்டாமண்ணே.

மூத்தவேடுவன் சொல்

வசனம்.

அடா! தம்பிமார்களே உங்கள் மனம்போலவே செய்வீர்.

வள்ளியம்மை சொல்

வசனம்.

அண்ணமார்களே யானுரைக்கும் வார்த்தைக்குப் பதில்கேட்க விரும்புகின்றேன் தங்கள் சித்தம் யாதுதெரிவிப்பீர்.

வேடுவர்கள் சொல்

வசனம்.

அம்மா வள்ளிநாயகி நீ என்னகேட்க விரும்புகின்றாயோ அதற்குப்பதி லுரைக்கத் தயாரா யிருக்கின்றோம்.

வள்ளியம்மைசொல்

கூறுகின்றேன் விபரங்கள் யாவுமொன்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அண்ணரேநீர் நன்னயமாக
அரைகு வீரே (அண்)

அநுபல்லவி.

மண்புவியுள்ளோர்கொண்டாடும் வல்லவரேநல்லவரே
மாரனை நிகர்த்தவரே மதியிலுயர்ந்தவரே (அண்)

சரணங்கள்.

அன்னைநங்கை மோகினியும்
அன்பன்நம்பி ராஜனுமே
பன்னகமணிந்த சிவன்
பாலனருளாற் சுகமோ (அண்)

சிற்றாரிலுள்ளோர் களுமே
திராதி சூரர்களே

சுற்றத்தா ரனைவோர்களுமே
சுகமாயிருக் கின்றாரா (அண்)
புள்ளிமயில்மேலேறி வரும்
புனிதன்வேல னருளால்
உள்ளசெய்தி யதனையே
உத்தமரே இத்தருணம் (அண்)

வசனம்.

அண்ணமார்களே நமது குலதெய்வமான சுப்பிரமணியக் கடவுள் கிருபையினாலே அன்னை நங்கை மோகினியும் பிதா நம்பி ராஜேந்திரனும் நமது சுற்றத்தார்களனைவருஞ் சுகமாக யிருக்கின்றாரா மனமகிழ்ந்து புகலுவீர்கள்.

வேடுவர்கள்சொல்

வசனம்.

அம்மா வள்ளிநாயகி நமது குலதெய்வமான முருகக்கடவுள் அனுக்கிரகத்தாற் சிற்றூரிலுள்ள குடிபடையாவரும் நமது அன்னைபிதா முதலியவர்களுஞ் சுகமேயிருக்கின்றார்கள்.

வள்ளியம்மைசொல்

வசனம்.

அண்ணமார்களே மகிழ்வு கொண்டேன்.

வேடுவர்கள்சொல்

விருத்தம்.

வள்ளியேமனது மிக மகிழ்ந்துகேளாய்
வழுத்திடுவோமெங்களிட வார்த்தைதன்னைப்
புள்ளிமயில்வடிவேல ரருளுமுண்டு
புனத்தினிலேபயமடைய வேண்டாமம்மா
தெள்ளரவேதினை விளைய வெகுகாலந்தான்
செல்லுமென்றுநினைக்காதே மானேதேனே
உள்ளசெய்தியின்னுமொரு மாதமாகும்
உத்தமிகேட்சேடிகளோ டிருந்திடாயே.

வசனம்.

அம்மணி வள்ளிநாயகியே செந்தினை நன்றாய் விளைவாக இன்னுமொரு மாதமாகும் அதன்வரை பயமடையாமல் நமது குலதெய்வமான குமரகுருபரக்கடவுளை மனதில் நினைந்துகொண்டு தென்ப-

க்கத்திற் பக்ஷிகள் கதிரைக் கொய்யாது பாதுகாத் திருக்குஞ் சேடிமார்களோடு சந்தோஷமாக விற்றிருப்பாயம்மா.

வள்ளிசொல் வசனம்

அண்ணமார்களே யானவ்வண்ணமே செய்கின்றேன்.

வேடுவர்கள்சொல்

விருத்தம்.

செந்தினையத்தினைக்காத்தே சேடியரோடிருப்பாய்
இந்தமாவனத்திலேவாழ்ந் திருந்திடும்விலங்குமாளச்
சிந்தையேமகிழ்ந்துவேட்டை செய்துமேசிற் றார்நோக்கிச்
சுந்தரிசென்றுவாரோஞ் சுகமொடுயிருந்திடாயே.

வசனம்.

சகோதரி வள்ளிநாயகி நாங்களிந்த வனத்தில் வேட்டையாடி மிருகங்களைக்கொன்று வில்லோருமாகச் சிற்றாரைநோக்கிச் செல்கின்றோம் நீ சேடிமார்களோடு இங்குவிற்றிருப்பா யித்தநியெங்களுக்கு விடையீவாய்.

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

சிரிசைக்குயில்கள்கூவுந் தினைப்புனந்தனிலேசேடி
மாரொடுகாவல்செய்தே வந்திடுவேனேநாளை
தாரணிபுகழும்ஞான சண்முகனருளினாலே
தீரரேமகிழ்ந்துசிற் றார் செல்லுவீர்போற்றிபோற்றி.

வசனம்.

அண்ணமார்களே சண்முகக்கடவுளி னருளினாலே இப்புனத்தைச் சேடிமார்களோடு காவல்செய்து கொண்டிருக்கின்றேன் பக்ஷிமார்களிட க்ஷேமத்தையு மென்க்ஷேமத்தையுந் தந்தைதாயிடத்திற் புகலுவீர்கள் இந்தவனத்தில் வேட்டையாடி அதிசீக்கிரமாகச் சிற்றார்சென்று வாருங்கள் போற்றிசெய்கின்றேன்.

வேடுவர்கள்சொல் வசனம்.

கல்யாண் சென்றுவருகின்றோமம்மா வள்ளிநாயகி.

வள்ளியம்மைசொல்

வசனம்.

ஆகா ஈதென்ன ஆச்சர்யமா யிருக்கின்றது நமதுமுன்னே ஒருவேடுவன் வாதாடிக்கொண் டிருக்கிறானே அண்ணமார்களைக் க

ண்டவுடனே அன்னவனுக்கு என்னவிதமாக மனதிற்றோன்றின தோ அவனின்னபக்கமோடி யொழிந்தானென்று தெரியவில்லே நமக்கு அண்ணமார்களிருக்கும்வரைக்கு மென்னகுறை எல்லாம்முருக்கடவுள் செயலல்லாது வேறல்ல.

### பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக வள்ளிநாயகி அண்ணமார்களேயனுப்பிவைத்தபின் பக்கத்தில் வேங்கைமரமாய் நின்ற சண்முகக்கடவுள் மருபடியும் வேடவுருவெடுத்து வள்ளியம்மை முன்னேநின்று தர்க்கமாடுகின்ற விதங்காண்குக.

## வேங்கைமரமாய்நின்ற வேலவர்
## வேடவுருவெடுத்து
## வள்ளியம்மைமுன்னே
## தர்க்கமாடும் பாகம்.

ஆயலோட்டும் பெண்ணே யென்றவர்ணமெட்டு

சுப்ரமண்யவேடன் சொல்

இராகம்-இந்துஸ்தான்-பியாக்தாளம்-ஆதி

கண்ணிகள்.


வாதுபேனேபெண்ணே அடி
வஞ்சியேமோக மிகவே
மிஞ்சியேஉந்தனை காணே
கெஞ்சியேவாடினே னப
ரஞ்சியேதஞ்சம்வே றில்லே (வாது)

வள்ளியம்மை சொல்.

வீணுரையாடாதே அடா
வேடனேதகுமோ குடி
கேடனேபாவியே முழு
மூடனேநில்லாதே யப
கேடனேஓடிடு வாயே (வீணு)

சுப்ரமண்யவேடன் சொல்.

ஞாயமாமோபெண்ணே அடி
நானடியுன்சொல்லே யேமீ
றேனடிதொண்டுமே செய்கு



வேண்டியெவ்விதம் மறப்
பேண்டிசெந்தேனே வாடி (வாது)

வள்ளியம்மை சொல்.

சீச்சிவாதாடாதே அடா
நீதடாவந்திடுமே யிப்
போதடாயென்றன்முன்னே நில்
லாதடாஉன்வித்தைகள் செல்
லாதடா அடடா போடா (வினு)

சுப்ரமண்யவேடன் சொல்.

பாவியோநானேடி அடி
பாரடிபதிலெனக் குக்
கூறடிபக்ஷம்வைத் துமே
சேரடிபாவையே மனந்
தேரடிசெப்பினே னடி (வாது)

வள்ளியம்மை சொல்.

காயேபுலம்பாதே அடா
நானடாயினிமேற் சகிக்
கேனடாவுன்சொல்லை யேகே
போனடாயின்னேரம் பொருத்
தேனடாஅடடா வேடா (வினு)

சுப்ரமண்யவேடன் சொல்.

வாலிபவொய்யாரி அடி
மங்கையேமருவவா ராய்
சங்கையேவேண்டாமடி யுன்
கொங்கையேதருவா யெந்தன்
செங்கையாலெடுத் தணைய (வாது)

வள்ளியம்மைசொல் வசனம்.

அடாபாவி எனது அண்ணமார்கள் சென்றவுடனே வந்துவெகுகெம்பீரமாக என்முன்னின்று வாதாடுகின்றாயோ பெண்கள்தானே யிங்கு யிருக்கின்றார்களென்று நினைந்தனை யிதோ கரத்திற்பிடித்திருக்கின்ற கவணைலடிப்பேன் வந்தவழியே மரியாதையோடு எனது அண்ணமார்கள் முன்புவந்தபொழுது மெவ்விதமாக ஓடினாயோ அவ்விதமாகச் சொல்லாமலோடுவாய் துஷ்டனே.

சுப்ரமண்யவேடன்சொல் வசனம்.

கண்மணி! கல்லாலென்னையடித்தாலும் அடிபடுவேன் உன்னை மணம்புரிய ஓர்மனப்படுவேன் சுகப்படுவேன் அன்புமொழி கூறி அருகிலழைத்து ஆலிங்கனஞ்செய்து யிதழ்முர்தத்தைக் கொடுப்பாய் கவலையெல்லாம் விடுப்பாய் இரவும்பகலுங் காமலீலையைத் தொடுப்பாய் என்னுடைய மடிமீது படுப்பாய் மாதுசிரோண்மணியே தயைசெய்வாய்.

வேறுதர்க்கம்.

மோடிசெய்யாமலெங்கள் மோகன் திராயென்ற வர்ணமெட்டு.

வள்ளியம்மைசொல்

இராகம்-தேசிகதோடி-ஏகதாளம்.

பல்லவி.

வாதுசெய் யாமலேயிப்
போதுதெட்டா வேடா-அடா (வாது)

அநுபல்லவி.

மார்க்கமா-மார்க்கமா மார்க்கமா-மார்க்கமா
வஞ்சிமுன் னில்லாதே (வாது)

சுப்ரமண்யவேடன் சொல்

பல்லவி.

மோகஞ்சகிக்கே லிந்த
மோடிசெய்யாதே சுந்தரி-அடி (மோக)

அநுபல்லவி.

மொழிந்தேன்-மொழிந்தேன் மொழிந்தேன்-மொழிந்தேன்
முன்னமேநீ வாராய் (மோக)

வள்ளியம்மை சொல்

சரணங்கள்.

மட்டியேபலவாறு வார்த்தைகள்பேசி
வம்புகள்நீசெய்கின்று யடாதோசி
வஞ்சிமுன்னே நெஞ்சினிலே
கொஞ்சமுமே அஞ்சாமலே
வந்தாயடா எந்தனுலே
நொந்திவோ மிந்தவேளை
வஞ்சகாசெல்வாயே (வாது)

### சுப்ரமண்யவேடன் சொல்

### சரணங்கள்.

அஞ்சுகமேமடமானே செந்தேனே
அணைந்திடுவாயெனவோடி வந்தேனே
ஐயோமார னெய்தேவாளி
நொய்திடவே செய்கின்றானே
ஆதரவு காதலியே
பூதலமீ தாருமில்லை
ஆவிசோர்ந்தேனே (மோக)

### வள்ளியம்மை சொல்.

எட்டாக்கனிதனக்கே கொட்டாவிதானே
இடுவதினலகப்படுமோடா ஏனே
இத்தருணங் கத்தாதே
யுரைத்தேன் நீ நினைத்ததை
முடித்திடவே பித்தனே
புனத்தினி லிருக்கின்றாயோ
ஏதடாசெல்லாதடா (வாது)

### சுப்ரமண்யவேடன்சொல் வசனம்.

அன்னமே! வள்ளிமாதே எந்தனுக்கிசைந்த கோதே, மனமிரங்காதேனடி சாதே, மதப்பயலிப்போதே, கணைவிடுத்து வதைக்கின்றானடி, மோடியேனடி, சரசஞ்செய்வாயடி, பஞ்சவர்ணக் கிளியே வாடி, அன்பாயெனக்கோர் முத்தந்தாடி, கொக்கோக முறையாகக் கூடிப், பேச்சிமுத்தின் பதங்களைப்பாடிச், சல்லாபமாயிருப்போஞ் சுந்தரி.

### வள்ளியம்மைசொல் வசனம்.

அடா! வேடா, உனக்குத் தகுமோடா, யிது முறையோடா, மானமில்லையோடா, எட்டித்தூரப்போடா, மட்டி, அடிக்கடி என் முன்னே கிட்டி, வருகின்றாயே சுட்டி, இந்தவார்த்தைகளைச் சொல்லாதே; பரணருகே நில்லாதே, இன்றே தீதுவரும் நாயே, வந்தவழி செல்வாயே, இன்னேரவரை பொறுத்தேன், வேணநீதிகளை யுரைத்தேன், கேட்காது வாதாடுகின்றாயடா தோஷி.

## வேறு தர்க்கம்.

ஆறுமுகவடிவேலவனே-கலியாணமுமென்ற வர்ணமெட்டு.

சுப்ரமண்யவேடன் சொல்

இராகம்-செஞ்சுருட்டி-அடதாளம்-சாப்பு.

கண்ணிகள்.

இன்னுமனதடிகின்னிகையேயிரங் காதத்துஞாயமில்லே-அடி
இன்பசுகந்தாராயன்புபாராட்டிபே யின்றுகேளாயென்சொல்லே

வள்ளியம்மை சொல்.

[illegible]ளிலமீதிவேயுன்போலகாணேனீ தேற்குமோடாவேடா-சும்மா
எந்த[illegible]ல்கேவந்துகொக்கிடச்செய்குவ தேனேமுழுமூடா

[illegible]ரமண்யவேடன் சொல்.

[illegible]ந்தனேவிட்டுமேசுந்தரிசென்று லுறக்கமும்வந்திடுமோ-இன்று
[illegible]ந்சாதமோ ஒண்டொடியேயென் னுடலெற்றரிந்திடுமோ

[illegible]ள்ளியம்மை சொல்.

சொந்தக்காரன்போல[illegible] சொல்லுகின்றப்பவா[illegible]-முன்னே
தோஷிமே[illegible] துஷ்டாவருந்தித

[illegible]

[illegible]ரமண்ய[illegible] சொல்.

இ[illegible]ருமென்[illegible] [illegible] தேனேமடமானே-என்ன
[illegible]னுமடி[illegible] துகின்றே செல்லுவேனோமானே
[illegible]வேலே

[illegible]மை சொல்.

வா[illegible] நடவா[illegible] [illegible]இங்குமே [illegible]ஞ்சகாலில்லாதே-அடா
மட்டியென்ன[illegible] [illegible]கிட்டிவந்[illegible] [illegible]தைகள்சொல்லாதே

[illegible]ரமண்ய[illegible]

சித்தஜனும[illegible] [illegible]ந்தவிட்டே[illegible] [illegible]கின்றுமேபாவி-அடி
சித்தம்மித்[illegible] [illegible]துமேகவி[illegible] [illegible] சேர்ந்தனைவாய்தாவி

வள்ளியம்மை [illegible]ல்.

[illegible]த்தைதடன்னேபேசுத்தமிழுன்காட்டவேண்டாமடாபோடா-நீயே
மெள்ளமெள்ளவந்துதுள்ளிவிழுகாதே வீண்வார்த்தையேன்வேடா

சுப்ரமண்யவேடன்சொல் வசனம்.

கண்மணி! உந்தனை விட்டுச்சென்று விரவில் நீத்திரை வர அன்னமுண்டாலும் உடலெற்றரியாது மதப்பயல்செய்கின்ற நோ இன்னேரவரை பொருத்தேன் இனிமேற் சகிக்கக்கூடாது ஒரு மங் கூடிக்குலாவியிருந்து ஆவல் தீர்ந்தபின்பு கைவிடுவேனென நினைந்தனை அவ்விதமெண்ணவேண்டாம் பாவையே.

வள்ளியம்மைசொல் வசனம்.

அடா! வேடா நீ சொந்தக்காரன்போல வந்து நின்று எ முன் வாதாடுகின்றாய் யானென்ன சொன்னபோதிலுங் கொஞ்ச வது அவமானமில்லாது கண்ணே! கண்ணே! யென்று சொல்கி றாய், அடா உனக்குப் பித்துப்பிடித்துப்போய்விட்டதா, நீ வேடு குலத்திற் பிறந்தவனாயிருந்தாற் சொன்னசொல்லைக் கேட் குலத்திற் பிறந்தவனல்ல என்முன் னில்லாதே அடா மசலி

வேறு தர்க்கம்.

அன்னமே யுனையன்றி வேறு துணையாரடியென்ற வார்...

சுப்ரமண்யவேடன் சொல்

இராகம்-தேசிகதோ... அடதா ...ளம்.

பல்லவி.

உத்தமியாளே ...சித்தமேமிக
வைத்தனைந்திடு வாயடி அம். (உத்த

அநுபல்லவி.

சித்தினியாளே இந்ததியொரு
முத்தமேகொடுத்தி ...டாயடி (உத்

...ம சொல்

...தி.

வேடனேபித ...ல்ல நீதியா...மா
ஓடிவாரும்முன் ...ளில்லாதடா... (வேட

அநுபல்லவி.

மூடனேகுடி கேடனேயிது
மூர்க்கமாவுனக் கேர்க்குமா-அடா (வேட)

சுப்ரமண்யவேடன் சொல்

சரணங்கள்.

அன்னமேகாவே உன்னிதமாக
அறுதினந்தொண்டு புரிவேனே
கன்னிகையாளே நன்னயமாகக்
காமலீலைசெய்வாய் மானே-அடி (உத்த)

வள்ளியம்மை சொல்

சரணங்கள்.

கொஞ்சமும்நீயே பாவியே
கூறுடையடா வஞ்சியேன்முன்னே
கெஞ்சிநிற்பதேன் தோஷியே-அடா (வேட)
கேவலமிது

சுப்ரமண்யவேடன் சொல்.

வஞ்சியேமோக மிஞ்சியேநானே
வாடினேன்மொழி யேனடி
தஞ்சம்வேறிலை யஞ்சகமேயென்
சஞ்சலந்தனைத் தீரடி-அடி (உத்த)

வள்ளியம்மை சொல்.

மன்னினிமீதிலே பெண்களினால்வெகு
மன்னர்கள் மடிந்தாரடா
புண்ணியமுனக்குண்டடா இனிப்
புனத்திலே நில்லாதேகடா-அடா (வேட)

சுப்ரமண்யவேடன்சொல் வசனம்.

மாதுசிரோன்மணி! இன்னுமென்மீது தயவில்லையா, நானுனக்குச் சரியானவனில்லையா, வாய்திறந்துபேசினால் வாய்முத்துச் சிந்துமோ, அவ்வண்ணமேசிந்தினு லம்முத்துகளை வாரியெடுக்கின்றேன்மாதே, எனக்குவாய்த்த கோதே, தடை சொல்லாதே, இப்பொழுதே, கட்டித்தழுவுவாய் காதலி.

வள்ளியம்மைசொல் வசனம்.

அடா! மூடா, குடிகேடா, உனக்கித் தகுமோடா, கொஞ்சமாவது புத்தி யில்லையோடா, இனிமேலென்முன் நில்லாதே, இந்த வார்த்தைகள் சொல்லாதே, நீ செய்யும் வித்தை என்னிடத்திற் செல்லாதே, அண்ணமார்கள் கண்டாலுன்னை யவமானஞ் செய்வார்கள் வந்தவழியே செல்லடா வேடா.

## வேறு தர்க்கம்.

இவளாரோ மதரதியோ வறியேனென்ற வர்ணமெட்டு

சுப்ரமண்யவேடன் சொல்

இராகம்-இந்துஸ்தான்-காப்பி-ஏகதாளம்.

கண்ணிகள்.

வந்தனைந்தே சுகந்தந்திடுவாய்
...மாதே மாதே மாதே
மையல்கொண்டேன் தையலேயான்
வாதுசெய்வதுந் வாதடிகேளாய்
கோதே கோதே கோதே

வஞ்சியே மதப்பாவி
வாட்டுறான் கணையேவி
மயிலே குயிலே
வருவாய் மருவாய்

மங்கையேசங்கைதேன் றங்கயிருந்த
மானே மானே மானே
அடிவாவீடு ஓய்யாரியே (

வள்ளியம்மை சொல்.

எத்தனைசொல்லியும் புத்தியுனக்கே
இல்லை இல்லை இல்லை
எந்தன்முன்னே வந்துநின்றே
ஏற்காதவார்த்தை கூறுகிறாய்தென்ன
தொல்லை தொல்லை தொல்லை
எட்டியே செல்லுவாயே
மட்டியே மூர்க்கனாயே
எனையே அணைவா
யெனவே மூறடா
இத்தருணத்திலே கத்துகின்றாய்
மூடா மூடா மூடா
அடா இந்த்ரஜால மேண்டா (எ

சுப்ரமண்யவேடன் சொல்.

அன்னமேயுன்னாலே யாமேலசின் கண்ணே
கொந்தேன் கொந்தேன் கொந்தேன்.

அங்கமுள்ள சுந்தரியே
ஆதரவுசெய்து வாவென்னவே
வந்தேன் வந்தேன் வந்தேன்

அட்டிசெய்யாதே மானே
விட்டுமே பிரியேனே

அடியா தகியே
அணைவா யென்னையே

அஞ்சுகமேயுனை கெஞ்சுகின்றேன்
நானே நானே நானே

என்னுவியே சஞ்சீவியே (வந்த)

வள்ளியம்மை சொல்.

மட்டியேவந்த வழிசெல்லுவாய்
வேடா வேடா வேடா
மாதுமுன்னே யோதுகின்றாய்
மார்க்கமாவன்பதி நோக்கியேநீ
போடா போடா போடா

வஞ்சகா வெந்தனுலே
துஞ்சிடுவாய் மண்மேலே
மடையா கடையா
அடா வேடுவனே
வல்லமைபேசியே நில்லாதேடா
இங்கு இங்கு இங்கு
அடாவஞ்சி யஞ்சிடேனடா (எந்த)

சுப்ரமண்யவேடன் சொல் வசனம்.

மாதரசே! யிப்பூலோகத்தி லுள்ளவர்கள் பெண்புத்தி பேதைமையென்று தெரிவிப்பார்களே யானின்னேரவரை யுன்னைக்கெஞ்சுகின்றே னுன்னுடையமன மிளகவில்லையே; அங்கஜன், ஐந்துமலர்க் கணையு மென்மீதுவிடுத்து வாட்டுகின்றனடி மயிலே என்னை மனமகிழ்ந்து மருவியணைவாய் மங்கையே தடைசெய்யாதே.

### வள்ளியம்மைசொல்வசனம்.

அடா! வேடுவனே இப்பிரபஞ்சத்தின்மீது உன்னைபோன்ற அறிவில்லாத மூடரொருவரையுமிதுவரையான்பார்க்கவில்லையினாலே என்முன்னே வாதுசெய்கின்றாய், யுனக்கு வேண்டிய புத்திகளெடுத்துப் போதித்தபோதிலுங் கேட்கமாட்டேனென்கின்றாய் யுனக்கு யினிமேலவமானம் வந்துசேருஞ் செல்லடா.

அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து வர்ணமெட்டு.

### சுப்ரமண்யவேடன் சொல்

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆடதாள்ச்சாப்பு.

கண்ணிகள்.

அன்னமேமயிலே சொர்ணமேகுயிலே
என்னுடனேவிரு கன்னயமாகவிற்
பன்னியேசேரடி பதிநீகூறடி
கண்ணாற்பாரடி அடிகண்ணே
பாவிமாரன் வாளி
எவிவாட்டு ரானே
பாவையே எந்தன்
பூவையே

### வள்ளியம்மை சொல்.

எத்தனைவித முரைத்தபோதிலுமே
கத்துகின்றாயடா இத்தநிதனிலே
மெத்தமெத்தவேடனே குடிகேடனே
முழுமூடனே படுபாவி
வேண்டா மென்தனாலே
மாண்டிடாது செல்வாய்
வீம்பனே அடா
சோம்பனே

### சுப்ரமண்யவேடன் சொல்.

அந்தமேமிகுந்த சுந்தரியேவள்ளி
இந்தவேளையே பிரிந்திடவேமானே
சிந்தைசொக்கேன்னானடி மோடியேனடி
தொழுதேனடி அடிபெண்ணே

சித்திரத்தை யொத்த
உத்தமியே யென்னைச்
சேரடி மையல்
தீரடி

வள்ளியம்மை சொல்.

அற்பனே ததியே இப்படியநீதி
செப்பினுலேயிது தப்பிதமாகுமே
ஒப்பிடேனுநானடா வாதுமேயனடா
ஓதினேனடா அடாவேடா
உந்தன் செருந்தக[illegible]
சந்தனையே நசடி.
ஓடுவாய் வாரையை
ஊடுவாய்

சுப்ரமண்யவேடன் சொல் வசனம்.

கண்மணி! நீ கூறும் வார்த்தையைக் கேட்டுச் செல்லுவோமென்று மவுந்துணிந்து ஓரடியெடுத்துவைத்தா லுன்னிட ஆசையானதுன்பக்க மூன்றடி யிழுத்துக்கொண்டு வீருகின்றதே, என்ன செய்வேன், இனிமேலாவது மனதுவைத்து ஆதரவுவார்த்தை கூறி அணைந்திடுவாய் மாதுசிரோன்மணியே.

வள்ளியம்மைசொல் வசனம்.

அடா! வேடா உனக்கு மானமீனமென்பதொரு எள்ளளவில்லையே, அடிக்கடி வாதடுகின்றாய், என்னது அண்ணமார்கள் வருந்தருணமானது, அண்ணார்கள்கண்டா லுன்னைச் சித்ரவதை செய்குவார்கள், மரியாதையாக, வந்தவழியேசெல்.

## வேறு தர்க்கம்.

ஆசைதீகினிய மடமானே என்ற வர்ணமெட்டு.

சுப்ரமண்யவேடன் சொல்

இராகம்-சகானு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

அன்னமேயுந்தன் செழுந்தேனே-உன்
ஆசையினால்மிக சொந்தேனே
கன்னியேமுன்னே வந்தேனே-என்னைக்
கலந்தணைந்தால் புண்யந்தானே (அன்ன)

### வள்ளியம்மை சொல்.

தேனென்றும் — மானென்றும்பேசி-நின்றாய்
சேயிழைமுன்னே — கைவீசி
நானினிச் — சகித்திடேன்சீசி-உன்
நகர்க்கேகுவாயடா — தோஷி (தேனெ)

### சுப்ரமண்யவேடன் சொல்.

போவென்றுசொல்ல — வெண்மானே-மனம்
பொருந்தினதோ — அகிநானே
காவலுனக்கே — செய்குவேனே-தினங்
களிப்படைவாய் — நீதானே (அன்ன)

### வள்ளியம்மை சொல்.

வீரியங்களேனடா — வேடா-முன்னே
விளம்பிடவேண்டாம் — மூடா
காரிகையென்முன் — குடிகேடா-இந்தக்
காரியம்நடவாது — போடா (தேனெ)

### சுப்ரமண்யவேடன் சொல்.

போடாபோடா — வென்றுநீயே-சும்மா
புலம்பியிங்கு — நிற்கின்றாயே
கூடாது — மருவிடுவாயே-அடி
கோதையே — எனைமணர்வாயே (அன்ன)

### வள்ளியம்மை சொல்.

கூடாதுசேரென்று — நீயே-அடா
கூறியேஎன்முன் — நின்றாயே
போடாபோடா அப்பால் — நாயே-இனிப்
பொருந்திடேனடா — தெரிவாயே (தேனெ)

### சுப்ரமண்யவேடன்சொல் வசனம்.

மடமயிலே! யானுரைக்கும் வார்த்தையைக் கேளாய் யாதெனின் நீ வார்த்தை யுதாசினமாகப் பேசினாலும் என்னை யுனதுசெங்கரத்தினா லடித்தாலுஞ் சகிப்பேன், போடா வேடாவென்று தெரிவித்தா லெனதுமனஞ் சகித்திடாது, மோடிசெய்யாமலென்னைக் கட்டியணைவாய்காதலி.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

வேடுவனேயானுரைக்கும் வார்த்தைகேளாய்
  வேண்டாம்நீயென்னாலே மாண்டிடாதே
ஓடிவாயுன்நகரைத் தேடிமூடா
  உந்தனுக்கேமதியில்லையோ தூரப்போடா
வாடிடவேசெய்திடுவா ரெனதுவண்ண
  மார்கள்வரும்நேரமிது வாகுஞ்சொன்னேன்
சேடியர்களறிவில்லை யென்றேவேடா
  செய்கின்றாய்வாதுசிட்சை செய்குவேனே.

வசனம்.

அடா வேடா! எனது அண்ணமார்கள் வருகின்றநேரமாகின்றது நீ என்னாலே மாண்டுபோகவேண்டாம் உன்னுடைய நகரைத் தேடியோடுவாய், என்முன்னே யினிமேல் நின்று வாதுகூறினால், வெருகஷ்டமடைகுவாய் மூடா.

சுப்ரமண்யவேடன்சொல் விருத்தம்.

வள்ளிமுன்னேயிர்தவித மாகவேநாம்
  வாதுபுரிவதினாலே பயனொன்றில்லை
தள்ளுகின்றமாடுபொதி சுமந்துநின்ற
  தோகைமுன்னேவளையல்விற்குஞ் செட்டிபோலே
மெள்ளமெள்ளநடந்துதினைப் புனத்தைநாடி
  விலைகூறிவந்திடுவோம் மெல்லியாளின்
உள்ளமதிற்களிக்கச்செய்திடுவோ மின்றுதானே
  உத்தமமேயீதாகு முறுதிதானே.

வசனம்.

ஆகா! இனிமே லென்செய்வோம், மாதரசி யொண்டியாயிருக்கின்றாளே என்ற எண்ணத்தோடு, வாதாடினேன் கொஞ்சமாவது இடங்கொடுக்கவில்லையே இனிமேலெவ்வுருவையெடுத்து இம்மாதை கைக்கொள்ளுவோம், ஒரு யோசனையுந் தோணவில்லை, வேறுருவெடுத்துவந்தாலும் பிணங்குவாளோ இணங்கமாட்டாளோ, நாமெவ்வுருவை யெடுப்பது யோசிக்கின்றேன்.

டை வசனம்.

நாமிம்மாதரசியை விட்டுச்சென்று, வேறொருபக்கத்தி லிருந்துகொண்டு, வளையல்விற்குஞ் செட்டிபோல வேடமிட்டு, அநேக

விதமான வளையல்களைத் தோளின்மீதுபோட்டு, இத்தினைப்புனத் தில் விலைகூறிச் செல்வோம், இந்த வள்ளிமாது நம்மையழைத்து வளையல்போடும்படி தெரிவித்தால், அன்னவளுடனே வார்த்தையாடி எவ்விதமாகவாவது மருவுகின்றேன் ஜல்தியாய்ச் செல்கின்றேன்.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

ஓடியேவருகுவீரே யொண்டொடிபாங்கிமாரே
தேடியேயெனைவந்தீரோ தினைக்கதிர்பக்ஷிஜாதி
நாடியேகொய்திடாது நலமொடுகாத்திட்டீரோ
வாடியேயிருக்குஞ்செய்தி வழுத்துவீர்மகிழ்ந்துதானே.

வசனம்.

பாங்கிமார்களே! தென்பக்கத்தி லமர்ந்திருந்து காவல்செய் தீர்களா, அதிகவேகமாக இங்கு வரவேண்டியகாரணம் யாது, உங் களுடைய வதனம் வாடியிருப்பதேன் கூறுவீர்கள்.

பாங்கிமார்கள்சொல் வசனம்.

அம்மா! வள்ளியம்மையே உன்னுடைய ஆக்ஞையின்படிசெந் தினைக்கதிரைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது பாதுகாத்திருந்தோம் உன்னைப் பார்த்துப்போவோமென்ற எண்ணத்தோடுவந்தோம்.

வள்ளியம்மைசொல் வசனம்.

பாங்கிமார்களே பக்கத்திலமர்ந்திருப்பீர்கள்.

## வள்ளியம்மைமுன்னே
## வளையற்செட்டி வருகின்ற பாகம்.

ஆசிரிய விருத்தம்.

சீர்மேவு தோகைமயி லேறுமுல் லாசனுந்
தெய்வானைதனை மணர்ந்தோன்
தீராதி தீரன்ரண சூரனை மடித்தவன்
சிங்காரவேல் பிடித்தோன்
தார்மேவு தொண்டரி னகந்தனி லமர்ந்தவன்
தணிகாசலத்தில் வாசன்
சண்டனை வென்றசிவ சங்கரன் சேயனுஞ்
சண்முகன் தேசுயர்ந்தோன்

ஏர்மேவு கின்றகிர மீதினிலே மணிவைத்த
    இருமூன்று முடிதரித்தோன்
எக்காலமுஞ் சித்தம்வைத் தேழைகட் கருணை
    ஈந்திடும் வடிவேலவன்
கார்மேவு கூந்தலுள வள்ளிமா தரசைக்
    கலந்தணைய வருமாரியே
கையிலுந் தோளிலும் வளை பூண்டு கோலூன்றி
    கவலையச் செட்டிவந்தான்.

வந்தேன் வந்தேன் கொலுமுகமென்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| வந்தேன்வந்தேன்வளையல் | விற்பவன்போலே-யன்புடன் |
| வள்ளியின் | முன்னாலே-புவி |
| மார்க்கமாகவே | பார்க்குள்ளே மனத் |
| தீர்க்கமாகவே | யான் யான் யான் (வந்தே) |
| வேகமாகவேதோளிலேவளை | யவத்தே-சாமமே |
| விளங்கநெற்றியிற் | தரித்தே-செட்டி |
| வேஷமாய்நம்பி | ராஜன்மகளுமே |
| நேசமாகவே | தான் நான் ஞான் (வந்தே) |
| கையிலேகோலதுபிடித்தே | நடந்தே-இரத்னக் |
| கம்பளிதனை | யணிந்தே-இந்தக் |
| காசினிமீதில் | லாசமாய்விசு |
| வாசமாகவே | யான் யான் யான் (வந்தே) |
| சிந்தைமகிழ்ந்துமே | சுந்தரிமுன்னானே-வளைவிலை |
| செய்திடுவேன் | ஞானே-வெகு |
| தீரனும்மகா | சூரனும்மயில் |
| வீரனாகிய | யான் யான் யான் (வந்தே) |

வசனம்.

நாமிந்தவேளையில் தினைப்புனத்தை நாடிச்சென்று வள்ளியம்மையின்முன்னேசென்று வளையல்விலை கூறுவோம் அம்மாது நம்மையழைத்து வளையல்போடும்படியாகத் தெரிவித்தால் எவ்விதமாகவாவது மருவுவோம் அம்மாதுமுன் செல்கின்றேன்.

# முருகன் செட்டி
# வளையல்விற்கும் பாகம்.

கொள்வாருண்டோ எனை விலையே என்றவர்ணமெட்டு.

முருகன்செட்டி சொல்

இராகம்-ஆனந்தபைரவி-அடதாளம்-சாப்பு.

பல்லவி.

கொள்வாருண்டோ வளை விலையே-அடி
கோதையர்காளிந்தவளை சொற்பவிலையே(கொள்)

அநுபல்லவி.

உள்ளதுசொல்வேன் செம்பொன்வளையே-அடி
ஒண்டொடிமாரே பச்சைவளையே
சாஸ்தி யிலையே(கொள்)

சரணங்கள்.

வாலிபமாத ரணிவளையே-இது
மாணிக்கவளை நீலவளையே
சொல்வேன் விலையே(கொள்)

முத்துப்பதித்ததிந்த வளையே-இதில்
மூன்றாருண்டுவயிர வளையே
கட ணிலையே(கொள்)


கண்டோர்மயங்கச்செய்யும் வளையே-அடி
கன்னிகாள்புஷ்பராக வளையே
ரெத்ன வளையே(கொள்)

வசனம்.

இந்தவனத்திற் செந்தினையைக் காத்திருக்கும் மாதுசிரோன் மணிகளே, அநேகவிதமானவளையல் வைத்திருக்கின்றேன், நீங்கள ணிந்துகொள்ளப் பிரியமிருந்தால் யான்சொல்லும் விலையைக்கொடு த்துவிட்டுச் செங்கரத்தி லணிந்துகொள்ளுவீர்கள் சேயிழைகாள்.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

வந்திடுவீர் வளையல்விற்குஞ் செட்டியாரே
வனத்தினிலே வந்தீரார் வாங்குவார்கள்
தந்திடுவீ ருள்ளவிலை யதனைக்கூறிச்
சற்குணத்தை யுடையவரே தமிழ்வல்லோரே
செந்தினமா விடிதனெடுத்துத் தருவேனையா
தின்றுபசிப் பிணிபோக்கி வளையல்தன்னைச்
சிந்தைமகிழ்ந் தெங்கள்கர மணிந்துநீரே
செல்லுவீர் சிற்றூரை நோக்கித்தானே.



கன்னியரே என்னிடம்வந்த என்ற வர்ணமெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாரும்வாரும் செட்டியாரே
மகிழ்ந்துமே நீரே (வாரும்)

அநுபல்லவி.

தாரும்வளை கிரையம்யாது
சாற்றுவீர் நேயே (வாரும்)

சரணங்கள்.

இந்தவனந்தனிலே ஐயா
எவர்கள் வாங்குவார்
இந்தவளை விலை தானென்ன
எந்தன்முன்னே கூர் (வாரும்)

பச்சைவளை பவளவளை
பத்தென்ன விலை
இச்சைமுத்துவளை மேலுண்டு
இதுஎன்ன விலை (வாரும்)

செந்தினைமா விடித்துன்பசி
தீர்க்கின்றோம் மெய்யா
தந்திடுவோம்வளை யெங்கட்கே
தானேநீ ரையா (வாரும்)

வசனம்.

ஐயா! செட்டியாரே வாருங்கள், இந்தவனத்தில் வந்து வளையல் விலைகூறுகின்றீரே, யார் வாங்குவார்கள் நாங்கள்மாத்திரந்தானிங்கு இருக்கின்றோம், உள்ள விலையைக்கூறினாற் சிலவளையலணிந்துகொள்கின்றோம், பச்சைவளையல் பவளவளையல் விலையென்ன, எங்களுக்கு முத்துவளைய லணிந்துகொள்ள ஆசையாயிருக்கின்றது அதின் விலையென்ன, செந்தினைமாவிடித்துத் தேன்விட்டுப் பிசைந்துதருகின்றேன், அருந்திப் பசிதணிந்து எங்களுக்கு வளையலணிந்து சிற்றூரை நோக்கிச் செல்லுவீர்.

முருகன்செட்டிசொல் விருத்தம்.

கன்னிகையே தினைப்புனத்தி லுனையேதானே
கண்டுமே பரணருகே வரவழைத்தே
என்னவிலை சொல்லுமென்றே மகிழ்ந்துநீரே
எந்தனிடங் கேட்டமட மானேகேளாய்

அன்னநடை மின்னரசே வளையலொன்றே
ஆயிரம்பொன் னாகுமடி மயிலேதேனே.
நன்னயஞ்சேர் வளைவாங்கப் பிரியமானால்
நாயகியே உண்மைதனை நவிலுவேனே.

பெண்கொடியே! ஒருவளையல் ஆயிரம்பொன்னாகும், வளையல் வாங்க விஷ்டமிருந்தா லுண்மையைச் சொல்லுகின்றேன், அதைக் கொடுத்து, வளையலை வாங்கி யணிந்து கொள்ளுவீர்கள், மங்கை மார்களே.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஐயா! செட்டியாரே உள்ளவிலையையாவது சொல்லுங் கொடுத்து வாங்கி யணிந்துகொள்கின்றோம்.

முருகன்செட்டி சொல்

வாயைத்திறந்து கொஞ்சம் என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதேவளைவிலைசொல்வேனடி   மட (மாதே)

அநுபல்லவி.

கோதேயெனக்குவாய்த்த   சாதேகேளாயிப்போதே
கொஞ்சிமெஞ்சுகவஞ்சியேநாணடி   சஞ்சிதமேவெகுசஞ்சலமேனடி (மா)

சரணங்கள்.

முத்தமொன்று   கொடுத்தால்
முத்துவளை   கொடுப்பேன்
உத்தமியெந்தனெண்ணத்தை   முடித்திடு
பத்துவளையையெடுத்தே   கரத்திடு (மா)

கன்னிகையே   முலையே
காட்டிடல்வேண்டாம்   விலையே
உன்னிதமாகவே   என்னுடனேயிணை
சொன்னவளைதனை   தன்னயமாய்புனை (மா)

இத்தகிறுதம்   தருவாய்
ரெத்னவளை   பெருவாய்

| | |
|---|---|
| சித்தமேநீயும் | நினைத்தணிந்திடு |
| உத்தமியென் | பக்கத்திலிருந்திடு (மா) |

வசனம்.

கண்மணிகாள்! யான்வைத்திருக்கும் வளையல்வாங்கி யணிந்து கொள்ளப் பிரியமிருந்தால் வளையல்விலை சொல்கின்றேன் கவனித்துக் கேட்பீர், முத்தமொன்றுக்கு, ஒரு முத்துவளை, தங்கள்ஸ்தனங்களைக் காட்டினால், வளையலை யீனமாகயிடுவேன், என்னுடனே கூடிச் சல்லாபமாயிருந்தால், மனமகிழ்ந்து சொர்னவளையலைக் காத்திலிடுவேன் பெண்ணே! உன்பவளம்போன்ற இதழைக்கொடுத்தால், மாது சிரோன்மணி! யுனக்குப்பிரீதி எந்த வளையல்மீதுண்டோ, அவ்வளையலை பணிகின்றேன் என்னதெரிவிக்கின்றனை.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

செட்டியேஎன்னவார்த்தை தெரிவித்தாயுனதுபுத்தி
மட்டியேசனதுவண்ண மார்கண்டால்வதைசெய்வாரே
எட்டியேபோடாமூடா எனக்குமேவளையல்வேண்டாஞ்
சட்டியேமுன்னின்றாலே தோழியாலடிப்பேன்காணே.

வசனம்.

அடா! பயித்தியங்கொண்டசெட்டியே என்னவார்த்தைதெரிவித்தனை எனது அண்ணமார்கவிச்சொற்கேட்டா லுன்னை யதஞ்செய்வார்களே, வீணாக மாண்டுபோகவேண்டாமுனதுாகரைத்தேடிச்செல்வா யெங்களுக்கு வளையல்வேண்டாம் மூடா.

முருகன்செட்டிசொல் வசனம்.

கண்மணி! உங்களுக்கு லாபங் கிடைக்கின்றதே யெனக்கு என்னலாபங் கிடைக்கின்றது, யான்கேட்ட பதார்த்தத்தை கொடுத்தாலதினாலுனக்கு நஷ்டமாகுமோ, மனமகிழ்ந்து என்னைக்கூடிச் சுகித்து வேண்டியவளையலை செங்கரத்தி லணிந்துகொள்ளுவாய்.

வள்ளியம்மைசொல் வசனம்.

அடா! செட்டி இந்தத் தனன்றபருவத்தி லுனக்கிந்த ஆசை வேண்டாம், என்முன்னே நின்று வாதாடவேண்டாம், எங்களுக்கு வளையல் வேண்டாம், மரியாதையாக வந்தவழியே செல்லடா மூர்க்கப்பயலே, இங்குநின்றாலே, பாங்கிமார்களை விட்டடித்துத் துரத்தச்செய்வேன் போடா.

# முருகன்செட்டியும் வள்ளியம்மையுந் தர்க்கமாகும் பாகம்.

மாரன் விடுங்கணை மாரைத் தொளைக்குதென்ற வர்ணமெட்டு.

முருகன்செட்டி சொல்

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கண்மணியென்னைக் கலந்தணைந்தாலெசெந்தேனே
மடமானே உந்தன்
கைகிரம்பவனை தன்னைப்புனைந்திடுவேனே

வள்ளியம்மை சொல்.

கண்மணியென்றே கழருகின்றசெட்டியாரே
செல்லுவீரே அண்ணர்
கண்டாலெதெண்டனை செய்திடுவார் நீவிரே

முருகன்செட்டி சொல்

தெண்டனைசெய்குவா ரென்றுரைத்தமடமாதே
கேளாய்கோதை நானே
சித்தஜன்வாளியால் பெத்தநொந்தேனேயிப்போதே

வள்ளியம்மைசொல்

வண்டனேநீஎன்றுமேற மாண்டிடவேண்டாம்நீபோடா
குடிகேடா இந்த
வார்த்தைகளென்முன் னுரைத்திடவேவேண்டாம்மூடா

முருகன்செட்டி சொல்

போடாநீஎன்றே புகன்றமாதரசேவாடி
எனைக்கூடி அடி
பூவையேஇன்ப சுகந்தனையேஇன்றுதாடி

வள்ளியம்மை சொல்

வாடிஎன்றேதுஷ்டா வார்த்தைகடன்னைச்சொல்லாதே
முன்னில்லாதே உந்தன்
மந்திரதந்திர மொந்தனிடமேசெல்லாதே

முருகன்செட்டி சொல்

மந்திரஞ்செய்பவன் நானல்லசேர்ந்தனைவாயே
பெண்ணேநீயே இன்று
மாணிக்கரெத்ன வளையைப்புனைந்திடுவாயே

வள்ளியம்மை சொல்

உந்தனையன்னமார் கண்டால்வதைப்பாரிப்போது
வேண்டாம்வர்து காணே
உண்மைசொன்னேனிங்கு நில்லாதேடாவருந்தீது

முருகன்செட்டி சொல்

வசனம்.

கண்மணி யென்னோடு வாதாடவேண்டாம் மன்மதன் கரும்பு வில்லி லரும்புமலரைந்தும்பூட்டி விட்டுவாட்டுகின்றான் என்றனினி மேற் சகிக்கமுடியாது சிந்தைமகிழ்ந்து ஒருமுத்தமிட்டுக் கோக்கோகமுறைப்படியே கூடிச் சுகிப்பாய் வேண்டிய வளையலையுனது செங்கரத்திற் புனைகின்றேன் பெண்பாவாய்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

மெத்தவே வளையல்விற்குஞ் செட்டியோரீ
வீண்பேச்சுப் பேசிடவே வேண்டாம்மூடா
இத்தருணந் தனிலோடிப் போடாநாயே
எந்தன்முன்னே வந்துநின்றா யுந்தனுக்கே
புத்தியில்லை மானமில்லை யேடாபேயா
புனத்தினிலே வாதுசெய்தாற் பொருந்திடேனே
கத்துவதி லென்னபலன் வெகுநாளாகக்
கற்றவித்தை விட்டாதே கழறினேனே.

வசனம்.

அடா வளையல்விற்குஞ் செட்டியே உனக்குக் கொஞ்சமாவது புத்தியில்லை மானமில்லை கொஞ்சமாவது நெஞ்சு அஞ்சாது என்னை தெரிவித்தனை என்முன் நில்லாதே வந்தவழியோடிப்போடா.

முருகன்செட்டி சொல் விருத்தம்.

அன்னநடை மின்னரசே மயிலேமானே
ஆதரவு வேறுகிடை யாதிப்போதே
கன்னல்வில்லி லரும்புமல ரைந்தும்பூட்டிக்
காமன்விடுத்தே வதைக்கின் றனேபாவி

இன்றுமுந்தன் மனமிறங்கவில்லையாகாதோ
எத்தனையோ வெகுத்துரைத்தே னின்றுதானே
கன்னிகையே யெனைச்சுகிப்பாய் மகிழ்ந்துநீயே
காதலியே உனைப்பிரியே னுண்மைதனே.

வசனம்.

"கண்மணி! இப் பிரபஞ்சத்தின்கண்ணே எனக்கு ஒருவருந் துணையில்லை, நீ ஆதரவுசெய்வாய், உன்னுடைய மனமிறங்காத காரணமென்ன, பாவியாகிய மன்மதன் பாணத்தால் வாட்டுகின்றான் பாவையே மோடிசெய்யவேண்டாம், என்மீது கருணைசெய்து மருவியணைவாய் மங்கையே தடைசெய்யாதே.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

பிடித்திடுவீர் வளையல்விற்குஞ் செட்டியாரைப்
பேசுகின்றான் விகடமதாய்ப் பாங்கிமாரே
அடித்திடுவீர் பரண்காலிற் கட்டியேவைத்
தாதரவு செய்வதுவு மிதுதானென்று
துடித்திடுதே யெந்தனுள்ள மின்றுதானே
சொன்னசொல்லை நினைந்துநினைந் துருகுதையோ
மடித்திடுவார் வனத்தினிலே யண்ணமார்கள்
வருகின்றா ரினிப்பயமேன் மகிழ்வீரே"

வசனம்.

அடி! பாங்கிமார்களே, கொஞ்சமாவது நெஞ்சு அஞ்சாது இந்தச்செட்டி, விகடமாய்ப் பேசுகின்றான் நீங்கள் சென்று இவனைப்பிடித்துப் பரண்காலிற் கட்டிவைத் தடித்திடுவீர் ஆதரவில்லையென்று நம்முன்னமே தெரிவித்ததற்கு, இந்தவுபகாரமாவது செய்வீர்கள், இதோ, அண்ணமார்கள் வருகின்றார், இனி நமக்கென்ன பயம் பாங்கிமார்களே, அண்ணமார்களிவனைத் தண்டிப்பார் நாமொன்றுஞ் செய்யவேண்டாம்.

முருகன்செட்டிசொல்

விருத்தம்.

இந்தவுருவதையெடுத்தே னின்றுதானே
எந்திழைமுன் வளையல்விலைகூறியிங்கே
வந்ததினுலென்னபல மடைந்தோம்நாமே
வள்ளிதனைப்பெறத்தவித்த மணைகுவோமோ

தந்திரங்கள் முடியாது வேடர்முன்னே
 தழன்றகிழப் பண்டாரவேடமாகிச்
சிந்தைமகிழ்ந்த திவேக மாகத்தானே
 செல்லுமேவாங்கலைதனை வெல்லுமேவாமே.

வசனம்.

நாம் வளையற் செட்டியுருவெடுத்து வளையல்களைத் தோளிலணிந்து கொண்டு இவர்கள்முன்னே விலைகூறி வார்த்தையாடினதி லென்ன பலனையடைந்தோம் ஒன்றுமில்லையே இம்மட்டி லண்ணமார்க ளதிவேகமாக யிங்குவருகின்றாரே நாமென்ன செய்வோம் நல்லது இவ்வேடுவர்கள் முன்னே துவண்ட கிழப்பண்டாரவடிவமாகி முன்னேசென்று அன்னவர்களுடன் வார்த்தையாடி வள்ளியிடத்தில் நம்மை வைத்துச் செல்லும்படியான மார்க்கஞ்செய்து இவளைமருவுவோம் நல்லது வேடமெடுத்துச் செல்கின்றேன்.

வள்ளியம்மை சொல்.

விருத்தம்.

செட்டியரேயா னுரைக்கும் வார்த்தைகேளீர்
 தினைக்கதிரைப்பட்சிவந்தே கொய்திடாது
ஓடியேதென்புரத்தி லமர்ந்திருந்தே
 உந்தபியேகாவலது புரிகுவீரே
நாடியண்ணமார்களிங்கே வருகின்றார்கள்
 நானினிமேற்பயமடைந்தி டேன்செல்வீரே
வாடிவென்றவளையல்விற்குஞ் செட்டிபோன
 வழிதோணவில்லையடி பாங்கிமாரே.

வசனம்.

அடிபாங்கிமார்களே செட்டியோடிவிட்டான் நீங்கள் சென்று தென்பக்கத்தி லமர்ந்திருந்து காவல்செய்குவீர்கள் அண்ணமார் வருகின்றார் பயமடையேன் செல்லுவீர் சகிமாரே.

பாங்கிமார் வசனம்.

அம்மணி அவ்வண்ணமே செல்கின்றோம்.

## வேடுவர்கள் வருகின்ற பாகம்.

விருத்தம்.

காட்டிலேவசித்திருக்குங் கரடிக்கீவேங்கைதன்னை
வேட்டைகளாடிக்கூடி வேடுவர்விரைவதாகத்
தாக்ஷிகமாகவேதான் தடமதைநோக்கியேசீ
மாட்டியாள்வள்ளிமுன்னே மகிழுடன்வருகின்றாரே.

பல்லக்காட்டிப் பரக்குழுந்தென்ற நூர்ணமேட்டு.

இராகம்-பியாக்-ஏகதாளம்.

கண்ணிகள்.

காட்டைநாடி வேடர்கூடக்
களித்துமே விளையாடியே
வேட்டையாடி தாவடிகமாக
விரைவில்வந்து தோன்றினார்
அம்புகத்தி தோமரமணிந்துமே
வேக மாதமே
கும்புடனே கூச்சலிட்டே
குறவர்வந்து தோன்றினார்
சல்லடமணிந்தே கச்சை
நன்னையேயிடை கட்டியே
வல்லவர்களான சூர
வனக்குறவர் தோன்றினார்
கண்டவர் நயந்திடவே
கையிலேவிற் கொண்டுமே
மண்டலமேற் கீர்த்திபெற்ற
வனக்குறவர் தோன்றினார்

வசனம்.

அடா! தம்பிமார்களே அதிவேகமாக வாருங்கள் தங்கையாகிய வள்ளியம்மைமுன்னே நாமெல்லோருஞ் செல்லுவோம்.

இளையவேடுவன் சொல்வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வாருங்கள்.

## சுப்பிரமணியர் பண்டாரரூபமாகி வேடவர்முன்னே வருகின்றபாகம்.

ஆசிரிய விருத்தம்.

சீர்மேவுகழுருமலை யதனிலுரையன்பன்
ஜெகம்புகழுகின்றவேலன்
சித்தர்முனிவோர்களொடு முப்பத்துமுக்கோடி
தேவர்கள்வணங்குமேர்பன்



தார்மேவுமார்புடைய கார்த்திகேயன்குகன்
சண்முகன்றேர்சயர்ந்தோன்
தாருகாசூரன் றனைவதைத்திட்டவன்
சங்கமேந்தியின் மருகன்னான்
ஏர்மேவுசிற் றாரை யரசுசெய்திடும்நம்பி
ஏந்தல்சேய்வள்ளியாளை
எந்தவிதமும்மருவ வேணுமென் றுமுன்னே
எடுத்தவுருவுதானரியே
பார்மேவுனைமீது வரும்வேடர்முன்புமே
பண்டாரவேடமாகிப்
பையவேநடைநடந் தொய்யாரமாகவே
பரமனிடசேயன்வந்தேன்.

சுத்தப்பிரம்ம பராத்பரராம் என்றவர்னமெட்டு

இராகம்-கல்யாணி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சங்கரனேசிவ சங்கரனே
சம்போசதாசிவ சங்கரனே
பொங்கரவதையணி யும்பரனே
புண்யவானே மழுக்கரனே
வரநதிமதியணி விசுவேசா
வரைமகளுமையவ னிடநேசா
திரிபுரதகனனே பவநாசா
திண்மடியவர்பணி நடராஜா.

வசனம்.

சங்கரா கெங்காதரா சந்திரசேகரா உமையவள் நேசா பரம் பொருளே தில்லையில்நடனமாடியவா அடியேனை யாண்டருள்வாய்.

டை. வசனம்.

காமிந்தவேளை வேடுவர்கள்முன்னே செல்கின்றேன் இதோ வருகின்றார்கள்.

## வேடுவர்கள் பண்டாரக் கிழவனைக் காணும்பாகம்.

மூத்தவேடுவன்சொல் வசனம்.

அடா தம்பிமார்களே ஒருதலைவண்ட பண்டாரக்கிழவர் பாதை தப்பி இவ்வனத்தில் நடக்கமுடியாது தள்ளாடித்தள்ளாடிவருகின்

ஞூர்பார்த்தீர்களா இவரெங்கிருந்துவருகின்றாரோ முன்னேசென்று விசாரிப்போம் வாருங்கள் சகோதரர்களே.

இளைய வேடுவர்கள்சொல் வசனம்.

அண்ணா அதிவேகமாகச் செல்வோம் வாருங்கள்.

மூத்தவேடுவன்சொல் வசனம்.

இந்தத் துவண்டபருவத்தில் இந்தவனத்தில் வழியைத்தவர விட்டுவருகின்றீரே விலங்குகள் கண்டாற் கொன்றிருக்குமே காரணமில்லைபோலிருக்கின்றது நல்லது இப்பெரியவரை க்ஷேமாதரிக்கவேண்டு மதிகவேகமாக என்னோடு தொடர்ந்துவாருங்கள்.

வேடுவர்கள் சொல்

விருத்தம்.

ஆரையாபெரியோரேதா மஞ்சிடாதிந்தக்கானில்
சேரிலேயிருக்கும்பாதை நீர்தப்பிவந்தீரையோ
காரியமெதுவோசொல்வீர் கர்த்தனேயெங்கள்முன்னே
தாரணிபுகழும்மாவே தாந்தியேபோற்றிபோற்றி.

வசனம்.

ஐயா! போற்றிசெய்கின்றோம் இந்தவனத்திலஞ்சிடாமல் வந்தீரே, விலங்குகள்கண்டாற் கொன்றிருக்குமே, இந்த முதிர்ந்தபருவத்திற் றள்ளாடித்தள்ளாடி வருகின்றீரே, எங்கு செல்கின்றீர், அடியேன்மீது கருணைவைத்துச் சொல்வீர் சுவாமி.

பண்டாரக்கிழவன் சொல்

விருத்தம்.

காசிகண்டி கதிர்காமந் தில்லையாரூர்
கதிகொடுக்கு மருணைதிரு வேரகந்தான்
தேசமொடு புவியிலுள்ள தலங்களெல்லாம்
நேர்மையொடு சுற்றிவந்தே னப்பாநானே
ஆசைகொண்டு குமரிவிட தீர்த்தந்தானே
யாடிடிலோ மோட்சமென்றே யறிந்தார்வந்தேன்
பேசிடுவீ ரீசமகிழ்ந்தே யெனதுபேரப்
பிள்ளைகளே செல்லும்வழி பிசகாதின்றே.

வசனம்.

ஐயா! பேரன்மார்களே யான் சொல்லுகின்றேன் கேளுங்கள், காசி, கண்டி, கதிர்காமந், தில்லை, ஆரூர், முதலியஸ்தலங்களுஞ்

சென்று தீர்த்தமாடினேன் மற்றுந்தலங்களெல்லாஞ் சென்றிருக்கின்றேன், ஜென்மங் கடைத்தேறும்பொருட்டு கன்னியாகுமரித் தீர்த்தமாடவந்தேன், இந்தவனத்தில் வழிதவறிவந்துவிட்டேன் நடக்க இனிமேல் முடியாதுபோலிருக்கின்றது, அருகிலாவது, ஊருகளைக் காண்கிலேன், வருகிறமார்க்கத்தினுங்களைக்கண்டேனே தவிர மற்றொருவரையுங் காண்கிலேன் உங்கள் நகர் யாது தாய் தகப்பன் திருநாமமென்ன எங்கு செல்கின்றீர்கள், மனமிகமகிழ்ந்து உண்மையையோதுவீர் பேரன்மார்களே.

வேடுவர்கள்சொல்

விருத்தம்.

இந்தமுதிர்பருவமதி லையர்நீரே
எவ்விதமாய்க் குமரியிடதீர்த்தமாடி
வந்திடுவீர்முடியாது நடக்கவேயும்
மாலேதானிப்பொழுது வழுத்துவேனே
எந்தனிடதங்கைவள்ளி மாதுமிங்கே
இருக்கின்றாள் பரண்மீதுசேடியோடு
செந்தினையைமனதுமிக மகிழ்ந்தேகாவல்
செய்கின்றாளவள்முன்னே செல்லுவோமே.

வசனம்.

ஐயா பாட்டனாரே இந்தமுதிர்ந்த பருவத்திலெவ்விதமாகக் கன்னியாகுமரி தீர்த்தமாடிவருவீர்கள் நடக்கமுடியாது எங்கள் வார்த்தையைக்கேட்பீர் நாங்கள்வசிப்பது சிற்றூர் தந்தையின் நாமம் நம்பிராஜன் தாயார்பெயர் நங்கைமோகினி இதோ என்னருகில்நிற்கின்றவர்கள் சகோதரர்கள் எங்களுக்கிளையவள் வள்ளியம்மை என்றமாது இந்தவனத்திற் சேடிமாரோடு பரண்மீதிருந்து செந்தினைப்பயிரிற் பட்சிசாதிகள்வந்து கதிரைக் கொய்துகொண்டு செல்லாது காவல்செய்திருக்கின்றாள் அவள்முன்னே செல்லுவோம் வருவீர்பாட்டனாரே.

## வேடுவர்கள் பண்டாரக்கிழவனை

### தினைப்புன மழைத்துச் செல்லும்பாகம்.

பண்டாரக் கிழவன்சொல் வசனம்.

ஐயாபேரன்மார்களே அங்கென்னையே னழைக்கின்றீர்கள்.

வேடுவர்கள்சொல் வசனம்.

ஐயா தங்களுக்குவேண்டிய உபசாரஞ் செய்திருக்கும்படியாகத் தெரிவித்துச் சிற்றூர்நோக்கி நாங்கள் செல்கின்றோம் மன்னவ



ளுக்குத் துணையாகயிருந்து அன்னவள் கொடுக்குஞ் செந்தினைமா வையருந்திடுவீர் கதிரையறுத்து எல்லோருமாகச்சிற்றூர்நோக்கிச் செல்லுவோம்ப்ரபோ.

பண்டாரக்கிழவன்சொல் வசனம்.

அப்பா! பேரன்மார்களே உங்கள் மனதானிவ்விதமிருக்கின்றது அம்மாதுமன மெவ்விதமிருக்கின்றதோ, நானங்கு வரமாட்டேன், வேறெங்குமாவது செல்கின்றேனப்பா.

வேடுவர்கள்சொல் வசனம்.

பெரியவரே அம்மாது எங்களுக்குமேலாய்ப் பதின்மடங்கு மெல்லலாம் வேண்டிய உபசாரஞ்செய்வாள் பொய் சொல்லுகின்றாமென் றெண்ணவேண்டாம் மனமிதமகிழ்ந்து எங்களோடு வருவீரையா பாட்டனாரே.

பண்டாரக்கிழவன் சொல்

விருத்தம்.

தொல்லுலகோர்கொண்டாடுஞ் சுமுகரேசொல்லக்கேளீர்
நல்லதுங்களின்பின்னாக நானுமேவருகுவேனே
வல்லமைமிகுந்தபேரன் மார்களேவள்ளிமுன்னே
செல்லுவீரெனையேகூட்டிச் சீக்கிரமாகத்தானே.

வசனம்.

அப்பா! பேரன்மார்களே உங்கள் வார்த்தையை நம்பினேன், மனமகிழ்ந்தே யுங்கள்பின்னாகப் பையநடந்து வருகின்றேன், வள்ளியம்மைமுன்னே என்னைக் கொண்டுசென்று பாதுகாக்கும்படியாகத் தெரிவித்துச் சிற்றூர் நோக்கிச்செல்லுங்கள் வருவீர்கள் செல்லுவோம்.

வேடுவர்கள்சொல் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வாருங்கள் ப்ரபோ.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

ஐயனே போற்றிபோற்றி அருந்தவப் பொருளேபோற்றி
மெய்யனே போற்றிபோற்றி வித்தகர் நின்றாள்போற்றி
துய்யனே போற்றிபோற்றி சுந்தர மிகவேவாய்ந்த
தையலுக் காசியின்றே தந்திடு வீரேபோற்றி.

வசனம்.

ஐயா! பாட்டனாரே வள்ளியம்மை நமஸ்கரிக்கின்றேன்.

பண்டாரக்கிழவன் சொல்

விருத்தம்.

வள்ளியேசிலதினங்களில் மணமிகமுடியவேணும்
புள்ளிமாமயிலின்மேலேறும் புண்ணியன்கார்த்திகேயக்
வள்ளல்வெண்ணீறுதன்னை வாங்கிநீயணிந்துகொள்வாய்
உள்ளமதைமகிழ்ந்துமேயா னுரைசெய்தேனின்றுதானே

வசனம்.

கண்மணி வள்ளியம்மையே முருகன் திருவருளாலின்னஞ் சில நாளிலுனக்கு விவாகம்முடியவேண்டும் உள்ளமதைப்புகன்றேன் சிவசுப்ரமண்யர் திருவெண்ணீற்றை வாங்கியணிந்து கொள்வாய்.

வள்ளியம்மைசொல் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன் ப்ரபோ.

வேடுவர்கள்சொல்

விருத்தம்.

தங்கைவள்ளிநாயகியே சாற்றக்கேளாய்
சற்குணமேமிகவுடைய தம்பிரானை
இங்கழைத்துநாங்கள்வந்தோம் மகிழ்ந்துமேயுன்
னிடந்தனில்வைத்திடவேயின்றுதானே
திங்களின்வதனமுள்ள பெண்ணேஞான
தேசிகன்றனடியதனைப் பாதுகாப்பாய்.
கொக்குபுன்னைசூழ்ந்தவனந் தனிலேசென்றே
கொல்லுவோமவிலங்கினத்தைவெல்லுவோமே.

வசனம்.

அம்மா வள்ளிநாயகி சண்முகனடியாரையுன்னிடம் வைத்துச் செல்ல அழைத்துவந்தோம் இவருக்கு வேண்டியவுபசாரஞ்செய்து மனமகிழச்செய்வாய் நாங்கள்நந்தவனத்தில் வேட்டையாடிச் சிற்றூர்போகச் செல்கின்றோமம்மா என்னதெரிவிக்கின்றாய்.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

இத்தருணந்தனில்நானே பாட்டனாரை
இருக்கவைத்தேவேணவுபசாரந்தானே
சித்தமிகமகிழ்ந்திடவே செய்குவேனே
தீரனுணசூரர்களே சேர்ந்தொன்றாக

உத்தமரேயிவ்வனத்தில் வேட்டையாடி
உம்பர்கிறைமீட்டருகன் நாமம்பாடி
சத்தியவந்தரேநீரே சிற்றூர்நோக்கிச்
சலுதியுதாய்ச்சென்றிடுவீர் போற்றிபோற்றி.

வசனம்.

அண்ணமார்களே இவருக்கு வேண்டிய உபசாரஞ் செய்து கொண்டிருக்கின்றேன் தாங்களிவ்வனத்தில் வேட்டையாடிச்சிற்றூரைநோக்கிச் செல்லுவீர்கள் போற்றிசெய்கின்றேன்.

வேடுவர்கள்சொல் வசனம்.

கல்யாண்! சென்றுவருகின்றோம்.

மேற்படி வசனம்.

ஐயா! பாட்டனாரேசென்றுவருகின்றோம் நமஸ்கரிக்கின்றோம் விடை கொடுத்தனுப்புவீர்.

பண்டாரக்கிழவன்சொல் வசனம்.

கல்யாண்! பேரன்மார்களே சென்றுவருவீர்கள்

## பண்டாரக்கிழவன்
## வள்ளியம்மையை அன்னங்கேட்கின்றபாகம்.

பண்டாரக்கிழவன் சொல்

விருத்தம்.

அன்னமேமடமாதேயா னரைந்திடும்வார்த்தைகேளாய்
வன்னியேஎனக்குத்தானே காநடைத்திடுதேதேனே
என்னநான்செய்வேனோயா எடுக்குதேபசிகள்மெத்த
உன்னையேகெஞ்சினேனே உணவுகள்கொடுத்திடாயே.

ஆதியிலும்பறையனல்ல ஊர்தியிலுமென்றவர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-காப்பி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

என்னசெய்வே னேதுசெய்வே
னேழைநானெவ் வண்ணமுய்வேன்
கன்னிகையே இன்றுநானடி
கலங்கு ரேனடி

மெத்தப்பசி யாகுதையோ
ஒத்தமிகச் சோருதையோ
இத்தநிசீ யன்னமேதானே
ஈவாய் செந்தேனே

உண்டெடீதன் பசிதணிப்பேன்
உந்தனேயே காத்திருப்பேன்
கண்டைநிகர்த்த மொழியாளே
கயல் விழியாளே

பேசாதிருக்க லாகுமா
பெண்ணேயென் பசிபோகுமா
ஆசையுள்ள எந்தனன்னமே
அடி சொர்னமே

வந்தேன்விருந் தாகமாதே
வள்ளியே கேளாயிப்போதே
நொந்தேன்பசி யாலேநானடி
மோடி வேணடி.

வசனம்.

அடி வள்ளியென்னசெய்வேன் எனக்குமெத்தப் பசியெடுக்கின்றது கண்டெரியவில்லை ஐம்புலன்களுஞ் சிதறுகின்றது அங்கம் சோருகின்றது இன்னுமரைநாழிகை சென்றால் உயிர்போய்விடும்போலத்தோன்றுகின்றது எனக்கிந்தவேளைகொஞ்சம் அன்னங்கொடுத்து என்பசியைத்தணித்தா லுனக்கொருபெரும்புண்ணியமடி பூவையே.

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

இந்தவேளையிலேகாதா என்னிடம்பசிக்குதென்றே
சிந்தையேமிகவும்நொந்தே தெரிவிக்கவேண்டாமையா
செந்தினைமாவிடித்தே தேன்விட்டுப்பிசைந்துநானே
தந்திடுவேனேமெய்யா சாப்பிட்டுப்பசிதீர்வீரே.

பட்டுவாருந்தன? மாராப்பிஜாரு என்றவர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மெத்தப்பசிக்குதென்று உத்தமரேயின்று
விளம்பினீரென் முன்னின்று.

இத்தநிசேரே பசிகவேதள்ளாடி
இருக்கின்றீர்முகம்வாடி
செந்தினைமாவிடித்தே தந்திடுவேனே
சீக்கிரமாய்நானே
உந்தன்மனமே மகிழ்ந்திடுமேதானே
உண்ணுவீர்கனவானே
வனந்தனிலேசாதம் வந்திடுமோசொல்வீரே
மாதவமுடையோரே
சினந்திடுமேபேச லாகுமோமெய்யர்
சேயிழைமுன்னே துய்யர்

வசனம்.

ஐயாபாட்டனாரே இந்தவனத்திலன்னங் கிடைக்கமாட்டாதே என்று நினையாமலென்னிடத்தில் நீங்களன்னங் கேட்டீரே யான் என்னசெய்வேன் கொஞ்சந் தினைக்கதிரைப்பிடுங்கி யிடித்துச்செந்தேன்விட்டுப் பிசைந்து தருகின்றேன தனையுண்டுபசிதணிந்திடுவீர்.

பண்டாரக்கிழவன்சொல்வசனம்.

அடிபாதகி இன்னுமரைநாழிகை சென்றாலுயிருடலைவிட்டோடிவிடும்போலிருக்கின்றதே இந்தவனத்தி லன்னங் கிடைக்காதென்று தெரிவித்தனையே செந்தினைமாவைத்தின்றாற் பசிதீர்ந்துவிடுமா.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஐயா தங்களுக்கு அன்னங்கொடுக்காது நான்மாத்திரமருந்துகின்றேனா அவ்விதமிருந்தால்தானே யெனக்குப்பாவம்வந்துசேரும் செந்தினைமாவைத்தின்றாற் பசிதீர்ந்துவிடும் ப்ரபோ.

பண்டாரக்கிழவன் சொல் வசனம்.

அடி வள்ளி இனிமேலென்னாற் சகிக்கமுடியாது அந்தச் செந்தினை மாவையாவது கொஞ்சமென்னிட வாயிலூட்டிப் பசிதணிப்பாய் பாவையே.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஐயா பூட்டனாரே அமர்ந்திருங்கள் மாவிடித்து விட்டேன் தேன்விட்டுப் பிசைந்தூட்டுகின்றேன்.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மையிடத்தில் பண்டாரக்கிழவன் செந்தினைம்ாவு தரும்படியாகத் தெரிவிக்க உடனே மாவிடித்துத்

தேன் விட்டுப்பிசைந்து கையாலூட்டச் சந்தோஷங்கொண்டு மனதுள்ளடக்கிப் பண்டாரக்கிழவன் வள்ளியம்மை நஞ்சை மாவோடு கலந்து கொடுத்து விட்டாளென்று அபிநயித்துப் புலம்புகின்ற விதங் காண்குக.

பண்டாரக்கிழவன் சொல்.

விருத்தம்.

ஐய்யோபாவியேசதாருமோவள்ளியேயென்
செய்குவேனின்றுதானே செந்தினைமாவினோடு
தையலேபச்சைநாவி தன்னையேகலந்தீய்ந்தாயே
வையமீதெனையின்றோடே மடித்திடவெணங்கொண்டாயோ.

மானேயினி யேதுசெய்வேனென்ற வர்ணமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-திரிபுடை.

பல்லவி.

தையலேயென் செய்குவேனே
ஐய்யோ ஆவி சோர்ந்தேனே (தை)

அநுபல்லவி.

மெய்யுமேதள் ளாடிடுதே
வேர்வைமிக வாகிடுதே (தை)

சரணங்கள்.

வஞ்சியே பசிக்குதென்றே
வழுத்தினேனே நானின்றே
நஞ்சைமாவோடு கலந்தே
நங்கையேதந்தாய் மகிழ்ந்தே (தை)

பாவியேயுனக் கென்னையான்
பண்ணினேனபூ கேடுநான்
நாவியேகலந் தீய்ந்தாயே
நாசகாலியே சொல்வாயே (தை)

நெஞ்சினை யடைத்திடுதே
கினைவுமே மாறிடுதே
வஞ்சகிவாந்தி யாகுதே
வயிற்றை வலித்திடுதே (தை)

வசனம்.

அடிபாதகி உன்னிடத்திற் பசிக்குதென்றுதெரிவித்ததற்கா தினைமாவிற் பச்சைநாவியைக் கலந்துகொடுத்தாயுனக்கு என்ன தீங்கு

செய்தேன் வாய்கசக்கின்றதே கைகால் சோருகின்றதே நாவுலர்க் கின்றதே தேகம் நடுங்குகின்றதே சண்டாளி!

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

ஐயையோபச்சைநாவி யதனைச்சேர்த்தீய்ந்தேனென்றே
துய்யனேயெந்தன்முன்னே சொல்லவேதுணிந்திட்டீரோ
மெய்யனேயிதுவுமேயென் விதிவசகாலந்தானோ
வையகமீதிலேநீர் மாளமாவளித்திட்டேனோ.

எந்தன்றேவிளை விற்பேனித்தநக ரென்றவர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இந்தவிதம் பேசவே
வந்ததோ சிந்தைமெய்யா
எந்தன்றலை விதியோ
இப்படிநேர்ந்த தையா (இந்த)

தந்தேன்செந்தினை மாவைச்
செந்தேன்விட் டுண்ணச்செய்தே
இந்தவேளை புசித்தே
ஏங்குவதேனோ னைதே (இந்த)

சங்கரன் பீதிலானை
சாற்றுவேன் நம்பிரானே
இங்குமைக் தொல்வேனென்றே
எண்ணினீ ரெம்பிரானே (இந்த)

நாவிஷ வைத்திருக்கும்
பாவியோ நானுன்னையா
ஆவிசோறு தென்றுமே
அலருகின்றீரே துய்யா (இந்த)

வள்ளியெந்தனுக் கென்ன
வஞ்சகஞ்செய் தீர்நாதா
துள்ளிவிழுந் தெழுந்தே
சோகங்கொண்டீர் பொற்பாதா (இந்த)

வசனம்.

ஐயா தாங்களெனக்கு என்னதீங்கைச்செய்தீரொன்றுஞ் செய்யவில்லையே நானேனும்மை மடிந்திடத்திடச் செய்யவேணுமென்

று செந்தினைமாவிற் பச்சைநாவியைக் கலந்து கொடுப்பேனா இந்த வித்தமெண்ணவேண்டாஞ் சங்கரன்மீது ஆணை யானுமக்கு ஒருதீங் குஞ்செய்யவில்லை.

பண்டாரக்கிழவன்சொல்

விருத்தம்.

மெத்தவேபசிக்குதென்றே விளம்பிடமெல்லியேநீ
அத்ததிமாவிலேநஞ் சதனையேசேர்த்தீந்தாயே
உத்தமாவுண்ணுமென்றே யுபசரித்திரக்கமேதான்
எத்தனஞ்செய்தாயேயீ தேற்குமோகூறுவாயே.

கண்ணேயெந்தன் கண்மணியேகாதலியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோபாவி யெந்தனாவி
அலையுதடி கண்ணே
பொய்யோவுன்றன் முன்னே நானே
புகன்றேனடி பெண்ணே
சண்டாளியே மாநீலியே
தந்தேமாவும் நீயே
உண்டுபசிதீரு மென்றே.
உண்மையுரைத் தாயே
நெஞ்சுமிக அடைத்திடுதே
நஞ்சாலடி நானே
வஞ்சகியே இன்றுதானே
வாடிமெ லிந்தேனே
வாந்தியாகு தென்னசெய்வேன்
வள்ளிகிட்ட வாராய்
சாய்ந்தேனுந்தன் மடிமீதிலே
தானென்றுயர் தீராய்
மெய்சோருது கைசோருது
விழிசோருது பெண்ணே
ணதயலேயென் செய்வேனடி
தஞ்சம்நீயே கண்ணே

வசனம்.

அடிசண்டாளீ உமக்கு ஒருதீங்குஞ்செய்யவில்லை என்றுபொ ய்ச்சத்தியஞ் செய்ய மனந்துணிந்தாயே உன்போலேகள்ளி உலகத்

தின்மீது ஒருவரையுங்காணேன்கால்கைசோர்ந்துதகவ்தெரியவில்லை யென்செய்வேனடி பார்தகி.

வள்ளியம்மைசொல்.

விருத்தம்.

அரகராகயிலைவாசா அடியவருளத்துற்றோனே
வரநதிமதியணிந்தோய் வரைமகள்நாதாநீதா
திரிபுரமடிந்தநீறுத் தீயெழச்சரித்தயோகா
பரமனேயிச்சொற்கேட்கப் பாவிமுன்னென்செய்தேனோ.

இந்தவிதிக் கென்னசெய்குவோ மென்று வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்வே னேன்துசெய்குவேன்
ஈசனேநான்றான் (என்ன)

அநுபல்லவி.

இன்னிலமீதிலே கன்னிமுறைண்டியே
சொன்னதுகேட்கவே என்மனம்நோகுதே (என்)

சரணங்கள்.

ஐயையோநானேமா பாவியே
னையு தாவியே
பையரவோடுமே கையினிலேமழு
வையணிநாதனே தூய்யனேமெய்யனே (என்)

இந்தவிதிவந்திட லாச்சே
இப்பூவோர்க் கேச்சே
செந்தினேநாவுமே தந்ததினாலுமே
நிந்தனைசெய்கிறார் சந்திரசேகரா (என்)

வசனம்.

ஐயோ! ஜெகதீசா, பரமேசா, கயிலாசா, உமாதேவிநேசா, திரிபுரமெரித்த நாதனே, திங்களைத்தரித்த நீதனே, இந்தக்கிழவன் பேசும் வார்த்தை கேட்கவிதித்தாயோ, அல்லது யான் முன்ஜென மத்திற்செய்த பாவந்தானோ, என்மீது பழிசாற்றுகின்றாரே சிவமே என்செய்வேன்.

பசிக்குதே யுடல் பசிக்குதேயென்ற வர்ணமெட்டு.

## தர்க்கம்.

பண்டாரக்கிழவன் சொல்

இராகம்-தேசிகதோடி-அடதாளம்.

கண்ணிகள்.

வள்ளியே பாவி-வள்ளியே

வள்ளியம்மை சொல்.

வள்ளியுமே கள்ளியென்றுமே
துள்ளியேயின்று வள்ளமேலேவிழ்ந்தீர்
வாடுரேன் உம்மால்
வாடுரேன்

பண்டாரக்கிழவன் சொல்.

துடிக்குதே யுடல்-துடிக்குதே

வள்ளியம்மை சொல்.

அடிக்குதென்றுமே நொடிக்குள்ளேநீ
ரடிக்கடிசொல்லப் படிக்குள்ளேமா
தோஷியே நரனே
தோஷியே

பண்டாரக்கிழவன் சொல்.

சோருதே ஆவி-சோருதே

வள்ளியம்மை சொல்.

சோருதென்றுயின் னேர்மெள்முனே
நீருமேபுகன்றீரிம் மொழிகேட்கத்
தொகுத்தானோ வேதன்
வகுத்தானோ

பண்டாரக்கிழவன் சொல்.

வாடினேன் கலையால்-வாடினேன்

வள்ளியம்மை சொல்.

வாடினேனென்ன ஓடிவந்துதன்
ளாடியெந்தன்முன் ஞடிப்பழிசாற்ற
வந்ததோ காலம்
வந்ததோ

பண்டாரக்கிழவன் சொல்.

தந்திடாய் தண்ணீர்-தந்திடா

வள்ளியம்மைசொல்.

தந்திடாய்தண்ணீ ரிந்தவேளையே
சுந்தரியென்ற னைந்தீரென்செய்வேன்
சாந்தமனே குணா
சாந்தனே

வள்ளியம்மைசொல் வசனம்.

ஐயா மஹானுபாவரே கைசோருது கால்சோருது கண்தெரியவில்லை தாகமோ மேலாடுகின்றது எனத் தெரிவிக்கின்றீரே நானென்னசெய்வேன் இந்தவனத்திற் றண்ணீரருகிலில்லையே என்போலபாதகி இப்பிரபஞ்சத்தின்மீது கிடைடயாதையா நீரென்னசெய்வீர்.

பண்டாரக்கிழவன்சொல் வசனம்.

அடிபாதகி மாதேநோடு நஞ்சைக்கலந்துகொடுத்து வேடிக்கை பார்க்கின்றாயே, இந்தத்தருணங் கொஞ்சந் தண்ணீர் கொடுத்தா லுயிர்தரிக்கு மில்லாவிடிற் போகுமடி என்மீதி தயைசெய்வாய் வள்ளி.

## பண்டாரக் கிழவனும் வள்ளியம்மையுஞ் சுனைக்கிச் செல்லும் பாகம்.


பண்டாரக்கிழவன் சொல்

விருத்தம்.

கொஞ்சமுமிறக்கமில்லாக் கோதையென்சொல்லைக்கேளாய்
நெஞ்சடைத்திடுதையோ தண் ணீர்கொஞ்சந்தருகுவாயே
வஞ்சகியுன்றாலேமெய் வாடுதென்செய்குவேனே
தஞ்சம்வேறில்லையேதாகந் தன்னையேவிலக்குவாயே.

வசனம்.

அடிசண்டாளி உனக்குக் கொஞ்சமாவது இறக்கமில்லாது போய்விட்டதே நான் றண்ணீர் தண்ணீரென்று தயங்குகின்றேன் உன்செவியிற் கேட்காததுபோ லிருக்கின்றாயேபாதகி இத்தறி என் தாகத்தைத்தணித்தால் வெகுகோடிபுண்ணியம் உண்டடி தயவுசெய்வாய்.



வள்ளியம்மைசொல் விருத்தம்.

சுந்தரமிகவேல்வாய்ந்த தோகையான்சொல்லைக்கேளாய்
இந்தமாவனத்திற்கப்பா லிருக்குமோர்சுனைதானையா
சிந்தையேமகிழ்ந்துசென்றே சீக்கிரமாய்நீருண்டே
வந்திடுவீரேயுங்கள் மலரடிபோற்றினேனே.

வசனம்.

ஐயா பண்டாரமே இந்த வனத்தாண்டி ஓர் சுனையிருக்கின்றது தாங்கள் பையப் பையச் சென்று தண்ணீரருந்தி இங்கு வந்திடுவீர் பாதையைவிட்டு விடாது செல்வீர்.

பண்டாரக்கிழவன்சொல் விருத்தம்.

காட்டிலேபுலிகளோடு கரடிகள்வேங்கைகூடிக்
கோஷ்டிசெய்திருக்குமேநீ கொல்லயேற்பாடுசெய்தாய்
வாட்டமேயடையவேண்டாம் மங்கையென்முன்னாலேசீ
மாட்டியேவந்தாலன்றி மனப்பயந்தீர்ந்திடாதே.

வசனம்.

அடி! கொடியசண்டாளி என்ன தெரிவித்தாய், இந்தவனத்தில் வாழ்ந்திருக்கும் விலங்கினங்கள்கண்டா லென்னைக்கொன்றுவிடுமே, எனக்கு மெத்தப்பயமாயிருக்கின்றது, என்னைக்கூட்டி அந்தச் சுனையிருக்குமிடம் மறைத்துச்செல்வாய் தடைசெய்யாதே.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

தொல்லைதானுமோடின்றே துங்கமேமிகவேவாய்ந்த
மெல்லிலைகைபூணுமேவனிவ் வேளையிலென்பின்னடி
வல்லவமர்கவேதான் வருகுவீர்மனமகிழ்ந்தே
செல்லுவோமின்றுதானே சீக்கிரமாகநாமே.

வசனம்.

ஐயா! பண்டாரமே விலங்கினங்களும்மை என்ன செய்யும் தனியாகச் செல்லப் பயமாயிருக்கின்றதென் றுரைத்தீரே உம்மோடு வெகுதொல்லையாய்த்தா னிருக்கின்றது நான்வருகின்றேன் இத்தடியைப் பிடித்துக்கொண்டு என்பின்னடி வருகுவீர் சுனையிருக்குமிடஞ் செல்வோம் வாருங்கள்.

பண்டாரக்கிழவன்சொல் வசனம்.

வள்ளியிதோ வருகின்றேன் மெள்ளநட.

வள்ளியம்மைசொல் வசனம்.

அவ்வண்ணமே செல்கின்றேன்.

பண்டாரக்கிழவன்சொல் விருத்தம்.

மங்கையேமானே தேனே வள்ளிநாயகியேகேளாய்
சங்கையில்லாத தூரந் தானெனைக்கூட்டிவந்தாய்
எங்கடிசுனை தான்பெண்ணே இருக்கின்றதகமகிழ்ந்தே
இங்குயென்முன்னே தானே எடுத்துமேயுரைசெய்வாயே.

வசனம்.

கண்மணி என்னை வெகுதூரங் கூட்டிவந்தாயே சுனை இன்னு மெவ்வளவுதூர மிருக்கின்றது நாவோ உலருகின்றது தாக மேலாடு கின்றது நடக்கச்செயலில்லையே என்னசெய்வேன் கண்தெரியவில் லையே பெண்ணே.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

உத்தமாபுகலுவேனே யுளமிகவாடவேண்டாம்
இந்தசுனையிற்றானே இறங்கிமெய்யாதய்யா
பத்திரமாய்த்தண்ணீரைப் பருகியேவருகுவீரே
சித்தமேமிகமகிழ்ந்தே சீக்கிரமாய்ச்செல்வோமே.

வசனம்.

ஐயா! இதோ சுனை இருக்கின்றது மெள்ள இறங்கித் தண்ணீர்பருகி வெளியே வருவீர் மனமகிழ்ந்து தினைப்புனஞ் செல்வோம் பாட்டனாரே.

பண்டாரக்கிழவன்சொல் வசனம்.

அடிவள்ளி இந்தச்சுனையில் என்கையைப் பிடித்துப் பையஇறக்கிவிடுவாய் நான் தண்ணீர்பருகி வெளியேவருகின்றேன் பின்புதினைப்புனஞ் செல்லுவோம் மாதுசிரோன்மணியே.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஐயா உம்மோடு தொல்லையாயிருக்கின்றது என்கையைப் பிடித்துப் பைய இறங்கும்.

---

## பண்டாரக்கிழவன் சுனையில்வீழ்ந்து புலம்பும்பாகம்.

பண்டாரக்கிழவன் சொல்.

அவனியில் யாரேனு மன்யாயஞ்செய்தாரானுமென்ற வர்ணமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இந்தக்கிழவ னுன்னை
என்னசெய்தா னடி
தந்திரமாய்ச் சுனையிற்
றள்ளிவிட்டா யடி
சங்கடமென்றே சுனை
தன்னில்வீழ்த்தி னையடி
மங்கையேயுனக் கென்ன
வஞ்சகஞ்செய்தே னடி
கைகொடுத்தென்னைத் தூக்கி
கரையில் விடுவாயடி
தையலே யெந்தனுக்கே
தஞ்சமில்லை யிங்கடி
உந்தனை யெந்தனுவி
கொஞ்சிட லானேனடி
இந்தவேளையே நீயே
என்முகத்தைப் பாரடி

வசனம்.

அடி சண்டாளி யானுனக்கு என்ன தீங்குசெய்தேனென்னைத் தந்திரமாக இந்தச்சுனைக்கி அழைத்துவந்து தள்ளிவிட்டாயே எனக்கு இந்தக்காட்டில் ஒருவருந் துணையில்லையே இன்னு மோர்நாழிகைக்கு லெந்தனுயிர் போய்விடும்போலத் தோன்றுகின்றது நீ கைகொடுத்து வெளியே என்னைத் தூக்கிவிடுவாய் வள்ளியே தயைசெய்வாய்.

வள்ளியம்மை சொல்

பெருந்தமலைகளா இருக்குந்திடல்களா-என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தெய்வமேயாரென்ன செய்குவேனையயோ
சித்தம் வாடலாச்சே-இந்த

வையகமீதுள்ளி தையலரென்னை
வசைகள் கூறுவாச்சே
இந்தக்கிழவனு லெந்தனிடவங்கம்
தொந்திடுதே பரனே-ஐயோ
சந்திரசேகரா பந்தவினைபழி
சாற்றுகின்று ரானே
சுந்தரிமுன்னாடி வந்தாளாகவே
தொல்லைதா னும்மோடு-ஐயோ
செந்தினைமாவுமே தந்தனினுமே
சேர்ந்த தபகேடு
சுள்ளாடியேசுனை தன்னிலேவீழ்ந்தே
தயங்குகின்றீர் நீரே-ஐயா
வள்ளியென்கைப்பற்றி மெள்ளமெள்ளத்தானே
வாரும் பெரியோரே

வசனம்.

ஐயா கிழவனாரே தாங்களென்னிடம் வந்தாளாக உம்மோடு தொல்லையாயிருக்கின்றது சுனையிற் றவறிவீழ்ந்து யான்பிடித்துத் தள்ளிவிட்டேனென்று என்மேற் பழிசாற்றுகின்றீரே தகுதியா கல்லது என்கையைப்பற்றி வெளியேறிவாருமையா.

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

ஐயனேநீ ரெந்தன்முன்னே பலவாருய்த்தா
  னடுக்காத வார்த்தைதனை யறைவதேனோ
தையலிடம் பசிக்குதென்றே யுரைத்ததாலே
  தந்ததினை பீரவதனை யருந்திமெய்யா
மையுதடி தாகமதா லென்றென்பின்னே
  நடந்துவந்து சுனைதனிலே விழுந்திரையேயா
கைதனையே பிடித்தேறி வருகுவீரே
  கரைதனிலே பண்டாரக் கிழவனாரே.

வசனம்.

ஐயனே! என்னைச் சண்டாளியென்று தெரிவிக்கின்றீரே. தாகந்தீர்க்கும் பொருட்டாக என்னோடு நடந்துவந்து இந்தச் சுனைதனிலேவீழ்ந்து நான்றள்ளிவிட்டேனென் றுரைத்தீரே உமக்குத் தகுதியா என்கைப்பிடித்து வெளியேறிவாரும்.

பண்டாரக்கிழவன் சொல்

விருத்தம்.

தாகமது தணிந்தநடி மயிலேமானே
சாற்றுமொழி தனைக்கவனித் திடுவாய்பெண்ணே
மோகமது யினிச்சகிக்க வென்னாலேதான்
முடியாது குறமானே வள்ளியேகொக்
கோகமுறைப் படியாக லீலெசெய்வோங்
கோதைகேளயுட்டிசெய்யக் கூடாதின்றே
சோகமிக வாகமதன் வில்லிலேதான்
றொடுத்திட்டான் மலர்க்கணையை விடுத்திட்டானே.

## பண்டாரக்கிழவனுக்கும் வள்ளியம்மைக்கும் தர்க்கம்.

இன்று மங்கஜவாதை கொண்டேனே யென்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பண்டாரக்கிழவன்சொல்.

தாகவிடாயேதீர்ந்தேன் மோகவிடாய்தீராய்
தஞ்சமெனக்கேயது வஞ்சியேபூவின்மீது
சஞ்சலமேனுமாது கொஞ்சிடுவாயிப்போது
ரஞ்சித மாகவே (தா)

வள்ளியம்மைசொல்.

அடடாபோடாமூடா அடடாஓடடா
அஞ்சிடாமலேநீயே கெஞ்சியேமுன்னின்றாயே
பஞ்சையேமட்டிநாயே நெஞ்சுவாயறிவாயே
வஞ்சிதனை டா (அ)

பண்டாரக்கிழவன்சொல்.

அந்தமுடையமாதே மயக்கந்திடாயடி
அன்னமேயென்செய்வேனே கன்னிகையேசொல்வேனே
மன்மதன்கணைதானே என்மீதுவிடுத்தானே
உன்னித மாகவே (தா)

வள்ளியம்மைசொல்.

பேதையென்முன்னேவாதே பேசாதுசெல்லுவாய்
பெண்ணாலேவெகுபேரே மண்ணின்மேல்மடிந்தாரே
என்னைமலைந்தீரே புண்ணியமோசொல்வீரே
இன்னம தாகவே (அ)

பண்டாரக்கிழவன்சொல்.

மங்கையுன்னுமேல்மாமேன வாடுகின்றேனடி
மையல்கொண்டேனேவாடி ஐயமேலேயேனோமோடி
செய்கின்றாயுறவாடி சையோகஞ்செய்வாயோடி
நைகின்றேன் நானடி (தா)

வள்ளியம்மைசொல்.

எட்டியேநிற்பாய்நீயே இது தகுதியோ
இந்தவாதுசெய்யாதே எந்தனிடமிப்போதே
தந்திரங்கள்செல்லாதே நிந்தனைகள்சொல்லாதே
சிந்தையே நையுதே (அ)

பண்டாரக்கிழவன்சொல் வசனம்

கண்மணி வள்ளிமாதரசே யான் றுகவிடாய் தீர்ந்தேன் மன்மதன் கரும்பு வில்லிலரும்பு மலரைப்பூட்டி என் மீது விடுத்து மோக விடாயுண்டாக்கி விட்டானடி இத்தருண மொருமுத்தமிட்டுக் கட்டித்தழுவி மோகவிடாயைத் தீர்த்திடுவா யுன்னைக் கெஞ்சினேன் மோடிசெய்யாதே பெண்பாவாய்.

வள்ளியம்மைசொல் வசனம்.

அடா துஷ்டா நான் நன்மைசெய்யத் தின்மை நினைத்தாயடா உனக்கு இது தர்மமா உனக்குப் பெண்டீராவேண்டும் அடா பயித்தியம்பிடித்த கிழப்பண்டாரமே இனிமேல் நின்கில்லாதே எனது அண்ணமார்கள் வந்தவுடனே இச்சங்கதியைத் தெரிவிக்கின்றேன் நீ யெங்குமாவது செல்லடா சண்டாளா.

பண்டாரக்கிழவன்சொல் விருத்தம்.

அன்னநடை யுடையபெண்ணே கண்ணேயின்றே
  யணைந்திடுவா யெனவரைந்தே கெஞ்சிடாது
கன்னிகையே எனைவகையே கூறினையுன்
  கருத்தறிந்தே னல்லாது வேறொன் றில்லை
என்னநினைந் தாயுனது மதியுமேதா
  னிவ்வளவோ மடமானே மயிலேதேனே
மின்னலிடை யாளேஇந்த வயதிலேதான்
  வேண்டுமோ மனையாட்டி விளம்பினேனே.

வசனம்.

அடி கண்மணி என்னதெரிவித்தாய் கொஞ்சமாவது நினையாது என்னை நிந்தனைசெய்தாயே இந்தத் தழன்றபருவத்தி லெனக்குப் பெண்டீராவேண்டும் கேலிசெய்கின்றாரென்று நினையாது வாஸ்துவமென்று நினைந்துகொண்டாயே உனது புத்தியு மிவ்வளவுதானு பெண்ணரசியே.

வள்ளியம்மைசொல் விருத்தம்.

உத்தமனே உண்மையென நம்பியேயா
னுந்தனையே நிந்தனைசெய் தேனெய்யா
சித்தமிகத் தளராதீ ரறியாமற்றான்
செய்ததொரு குற்றமதைப் பொறுப்பீரையா
மெத்தவே தாகமதி னாலேவாடி
மெலிந்தவரே மனமகிழ்ந்தேன் கிழவனாரே
இத்தருணம் பரனருகே செல்லுவோமே
ஏந்திழையாள் பின்வருவீ ரின்றுதானே.

வசனம்.

ஐயா! பாட்டனாரே தாகந்தணிந்தபின்பு இந்தவார்த்தைகளையுரைத்ததாலே யான் வாஸ்துவமென நினைந்து தங்களைத் தூஷணமாகப் பேசினேன் நாதா இவைகளை மன்னித்து என்மீது கிருபைசெய்வீர் நாமிங்குவந்து வெகுநாழிகையாகின்றது என்பின்னாக மனமகிழ்ந்துவருவீர் தினைப்புனத்தை நாடிச் செல்லுவோமையா.

பண்டாரக்கிழவன்சொல் வசனம்.

கண்மணி! நீ எவ்வளவோ வார்த்தைகளுதாசினமாகக்கூறினாயவைகளை குற்றம்பாராட்டாம லிருந்தேனே இதனைப் பாராட்டுவேனா நீ ஒன்றும் மனதில் நினைக்கவேண்டாம் மாதுசிரோன்மணி! உன்பின்னாக வருகின்றேனடி.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஐயா! பாட்டனாரேஎன்பின்னாடிவருவீர் தினைப்புனஞ்செல்வோம.

பண்டாரக்கிழவன் சொல்

விருத்தம்.

சுந்தரவள்ளிமானே சொல்லுவேனென்றுகேளாய்
இந்தமாவனத்திலேநா னிருக்கின்றனிலங்கினாலே

சிந்தைமீதச்சந்தானே ஜெனிக்குமோஜெனித்திடாதோ
எந்தனுக்கேயன்போடு எடுத்துமேயுரைசெய்வாயே.

வசனம்.

மாது சிரோன்மணி! இந்தவனத்திலிருக்கின்ற விலங்குகளினாலே பயமடையாதிருக்கின்றாயே எனக்குப் பயமாயிருக்கின்றதே உனக்கு ஒருமிருகத்தாலும் பயமில்லையோ கூறுவாய் மாதே.

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

காட்டில்வாழ்விலங்குக்கெல்லாங் கன்னிகையஞ்சிடேனே
ஓட்டுவேன்கவணினாலே யொன்றுமென்முன்னில்லாது
நாட்டிகமானவேழந் தன்னையேவனத்திலேதான்
பாட்டனேகண்டாலேயான் பயமிகக்கொள்ளுவேனே.

வசனம்.

ஐயா! எந்தவிலங்கினாலும் பயமடைந்திடேன் யானையைக்கண்டாலெனக்கு வெகுபயம் யானை இந்தவனத்திற் கிடையாது உண்மையைச் சொன்னேன் என்பின்னடி வாருங்கள் மனமகிழ்ந்து தினைப்புனஞ் செல்லுவோம் பாட்டனாரே.

பண்டாரக்கிழவன்சொல் வசனம்.

கண்மணி நீ முன்னே செல்வீர் யிதோ வருகின்றேன் மாதே.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஐயா! அவ்வண்ணமே செல்கின்றேன்.

பண்டாரக்கிழவன்சொல் வசனம்.

நாம் நினைந்தபடி முடியும் வேளையின்று தான்வந்தது முன்னே வேடன்போலவும் வளையற்செட்டிபோலவும் வேடமெடுத்து இம்மாது முன்னமே வார்த்தையாடினதிலொரு பலனுமில்லை இக்கிழவுருவெடுத்தது நல்லயோஜனைதான் வள்ளியானவள் முன்னேசெல்கின்றா ளிந்தவேளையில் எனதுசகோதரனாகிய கரிமுகவரை யானையுருவெடுத்து வரும்படி நினைந்து இம்மாதரசினை மருவுகின்றேனிது நல்ல சமையமா யிருக்கின்றது.

# பண்டாரக்கிழவன் யானைமுகவனை ஸ்தோத்திரஞ்செய்யும் பாகம்.

பண்டாரக்கிழவன் சொல்

வாவாவென்பெண்ணே சந்த்ரமதியே என்றவர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரிகை-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமுகவிநே ஓடிவருவாய்
வருவாய்வருவாய் வருவாய்கரி (மாமு)

அநுபல்லவி.

தாமதஞ்செய்யாமலே ஜலதியானையைப்போலே
வாம்முடையோனேமுன் வருவாய்
வருவாய்வருவாய் வருவாய்கரி (மாமு)

சரணங்கள்.

காரணி நேபரி
பூரண நேதநி
வாரண மாகவேதான்
வருவாய்வருவாய் வருவாய்வருவாய்கரி(மாமு)

துள்ளிவேக மதாக
உள்ளமிகக்க கலங்க
வள்ளிமுன்னாக வேதான்
வருவாய்வருவாய் வருவாய்வருவாய்கரி(மாமு)

உத்தமி மயங்கிட
சித்தம்போல் முடித்திட
மத்தக கெஜமாக
வருவாய்வருவாய் வருவாய்வருவாய்கரி (மாமு)

வசனம்.

அண்ணா விநாயகக்கடவுளே இம்மரத்தை மணரவேண்டுமென்ற பெண்ணத்தோடு வேண்டிய தந்திரங்கள் செய்தேனகப்படவில்லை இத்தருணந் தாங்கள் யானையாக யிம்மாதுமுன்வருவீர் யான் மனமகிழ்ந்து வள்ளியை மருவுகின்றேன் தாங்களிந்த உபகாரஞ்செய்யவேண்டும் ப்ரபோ.

வள்ளியம்மைசொல் வசனம்.

ஐயா பாட்டனாரே என்னை முன்னடி நடக்கும்படி தெரிசித்து வெகுதூரத்தில் நடக்கமுடியாது தள்ளாடித் தள்ளாடி வருகின்றீரே யானிங்கு நிற்கின்றேன் பையப்பைய வந்துசேருவீர் நாமிங்கு வந்து வெகுநாழிகை யாகின்றது தினைப்புனஞ்செல்லுவோம்ப்ரபோ.

பொது விருத்தம்.

புள்ளிமாமயிலிலேறும் புண்ணியன்கார்த்திகேயன்
உள்ளமேகினைந்தவேளை யோடியோர்யானைபோலே
துள்ளியேவேகமாகத் துதிக்கையால்மரமொடித்தே
வள்ளியஞ்சிடமுன்வேழ மாமுகவரும்வந்தாரே.

வசனம்.

வேலவர் தமையனாகிய விநாயகரை நினைந்தவுடனே யானைரூபமாக அந்தவனத்தில் வந்திட முன்னேசென்ற வள்ளியம்மை யானையைக்கண்டு புலம்புகின்ற விதங்காண்குக.

வள்ளியம்மை

## யானையைக்கண்டு புலம்புகின்ற பாகம்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

கன்னிகையானென்னசெய்வேன் பாட்டனாரே
கார்மேகம்போலவொரு யானைதானே
முன்னமுமேவேகமதாய்த் துதிக்கையாலே
மோதியெனையடித்திடவே வருகுதையோ
பன்னகத்தையணிந்தபர மேசனின்றன்
பத்திதனிலுயர்ந்தவரே இந்தவேளை
தன்னிலேதனிலக்கியடி யானையாள்வீர்
சாற்றினேனடிமலரைப் போற்றினேனே.

முன்னாளில்ராவணன் மண்மேல்மடிந்ததென்ற பசரீஸ் வர்ணமெட்டு.

இராகம்-அபூருவம்-அடதாளச்-சாப்பு.

கண்ணிகள்.

ஐயய்யோயானென்ன செய்திடுவேனின்று
கைகாலுஞ் சோர்ந்திடுதே
நையுதேயென்னிட மெய்யும்பதறியே
நாடி-ஐடி யானையும்வந்ததுவே(ஐய)

இந்தவேளை நீரே எந்தனையாள்விரே
அந்த ...முடையோரே
தந்தியைக்கண்டுமே வந்தேனும்முன்னாலே
நானே-நானே தஞ்சமில்லாதபடி

ஆவியுஞ்சோருதே ஐம்புலன்மாருதே
ஐயனே யென்னசெய்வேன்
பாவியாளானேனே பூவின்மேலென்முகம்
யாரும்-காரும். பாவையென்னைநீரும்.

வசனம்.

ஐயோ பாட்டனாரே நானென்ன செய்வேன் ஓர் யானையானது மரத்தைத் துதிக்கையாலொடித்து வேகமாக என்னைக்கொல்ல வருகின்றதே இந்த வனத்தில் யானை இருக்கின்றதென் றறிந்தாலும் மோடி வரமாட்டேனே இதனைப்பார்க்கப் பயங்கரமாயிருக்கின்றதே மனம் பதருகின்றதே கைகால் நடுங்குகின்றதே நாவுலருகின்றதே என்னை இந்த வேளை நீர்தாகாப்பீர் வேறு கெதி நீரன்றிக் கிடையாதே என்ன செய்வேன்.

பண்டாரக்கிழவன் சொல்

மையலேஉன்னாலே ஏன்னுவிசோருதே என்ற வர்ணமெட்டு.


இராகம்-இந்துஸ்தான்-பியாரு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஐயய்யோயானென்ன செய்திடுவேனே
நொய்யுதேஎன்னிடை மெய்யுமடி
தையலேபாரடி கைகால்பதருதே
தந்தியோடிங்கே வந்திடுதே

காட்டிலேஎந்தனையே கூட்டிவந்தாயே
காட்டிக்கொடுத்திடாதே கண்மணியே.
கோட்டிகள்செய்துமே நாட்டிகமாய்யானை
கொல்லவருகுதே மெல்லிகையே

உத்தமியுந்தனுக்கே மெத்தப்புண்ணியமே
இத்தறியென்னை யாதரித்திடுவாய்
சித்தமும்வாடுதே பத்மினியேஎன்ன
செய்திடுவேனடி தையலரே



வசனம்.

அடி பாதகி சண்டாளி என்னிடத்திலிருக்க வேண்டாமென்று லோடி விடுவேனே ஏனிந்தச் சற்பனை செய்கின்றாய் முன்னம் பசிக்குதென்று தெரிவித்ததற்கு நஞ்சை மாவோடு கலந்து கொடுத்தாய் தண்ணீர் தவிக்குதென்றே னிங்கு கூட்டி வந்து சுனையிற்றள்ளி விட்டாய் பின்பு இந்த யானையை என்னைக் கொல்ல வென்று வரவழைத்தாய் ஆதரவில்லாம லுன்னிட மடைக்கலம் புகுந்தேனே எனக்குத்தானே இக்கெடுதி செய்ய நினைந்தாய் உன் கூடவர வெனக்கு மனமில்லை எட்டிச்செல்வாய் சண்டாளி.

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

ஐயனேயிந்தவேளை யானையைவிலக்குவீரே
துய்யனேயெந்தனங்கஞ் சோருதேதென்செய்குவேனே
மெய்யனேயும்மையல்லால் வேறுகெதிகாணேனையா
தைய்யின்பயந்தீர்ப்பீரே தாளதைப்போற்றினேனே.

வசனம்.

ஐயா! தாங்களென்னிடம் வந்துசேர்ந்த துமுத லொருகெடுதியும் யான் செய்யவில்லையே என்னை நிந்தனை சொல்கின்றீரே இந்தக்காட்டி லுனடியன்றி வேறுகெதி யெனக்குக் கிடையாதே என்ன குற்றம் யான்செய்தபோதிலு மவைகளைமன்னித்து இந்தயானையை விலக்குவீர் தங்கள் மலரடியைப்போற்றினேன் மெத்தப்பயமாயிருக்கின்றதே என்னைக்கொல்லவருகின்றதே என்னசெய்வேன்பரம்பரா.

பண்டாரக்கிழவன்சொல்

விருத்தம்.

அன்னமேவள்ளிமானே அறைந்திடும்வார்த்தைகேளாய்
என்னையேமணருவேனென் றித்தநிசெங்கைவேலோன்
தன்னிடப்பேரிலே சத்தியமதனையின்றே
கன்னியேசெய்தாயானாற் கரிதனைவிலக்குவேனே.

வசனம்.

கண்மணி! என்னை விவாகஞ் செய்துகொள்ளுகின்றேனென்று உங்கள் குலதெய்வமாகிய சிவசுப்ரமண்யக்கடவுள் மீது ஆணையிட்டாயானா லிந்தவேளையி லுன்னைக் கொல்லவருகின்ற யானையை விலக்குவே னில்லாவிட்டா லென்னருகில்வரவேண்டாந் தூரப்போவாய் யான் ஓடிவிடுகின்றேன்.

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

இத்ததிபுகலுவேனே வந்திழையானேமெய்யா
உத்தமாழனருவேனே யுந்தனையுமையாளின்றன்
புத்திரனுனவேலன் புள்ளிமாமயிலோன்மீதே
சுத்தியமுக்காலுந்தான் றந்தியைவிலக்குவீரே.

இராகம்-தேசிகதோடி-அடதாளம்.

கண்ணிகள்.

பண்டாரமே உம்மைநானே-ஐயா
பாவைமனஞ் செய்குவேனே
தொண்டுசெய்வே னின்றுதானே-ஐயா
தோகைமனஞ் செய்குவேனே
சுப்ரமண்யர் பேரிலானை-ஐயா
சொந்தப்பெண்டா ராகுவேனே
இப்பொழுதே தந்திதனை-ஐயா
ஏகிடவே செய்யுமையா.

வசனம்.

ஐயா எங்குல தெய்வமான சிவசுப்ரமண்யக் கடவுள்பேரிலானை தங்களை மணம்புரிகின்றேன் வேறு சந்தேகம்வேண்டாமிந்த வேளை என்னைக் கொல்லவரும் யானையை விலக்குவீர் நாதா வேறு எனக்கு ஆதரவு ஒருவரு மில்லை ப்ரபோ.

பண்டாரக்கிழவன் சொல்

விருத்தம்.

சித்தினியானமாதே தெரிசிக்கும்வார்த்தைகேளாய்
சித்தமும் ... லே தேகமும்மெலியலானேன்
இத்தகிமனமகிழ்ந்தே எந்தனை மருவுவாயே
சத்தியம்மாரிநூலே தந்திவந்திடுமேபெண்ணே.

வசனம்.

கண்மணி யானையானது போய்விட்டது இந்தவேளையில் மன்மதன் பாணமிட்டு வதைக்கின்றான் தடைசொல்லாது என்னை மனமகிழ்ந்து தழுவுவா யில்லாவிடில் யானை யுன் முன்புவந்து கொன்றுவிட்டுச் செல்லுங் கோதையே என் சொல்கின்றாய்.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் பண்டாரக்கிழவன் வள்ளியம்மையைக் கேட்க அன்னவளொன்றும் பேசாது நிற்க உடனே கிழவனருகிற்சென்று கட்டித்தழுவி முத்தமிட்டு தன்னாசைகள் தீர்ந்தபின் வள்ளியம்மை கிழவனுக்குப் பாரியானேனென்று புலம்புங்கால் வேலவர் சுயரூபத்தோடு காக்ஷி கொடுக்கின்ற விதங் காண்க.

வள்ளியம்மைக்கிச்

## சிவசுப்ரமணியர் காட்சிகொடுக்கும்பாகம்.



வள்ளியம்மைசொல்

விருத்தம்.

தொல்லுலகோர்கொண்டாடுஞ் சுந்தரி இங்குவந்தே
வல்லபமிகவேவாய்ந்த மதகரியாலேயின்று
மெல்லிணைக்யானேசெங்கை வேலன்மீதாணையிட்டே
பல்லிலாக்கிழவனுக்கே பாரியாளானேனையோ.

வசனம்.

ஐயோ! நான் முன்ஜென்மத்தி லென்ன பாவத்தைச் செய்தேன் ஜெகதீசா, கயிலாசவாசா, வரைமகள் நேசா, கார்மேகம் போலே முழங்கிவந்த யானையைக்கண்டு குலதெய்வமாகிய சிவசுப்ரமணியக் கடவுள் மீது ஆணையிட்டு இந்தப் பல்லில்லாத கிழவனைக் காந்தர்வமாக மணந்தேனே இதுவுமென்னிட தலையெழுத்தோ பரம்பொருளே.

### சிவசுப்ரமணியர் சொல்

### விருத்தம்.

சிந்தைமிக வைந்தும்ட மானேதேனே
செப்புமொழி தனைக்கவனித் திடுவாய்பெண்ணே
எந்தனையின் றெனவே தெரிந்திட்டாயா
இல்லையா எனைத் திரும்பிப் பாராய்கண்ணே
உந்தனையே மணம்புரிய வேண்டுமென்றே
யோடிவந்தேன் வேடுவனைப் போலேநானே
சுந்தரஞ்சேர் வளையல்விலை கூறினேனே
தோகையே நிந்தனைசெய் தாயே தென்றேனே.

### வசனம்.

கண்மணி! என்னை இன்றெனவறிந்தாயா மனமகிழ்ந்து என்னை ஏறிட்டுப்பாருன்னை மணம்புரியவேண்டுமென்று முன்னே வேடவுருவாகவும் வளையற்செட்டியாகவும் வந்தேன் நிந்தனைசெய்தாய் வந்தவழியே சென்றேனடி கண்மணி வள்ளிமாதே.

### வள்ளியம்மை சொல்

மாமதியேவாராய்சந்த்ரமாமதியே என்ற வர்னமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

### பல்லவி.

பூபதியேபோற்றிசெய்தேன் பூபதியே
புடவியுளோர்களுமேபுகழ்ந்திடு திருமார்பினிலேதிகழ் (பூப)

### அநுபல்லவி.

சாபல்யமடைந்தேனே ஆதனே
சங்கரன்சேய்யு சதாசிவன்மகனே
னையனுமேமுன்ஜென்மஞ் செய்திடுமாதவமேதம்
சந்த்ரவதனங்கண்டேன் சுந்தரிமகிழ்கொண்டேன் (பூப)

### சரணங்கள்.

எத்தனைகுற்றஞ் செய்தாலுமேநாதனே
அத்தனையும்பொருத்தாள்வாய் பொற்பாதனே
இந்திரனின்மருகோனே அந்தமுள்ளமுருகோனே
இன்பசுகந்தனாமே அன்புடனேசெய்வோமே (பூப)

கந்தனேயுந்தனை நிந்தனை செய்தேனே
கர்த்தனே நீரென் றறியாமலேநானே
கன்னிகையென்செய்வேனே பன்னிருகைவேலோனே
கருணைமிகச்செய்வீரே தருணமிதுவேநீரே (பூப)

வசனம்.

ப்ரபோ! போற்றி செய்கின்றேன் யான் முற் ஜென்மத்திலென்ன புண்யத்தை செய்தேனோ அதினாற் றங்களைப் பிராணபதியாக அடைந்தேன் யான் றங்களை வெகு நிந்தனை கூறினேனே தாங்களென்றறிந்தாற் கூறுவேனோ அக்குற்றங்களைப் பொருத்து அடியாளை இரட்சிப்பீர் நாதா தங்களுடைய வரலாற்றை இன்னுமொரு தபா மனமகிழ்ந்தோதுவீர் பிராணபதி.

சிவசுப்பிரமணியர் சொல்

ஆக்குமாமணியணிந்த ஆதியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்

செந்திருபோலந்தமுள்ள சுந்தரியேகேளடி
சுந்தரியேகேளடி எந்தன்வரலாறடி
செந்தினைப்புனத்திலோடி வந்தேன்மானைத்தேடியே
வந்தேன்மானைத்தேடியே உந்தனின்முன்னாடியே

ஆங்குனண்ணமார்கள்வர மாங்குயிலேநானடி
மாங்குயிலேநானடி பூங்கிளியேகேளடி
ஓங்கியேமிகவளர்ந்த வேங்கைமரம்போலவே
வேங்கைமரம்போலவே பாங்காய்நின்றேன்சகலமே

செட்டிபோலாகவேவேட மிட்டுவந்தேன்நானடி
இட்டுவந்தேன்நானடி கட்டழகிகேளடி
சட்டமாய்வளையல்கொண்டு கிட்டியேவந்தேனடி
கிட்டியேவந்தேனடி மட்டிபோலேவன்றாயடி

வள்ளியேகிழவன்போலே தள்ளாடிவந்தேனடி
தள்ளாடிவந்தேனடி உள்ளதைச்சொன்னேனடி
மெள்ளவிங்குகூட்டிவந்தே உள்ளமகிழ்ந்தேனடி
உள்ளமகிழ்ந்தேனடி உன்னைமணந்தேனடி (செ)

வசனம்.

கண்மணி! உன்னுடைய வரலாற்றை நாரதரென்னிடந் தெரி
வித்தாருடனே வேடருருவெடுத்து ஓர்மானைத்தேடி யுன்முன்னாக
வந்து வாதாடி நிற்குந்தருணத்தி லுனது அண்ணமார்கள் வந்த
வுடனே வேங்கைமரமாக முளைத்தேன் பின்பு வேடருருவெடுத்துத்
தர்க்கமாடினேன் நீ இடங்கொடுக்கவில்லை பின்பு வளையற்செட்டி
வேடமெடுத்து விலைகூறிவந்தேன் சேடியும் நீயுமாக என்னையழைத்
தென்னவிலை யென்றீர்கள், என்னை மருவினால் வேண்டியவளைய
லிந்துகொள்ளுங்களென்று தெரிவித்தேன், அதனிலும் நீங்களிட
ங்கொடுக்கவில்லை, அத்தருணமுனது அண்ணமார்கள் வந்தன ரவர்
கள்முன்னே கிழவன்போல் வடிவெடுத்துச்சென்றே னவர்களுன்னி
டம் விடுத்துச்சென்றார்களுன்னையிங்கழைத்துவந்து எனது சகோ
தரரான யானைமுகக் கடவுளால் மகிழ்ந்துன்னைக் கட்டித்தழுவிச்
சுகித்தேன் கண்மணி! நீ கிழவனென்று மனதில் நினைந்து விசார
மிடுவதைக்கண்டு சுயரூபத்தோடு காட்சிகொடுத்தேன் கதலி மன
மகிழுவாய்.

வள்ளியம்மைசொல் வசனம்.

ப்ரபோ! எனக்காக இவ்வளவு கஷ்டமடைந்து காந்தர்வமண
ம்புரிந்திர் பிராணபதி! யான் மிகவும் மனமகிழ்ந்தேன்.

சிவசுப்ரமணியர் சொல்

விருத்தம்.

மாதரசே திருமாலின் மகளாயுன்னை
மலர்மகளும் பெற்றெடுத்தாள் மகிழ்ந்துநீயுமீ
காதலொடு எனைமணர வேண்டுமென்றே
கன்னிகையே தவம்புரிந்தா யிருந்துகோதே
சீதமட மான்வயற்றிற் பிறப்பாய்வேடர்
தெரிந்தெடுத்து வளர்த்திடுவார் சேர்வோமென்றேன்
ஓதியசொற் படிமுடித்தே னின்றுதானே
உத்தமியே சித்தமிக மகிழ்கொள்வாயே.

வசனம்.

கண்மணி! ஆதிகாலத்தில் மால்மகளாக இலட்சுமிதேவி பெற்
றெடுத்தாளுன்னை பின்பு என்னை மணரவேண்டுமென்று சரஹ
ணப்பொய்கையிற் றவமிழைத்தாய் யான்ப்ரசன்னமாகி யாதுவரம்
வேண்டுமென்றுகேட்க உன்மனதை வெளியிட்டாய் இப்பிறப்பில்,

மணஞ்செய்பேன் அடுத்தபிறப்பில் மானவயிற்றிற் பிறப்பாய் வேடுவர்களிடம்வளர்வா யப்பொழு துன்னை மணஞ்செய்வேனென் றுரைத்தேனவ்வண்ணமே சேர்ந்தேன் கண்மணி!

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

சரஹணபவனேபோற்றி சண்முகருகனேபோற்றி
திரிபுரபவனேபோற்றி திகளொழிபவனேபோற்றி
பரிபுரபவனேபோற்றி பன்னிருகையாபோற்றி
அரகரமுருகாவென்னை யாண்டவாபோற்றிபோற்றி.

வசனம்.

சரஹணபவனே, சண்முகவேலவா, குமாரகார்த்திகேயா, திரிபுரபவனே, திகளொழிபவனே, பரிபுரிபுர பவனேபோற்றி, அடியாளை யென்று மிரக்ஷிப்பீர் நாதா.

சுப்ரமண்யர் சொல்

விருத்தம்.

அந்தமுள்ள பெண்ணரசே வழுந்துவேனே
ஆரணங்கே மடமானே தேனேகேளாய்
சிந்தைமிக மகிழ்ந்துவிடை தருவாய்பெண்ணே
சென்றுமே சிலநாளி லுன்முன்னாக
வந்துனையே மணம்புரிந்து கூட்டிச்செல்வேன்
மங்கையினை யிப்புவியோர் மதிக்கவேதான்
செந்தினையின் புனத்தருகே வள்ளியேநீ
செல்லுவாய் பதிலெனக்கே சொல்லுவாயே.

வசனம்.

கண்மணி! யான் கழுகுமலைசென்று சிலநாட்கழித்து உன்முன்னாகவந்து இப்புவிலுள்ளோர் சகலரும்மதிக்க மனமகிழ்ந்து திருமணம்புரிந்து கூட்டிச்செல்கின்றேன் யான் சென்றுவருகின்றேன் விடைகொடுப்பாய் காதலி.

வள்ளியம்மைசொல்

விருத்தம்.

உத்தமாபுகலுவேனே ஒண்டொடியின் றுதானே
பத்மினியாளென் மீதே பக்ஷம்வைத்திருக்கவேணும்
சித்தமேமகிழ்ந்துநீர தேசருமயிலின் மீதே
இத்ததிசெல்லுவீரே இணையடிபோற்றினேனே.

வசனம்.

ப்ரபோ! தாங்கள் சென்றுவருகின்றேனென்றவுடனே என் மனமானது வாடுகின்றது. எவ்விதம்பிரிந்து தனிமையாக இருப்பேன் தாங்கள் கழுகுமலைசென்று லென்னை மறந்துவிடுவீரோ இங்கு சிலநாளில் வருகின்றேனென் றுரைத்தீரே அவ்வண்ணமே வருவீர் ப்ராணபதி! சென்றுவாருங்கள் என்மீது பக்ஷமிருக்க வேணும் நமஸ்கரிக்கின்றேன்.

சுப்ரமண்யர்சொல் வசனம்.

கல்யாண்! பெண்புறாவா? யொன்றுக்கும்யோசிக்கவேண்டாம் நீ செந்திணைப்புனத்தை நாடிச்செல்வாய் நான் கழுகுமலை சென்று வருகின்றேனென்னை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பார்கள் மாதுசிரோன்மணி!

பொது வசனம்

இந்தப்பிரகாரமாகச் சுப்ரமண்யக்கடவுள் வள்ளியம்மையிடத்தில் விடைபெற்றுக் கழுகுமலைசென்றபின்னர் வள்ளியம்மை மனமகிழ்ந்து திணைப்புனம் சேர்ந்திருக்குந் தருணத்தில் சேடிமார்கள் வந்து வள்ளிநாயகியோடு கூடி விளையாடிக்கொண்டிருக்குங்கால் வேடுவர்கள் வருகின்ற விதங்காண்க.

சேடிமார்கள்சொல் விருத்தம்.

அன்னமேவள்ளிமானே அரைந்திடுவேனேநானே
கன்னியேகேளாய்நீயே கதிர்விளைந்திட்டதின்றே
இன்னுமுன்னண்ணமார்க ளிங்குமேவரவேகாணேன்
நன்னயமாகவேதான் நவின்றிடுவாயேபோற்றி.

வசனம்.

அம்மா! வள்ளிநாயகி இதுவரை நாங்களுன்பக்கத்திலமர்ந்து காவல்செய்தோம், கதிர் நன்றாய் விளைவானது, இன்றுயேனுனது அண்ணமார்கள் வரவில்லை கதிரறுக்கும் பக்குவமானதே புகல்வாயம்மா.

வள்ளியம்மைசொல் வசனம்.

அடி பாங்கிமார்களே எனது அண்ணமார்க ளிவ்வனத்தில் வேட்டையாடிக்கொண்டிருப்பார்களரைநாழிகையி லிங்கு வந்திடுவார் கதிரையறுத்துச் சிற்றூர் செல்வோ மம்மா.

# வேடுவர்கள் தினையறுக்கும் ப்ரகம்.

வேடுவர்கள் சொல்

நாராயண அரியே லெட்சுமிநாயக என்ற வர்ணமெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேடுவர்வந்தாரே விநோதமாக
வேடுவர்வந்தாரே

அநுபல்லவி.

வேடுவர்வந்தாரே ஓடியேவேகமாய்த்
தேடியேதங்கைதினையே உல்லாசமாய் (வேடு)

சரணங்கள்.

சிந்தைமிகமகிழ்ந்தே அந்தமொடுநடந்தே
செந்தினைக்கதிரறுக்க ஒய்யாரமாக (வேடு)

கும்பாகவேகூடி கூச்சலிட்டுமேயோடி
சம்ப்ரமமாகவேதானே சல்லாபமாக (வேடு)

வசனம்.

அடா தம்பிமார்களே தினை நேற்றோடு விளைவானது இன்று அறுத்தடித்துத் தங்கையைக் கூட்டிச் சிற்றூர் செல்லுவோம் வாருங்கள்.

இளையவேடன் சொல் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வாருங்கள்.

வேடுவர்கள் சொல்

விருத்தம்.

மங்கையேவள்ளிமானே வழுத்திடும்வார்த்தைகேளாய்
செங்கதிர்வேலவன்றன் திருவருளாலேயம்மா
பைங்கிளியனக்கொய்யாதே பாதுமேதினையைக்காத்தாய்
இங்குமேகதிரைக்கொய்தே யேகுவோந்தங்கையானே.

வசனம்.

அம்மணி நமது குல தெய்வமாகிய சிவசுப்ரமண்யக் கடவுள் திருவருளாற் றினை விளைந்தது இன்று தினைக்கதி ரறுத்தடித்துச் சிற்றூர் செல்வோம் மங்கையே.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

மண்புவியோர்கொண்டாடும் வள்ளைமேல்சொல்லக்கேளீர்
விண்புவியோர்கள்போற்றும் வேலவனருளினாலே
எண்ணிப்படியேநீரே இன்றுமேமன மகிழ்ந்து
அண்ணரேசெய்குவீரே அடிமலர்போற்றினேனே.

வசனம்.

அண்ணமார்களே தங்களுடைய மனம்போலச் செந்தினைக்கதிரையறுத்தடித்துச் சீக்கிரமாக நாமெல்லோருஞ் சிற்றூர் செல்லுவோம் வேறுதடை யாதொன்ன சொல்லப்போகின்றேன் சகோதரர்களே.

## வேடுவர்கள் தினையறுத்தல்.

உள்ளமகிழ்ந்தே பரையடிக்குமென்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-ஏகதாளம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| தம்பிமாரே | இன்றுநாமே |
| ஜல்தி | யாகவே |
| கும்புகூடிக் | கதிரறுங்கள் |
| கொண்டு | போகவே |
| செந்திநகர் | வேலரின் |
| நாமந்தனைப் | பாடி |
| சிந்தைமிகவே | மகிழ்ந்தே |
| சேர்ந்துற | வாடி |
| திட்டமாய்த் | தினைக்கதிரின் |
| கட்டைச் | சேருங்கள் |
| சட்டமுட | னடித்தே |
| நகர்தனக்கு | வாருங்கள் |

வசனம்.

அடா! தம்பிமார்களே? இத்தருணத்திலெல்லோருமாக தினைக்கதிரை யறுத்தடியுங்கள் ஜல்தியாகச் சிற்றூர் செல்லுவோம்.

இளையவேடுவர்கள்சொல் வசனம்.

அண்ணா தங்களுடைய ஆக்கினையின்படியே தினைக்கதிரையறுத்தடித்தோம் தினையைக்கொண்டு சிற்றூர் செல்லுவோந் தங்கை வள்ளிநாயகியை யழைப்பீர்கள்.



வேடுவர்கள்சொல் விருத்தம்.

அந்தமேமிகுந்தமானே அன்னமேமயிலேதேனே
சிந்தையேமிகமகிழ்ந்தே தினைக்கதிரடித்திட்டாரே
இந்தவேளையிலேசிற்றூரேகிடவெண்ணினோமே
வந்திடாயெங்கள்பின்னே வள்ளியேவழுத்தினேனே.

வசனம்.

அம்மணி வள்ளிநாயகி தம்பிமார்கள் தினைக்கதிரறுத் தடித்திட்டார்கள் அதனைக்கொண்டு சிற்றூர்செல்லுவோமென்று சந்தோஷமாகவருவாய்.

வள்ளியம்மைசொல் வசனம்.

அண்ணமார்களே இதோவருகின்றேன்.

## வள்ளியம்மை வேலவரைநினைந்து
## புலம்புகின்ற பாகம்.

விருத்தம்.

கந்தனேயுமையாள்மைந்தா கடம்பனேகார்த்திகேயா
இந்தவேளையிலேமெய்யா எனையண்ணாரழைக்கின்றாரே
சிந்தையேமயங்குதையோ செங்கதிர்வேலாவின்று
எந்தனைப்புலம்பவிட்டே இருப்பதுதருமந்தானோ.

ஈசனே கயிலாசவாசா என்றவர்னமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலனேஉமைபாலனே நான்
ஞாலமீதிலேழை யானேன் (வேல)

அநுபல்லவி.

ஆலகாலவிடந்தன்னை யருந்திய
அரனருளியநாதா அறுமுகனேகுகனே (வேல)

சரணங்கள்.

அங்கமுஞ் சோருதே
ஆசையு மீருதே
இங்கென்முன்புமே வந்தே
இரட்சிமன் முகந்தே (வேல)

ஆனசவார்த்தை யுரைத்தீர்
மோசஞ்செய்ய கினைத்தீர்
பேசியபடி காதா
பேதைமுன் வரலாகாதா (வேல)

வசனம்.

வேலவனே யானென்னசெய்வேன் சிற்றார்செல்ல அண்ணமார்களழைக்கின்றாரே என்மனம் நோகின்றதே சிலநாளில் வருகின்றேனென்று ஆசைவார்த்தை யுரைத்துச் சென்றீரே இன்னும் வரவில்லையே குமரா எவ்விதமாகச்செல்லுவேன் ப்ராணபதி.

வள்ளியம்மை சொல்

போய்வாரேனென் கணவா என்றவர்னமெட்டு.

இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

தேடிவந்தால்நீரே சிற்றார்சென்ற
செய்தியைச் சொல்வீரே (தேடி)

அநுபல்லவி.

வாடியேசோகமே லாடியே இங்குமே
மனதுமிக்மயங்கி வாடிவேலருந்தியங்கி (தேடி)

சரணங்கள்.

கோகிலமே யன்னங்காள்
மிசவறந்துள்ள மயிலினங்காள்
வாருடையகிளிகாள் மானேமரையினங்காள்
வனத்தினிலேதினைப் புனத்தினிலேஎனைத் (தேடி)

மாடப்புறுவினங்காள் பலவர்ன
வுண்டுகாளண்டி வினங்காள்
காடைகளேகாக்கை கவுதாரிசிட்டுகளே
கந்தன்குகன்முருகன் செந்திருமால்மருகன் (தேடி)

பூலவர்னவாத்தினமே வள்ளியம்மை
பகர்வேன்செம் போத்தினமே
தலமுள்ளோர்கள்புகழ் சண்முகநாதனும்
தையலைக்காணவென்று மையல்மிகவேகொண்டு (தேடி)

வசனம்.

இந்தவனத்தில் வாழ்ந்திருக்கும் மயில்களா, குயில்களா, அன்னங்களா, கிள்ளைகளா, விலங்கினங்களா, மாடப்புறுக்களா, வண்டுகளா, அண்டில்களா, காடைகளா, காக்கைகளா, கவுதாரிகளா, சிட்டுகளா, வர்த்துகளா, செம்போத்துகளா, ப்ராணபதி என்னைத் தேடிவந்தால், அண்ணமார்களோடு வள்ளியம்மை சிற்றூர் சென்றுளென்று என்மீது தயைசெய்து கூறுவீர்கள் பக்ஷிஜாதிகளே யான் சென்றுவருகின்றேன்.

## வள்ளியம்மை

## சிற்றூர்செல்லும் பாகம்.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

அன்னமேமயிலேமானே அழகுள்ளகுயில்பூஞ்சிட்டே
உன்னதமணிப்புறுக்காளொண்டொடிசொல்லக்கேளாய்
என்னையேமகிழ்ந்துதேடி இங்குமேருகன்வந்தாலே
நன்னகர்சிற்றூருக்கே நாதனைவரச்சொல்வீரே.

வசனம்.

இந்த வனத்தில் வாழ்ந்திருக்கும் பக்ஷிஜாதிகளே, குகனென்னைத் தேடிவந்தால், சிற்றூர் சென்றுளென்று தெரிவித்து, ஆங்கு வரும்படியாக, வேலவரிடம் புகல்வீர்கள், யானண்ணமார்களோடு சென்றுவருகின்றேன், மறந்துவிடாதீர்கள்.

வேடுவர்கள்சொல் வசனம்.

அம்மணி! வள்ளிநாயகி ஏனினும் வீண்காலங் கழிக்கின்ருய் நாழிகையாகின்றது எங்களோடு வருவாயம்மா.

வள்ளியம்மைசொல் வசனம்.

அண்ணமார்களே! வேறுசந்தேக மெண்ணவேண்டா மிதோ வருகின்றேன், பிரயாணப்படுங்கள்.

வேடுவர்கள்சொல் வசனம்.

அம்மா! வள்ளிநாயகி சேடிமாரோடு நடந்துவருவீர்.

வள்ளியம்மைசொல் வசனம்.

அடி பாங்கிமார்களே அண்ணரழைக்கின்ருர்கள் வேகமாகத் தொடர்ந்துவருவீர்கள்.

சேடிமார்கள்சொல் வசனம்.

அம்மா வள்ளிநாயகி இதோ வருகின்றேனம்மா.

வேடுவர்கள் நம்பிராஜனைப் பணிதல்.

விருத்தம்.

தந்தையேபோற்றிபோற்றி சற்குணமிகவேவாய்ந்த
சுந்தராபோற்றிபோற்றி சுதன்சொல்லும்வார்த்தைகேளீர்
செந்தினையறுத்தடித்தே தீவிரமாகமீண்டோஞ்
சிந்தையேமகிழுவீரே திருவடிபோற்றினேமே.

வசனம்.

தந்தையே போற்றிசெய்கின்ளேம் செந்தினைக்கதிரை யறுத்தடித்து இங்கு தங்கையோடு வந்துசேர்ந்தோம் பிதா.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

அந்தமேமிகவேவாய்ந்த அருமைக்கண்மணியேஎந்தன்
மைந்தரேமகிழ்ச்சியோடு வனந்தனிலேகியின்றே
செந்தினையறுத்தடித்தே தீவிரமாகமீண்டீர்
கந்தவேளருளினலக் கடவுளைப்போற்றுவீரே.

வசனம்.

கல்யாண்! கண்மணிகாள் நம் குலதெய்வமாகிய சிவசுப்ரமண்யக்கடவுள் செயலாலே இங்கு சுகமாகத்தங்கை வள்ளிநாயகியோடு வந்துசேர்ந்தீர்க ளந்தக் கடவுள்பாதத்தைப் போற்றிசெய்வீர்கள்.

வேடுவர்கள்சொல் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்ளேம்.

வள்ளியம்மைசொல் வசனம்.

தந்தையே வள்ளியம்மை போற்றிசெய்கின்றேன்.

நம்பிராஜன்சொல் வசனம்.

கல்யாண்! பாலகி.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

அன்னையேபோற்றிபோற்றி ஆறுமுகன்செயலினாலே
கன்னியான்மனமகிழ்ந்தே கானகந்தனிலேசேடி
தன்னொடுபக்ஷிஜாதி தான்கதிர்கொய்திடாது
நன்னயமாகக்காவல் நான்புரிந்தேவந்தேனே.

வசனம்.

அம்மா போற்றிசெய்கின்றேன் கானகத்திற் சேடிமாரோடு தினைக்கதிரைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது காவல்செய்து அதனை யறுத்தடித்து இங்கு வந்தோமம்மா.

நங்கைமோகினிசொல் வசனம்.

கல்யாண்! பாலகிமகிழுற்றேன்.

பொது வசனம்.

இவ்விதமாக ஒருவர்க்கொருவர் சந்தோஷமாக இருக்குங்காலத்தில் வள்ளியம்மை சிவசுப்ரமண்யரை நினைந்து விரகம் மிஞ்சிப் புலம்புகின்ற விதங்காண்குக.

## வள்ளியம்மை சிவசுப்ரமண்யரை நினைந்து

# புலம்பும் பாகம்.

---

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

திங்களைத்தரித்தநாதன் சிவனிடபுதல்வனான
செங்கதிர்வேலரேநீர் திரும்பிவந்திடுவேனென்றே
மங்கையெந்தனக்குஆசை வார்த்தைகள்புகன்றுசென்றீர்
இங்கெனைத்தனிமையாக இருத்தியேபிராணநாதா.

வசனம்.

கழுகாசலத்தில்வாழும் கந்தனே சிலதுநாளில் வந்துன்னைக் கூட்டிச் செல்கின்றேனென் றுரைத்துச் சென்றீரே இதுவரையும் வரவில்லையே என்னசெய்வேன் பிராணபதி.

## வள்ளியம்மை விரகதாபப்படுதல்.

பாரீஸ்வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-அடதாளம்.

கண்ணிகள்.

அடாமாரா வெருவாளி
அரும்பாலே விடலாமா
அடோஙசன் விழியாலே
அழிவானுய் இது ஆமா
கரும்பான வில்லின் மீதே
கணைபூட்டி எய்தாயே
இரும்பான வில்லுன்கை
இருந்தாலென் செய்வாயே
ஆதிபாவி சகியேனே
அடாதோஷி இனிநானே
இதனாய மதோவாது
இடலாமா அடாகாமா

வசனம்.

அடா! மன்மதா? உனக்குக் கொஞ்சமாவது அறிவில்லையே சொல்கின்றேன்கேள் கரும்புவில்லி லரும்புமலரைந்தும் பூட்டிப் பரமன்மீதுவிடுத்து நெற்றிக்கண்ணாலே இறந்தாயே அதனை நினைக்காது என்மீது பாணப்பிரயோகஞ் செய்கின்றாயே கரும்புவில்லினாலே என்னையிவ்வளவு அவஸ்தை செய்கின்றாயே உன்னிடமிரும்புவில்லிருந்தா லென்னபாடுபடுத்தமாட்டாய் துஷ்டா செல்லடா.

வள்ளியம்மை சந்திரனைவைதல்.

வெண்பா.

பார்க்கடலிலேஜெனித்தாய் பரமன்முடிமீதினிலே
தீர்க்கமுடனேயமர்ந்தாய் திங்களே-ஏர்க்கெனவே
உன்னைப்போலேகுளிர்ச்சி யொருவருக்குண்டோவில்லையே
என்னிடமெய்நோக விட்டாயே.

வசனம்.

அடா சந்திரா! உன்னை யிப்பூவிலுள்ளோர் குளிர்ச்சியுடையவனென்று தெரிவிப்பார்களே தவிர நீ பார்க்கடலிற் பிறந்ததாக அநேகஸ்மிருதி முறையிடுகின்றதே நீ குளிர்ச்சியுடையவனென்று

பரமசிவன் முடிமீது அணிந்துகொண்டாரே அடாபாவி என்னைக் கொளுத்துகின்றாயே ஜல்தியாகச் செல்லடா.

வள்ளியம்மை கிள்ளையைவைதல்.

வெண்பா.

தத்தைகளேஇத்தருணந் தங்களினமொன்றாக
இத்தருணங்கூடி மரமீதிருந்தே-கத்துவதேன்
நன்றுனக்கிதாகாது நங்கைசெவிக்கேறாது
சென்றுவிடுமின்று கத்தாதே.

வசனம்.

கிள்ளையே! தங்கள் தங்கள் கணவனோடு கூடிச் சந்தோஷமாகப் பேசுகின்றீரே உங்களுடைய வார்த்தையை என்செவியிற்கேட்டவுடனே மனம் வாடுகின்றது இங்கிருந்து கத்தவேண்டாஞ் சென்றுவிடுங்கள்.

வள்ளியம்மை குயிலைவைதல்.

வெண்பா.

காக்கையிட கூண்டில்முட்டை காணுமலிட்டேயோர்
போக்காகவே யோடிப் போங்குயிலே-காக்கையுமே
தன்னினமீ தல்லவெனத் தள்ளிவிட்டால்முட்டைதனை
என்னசெய்குவாய் புகல்வை யே.

வசனம்.

ஹே! குயில்களே ஏன் கத்துகின்றீர்கள் உங்கள் வளப்பந் தெரியாதா யாதெனில், காக்கையின்கூட்டில் முட்டையிட்டுச்செல்லுவீர் தவிர உங்களுக்கு முட்டைபொரிக்கத் தெரியாதே காக்கை நம்முட்டையல்லவென்று கீழேதள்ளிவிட்டா லுங்கள்குலம் விர்த்தியாகுமோ ஆகாது என்முன்னிருந்து கத்தவேண்டாஞ் சென்றுவிடுங்கள் குயில்களே.

வேடுவர்கள்சொல் வசனம்.

அடா! தம்பிமார்களே? பார்த்தீர்களா நமது தங்கையாகிய வள்ளிநாயகி ஏதோ பலவாறாகப் புலம்பி யிங்கிருக்கின்றாளே இச் சங்கதியை நமது அன்னை தந்தைமுன்னஞ் சென்று புகலுவோம் வேகமாக வருவீர்கள்.

இளையவேடுவர்சொல் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வாருங்கள்.

வேடுவர்கள்சொல் வசனம்.

தந்தையே பேர்ற்றிசெய்கின்றோம் வள்ளிநாயகி அந்தப்புரத்தில் பலவாருகப் புலம்பிக்கொண் டிருக்கின்ருள் பேய்பிடித்தது போற்றோன்றுகின்றது ப்ரபோ.

நம்பிராஜன்சொல்

விருத்தம்.

மைந்தரேவள்ளிமாதை மனமிகமகிழ்ந்துதானே
செந்தினைக்கதிரையேகாத் திருந்திடச்செய்ததாலே
அந்தமாவனத்தில்வாழு மலகைதான் றொடர்ந்திருக்கும்
இந்தவேளையிலேபூசை இட்டிடில்விலகுந்தானே.

வசனம்.

கண்மணிகாள்! வள்ளியம்மையைக் காட்டிலிதுவரை வைத்திருந்தபடியாலல்லவா, அலகைபிடித்தது, நல்லது நமது குலதெய்வமாகிய சிவசுப்ரமண்யக் கடவுளுக்குப் பூசையிட்டால் விலகிவிடும் வேண்டிய சாமான்கள் தயார்ச்செய்வீர்கள் பூசையிடுவோம் புதல்வர்காள்.

மைந்தர்கள்சொல் வசனம்.

தந்தையே தங்களாக்ஞையின்படி வேண்டியசாமான் தயார்ச்செய்கின்றோம் ப்ரபோ.

நம்பிராஜன்சொல் வசனம்.

புதல்வர்காள் ஜல்தியாகச் செல்வீர்கள்.

மைந்தர்கள்சொல் வசனம்.

அவ்வண்ணமே செல்கின்றோம்.

பொது விருத்தம்.

இந்தவிதமாகநம்பி ராஜன்ருனே
ஏந்திழையாள்வள்ளியின்றன் செய்தியெல்லாம்
மைந்தரிடமரைந்திட்டுவே கேட்டுவேக
மாகவேண்டியசாமான் சேகரித்தே
சிந்தைமிகவேமகிழ்ந்தே சம்பாபொங்கல்
செய்துமேபரமனிட சேயனை
கந்தனுக்கேதளிகையிட்டுத் தூபதீபங்
காட்டினர்மனத்துயரை யோட்டினரே.

வசனம்.

சிவசுப்ரமண்யக் கடவுளுக்குப் பூசையிட்டு மனமகிழ்ந்து சிற்றாரிலிருக்குந் தருணத்திற் சண்முகன் வள்ளியம்மையை நினைந்து தினைப்புனத்தில்வந்து தேடுகின்ற விதங்காண்குக.

## சிவசுப்ரமண்யர் வள்ளியம்மையை

# தினைப்புனத்திற் றேடும்பாகம்.

விருத்தம்.

சுந்தரமிகவேவாய்ந்த தோகையாள்வள்ளியாட்குச்
சிந்தையேபுகழ்ந்திருக்கத் தேருதல்புகின் றுவந்தோம்
இந்தவேளையிலேநாமே யந்திழைதனையேகாணச்
செந்தினைப்புனந்தனைநாடிச் சீக்கிரஞ்செல்லுவோமே.

வசனம்.

ஆகா! சாமித்தனை நாளாக வள்ளிநாயகியைப் பார்க்காதிருந்துவிட்டோ மிந்தவேளை தினைப்புனத்தை நாடி செல்வோம்.

விருத்தம்.

செந்தினைப்புனத்தைக்காணேன் சேடியர்தனையேகாணேன்
சுந்தரப்பரணைக்காணேன் றோகையாள்வள்ளிமாது
இந்தமாவனத்திலேதா னிருந்தனளின் றுகாணேன்
அந்தமேமிகுந்தசிற் றார்க்களைத்தரிவையைச்சென்றதோ.

காணேனே இனியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரிகை-அடதாளம்.

பல்லவி.

அன்னமே வள்ளியேஉன்றனை
லகிந்தேமனமிகவே கலைந்தேவாடுகின்றேன் (அன்)

அநுபல்லவி.

என்னசெய்குவேநானே எவ்விதமுய்வேனே
கன்னிகைதனைவனந் தன்னில்நான்காணேனே (அன்)

சரணங்கள்.

இங்குன்னைக்காணேனே எங்குசென்றாய்மானே
தங்கமேஎந்தனிட அங்கஞ்சோருதையோ (அன்)

ஆசைவார்த்தைமொழிமானமே அரைந்தாயடிசொர்னமே
மோசஞ்செய்தாயேஎன் தேசமறந்தடி (அன்)

என்னைப்லையவிட்டே ஏகிறாய்திடப்பட்டே
பின்னற்சடையுடைய மின்னலிடைமாதே (அன்)

வசனம்.

அடி கண்மணி யான்செல்லும்பொழுது வேண்டிய ஆசை வார்த்தைகளுரைத்து வரும்படியாகத் தெரிவித்தாயே, இன்னிலமீ துன்னைக்காணேனே, என்னை மறந்து எங்குசென்றாய், என்மனம் வாடுகின்றதே, என்னசெய்வேன் காதலி, உனது அண்ணன்மார்க ளொருவர் சிற்றார்க்கழைத்துச் சென்றுவிட்டார்களோ ஒன்றுந் தோணவில்லையே மாதுசிரோன்மணி.

தப்பியெப்படிப்பிழைப்போம் விஸ்வாமித்ரனென்ற வர்னமெட்டு.

இராகம்-சாவேரி-அடதாளம்.

பல்லவி.

கண்டிருந்தாற்சொல்லுவீர் சித்தம்வைத்தே
கானகந்தன்னிலேநீர் (கண்)

அநுபல்லவி.

அண்டில்குயில்களா அழகுள்ள மயில்களா
வண்டுகளா இன்று வள்ளிநாயகிதனைக்(கண்)

சரணங்கள்.

அன்னங்களே நதியே மின்னலிடை
அதிகரூபவதியே
என்னசொல்லியேமாது ஏகினளிப்பொழுது
எந்தன்மனமிக மகிழ்ந்திடும்படியாகக்(கண்)

பலவர்ணவூர்த்தினமே அன்பாகயான்
பகர்வேன்செம்போத்தினமே
நலமுள்ளபெண்ணரசி நங்கையர்க்கேயரசி
நாதனுக்கேயென்ன சேதிபுகன்றகன்றாள் (கண்)

மாடப்புறாவினமே பஞ்சவர்ண
மானகிளியினமே
தேடியிங்குவந்தேன் சிந்தைமிகவேநொந்தேன்
தினைப்புனந்தனிலானே தியங்கியேமெலிந்தேனே(கண்)

வசனம்.

இந்த வனத்தில் வாழ்ந்திருக்கும் விலங்கினங்களே, மாடப்பு றாக்களே, குயில்களே, மயில்களே, அன்னங்களே, தாராக்களே,

அண்டிலக்களே, வர்த்துகளே, செம்போத்துகளே, கிளிகளே, வண்டுகளே, சிட்டினங்களே, எனதாருயிர்க் காதலியாகிய வள்ளி நாயகியைக் கண்டிருந்தாலுள்ள சங்கதிகளைப் புகல்வீர்கள் என்ன தெரிவித்துச்சென்றாள் பக்ஷிஜாதிகளே.

விருத்தம்.

இத்ததிசிற்றூர்நோக்கி ஏகியேநம்பிராஜன்
புத்திரியாகும்மேன்மை பொருந்தியவள்ளியான
உத்தமியாளையேயிவ் வோரிரவினிலேதானே
சித்தமேமகிழ்ந்துகூட்டிச் சிறப்பொடுசெல்லுவோமே.

வசனம்.

நாமிங்கு புலம்பிக்கொண்டிருப்பதி லென்னபிரயோஜனம் சிற்றூர் நோக்கிச்சென்று இன்று யிரவில் காதலியான வள்ளிநாயகியை எவ்விதமாவது கண்டு நமது எண்ணத்தைத் தெரிவித்துக் கழுகுமலை யழைத்துச் செல்லுவோம், நல்லது சிற்றூர் நோக்கிச் செல்லுவோம்.

## சிவசுப்ரமண்யர்

# வள்ளியம்மையைக் சர்ணுப்பாகம்.

வசனம்.

நாம் சிற்றூர் வந்துசேர்ந்தோம், இராத்திரி சுமார் பத்துநாழிகையாகின்றது, ஜனங்கள் நித்திரை செய்கின்றார்கள். நாமிந்த வேளையில் நம்பிராஜனுடைய கோட்டைக்குட்சென்று வள்ளிநாயகியைக்கண்டு அழைத்துச் செல்கின்றேன்.

மேற்படி வசனம்.

ஆகா! என்ன ஆச்சரியம்? வெகுதூரம் நடந்து வந்தோம் இங்கு ஒருவரையுங் காணேன், தீபங்க ளெரிந்துகொண் டிருக்கின்றது இன்னு முள்ளே செல்வோம்.

மேற்படி வசனம்.

இன்றுதான் என்ஜென்மஞ் சாபல்யமடைந்தது நம்பிராஜனும், புத்திரர்களும் வள்ளியம்மையை மத்தியிற் சப்ரகூடமஞ்சத்திற் சயனிக்கச்செய்து காவலாகப் பக்கத்தி லிவர்கள் சயனித்திருக்கின்றார்கள் நல்லது வள்ளிநாயகியை எழுப்புகின்றேன்.



விருத்தம்.

அன்னமேவள்ளிமானே அரைந்திடுவேன்செந்தேனே
என்னை நீமறந்திட்டாயோ இவ்வணை துயில்கொண்டாயே
உன்னையான்கூட்டிப்போக ஓடியே இங்குவந்தேன்
கன்னியேவருவாயின்றே கழுகுமாமலைசெல்வோமே.

வசனம்.

கண்மணி வள்ளிநாயகி உனக்கு நித்திரையா வந்தது மஞ்சத்தின்மீது சயனிக்க மனமும் வந்ததா யெழுந்திராய் கண்மணி உன்னை யழைத்துக்கழுகுமலை செல்ல இந்தயிரவி லிங்குவந்தேன். காதலி இன்னும் நித்திரையா செய்கின்றனை.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

கந்தனேபோற்றிபோற்றி கடம்பனேபோற்றிபோற்றி
சுந்தராபோற்றிபோற்றி சூரசம்மாரபோற்றி
எந்தனையழைத்தேசெல்ல இங்குவந்தோனேபோற்றி
இந்திரன்மருகானனே இணையடிபோற்றினேனே.

வசனம்.

ப்ரபோ! போற்றி செய்கின்றேன் என்மீது இன்றுதானோ மனது வந்தது இவ்வளவு நாளாக என்னை மறந்து விட்டீரே நாதா தங்களையான் சதாகாலமும் நினைந்து நினைந்து எனது அங்கம் மெலிந்து போனது பார்த்தீர்களா ப்ராணபதி.

சுப்ரமணியர் சொல்

விருத்தம்.

தினைப்புனந்தனிலேதானே தேடியேகாணமற்றேன்
வனப்புளமாதேயெந்தன் மனமிகக்கலங்கிவந்தேன்
எனத்தையாலுரைப்பேன்பெண்ணே இன்றுமேவேகமாக
டினத்திலேமகிழ்ச்சியோடு வருகுவாய்செல்லுவோமே.

வசனம்.

கண்மணி உன்னைத் தினைப் புனத்திலே தேடிக் காணாமலிங்கு வந்துன்னைக் கண்டேன் கண்மணியே நாமிருபேரு மிந்த வேளையிலே கழுகுமலை நாடிச் செல்லுவோ மிங்கு பேசிக்கொண்டிருந்தாலுனது அண்ணமார்கள் விழித்திடுவார் வருவாய் ஜல்தியாகச் செல்வோமென்ன தெரிவிக்கின்றாய் காதலி.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

செல்லுவோம்வருகுவீரே திரிபுரபவனேந்திரே
வல்லவரானவண்ணன் மார்விழித்திடுமுன்னாமே
தொல்லுலகோர்கொண்டாடுஞ் சுமுகனேசெங்கைவேலா
நல்லவருளத்தில்வாழும் நாதனேபோற்றிபோற்றி.

வசனம்.

ப்ரபோ! அண்ணன் மார்கள் விழித்தெழும் முன்னாக அதிவேக மாகச் செல்வோம் வருகுவீர் பிராணபதி என்மனதைச் சோதனை செய்யவேண்டாம் நாதா.

சுப்ரமண்யர் சொல்

வசனம்.

கண்மணி வருவாய் செல்வோம்.

## நம்பிராஜன் வள்ளி யம்மையைக் காணாது

## புலம்பும் பாகம்.

---

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

மைந்தரே ஓடிவேக மாகவேவருகுவீரே
சுந்தரமிகுவாய்ந்த தோகையாள்வள்ளிபாலை
இந்தவேளையிலேகாணே னெவரழைத்தேகினாரோ
சிந்தையேநொகுதேயென் செய்குவேனின்றுதானே.

ஐயய்யோ ஈதென்ன அன்பாயகாலம் என்றவர்னமெட்டு.

இராகம்-நீலாம்பரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயய்யோ என் மகளைக் காணேனே - இந்த
வையகமீதிலென்ன செய்வேனே

வள்ளியேசிந்தைதயங்க சொர்ந்தேனே - இந்த
நள்ளிருளிலெங்குசென்றாய் மானே

என்னை யிங்குமேவைத்தே கண்மணியே-ஏனோ
தன்னந்தனியேசென்றாய் பெண்மணியே
எந்தயுகந்தனிலே காண்பேனோ-நானே
உந்தனை எந்தவிதம் மறப்பேனோ
மந்திரஞ்செய் துனைக்கைக் கொண்டாரோ-அல்ல
தந்திரமாயழைத்துச் சென்றாரோ

வசனம்.

கண்மணி வள்ளிநாயகி இங்கு சயனித் திருந்தாயே எங்கு சென்றாய் காணேனே உன் புத்தியை மயக்கி யாராவது அழைத்துச்சென்றாரோ எந்த யுகத்திற் காண்பேன் என் மனமானது வாடுகின்றதே புத்திரி.

விருத்தம்.

இத்ததிவேகமாக எழுந்துமேவருகுவீரே
புத்திரரேயின்றேநாம் பூவையாள்வள்ளியாளை
எத்திசைகொண்டுமேசென் றிருந்தபோதிலுமேகண்டு
சித்திரவதைசெய்தேநாம் சீக்கிரம்வருகுவோமே.

வசனம்.

அடா புத்திர சிகாமணிகளா அதிவேகமாகச் சென்று வள்ளியம்மையைச் சிறையெடுத்துப் போனவனைக் கண்டு பிடித்துச் சித்திரவதை செய்து வள்ளியை அழைத்து வருவோம் வருவீர்கள் பாலர்காள்.

வேடுவர் சொல்

விருத்தம்.

அம்புவியோர்கொண்டாடு மறைமறைதனையாராய்ந்த
நம்பிராஜேந்திராநீர் நவின்றதோர்மொழிமாரரீதே
தம்பிமாரோடுகூடிச் ஜல்தியாயவனைமாய்த்தே
கொம்பனையாளையேநாம் கூட்டியேவருகுவோமே.

வசனம்.

தந்தையே இந்த வேளையிலே தம்பிமார்களோடு நாம்சென்று வள்ளியைக் கூட்டிச் சென்ற கள்வனைப் பிடித்துச் சித்திரவதை செய்து விட்டுத் தங்கையாகிய வள்ளி நாயகியை அழைத்து வருவோம் வேகமாக வாருங்கள்.

நம்பிராஜன் சொல்

வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் மைந்தர்களே வாருங்கள்.

வேடுவர்கள் சொல்

வசனம்.

அடா தம்பிமார்களே நான்குபக்கத்திலும் பார்த்துவருவீர்கள் அக்கள்வனைக் கண்டாற் பிடியுங்கள்.

## வேடுவர்கள் சிவசுப்ரமண்யரைக்கண்டு யுத்தம் செய்யும் பாகம்.

சுப்ரமண்யர்சொல் வசனம்.

காதலி! யிதோ பார்த்தனையா உனது அண்ணமார்கள் தேடி வந்து விட்டார்களிங்கு அமர்ந்திருப்பாய் இதோ வருகின்றேன் பிராணசகி.

வள்ளியம்மைசொல் வசனம்.

அவ்வண்ணமே செய்கின்றேன்

வேடுவர்கள்சொல் வசனம்.

அடா தம்பிமார்களே ஒருவன் நமது தங்கை வள்ளி நாயகியை மறைத்து வைத்து விட்டு வருகின்றா னிவனைப் பிடியுங்கள்.

இளையவேடுவர்கள் சொல்

வசனம்.


அண்ணா அவ்வண்ணமே செய்கின்றோம்.

வசனம்.

அடா துஷ்டப்பயலே ஓடாதேநில்லு வள்ளிநாயகியை அழைத்து வந்தனையே பாதகா உன்னை யின்று கொல்லுகின்றேன் பாரடா துஷ்டா.

சிவ சுப்ரமண்யர்சொல் வசனம்.

அடா வேடுவர்களே நீங்கள் வீணாக மடிந்துபோகவேண்டாம் வந்த வழியே சென்று விடுவீர்கள்.



வேடுவர்கள்சொல் வசனம்.

அடா துஷ்டா உன்னை அரைநாழி கைக்குள் எமலோகஞ் சேர்க்கின்றேன் பாரடா உனது வீரத்தைக் காட்டடா இல்லாவிடி லோடிவிடுவாய்மூடா.

வேடுவர்கள்சொல்

சொல்லர்மொழி சொன்னாரடா என்ற வர்னமெட்டு.

இராகம்-தேசிகதமாஸ்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

என்னவார்த்தை சொன்னாயடா
இன்றனையே விடேனடா
பின்னமாகவே இன்னிலமீதே
பித்தனேயுன்றலை தத்திவிழச்செய்வேன் (என்)

உந்தனை மடிப்பேனடா
ஒழிவாய் முன்னில்லாதடா
எந்தனை யரிந்தாயோடா
எட்டுவாயித்ததி வெட்டுவேன்பாரடா (என்)

விட்டிடேனுனை நானடா
விளம்பினேனே யஞ்சேனடா
மட்டியேஇன்றுமை கட்டழகுள்ள
வள்ளியைக்கைக்கொண்ட கள்வனேநில்லடா (என்)

வசனம்.

அடா துஷ்டா உன்னை அரைக்ஷணத்தில் மடித்திடுவேன் வந்தவழியே செல்லுவாய் வீண்வாது பேசவேண்டாம் இதோ பாணப் பிரயோகஞ்செய்தேன் தப்பித்துக்கொள்ளடா.

சிவசுப்ரமண்யர்சொல் வசனம்.

அடா துஷ்டா நீ வீணாய் மடிந்துபோகவேண்டாம் ஓடிப் போடா வேடுவனே ஜல்தியாகச்செல்.

வேடுவர்கள்சொல் வசனம்.

அடா துஷ்டா உன்னாலானதைப் பாரடா.

சிவசுப்ரமண்யர்சொல் வசனம்.

அடா இதோ வேலாயுதத்தை யுங்கள்மீது விடுத்தேன் தப் பித்துக்கொள்ளுங்கள் இதோ வருகின்றது.

சிவசுப்ரமண்யர் சொல்

விருத்தம்.

துள்ளியேவேகமாகத் துடர்ந்துநம்மோடுவந்தே
கள்ளனென்றெந்தன் மீதே கணைவிடுத்திட்டதாலே
உள்ளமேகவலைகொண்டே யோர்நொடிதனில்வேலாலே
வள்ளியேஉனது அண்ண மார்தனைவதைத்திட்டேனே.

வசனம்.

கண்மணி வள்ளிநாயகி என்னை உனது அண்ண மார்கள் சூழ்ந்து பிடித்துக் கொண்டார் நான் வேலாலவர்களை மடித்து உனது முன்னே ஓடிவந்தேன் கண்மணி.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

புள்ளிமயில்தன் மீதி லேறும்நாதா
பூவிலுள்ளோர்புகழ்ந்தேற்றும் பொருளேகேளீர்
வள்ளியெனைச்சிறையெடுத்து வேகமாக
வந்ததினாலென் னுடைய தமையர்தானே
துள்ளிவெகுவாளிவிடுத் தார்வேலாலே
துஞ்சினரெல்லோரு மண்மீதே
வள்ளலேதிருக்கருணை செய்தேயண்ண
மார்தனைநீரெழுப்பிடுவீர் மகிழ்ந்துதானே.

வசனம்.

ப்ரபோ! என்னைச் சிறையெடுத்து வந்ததாலெனது அண்ண மார்கள் தேடிவந்தார்கள் தங்களை இன்னாரென் றறியாது பாணத்தை விடுத்தார்கள் மண்மீது மாண்டு போனார்கள் வேலாயுதத்தினாலே என்மீது தயைசெய்து எழுப்புவீர்கள் நாதா.

சிவ சுப்ரமண்யர் சொல் வசனம்.

கண்மணி ஒன்றும் யோசிக்க வேண்டாம்பின்னுமரைநாழிகைக்குளெழுப்பி என்சுயரூபத்தோடு அவர்களுக்குக் காக்ஷி கொடுக்கின்றேன் காதலி.

வள்ளியம்மைசொல் வசனம்.

ப்ரபோ! மனப்படி செய்வீர்கள் நாதா.



# நாரதர் ப்ரவேசம்.

சுத்தப்ரம ப்ராத்பராம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-ஏகதாளம்.

கண்ணிகள்.

சங்கரனே-சிவ சங்கரனே
சம்போசதாசிவ சங்கரனே
திங்களணிந்திடு நடராஜா
தேவர்கள்போற்றிசெய் விஸ்வேசா
வரகதிதனையணியும் நாதா
வரைமகடனைமருவிய நீதா
திரிபுரம்வனனே பவநாசா
தினமடியவர்பணி நடராஜா

வசனம்.

ஜெகதீசா, கயிலாசவாசா, பரமேசா, அடியவர் மனத்தில் வாசா, வரைமகளை வாமபாகத்திற்கொண்ட நாதா, அடியேனையாள்வாய் பரம்பொருளே.

விருத்தம்.

ஐயனேபோற்றிபோற்றி ஆறுமாமுகனேபோற்றி
தய்யனேபோற்றிபோற்றி தோகையாள்வள்ளியாளை
மெய்யனேகவர்ந்துமேயில் வேடுவர்தனையே இன்று
வையகமீதிலேநீர் மடித்திடஞாயர்தானே.

வசனம்.

ப்ரபோ! போற்றிசெய்கின்றேன் வள்ளியம்மையைக் கவர்ந்து வந்து வேடுவர்களை வேலாலே மடித்துவிட்டீர் நாதா தங்களை என்னசெய்தார்கள் குகனே.

சிவசுப்ரமண்யர் சொல்

விருத்தம்.

வந்ததிவேகமாக வாளிகடனைவிடுத்தே
நொந்திடச்செய்வேனென்றே நொடிக்குள்ளேசேர்ந்தொன்றாக
எந்தனைச்சூழ்ந்துகொண்டா ரின்றுநான்வேலினாலே
இந்தவேளையிலேமாய்த்தே னிவர்களைமனம்வெகுண்டே.

வசனம்.

நாரதமுனிவரே இந்த வேடுவர்கள் துவேஷமாக வார்த்தை பேசி என்னைச் சூழ்ந்து கொண்டு பாணப் பிரயோகஞ் செய்தார்கள் என்மனம் வெகுண்டு இவர்களை வேலினாலே வதை செய்தேன் நாரத முனிவரே.

நாரதர் சொல்

விருத்தம்.

அன்னமேவள்ளிமானே அரைந்திடும[illegible]கேளாய்
முன்னமேயுனதுமுன்னே மொழிந்ததோர்சபதந்தானே
நன்னயமாகவேதான் நாயகிமுடித்திட்டேனே
என்னநீயொன்றும்பேசா திருக்கின்றாய்கூறுவாயே.

வசனம்.

அம்மா வள்ளிநாயகி நானிட்ட சபதத்தை நிறைவேற்றி விட்டேன் இப்பொழுதாவது என்னுடைய வல்லமை தெரிந்ததா என் ஒன்றும் பேசாது நிற்கின்றாயே தாயே.

வள்ளியம்மை சொல்

விருத்தம்.

மாதவமுனிவரேரே மகிழ்ந்துநீர்சபதந்தானே
ஓதினபடியினாலே யோர்நொடிதனிலேகந்த
நாதனின்சமுகஞ்சென்றே நன்மையாயுரைத்ததாலே
பூதலத்துள்ளோர்போற்றப் பூவையைக்கைக்கொண்டாரே.

வசனம்.

நாரத மகா முனிவரே நீர் சபத மிடும் படியாக யான் வார்த்தை யாடின தினலல்லவோ நீர் சபதமிட்டுச் சென்று வேலவனிடந் தெரிவித்து என்னை மணம் புரியும்படி யாகச் செய்தீர்கள் யான் மிகவுங் குதூகலமடைந்தேன் முனிவரே.

நாரதர் சொல்

விருத்தம்.

இத்தரையோர்கொண்டாடு மீசனின்சேயாசித்தம்
வைத்துமேகருணைசெய்தே வள்ளிநாயகியாளுக்காய்
இத்தகிமனமகிழ்ந்தே இவர்களையெழுப்புவீரர
சத்திவேல்பிடித்தமெய்யா சண்முகாதயவுசெய்தே.

வசனம்.

திருக்கழுகாசலத்தில் வசிக்கும் ப்ரபோ வள்ளி நாயகிக்காக மனமகிழ்ந்து நம்பிராஜன் அன்னவன் மைந்தர்களை எழுப்பு வீர்கள் எல்லோருமாகச் செல்வோம் ப்ரபோ.

சிவசுப்ரமண்யர்சொல் வசனம்.

நாரதமகாமுனிவனே இவர்களை எழுப்புகின்றேன்.

நாரதர்சொல்வசனம்.

ஜல்தியாக எழுப்புவீர் ப்ரபோ.

சிவசுப்ரமண்யர்சொல் வசனம்.

கேளீர் நாரத மகாமுனிவரே இவர்க ளெழுந்திருக்கும்படியாக வெண்ணீ றிவர்கள்மீது விட்டெறிந்தேன் தவயோகியே.

வேடுவர்கள் சொல்

விருத்தம்.

வேலனேபோற்றிபோற்றி வித்தகாநின்றாள்போற்றி
ஞாலமுள்ளோர்கள்போற்றும் நாதனேபோற்றிபோற்றி
சீலனேபோற்றிஞான தேசிகாபோற்றிபோற்றி
பாலர்களெங்கள்மீதே பக்ஷம்வைத்திடுவாய்போற்றி.

வசனம்.

எங்கள் குலதெய்வமான சிவ சுப்ரமண்யக் கடவுளே தாங்களென்றறியாது அநேகவிதமாகப் பேசிப் பாணப்பிரயோகஞ் செய்

தோம், வேலாயுதத்தினு லெங்களை மடித்தீர்கள் பின்பு உயிர்கொடுத்தீர்கள் எங்களை யாட்க்கொள்வீர் நாதா.

சிவசுப்ரமண்யர்சொல்

விருத்தம்.

மானிலத்துள்ளோர்போற்றும் வனக்குறவரே நீர்கேளீர்
எனினிக்கலக்கவேண்டா மேந்திழைவள்ளியாளைக்
கானகந்தனிலேமுன்னே காந்தர்வமணம்புரிந்தேன்
ஆனதாலகமகிழ்ந்தே யழைத்துமேவந்திட்டேனே.

வசனம்.

ஹே! நம்பிராஜன் புத்திர சிகாமணிகளே வள்ளியம்மையை முன்னங் கானகத்தில் காந்தர்வமாக மணம்புரிந்தேனுனதால் வள்ளியம்மையை அழைத்துக் கழுகுமலைசெல்லும்பொழு துங்களைக் கண்டேன் சந்தோஷங்கொண்டேன்.

நம்பிராஜன் சொல்

விருத்தம்.

வல்லமைமிகவேவாய்ந்த வள்ளலேவழுத்தக்கேளீர்
தொல்லுலகோர்கொண்டாடுந் துங்கனேசெங்கைவேலா
மெல்லிகைவள்ளியாளை வித்தகாமணம்புரிந்தே
செல்லுவீர்கூட்டியின்றே திருப்பரங்குன்றந்தானே.

வசனம்.

எங்கள் குலதெய்வமாகிய சுப்ரமண்ய கடவுளே வள்ளி நாயகியை யாவர்களுக்குந் தெரியும்படி சிற்றூரில் விவாகஞ் செய்து திருப்பரங்குன்ற மலைத்துச் செல்லுவீர்கள் வேறுதடை செய்ய வேண்டாம் ப்ரபோ.

சிவசுப்ரமண்யர் சொல்

விருத்தம்.

அம்புவியோர்கொண்டாட அறுமுகவேலோன்நானே
நம்பிராஜேந்திராகேள் நற்றிருமணமுடித்தே
கொம்பனைவள்ளியாளைக் கூட்டியேசெல்லுவேனே
சம்ரமமாய்ச்சிற்றூரே ஜல்தியாய்ச்செல்லுவோமே.

வசனம்.

நம்பி ராஜேந்திர தம்மனப்படி சிற்றூர் சென்று யாவரு மறியும்படி வள்ளியம்மையை மணம்புரிந்து திருப்பரங் குன்றஞ் செல்

இன்றேன் வாருமெல்லோரு மாகச் சிற்றூர் செல்லுவோம் வருவீர்கள்.

நம்பிராஜன்சொல் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் வருவீர்கள்.

நாரதர்சொல் வசனம்.

வேலவா சென்று வருவீர்கள் யான் கும்பமாமுனியைப் பார்த்து வருகின்றேன் ப்ரபோ.

சிவசுப்ரமண்யர்சொல் வசனம்.

கேளீர் நாரதமகா முனிவரே சிற்றூரில் திருமண முடிந்தவுடனே செல்லுவீர் எங்களோடு வருவீர் முனிவே.

நாரதர்சொல் வசனம்.

தங்கள் மனம்போலவே செல்வோம் வருவீர்கள்.

## சிவ சுப்ரமண்யர் வள்ளி யம்மையைத்

# திருமணம் புரியும்பாகம்.


நம்பிராஜன் சொல்

விருத்தம்.

மைந்தரே யானுரைக்கும் வார்த்தைகேளீர்
மகரதோ ரணங்கள்கட்டிப் பந்தலிட்டே
சிந்தைமிக வேமகிழ்ந்தே வேகமாகச்
சிற்றூரை யலங்காரஞ் செய்குவீரே
அந்தமிக் வுடையவள்ளி மாதைத்தானே
அமரர்சிறை மீட்டவடி வேலரான
கந்தனுக்கே மணமாலை சூட்டியேநாம்
கண்ணாலே பார்த்திடுவோங் கவனிப்பீரே.

வசனம்.

புத்திர சிகாமணிகாள் நமது சிற்றூரின்றெருக்களில் மகரதோரணங்கள்கட்டி பந்தல்களிட்டுக் கல்யாணபந்தல் ஜோடிப்பீர் வேகமாகக் கண்மணிகாள் நமது குலதெய்வமான சிவசுப்ரமண்யக் கடவுளுக்கு வள்ளியம்மையைத் திருமணம்புரிவோம் பாலர்காள் வேண்டிய சாமான்கள் தயார்ச்செய்வீர்கள் புதல்வர்காள்.



வேடுவர்கள்சொல்

விருத்தம்.

அந்தமேமிருந்தசிற்றா ரதனையே அலங்காரந்தான்
சிந்தையேமிகமகிழ்ந்தே சீக்கிரமாகவின்றே
கந்தருக்கின்றுதானே கன்னிகாதானஞ்செய்ய
இந்தவேளையில்முகூர்த்த மிட்டிடில்நலமுண்டாமே.

வசனம்.

தந்தையே சிற்றாரை யலங்காரஞ்செய்தோம் திருமணப்பந்தல் ஜோடித்துவிட்டோம், இந்தவேளையில் முகூர்த்தமிடில் வெகு நன்மையாயிருக்கும் ப்ரபோ.

நம்பிராஜன் சொல்

வசனம்.

மைந்தர்களே வேண்டியசாமான் தயார்செய்வீர்கள் இந்தவேளையில் முகூர்த்தமிடுவோம்.

சிவசுப்ரமண்யர் திருமணம்பார்க்க

## திரிமூர்த்திகள் வருகும்பாகம்.

பொதுத் தரு.

இந்தவித அவதாரஞ்செய்குவீரே என்றவர்னமெட்டு.

இராகம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி.

வந்தாரானந்தமாகவே கூடியொன்றாக
வந்தாரானந்தமாகவே (வந்தா)

அநுபல்லவி.

சந்திரனையேசென்னி தன்னிலணிந்தசிவ
சங்கரரோடுமையாள் மங்களமாகவே (வந்தா)

சரணங்கள்.

இந்திரன்மற்றதேவரும் கின்னரரோடு
இருடிமுதலாயாவரும்
செந்திருமாலுமவர் தேவிலெட்சுமியாளுஞ்
சிற்றாரதனைநாடிச் சீக்கிரமாகவேதான் (வந்தா)

அன்னவாகனமேறி பிரமாவும்வாணி
தன்னையழைத்தேகோரி
உன்னிதமாகவே பொன்னுலகுகடந்தே
ஒருக்ஷணப்பொழுதிலே ஓடியேவேகமாக (வந்த
நாரதர்கிம்புருடரும் காந்தர்வருமே
நவில்வேண்வித்யாதரரும்
தாரணிபுகழ்வேலன்றனக்கும் வள்ளிதனக்கித்
தருணந்தனில்நடக்குந் திருமணந்தனைப்பார்க்க (வந்தா)

வசனம்.

சிவ சுப்ரமண்ய ருக்குச் சிற்றூரில் நடக்குந் திருமணத்தைப் பார்க்கத் திரிமூர்த்திகளும் முப்பத்து முக்கோடி தேவரும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியிஸ் வரரும் வந்தமர்ந் தார்கள் அவரவர்களுக்குத்தக்க ஆசனங் கொடுத்து அமர்ந்திருக்க நம்பி ராஜன் ஆக்ஞாபித்தான் கணேசர் இந்தக் கலியாணத்தைப் பார்க்கத் தெய்வானையை அழைத்துக்கொண்டு சிற்றூர்வந் தமர்ந் திருந்தார்கள்.

பொது விருத்தம்.

வையமுள்ளோர்புகழ்ந்தேற்று மின்றநாதன்
மால்மருகனுமுருகேசனீரார்
கையுடையவடிவேல னமர்ந்திருந்தே
கல்யாணமண்டபத்திற் றேவர்சூழப்
பையரவுநதிமதியை யணிந்தமோன
பரமனுமையாள்மகிழ்ந்து பார்த்திருக்கத்
தையல்வள்ளிதிருக்கழுத்தில் மங்கலத்தைச்
சாற்றினார்வந்தவரைப் போற்றினார்.

வசனம்.

சிவசுப்ரமண்யர் நல்ல சுப முகூர்த்தத்தில் வள்ளியம்மை திருக்கழுத்திற் றிருமங்கலத்தைச் சாற்றினார் யாவர்களையும் போற்றி செய்து அமர்ந்திருந்தார் நம்பிராஜன் முதலியோர் ஊர்கோல முதலிய சடங்குகளை நிறைவேற்றி மனமகிழ்ந் திருந்தார்கள்.

ரம்பை-மேனகை-திலோர்த்தமை-ஊர்வசி-சோபனம் பாடுதல்.

இராகம்-மத்தியமாவதி-அடதாளம்-சாபு.

பல்லவி.

சோபனஞ் சோபனம் ஜெயசுப
சோபனஞ் சோபனம் (சோ—)

அநுபல்லவி.

சோபனம் வேலர்க்குந் தோகைவள்ளியாட்கும்
சோபனமுமை நேசன் சோமசுந்தரருக்கும் (சோப)

சரணங்கள்.

செந்திருமாலுக்கும் தேவிலெட்சுமியாட்கும்
இந்திரனுருக்கு மிந்திராணியாளுக்குஞ் (சோப)
வேதன் றனக்குமே மெல்லிசைவாணிக்கும்
பூதலத்தோர்கட்கும் பூரவலரனைவர்க்குஞ் (சோப)

மங்களம்.

இராகம் மத்தியாவதி-அடதாளம்-சாப்பு.

பல்லவி.

மங்களம் மங்களம் ஜெயசுப
மங்களம் மங்களம் (மங்க)

அநுபல்லவி.

மங்களம்வேலர்க்கும் வள்ளிதெய்வானைக்கும்
மங்களமீசர்க்கும் வரைமகளுமையாட்கும் (மங்க)

சரணம்.

மங்களம்மாலுக்கும் மாதுலெட்சுமியாட்கும்
மங்களமயனுக்கும் மறையாய்ந்தவாணிக்கும் (மங்க)

பொது விருத்தம்.

கந்தனுமேசிற் றூரில் வள்ளிமாதைக்
 கல்யாணஞ்செய்துபரங் குன்றுசேர்ந்தார்
அந்தரலோகத்தினிலே வசிக்குந்தேவ
 ரனைவருமேதங்களிட மில்லஞ்சென்றார்
செந்திருமாலயனரனுந் தங்கடங்க
 தேவியொடுவாழ்ந்திருக்கு மிடமேசார்ந்தார்
மைந்தரொடுமனமகிழ்ந்தே நம்பிராஜன்
 வளம்பொருந்துசிற் றூரில் வசித்திருந்தான்.

வசனம்.

சிவ சுப்ரமண்யர் வள்ளியம்மையை மணம்புரிந்து திரிமூர்த்தி நம்பிராஜன் முதலிய வர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வள்ளி தெய்வானை சமேதராகத் திருப்பரங் குன்றம் வந்து சேர்ந்தனர்.

மூப்புத் [illegible] கோடி தேவர்கள் தங்கள் வசிக்கு மிடஞ் சேர்ந்தார்கள். [illegible], அயன், அரன், முதலியோர் திங்கள் தங்கள் பத்தினியோடு வசிக்கும் நகர் சென்றார்கள். நம்பி ராஜன் புத்திரரோடு மனது மகிழ்ந்து சிற்றூரில் சுகமாக வாழ்ந்திருந்தனர்.

வாழி பாடுதல்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வாழ்க வாழ்க ஈசன்பொன்னடி
மலர்கள் வாழ்கவே
மலர்கள் வாழ்கவே அடி
மலர்கள் வாழ்கவே

மாதவம்புரி வேத அந்தணர்
நீதியாய்வாழ்க

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க வாழ்கவே (வாழ்க)

வாழி விருத்தம்.

சீர்வாழியிச்சரிதந் தனையன்பாகச்
செப்பினோர்களும்வாழி வள்ளிமாதின்
பேர்வாழிவடிவேலன் வாழி இந்த்ரன்
பெற்றெடுத்ததெய்வானை வாழியிந்த
ஊர்வாழிசெந்தமிழின் கலையுண்ட
உத்தமராகுங்கவிஞோர் வாழிரெத்னத்
தார்புனைந்தகுமரகுரு பரனை நெஞ்சந்
[illegible]பேச்சிமுத்தும் வாழிவாழி.

வள்ளியம்மை சுயம்வரம்

சம்பூர்ணம்.